ஓதுவது ஒழியேல்

110 ஆவது

# ஆண்டு விழா மலர்

## 1908 – 2018





## யா / மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்

## சாவகச்சேரி

# யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்
## சாவகச்சேரி

## J/MADDUVIL SOUTH SARASWATHY VIDYALAYAM
## CHAVAKACHCHERI

**110 ஆவது**

# ஆண்டு விழா மலர்

**1908 - 2018**

**08.05.2018**

பாடசாலை நிறுவுநர்



அமரர் முருகேசு முத்துத்தம்பி

1881 - 1964

சரஸ்வதி கனிஸ்ட வித்தியாலயம்

மட்டுவில் தெற்கு

ஓதுவது ஒழியேல்

## தூரநோக்கு Vision

இருபத்தோராம் நூற்றாண்டில் பொருந்திவாழும் நற் பிரஜைகளை உருவாக்கும் நிறுவனமாகத் திகழ்தல்

## பணிக்கூற்று நோக்கு Mission

தேசிய மாகாணக் கல்விக் கொள்கைகளுக்கு இசைவாக சாத்தியமான வாய்ப்புக்களை ஒருங்கிசைத்து எதிர்காலப் பொருத்தப்பாடுடைய மனித வளத்தை உருவாக்குதல்.

# பாடசாலைக் கீதம்

இராகம் - சங்கராபரணம் தாளம் - ஏகம்

வடகீழ் நாட்டின் வளமிகு பதியென
வகுத்ததென் மட்டுவிலதனில்
வள்ளல்முத்து உபாத்தியார் தந்த
வனப்புறு கல்விக் கழகம்
அது தலைமுறை தலைமுறை வாழ்க எங்கள்
சரஸ்வதி வித்தியாசாலை

ஆயிரத்தொழு தொள்ளாயிரத் தெட்டாம்
ஆண்டு வைகாசி நாள் எட்டில்
அருளொளி பரப்பி நின்றறிவினை வளர்த்திட
அமைத்தனன் நல்லறச்சாலை
அது தலைமுறை தலைமுறை வாழ்க எங்கள்
சரஸ்வதி வித்தியாசாலை

சைவமும் திமிழும் கண்ணெனப் போற்றி
தகைபெற அமைந்த நற்சாலை
சாஸ்திரம் பற்பல பயிற்றிட வந்த
சன்மார்க்க போதனாசாலை
அது தலைமுறை தலைமுறை வாழ்க எங்கள்
சரஸ்வதி வித்தியாசாலை

இயல் இசை நாடகம் ஆங்கிலம் யாவும்
இனிதாய் வளர்துமே ஓங்க
இளஞ்சிறு மாணவர் மனத்திடை என்றும்
எழில் பெறும் அணையாத்தீபம்
அது தலைமுறை தலைமுறை வாழ்க எங்கள்
சரஸ்வதி வித்தியாசாலை

வாழ்க வாழ்க வாழ்க
வாழ்க நீடுழி வாழ்க
வாழ்க நீடுழி வாழ்க

# OUR PRINCIPAL




**Mr. K. Uthayakumaran** S.L.P.S - 1

## மலரின் உள்ளே.....


♦ ஆசிச் செய்திகள் ............................................................................. *i - xx*

நல்லை ஆதீன முதல்வர்

யாழ் மறை மாவட்ட ஆயர்

சீயோன் தேவாலய போதகர்

நுணாவில் குளம் கண்ணகை அம்மன் பிரதம குரு

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்

வடமாகாண கல்வி அமைச்சர்

வடமாகாண கல்விச் செயலாளர்

வடமாகாண கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாண தேசியக் கல்வியற் கல்லூரி பீடாதிபதி

தென்மராட்சி பிரதேச செயலர்

தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர்

சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலர்

வித்தியாலய முதல்வர்

பாடசாலை அபிவிருத்திக் குழு செயலாளர்

பழைய மாணவி

♦ மலர்க்குழுவிடமிருந்து........................................................................ *xxi*


### ஸ்தாபகர் வாழ்வியல் பதிவுகள்


♦ நிறுவுநர் திரு.முருகேசு முத்துத்தம்பி வாழ்க்கை வரலாறு .................. 01

♦ Founder Of Madduvil South Saraswathy vid .................. 05

♦ மறவாதிருக்க வழி செய்வோம் ............................................................ 08

♦ இது எங்கள் வாழ்த்து ......................................................................... 09

♦ முத்துக்குழித்த காவியம் ................................................................... 10

♦ ஸ்தாபகர் முத்துத்தம்பி அவர்களின் பிறந்த வீடு ................................. 15

♦ ஓய்வு பெற்ற ஆசிரியரின் உள்ளத்திலிருந்து ........................................ 16

♦ மட்டுவிலின் மாண்பு ........................................................................ 17

♦ எங்கள் கிராமம் ................................................................................. 18


### துறைசார் நிபுணர்களின் படைப்புக்கள்


♦ ஆசிரியத்துவமும் மாணவர் கல்வியும் ................................................ 21

♦ வெப்பகாலத்தில் இயற்கையில் ஏற்படும் மாற்றங்களும்
அதனை எதிர்கொள்ள சித்தமருத்துவம் கூறும் சிந்தனைகளும் ............ 27

♦ தரமான கற்றல் செயற்பாடுகளும் பணியாளர்களின் ஆற்றுகைகளும் ....... 31

♦ காவிக்கட்டுப்பாட்டில் ஈடிஸ் நுளம்புகளை அழித்து டெங்கை விரட்டுவோம் 40


♦ எதிர்கால பொருத்தப்பாடுடைய இலங்கைப்
- பிரசையை உருவாக்குவதில் பன்மைச் சமூகத்தின்
- உறுப்பினர்களாகவும் ஜனநாயகப் பிரஜையாகவும்
- ஆசிரியர் ஆற்றும் பணியும் சவால்களும் ............................................. 44

♦ மட்டுவில் தெற்குக் கிராமமும் மானிடவியலும். .................................... 48

**ஆசிரியர், மாணாக்கர் ஆக்கங்கள்**


♦ தென்னைப் பயிர்ச்செய்கையில் பீடைகளினால் ஏற்படும் பிரச்சினைகளும், அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளும் ........ 55
♦ Extra Curricular activities in schools Educate better than classroom teaching ........ 60
♦ சிறுவர் துஸ்பிரயோகமும் பாதுகாப்பும் ........ 63
♦ இலங்கையில் ஆரம்பக்கல்வியின் புதியபோக்கு ........ 67
♦ வாசிப்புத்திறன் ........ 74
♦ வாழ்நாள் கல்வியின் திறவுகோலாக ஆரம்பக்கல்வி ........ 77
♦ மாணவர்களிடத்தே விழுமியப்பண்புகளை வளர்ப்பதன் முக்கியத்துவம் ...... 79
♦ ஆசிரியத்துவம் ........ 81
♦ பரதக்கலையே முதன்மைக்கலை ........ 83
♦ ஆரம்பக்கல்வி ஒரு நோக்கு ........ 85
♦ சங்கீதக்கலையின் வளர்ச்சி ........ 86
♦ வித்தியாலய மாணவர்களின் இணைபாடவிதான செயற்பாட்டுச் சாதனைகள் 87
♦ அம்மா ........ 93
♦ ஒற்றுமை ........ 93
♦ விஞ்ஞான வளர்ச்சியின் பயன்கள் ........ 94
♦ My Ambition ........ 95
♦ உயிர்களிடத்தில் அன்பு கொள்வோம் ........ 96
♦ நம் தமிழர் பண்பாடு ........ 97
♦ கலாநிதி C.W.W கன்னங்கரா ........ 99
♦ வாழ்க்கைக் கணிதம் ........ 99
♦ வாழக்கல் ........ 100
♦ My Village ........ 102
♦ சிறுவர் நலன் பேணுவோம் ........ 103
♦ வாழ்வியல் கணிதம் ........ 104
♦ தமிழ்மொழியும் கல்வியும் ........ 105
♦ பெரியோரை மதிப்போம் ........ 106
♦ My school ........ 107
♦ வாய்மையே வெல்லும் ........ 108
♦ சிறுவர்களாகிய நாம் ஒழுக்கமாக வாழ்ந்திடுவோம் ........ 109
♦ சுத்தம் பேணி சுகம் பெறுவோம் ........ 110
♦ ஆண்டு நிறைவு விழாக்கள் ........ 111
♦ கணித மேதை பைதகரஸ் ........ 112
♦ கல்வியே கருத்தனம் ........ 113
♦ எங்கள் அன்பு ஆசான் ........ 114
♦ மிகப்பெரிய எண் என்ன? ........ 114
♦ எழில் கொஞ்சும் இயற்கை ........ 115
♦ நான் விரும்பும் பெரியார் ........ 117

# ஆசிச் செய்திகள்



# அருளாசிச் செய்தி

கல்வி சார் பெருந்தகையீர்!

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் இன்று தனது **110 வது ஆண்டு** அகவை அடைந்துவிட்டதையிட்டு பெரு மனமகிழ்ச்சி அடைகின்றோம். இப் பிரதேச மக்களின் ஒழுக்க பண்பாட்டு விழுமியங்களையும், கல்விப் பண்பையும் 110 ஆண்டுகள் பணியாற்றி தலை நிமிர்ந்து நிற்பது மனமகிழ்ச்சி தருகின்றது. எல்லோருக்கும் கல்வி என்னும் வகையில் கல்வி இல்லாதவர் இருட்டறையில் இருப்பது போலவும், இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்னும் வகையில் குறள்வழி.

"எண் என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு".

இவ்வழி நின்று இப்பாடசாலை தனது பணியை நிறைவாக செய்கிறது. அதிபர், ஆசிரியர், பழையமாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் வாழ்த்தி அவர்தம் கல்விப் பணி தொடர இறைவன் ஆசீர்வதிப்பாராக!

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக குருமஹாசந்நிதானம்**
இரண்டாவது குருமஹாசந்நிதானம்
நல்லை ஆதீனம்



# அருளாசிச் செய்தி

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தின் 110ஆவது ஆண்டு நிறைவு மலருக்கான ஆசிச் செய்தி தருவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். ஒரு பாடசாலை என்பது அந்த சமூகத்திலே முக்கிய செல்வாக்கு செலுத்துகின்றது. பல்வேறு வாழ்க்கைச் சூழலை, குடும்பப் பின்னணியை கொண்ட பிள்ளைகளை நல்ல மனிதனாக, சமூகத்தின் நல்ல தலைவனாக மாற்றி சமூகத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகுப்பதே பாடசாலையாகும். இன்றை சிறுவர்கள் தான் எதிர்காலத்தின் தலைவர்கள் அந்த வகையில் இப் பாடசாலையானது. தென்மராட்சியின் மட்டுவில் பகுதியில் 1908 ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் எட்டாம் நாள் திரு. முருகேசு முத்துத்தம்பி உபாத்தியரால் ஆரம்பிக்கப்பட்டது.அன்றிலிருந்து இன்று வரை 20 அதிபர்கள் இப்பாடசாலையில் கடமையாற்றியுள்ளனர். இப் பாடசாலையில் எத்தனையோ மாணவர்கள் கல்வி கற்று சென்றிருக்கின்றார்கள். இப் பாடசாலையானது பல சமூக சேவகர்களையும் தனக்கென முத்திரை பதித்து நிற்கின்றது.

இப்பெருமை வாய்ந்த பாடசாலை 110ஆவது ஆண்டு கடந்தும் தனது பணியை தொடர்ந்து ஆற்றி இன்னும் சமூகத்திற்கு நல்ல பல தலைவர்களை உருவாக்க வேண்டுமென்று வாழ்த்தி நிற்கின்றேன். இறைவனின் ஆசி என்றும் உங்களோடு இருப்பதாக.

கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள,
**பேரருட்திரு கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம்**
யாழ் ஆயர்




# அருளாசிச் செய்தி

தென்மராட்சி தேசத்தின் நிழலாய்!

தேடிவந்த மாணவ செல்வங்களின் திசையறிகருவியாய், வானமுட்டும் வளர்ந்திட செயல் வடிவ ஊக்கம் பிறப்பிக்கும் கல்வி பட்டறையாகி, கடந்து போகும் எவரும் சற்று பொறுத்து போகும் சுமைதாங்கியாகி, காலச்சக்கரத்தில் எத்தனை பரம்பரை கண்டு மீண்ட கல்வியறிவுவுடைய பட்டறிவாளர்களின் கல்விக்கூடமாகி, துளைத்தெடுத்த போரின் காலங்களில் அரணாகி, அகதி வடிவம் பெற்றபோது அன்னை மடியாகி, அன்று தொட்டு இன்று வரை செல்வந்தரையும், ஏழையையும் ஒன்றாக கருதி, கல்வியறிவை கல்விக்காக புகட்டி சீராளரையும் பேராளரையும் உருவாக்கி தமிழ் மண்ணின் பெருமை சேர்த்து **110 ஆவது ஆண்டுகள்** எனும் நீண்ட கால அனுபவத்துடன் சிறந்து நின்று என்றும் வீர நடையுடன் அதிபர்களால், ஆசிரியர்களால், மாணவர்களால், அனைத்து பங்காளிகளாலும் கட்டிக் காத்த பெருமையுடன் நிமிர்ந்து நிற்கும் யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தின் சிறப்புற்ற இந்த 110வது ஆண்டு நிறைவு நாளில் ஒன்றான மெய்த்தேவனும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஆசீவாதம் ஆண்டாண்டு காலமாய் சிறந்து விளங்கி, செய்யும் பணி வரலாற்றுக்கு ஓர் வரலாறாக அமைய எங்கள் வாழ்த்துக்கள் என்றும் உரித்தாகட்டும்.

**அ. அனிஸ்வரன்,**
போதகர்,
சீயோன்தேவாலயம்,
மீசாலை.



# அருளாசிச் செய்தி

யா/மட்டுவில் சரஸ்வதி வித்தியாலய **110 வது ஆண்டுவிழா** கல்வியையும் கல்வியை கொடையாகத்தந்த பெரியாரையும் நினைவு கூரட்டும்!

இவ்வித்தியாலய ஸ்தாபகர் முருகேசு முத்துத்தம்பி அவர்கள் மட்டுவில் பகுதிவாழ் சமூகம் கல்வியால் மேம்பாடு அடைய வேண்டுமென தன் நல்ல சிந்தனையில் வழிவகுத்து இளஞ்சிறார்கள் அழியாச் செல்வமாகிய கல்விச் செல்வத்தை குறைவின்றி பெற்றிட வேண்டும் என்ற உயரிய நோக்கில், தான் தேடிய செல்வத்தை கல்விக் களஞ்சியமாக மாற்றிய உத்தமர்.

இவர் தம் பெருமுயற்சியால் இற்றைக்கு 110 ஆண்டுகளுக்கு முன்னர் மட்டுவிலில் எதிர்கால சந்ததியினர் பயன் பெற வேண்டும் என்ற உன்னத நோக்கில் கல்வித் தெய்வத்தின் பெயரில் இவ்வித்தியாலயத்தை ஸ்தாபித்தார். ஆரம்பத்தில் சிறு பாடசாலையாக இருந்த இவ்வித்தியாலயம் அவரது முயற்சியாலும், அவர்தம் நல்லாசியாலும் இன்று பெரு விருட்சமாக மிளிர்கின்றது.

இவ்வித்தியாலயம் இன்று தொடரான அதிபர்கள், ஆசிரியர்கள் பணிகளாலும், கிராமமக்களின் ஊக்குவிப்பாலும் சிறப்புமிக்க கல்விச் சாலையாகத் திகழ்கின்றது. அளப்பரிய சேவையினை வழங்கிவரும் இவ்வித்தியாலயம் மேன்மேலும் சிறப்புடன் வளர்ச்சியடைய நுணாவில்குளம் கண்ணகை அம்மனைப் பிரார்த்திப்பதோடு எனது நல்லாசிகளையும் வழங்குகின்றேன்.

-மேன்மை கொள் சைவநீதி -

வாழ்க வளர்க தமிழ்

**க. ஜெயந்திநாத சர்மா**

நுணாவில்குளம் கண்ணகை அம்மன்,

பிரதமகுரு.



# வாழ்த்துச் செய்தி

யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தின் **110 வது ஆண்டு** நிறைவை இனிதே கொண்டாடும் இவ்வேளை வெளியீடு செய்யப்படும் சிறப்புமலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இப் பாடசாலையானது தென்மராட்சிப்பகுதியில் புகழ்பூத்த மட்டுவில் பதியில் 1908ம் ஆண்டு உயர்திரு முருகேசு முத்துத்தம்பி உபாத்தியாரால் ஆரம்பிக்கப்பட்டதாக அறியப்படுகின்றது. 1962ம் ஆண்டுவரை அவரது வழிகாட்டலில் விளங்கிய பாடசாலை பின்னர் அரசினர் பாடசாலையாக மாற்றம்கண்டது. தென்மராட்சி மட்டுவில் பகுதியில் பெரும் கல்விச்செல்வத்தை வழங்கி தனக்கென மாணவச் செல்வங்களை நிறைவாகப் பெற்ற பாடசாலையாக அறியப்படுகின்றது.

இப் பாடசாலை மாணவச் செல்வங்களில் பலர் உயர் பதவிகளை அலங்கரிக்கும் சிரேஷ்ட முத்துக்கள் ஆக அறியப்படுவதன்மூலம் இப்பாடசாலையின் சிறப்பினை அறிய முடிகின்றது. இப் பாடசாலை மேலும் வளர்ச்சி காணவும், நிறைவான கல்விச்செல்வத்தினை வழங்கி தனது நிறைவான பணியை மேற்கொள்ளவும் வாழ்த்தி இப்பணியை திறம்படநடத்தும் இப் பாடசாலை அதிபர், ஆசிரியர்குழாம், மாணவச் செல்வங்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தினரையும் பாராட்டி தனது 110 வது அகவையில் வீறுநடைபோடும் வித்தியாலயத்தினால் வெளியீடு செய்யும் சிறப்புமலர் மலர்ந்து நறுமணம்பரப்பவும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

நன்றி

**நா. வேதநாயகன்**
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.



# வாழ்த்துச் செய்தி

1908 ஆம் ஆண்டு மே மாதம் எட்டாம் திகதி ஆரம்பிக்கப்பட்டு தென்மராட்சியின் புகழ் பெற்ற பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம் இன்று தனது 110 ஆவது அகவையைக் கொண்டாடுவதையிட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மட்டுவில் பெற்றெடுத்த சமூக சேவையாளரும் கல்வியாளருமான உயர்திரு. முருகேசு முத்துத்தம்பி உபாத்தியாயர் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டு 1962 ஆம் ஆண்டு வரை அவரது கட்டுப் பாட்டிலும், கண்காணிப்பிலும் இருந்து வந்த இப்பாடசாலை அவரைத் தொடர்ந்து, இன்று வரை 20 அதிபர்கள் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியுள்ளனர்.

கல்விச் சிந்தனையும் சமூக அக்கறையும் கொண்ட உயர்திரு. முருகேசு முத்துத்தம்பி உபாத்தியாயர் அவர்களினால, இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதால், இப்பகுதிப் பிள்ளைகளுக்கு முற்றாகவே இலவச கல்வியை வழங்கி வந்த நிலையில் 1914 ஆம் ஆண்டு அரசினர் நன்கொடை பெறும் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டு, 1962 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3 ஆம் திகதி அரசினால் சுவீகரிக்கப்பட்டது.

இப்பாடசாலை எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதோ அந்த நல்ல நோக்கத்தை அடைந்து கொள்ளும் வகையில் கடந்த 110 ஆண்டுகளாக பல நூற்றுக்கணக்கான சமூக சேவையாளர்களையும், கல்வியாளர்களையும் உருவாக்கி தென்மராட்சியில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துள்ளது. அந்த வகையில் இன்னும் பல நூறு ஆண்டுகள் மிகச் சிறப்பாக இயங்கி கல்வி,பண்பாடு,ஒழுக்க விழுமியங்கள் ஆகியவற்றில் உயர்ந்து,மேலும் பல கல்வி மான்களை உருவாக்கி மட்டுவில் கிராமத்திற்கே பெருமை சேர்க்கும் வகையில் மேலோங்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

இப் பாடசாலையின் வளர்ச்சிக்காக உழைத்து வரும், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்களின் ஒன்றிணைந்த செயற்பாடுகளுக்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்,**
*கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்*
*இளைஞர் விவகார அமைச்சர்,*
*வடமாகாணம்.*



# வாழ்த்துச் செய்தி

யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தின் **110 வது ஆண்டு** நிறைவினை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தென்மராட்சியின் புகழ்பூத்த மட்டுவில் பதியில் 1908 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 08 ஆம் திகதி புண்ணிய சீலர் உயர்திரு.முருகேசு முத்துத்தம்பி உபாத்தியாயரால் இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1962 ஆம் ஆண்டுவரை அவரது கண்காணிப்பிலேயே இயங்கிவந்துள்ளது. 1914 ஆம் ஆண்டு அரசினர் நன்கொடை பெறும் பாடசாலையாக பதிவு செய்யப்பட்டதுடன் 1962 பங்குனி மாதம் மூன்றாம் திகதி அரச பாடசாலையாக மாற்றப்பட்டது.

பாடசாலையில் பௌதீக, கல்வி, விளையாட்டு, கலாச்சாரம் போன்ற துறைகளின் வளர்ச்சியை ஆவணப்படுத்தும் சான்றுகளாக காலத்துக்குக் காலம் வெளிவரும் பாடசாலை சஞ்சிகைகள் அமைவதுடன் பிற்கால சந்ததியினருக்கும் வரலாற்றுப் பதிப்புக்களாகவும் இவை உதவுகின்றன. இப் பாடசாலை பல உயர்பதவிகளை வகிப்போர், கல்வியியலாளர்கள் மற்றும் சமூகசேவையாளர்கள் போன்றோர்களை உருவாக்கியுள்ளமை பெருமைக்குரிய விடயமாகும். அந்தவகையில இப் பாடசாலையினால் 110 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு மலரை வெளியிடுவதிலும், பாடசாலையின் அபிவிருத்தியை சுட்டிக் காட்டுவதிலும் இப்பாடசாலையின் செயற்பாடுகளை ஆவணப்படுத்துவதிலும் நடவடிக்கை எடுத்ததையிட்டு அதிபர், ஆசிரியர்கள், மலர்க்குழு உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன்.

இப்பாடசாலை கல்வி மற்றும் விளையாட்டுத்துறைகளில் மேன்மேலும் வளர்ச்சியடைந்து பல சாதனைகளைப் படைக்கவும், விழா நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. இ. இரவீந்திரன்**
செயலாளர்.
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்.



# வாழ்த்துச் செய்தி

மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயமானது 110 ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுவதையிட்டு வெளியிடப்படும் மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகிறேன்.

தென்மராட்சியின் மட்டுவில் கிராமத்தில் 1908 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை 1962 ஆம் ஆண்டில் அரசினால் பொறுப்பேற்கப்பட்டது. இக் கிராம மாணவர்களிற்கு சிறந்த கல்வியை வழங்குவதில் இப் பாடசலை பெரும்பங்காற்றி வருகின்றது. இப் பாடசாலை மாணவர்கள் கல்வியிலும், இணைபாடவிதான செயற்பாடுகளிலும் தமது திறமைகளை வெளிக்காட்டி வருகின்றனர். இப் பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் சமூகத்தில் உயர் பதவி வகிப்பவர்களாகவும், சமூக சேவகர்களாகவும் மிளிர்வது இப் பாடசாலையினது பெருமையைப் பறைசாற்றி நிற்கிறது.

இப் பாடசாலையினது வளர்ச்சியில் பாடசாலையினது முன்னைய முன்னைய அதிபர்களும், பாடசாலைச் சமூகத்தினரும் ஆற்றிய பணி அளப்பரியதாகும். 110 அகவையை நிறைவு செய்யும் இப் பாடசாலை மேலும் வளர்ச்சி பெற்று இப் பிரதேச மாணவர்களிற்கு சிறந்த கல்வியை வழங்கி சமூகத்தின் வளர்ச்சிக்கு தொடர்ந்தும் அரும்பணியாற்ற வாழ்த்துகின்றேன்.

**திரு. செ. உதயகுமார்,**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்.



# வாழ்த்துச் செய்தி

தென்மராட்சியின் புகழ் பூத்த பாடசாலைகளில் ஒன்றாகிய மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் இன்று நூற்றுப்பத்து ஆண்டுகளைக் கடந்து மட்டுவில் வாழ் மாணவர்களுக்கு தனது கல்விச் சேவையினை வழங்கிவருகின்றது.

புகழ் பூத்த கல்விமான்களும், பெருமக்களும் நிறைந்து வாழும் மட்டுவில் என்ற அழகிய கிராமத்தை, நேசித்து வாழ்ந்த பெருந்தகைகளுள் உயர்திரு முருகேசு முத்துத்தம்பி உபாத்தியாயர் அவர்கள் முதலிடம் பெறுகின்றார். அவருடையபெயர் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தொன்றாகும். உபாத்தியாயர் அவர்கள் மட்டுவில் மண்ணுக்காக, மக்களுக்காக மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தினை ஆரம்பித்தார்கள்.

இப்பாடசாலைக்காக தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்த ஒரு மகான். நிறைந்த கல்வி அறிவும், சிறந்த ஆளுமைப் பண்புகளும், சேவை மனப்பாங்கும், தியாக உணர்வும் கொண்ட உபாத்தியாயர் அவர்கள் தனது மண்ணுக்கும், மக்களுக்கும் சேவை செய்வதற்காகவே தனது வாழ்நாளில் பெரும் பகுதியை செலவழித்தவர் என்றால் அதுமிகையாகாது.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக சரஸ்வதி வித்தியாலயத்தின் வளர்ச்சிக்காகவும், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தன்னால் இயன்றவரைமிகவும் கடுமையாக உழைத்தவர் என்பதை மட்டுவில் வாழ்மக்கள் என்றும் மறந்துவிட முடியாது.

இன்று வரையான காலப்பகுதியில் கடமையாற்றிய முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் அர்பணிப்புமிக்க சேவையினால் இன்று 110 ஆண்டுகளினை நிறைவு செய்து வெற்றி நடைபயில்கின்றது இப் பாடசாலை. இப் பாடசாலை கல்வியில் எவ்வளவு திறமையாகத் திகழ்ந்ததோ அதே மாதிரி

விளையாட்டுத்துறை, கலைத்துறை, இலக்கியத்துறையிலும் சிறந்து விளங்குகின்றது. இப் பாடசாலை ஒரு சிறந்தமாணவ சமுதாயத்தை உருவாக்கியுள்ளது. இங்கு படித்த மாணவர்கள் பலர் இன்று உயர் பதவிகளில் இருக்கிறார்கள்.

தற்போதைய அதிபர், பிரதிஅதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவையாலும் அயரா முயற்சியினாலும் 110 ஆண்டு நிறைவுப் பெருவிழாவும் மலர் வெளியிடுவதும் பாராட்டத்தக்கவிடயமாகும்.

தோன்றிற் புகழொடுதோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமைநன்று

**திரு. ச. அமிர்தலிங்கம்**
பீடாதிபதி



# வாழ்த்துச் செய்தி

"வயிற்றுக்குச் சோறிடவேண்டும் - இங்குவாழும் மனிதருக்கெல்லாம்
பயிற்றிப் பலகல்விதந்து இந்தப் பாரைஉயர்த்திடவேண்டும்."

என்று முழங்கிச் சென்றார் புரட்சிக் கவிஞன் பாரதி. இந்தவகையில் நமது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளை உருவாக்குகின்றகலைப் பயிற்சி கூடமாக விளங்குகின்ற பாடசாலைகளே காலநீரோட்டத்தின் போக்குகளுக்கு ஏற்ப மனிதவளத்தினைச் செழுமைப்படுத்தி முழுமைப்படுத்துகின்ற பணியினை செவ்வனே ஆற்றி வருவதோடு மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளுக்கு ஏற்ப அவர்களின் ஆற்றல்கள் வெளிக்கொணரப்படுவதற்கு வழியமைத்துக் கொள்ளும் முயற்சிகளிலும் ஈடுபட்டுவருகின்றன.

இந்த வகையிலே தென்மராட்சி மண்ணில் புகழ் பூத்தமட்டுவில் பதியில் 1908ம் ஆண்டு புண்ணிய சீலர் உயர்திரு. முருகேசு முத்துத்தம்பி உபாத்தியாயரால் ஆரம்பிக்கப் பெற்றதே யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் ஆகும். இன்றுவரை இது 20 அதிபர்களைக் கண்டிருக்கிறது. ஒருபாடசாலை 110ஆவது ஆண்டு காண்பதென்பது அதன் நீண்ட பாரம்பரியத்தையும் நெடிதுயர் வளர்ச்சியையும் எடுத்துக்காட்டுவதாகும். பழமையும் பெருமையும் கொண்ட இப்பாடசாலை மட்டுவில் வாழ் மக்களுக்கு கல்விவளர்ச்சியில் தன்னிகரற்ற விதத்தில் பணியாற்றி வருகின்றமை போற்றுதற்குரியதாகும்.

கடந்த 110 ஆண்டுகளாக பல்லாயிரக்கணக்கான புத்திஜீவிகள் மற்றும் ஒழுக்கசீலர்களை உருவாக்கிய பெருமை யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்திற்குண்டு. இன்று பாடசாலையின் மைந்தர்கள் பலர் தாய் நாட்டிலும் உலகின் பல்வேறுநாடுகளிலும் பரந்து வாழ்கின்றனர். அவர்களின் சேவைகளால் மட்டுவில் கிராமம் வளம் பெற்றுவருகின்றது.

**“ஓதுவதுஒழியேல்”** என்ற ஔவைப் பிராட்டியின் அருள்வாக்கை மகுடவாசகமாகக் கொண்டது இப்பாடசாலை. அவ்வாசகத்திற்கேற்ப இயங்கிக் கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. அதிக வளங்களற்ற கிராமப்புறப் பாடசாலைகளில் மலர் வெளியீடு என்பது ஒரு கடினமானவிடயமாகும். கடந்தகால வரலாறுகளையும் நிகழ்கால செயற்பாடுகளையும் எதிர்காலச் சந்ததியினருக்கு கையளிக்கும் வகையிலான வரலாற்று ஆவணமான இம்மலர் முகிழ்ப்பிற்கு வழிவகுத்த அதிபர், ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தின் நலன்விரும்பிகள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.

**திருமதி. தேவநந்தினி பாபு**
பிரதேச செயலாளர்,
தென்மராட்சி.



# வாழ்த்துச் செய்தி

யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் தனது 110வது ஆண்டு நிறைவின்போது வெளியிடும் மலருக்காக ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

தென்மராட்சி மண்ணில் நீண்ட கால வரலாற்றைக் கொண்ட பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் இப்பாடசாலையின் வரலாற்றுப் பயணத் தடயங்களை முடியுமான அளவுக்கு மீட்டிப்பார்த்து, எதிர்கால சந்ததிக்கு வழங்கும் ஒரு பெறுமதிமிக்க ஆவணமாக இந்த 110வது ஆண்டுமலர் அமையக்கூடும் என்பது எனது எதிர்பார்ப்பாகும். ஏனெனில், எமது தேசத்தினதும், அதன் பெருமை மிகு கலைக்கூடங்களதும் வரலாறுகள், தமது வளர்ச்சிகளின் போது அவை சுமந்த வலிகள், மற்றும் அடைந்த பெருமைகள் என்பவற்றை எமது எதிர்கால சந்ததியிடம் எடுத்தியம்பக்கூடிய வலிமை மிகு ஆவணங்களது தொகுப்புக்கள் இன்று எங்களிடம் இல்லையே என்ற பெரும் குறையும், பழியும் எம் மீது சுமத்தப்பட்டுள்ளன.

அத்தகைய ஒரு நிலையில் வெளிவரும் இவ் வித்தியாலத்தின் 110வது ஆண்டுமலர் நிச்சயமாக இக் குறை தீர்க்கும் ஒன்றாக அமையக்கூடும் என எதிர்பார்ப்பதில் தவறில்லைத்தானே.

ஒரு பாடசாலையினது இவ்வாறான ஒரு மலரினை வெளியீடு செய்வது என்பது எத்தனை சவாலானது என்பதை நானறிவேன். எதிர்கொண்ட சவால்களை வெற்றிகண்டு, இவ்வித்தியாலய அதிபருடன் இணைந்து இப்பாடசாலைச் சமூகம் இம்மலரினை வெளியீடு செய்யும் முயற்சிக்காக இவர்களை நான் பாராட்டி நிற்கின்றேன்.

எமது நாட்டின் கல்விக் கொள்கையானது காலத்துக்கு காலம் மறுசீரமைக்கப்பட்டே வந்திருக்கின்றது. இவ்வகை மறுசீரமைப்புக்கள் மிக மிக அவசியமானவையாகும். எமது நாட்டின் சமூக, மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையான

எதிர்கால மனித வளத்தினைத் திட்டமிட்டுக் கொள்ளும் நோக்கில் இக் கல்விக் கொள்கைகள் அமைந்திருக்கும். 1950 களில் எமது நாட்டில் ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றங்களால் கல்வியிலும் மறுமலர்ச்சி ஏற்படலாயிற்று. விளைவாக கற்றவர்களது எண்ணிக்கை கணிசமான அளவுக்கு உயர்வடையலாயிற்று. அதே வேளை இக்காலத்தில் அதிகமான தனியார்துறை நிறுவனங்கள் அரசுடமையாக்கப்பட்டதனால், அரச துறையில் தொழில்வாய்ப்பு அதிகரித்தன. நாட்டில் கல்வித் தகமை கொண்ட மனித வளத்தின் பெரும்பகுதியை அரச துறைகள் உள்ளீர்த்துக் கொண்டன.

1970களின் பிற்பட்ட காலப்பகுதியில் இருந்து செயற்படுத்தப்பட்டு வருகின்ற சமூக, பொருளாதார கொள்கைகளால் இலங்கை, உலகின் ஏனைய நாடுகளுடன் இசைவாக்கம் அடைந்து பயணப்பட வேண்டிய புதியதொரு சூழல் உருவாயிற்று. அதன் விளைவாக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில், தொழில் உலகின் பரந்த தன்மைக்கு ஏற்ற மனித வளத்தை வெளியீடு செய்யும் பாரிய பொறுப்பு பாடசாலைகளை வந்து சேர்ந்தது. இருந்தும் எமது நாட்டின் கல்விச்சாலைகள் இன்னும் விழிப்படையாத ஒரு நிலைமைக்குள் ஒரே சுற்றுவட்டப்பாதையில் பயணித்துக் கொண்டிருப்பதாகவே கல்வியியலாளர்கள் பலரும் விமர்சிக்கின்றனர்.

இன்றைய கல்வி மாணவர்களது முழுமையான ஆளுமையினை வளர்த்துவிட வகை செய்வதில்லை என்பது பல்வேறுபட்ட புத்திஜீவிகளினாலும் முன்வைக்கப்பட்டு வரும் குற்றச்சாட்டாக உள்ளது. இன்றைய கல்வி, தனிமனித ஆற்றலையோ, சமூகமயமாக்கலையோ, அல்லது விழுமியப்பண்புகளையோ மாணவர்களிடையே போதுமான அளவுக்கு வழங்கத்தவறிவிடுகின்றன என்பது இவர்களது விளக்கமாக உள்ளது. இது உண்மையானதே. இன்றைய கல்வியமைப்பில்,கொள்கைகளுக்கும் அவற்றின் செயற்பாட்டு நிலைகளுக்கும் இடையில் காணப்படும் முரண்பாடான இடைவெளிகளை நீக்குவதற்கோ அன்றி குறைப்பதற்கோ, தேவையான செயற்றிட்டங்களை திட்டமிட்டு முன்னெடுக்க வாய்ப்புக்களின்றி நகர்கிறது காலம்.

இந்த நிலையில் எமது தேசத்தின் கல்விச் சாலைகள் எமது மாணவர்களுக்கு எதிர்கால வேலை உலகிற்கு பொருத்தமான திறன்களையும், ஆற்றல்களையும், வழங்கவும் வழிகாட்டவும் நடவடிக்கைகளை எடுப்பதில் இருந்து விலகிநிற்க முடியாது. பாடவிதானங்களுக்கு மேலதிகமாக இணைபாடவிதானங்களில் மாணவர்களை ஈடுபடுத்துவதனூடாக எமது இந்த இலக்குகளை அடைந்து கொள்ள முடியும்

என்பது எதிர்பார்ப்பாகும். மாணவர் தொகைகளோ, வகுப்புப் பரம்பலோ அல்லது பாடசாலை வகைகளோ இங்கே சவாலாக இருப்பதில்லை. பொருத்தமான இணைபாடவிதானச் செயற்பாடுகள் அடையாளம் காணப்பட்டு, அவை இலக்கு நோக்கிய வகையில் அமுலாக்கப்படுவதனூடாக நாம் எமது மாணவர்களிடையே ஓரளவு முழுமையான ஆளுமையினை வளர்த்தெடுக்க வாய்ப்பேற்படும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இன்று தனது 110வது அகவையைத் தாண்டி தனது பயணத்தை தொடரும் இப்பாடசாலையானது, தன்னை நாடிவந்த மாணவர்களது ஆளுமை வளர்ச்சியினை பரவலாக்கும் வகையில், ஒரு உயர்வை அடைந்து கொள்ளும் உயரிய நோக்கில் தன் பயணத்தை திட்டமிட்ட வகையில் தொடர, இறை ஆசிகளை வேண்டி, வாழ்த்தி மகிழ்கின்றேன்.

**திரு. சுப்பிரமணியம் சுந்தரசிவம்,**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.



# வாழ்த்துச் செய்தி

யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் நூற்றுப்பத்து ஆண்டுகள் கடந்து விழாக்காணும் இன்றைய நாளில் அதன் நினைவாக வெளிவரும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். கோட்டக்கல்விப் பணிப்பாளர் என்ற கடமை நிலைக்கு அப்பால் வித்தியாலயத்தின் முன்னைநாள் அதிபர் என்ற வகையில் மனம் பூரிப்படைகின்றது.

வள்ளல் முருகேசு முத்துத்தம்பி அவர்களின் கல்விசார் சமூக நோக்கில் 1908 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் வித்தியாலயம் பல்வேறு முதல்வர்களின் வினைத்திறனான செயற்பாடுகளினால் பல்வேறு படிகளைத் தாண்டி நூற்றுப்பத்து ஆண்டுகளாக கல்விச் செல்வத்தை வழங்கி வருவது போற்றுதற்குரியதாகும்.

முதல்வர் பதவியின் முதல் ஐந்து வருடங்களை இவ்வித்தியாலயத்தில் அலங்கரித்தவன் என்ற வகையில் அக்கால நினைவுகளில் சில இளையோடி நிற்கின்றன. 01.05.2003ம் ஆண்டு முதல்வராக யுத்தசூழ்நிலை காரணமாக கூரைகள் அற்ற வகுப்பறை கட்டடங்களை பொறுப்பேற்கும் நிலை ஏற்பட்டது. அயல் வீடுகள் எமது வகுப்பறைகளாக மாறின. வகுப்பறைகள் சீர்செய்யப்படும் வரை நாளாந்த செயற்பாடுளை முன்னெடுக்க விளைந்த துயரங்களை எண்ணிப்பார்க்கின்றேன். பலமான சமூகப் பிணைப்பையும் கொள்கைப் பற்றினையும் கொண்ட பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் பாடசாலை மீது நன்றியுணர்வுள்ள பழைய மாணவர்களும், கடமையுணர்வுள்ள ஆசிரியர்களும், மாணவர்களும், தொண்டு நிறுவனங்களும், வலயக்கல்வி அலுவலகமும் இவற்றையெல்லாம் சீர்செய்து சிறப்பான செயற்பாட்டை முன்னெடுக்க கரம் கோர்த்து உதவின.


அர்ப்பணிப்பானஆசிரியர்களின் செயற்பாடுகள் காரணமாக பாடசாலை வரலாற்றில் அன்றிலிருந்து இன்றுவரை பெற்றுக்கொள்ளப்படாத சிறந்த பெறுபேற்றினை 2007 ம் ஆண்டு க.பொ.த (சா.த) பரீட்சைப் முடிவுகள் பெற்றுத்தந்தன. இது சமூகத்தில் பேரெழுச்சியை உண்டுபண்ணின.

இவ்வித்தியாலயத்தின் நூற்றாண்டு நிறைவினை விழாவாக கொண்டாடுவதற்கும் அதனையொட்டி மலர் ஒன்றினை வெளியிடுவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தமை எனது இவ்வித்தியாலயத்தின் முதல்வர் பதவிக் காலத்தில் கிடைத்த கொடையாகும்.

நூற்றாண்டினை நினைவு கூரும் வகையில் நிக்கொட் அமைப்பினால் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட 90'x25' அளவுள்ள வகுப்பறை மாடிக் கட்டடம் நூற்றாண்டு மண்டபம் என பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தென்மராட்சியில் வகை இரண்டு பாடசாலைகளில் முதல் தடவையாக மேலத்தேய வாத்திய அணியினை ஆரம்பித்தமையும் ஒலிபெருக்கி பாவனையை கையாண்டதும் முக்கிய புள்ளியாகும்.

இவ்வாறான மேலும் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வெற்றிப் பாதையில் செயற்படுவதற்கு துணையாக நின்ற அன்பிற்குரிய ஆசிரியர்கள், மாணவர்கள்,அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள் அனைவரையும் இச் சந்தர்ப்பத்தில் வாழ்த்துவதுடன் அன்றில் இருந்து இன்றுவரை இவ் வித்தியாலயத்தில் கடமையாற்றிய கடமையாற்றுகின்ற அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரையும் அவர்களினூடாக வளர்ச்சி கண்டு தனது கல்விச் செல்வத்தை சமூகத்திற்கு அள்ளி வழங்கிவரும் இக் கல்விச் சாலையினையும் பெரு விருட்சமாக விருத்தி பெற அருகில் உள்ள நுணாவிற்குளம் கண்ணகை அம்மன் அருளாசி வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**திரு. வ. நடராசா,**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
சாவகச்சேரி.



# வாழ்த்துச் செய்தி

ஒரு பாடசாலையை ஆரம்பித்தல் ஆயிரம் சிறைச்சாலைகளை மூடுவதற்குச் சமம் என்பார்கள். அந்தவகையில் இவ்வித்தியாலயத்தின் ஸ்தாபகர் திருவாளர் முருகேசு முத்துத்தம்பி (முத்து உபாத்தியார்) அவர்கள் 1908 ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் எட்டாம் நாளில் இவ்வித்தியாலயத்தை ஆரம்பித்து இன்று 110 ஆவது ஆண்டை எட்டியுள்ள நிலையில் இந்நிறைமலரை வெளியிடும் பாக்கியம் கிடைத்தமை எனக்கு மட்டில்லா மகிழ்ச்சியைத் தருகின்றது. இம்மலரை வெளியீடு செய்ய முன் வந்த மலர்க்குழுவினருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாடசாலை ஆரம்பித்த நாள் தொட்டு பணி புரிந்த அதிபர், ஆசிரியர்களது அர்ப்பணிப்பான சேவையால் இன்று இவ்வித்தியாலயம் சிறப்புற தலைநிமிர்ந்து நிற்கின்றது. 1908 ஆம் ஆண்டுடில் ஆரம்பித்த போதும் இவ்வித்தியாலயம் நூற்றாண்டின் ஓர் சிறப்பு மலரைப் பிரசவித்து அதன் தொடரில் 110 வது ஆண்டைக் கடந்து 110 ஆண்டு நிறைவு மலரை ஈன்றெடுத்திருப்பது மன மகிழ்ச்சியைத் தருகின்றது.

இந்நூற்றுப்பத்தாவது ஆண்டு மலரை ஆக்குவதற்கு அரும்பாடுபட்டு உழைத்திருக்கும் இம் மலர்க் குழுவினருக்கும், இம் மலருக்கு ஆக்கங்களை வழங்கிய துறைசார்ந்த பெரியோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் மற்றும் ஸ்தாபகர் குடும்பத்தினர் பாடசாலைச் சமூகத்தினர் அனைவற்கும் எனது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்வதோடு எனது சிரம் தாழ்த்தி மீண்டும் வணக்கத்தையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். எனது உள்ளத்தில் எழுந்த இவ்வூற்று இவ்வித்தியாலயத்தை தோற்றுவித்து, எழுத்தறிவித்த முத்து உபாத்தியார் அவர்களிற்கு சமர்ப்பணமாகட்டும்.

**திரு. க. உதயகுமாரன்**
வித்தியாலய முதல்வர்



# வாழ்த்துச் செய்தி

பாடசாலை வரலாற்றில் நூற்றாண்டு விழாவைக்கடந்து இன்று நூற்றுப்பத்தாவது ஆண்டு விழாவை வரவேற்கும் எமது பாடசாலை நூல்வெளியீட்டிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

எமது வாழ்வின் அனைத்து சவால்களையும் வெற்றிகொள்ள உதவும் கல்வியை, தரமான ஆர்வத்துடன் சிறந்த கல்வியாக வழங்குவதில் எமது வித்தியாலயம் தென்மராட்சியில் முன்னணிப் பாடசாலைகளுள் ஒன்றாகத்திகழ்கின்றது. இதற்கு சேவைபுரிந்த அதிபர்கள், ஆசிரியர்குழாம், பாடசாலை சமூகத்தினர் ஆகியோரை நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

மாணவர்களின் கல்வியை மட்டுமன்றி பாடசாலையையும் அதனோடு இணைந்த அனைத்து செயற்பாடுகளையும் விருத்தி செய்யும் நோக்கில் பேரவாவுடன் தற்போதைய முதல்வர் திரு. க.உதயகுமாரன் முனைப்புடன் செயலாற்றி வருகின்றார். அவரது ஆர்வத்தையும் இந்நேரத்தில் பாராட்டுகின்றேன்.

பாடசாலை வரலாற்றை ஆவணப்படுத்தும் வரலாற்றுத் தொகுப்பும் பாராட்டுக்குரியது. எமது வித்தியாலயம் உயர்வடைந்து வருவது மாணவர்களின் பெறுபேறுகள் மூலம் தெளிவாகின்றன. எமது வித்தியாலயம் மேன்மேலும் சிறந்து பல்துறை விற்பன்னர்களை உருவாக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து, இவ்விழாமலர் சிறப்புற வெளிவர எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. சிவானந்தன் சுகந்தி**
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திக்குழு.



# வாழ்த்துச் செய்தி

'பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவவானினும் நனி சிறத்தனவே'

ஒரு நூற்றாண்டையும் பின்னராய்பத்ததாவது ஆண்டையும் நிறைக்கும் பாடசாலை சரஸ்வதி வித்தியாலயத்திற்கும் மகிழ்ச்சி பொங்கும் மனமுடன் வாழ்த்துக்கள் தாய்நிலக்கல்விதாய்மண்வாசனையுடன் தாழ் மனதில் பந்தலிட்டு மகிழ்வூஞ்சல் ஆடுகின்றது.

பரந்து விரிந்திருக்கும் புலம் பெயர்தேசங்களில் இப்பாடசாலையில் ஆரம்பக்கல்வியைக் கற்றவர்கள் பலர் சிறப்புடன் வாழ்கின்றனர். இவ்வகையில் இங்கு ஆரம்பக்கல்வியை அத்தி வாரமிட்டு வாழ்க்கையை தொடங்கியவர்களில் நானும் ஒருவர் என்பது எனக்கே பெருமை ஆகும். இப்பாடசாலையின் ஆரம்பம் பற்றி வரலாறு பற்றி செவி வழியாக பல செய்திகளை மிகச் சிறுவயதிலிருந்தே கேட்டு வளர்ந்திருக்கின்றேன். பாடசாலை நிறுவுனர் முத்து உபாத்தியார்

வாழ்க்கைச் சுவாரசியங்களை எனது அமரரான தந்தையார் வைத்தியர் நல்லையா அவர்கள் ரசணைசொட்டும் வகையில் கூறியிருந்தார். இதனால் எனக்கும் இப்பாடசாலைக்குமான ஆத்மார்த்த தொடர்பு எப்பொழுதும் நிறைந்திருக்கும் நூற்றுப்பத்து ஆண்டுகள் தொட்டு சிறப்புற உயர்ந்து நிற்கின்றது என்றால் கடந்துபோன அதிபர்கள், ஆசிரியர்கள், நிர்வாகத்தினர், நலன்விரும்பிகள், மாணவர்கள் என அத்தனைபேரும் தாங்கி நின்றிருக்கின்றனர். அத்தனை பேருக்கும் அன்புடன் நன்றிகள்.

மட்டுவில் தெற்கு வெள்ளி நட்சத்திரமாய் சரஸ்வதி வித்தியாலயம் பிரகாசித்து நிற்க இன்றை அதிபர் சார் பாடசாலை சமூகத்திற்கும் வாழ்த்துக்கள் இவ் வாழ்த்துச் செய்தியினை மிகப்பெரும் வாழ்த்தரங்கமாக்கி நன்றிகளை காணிக்கையாக்குகின்றேன்.

**திருமதி. சுந்தரரூபி செல்வக்குமாரன்**
பழைய மாணவி
கனடா



முகாமைத்துவக் குழு



110 ஆவது ஆண்டு விழா ஏற்பாட்டுக் குழு

# பாடசாலை அபிவிருத்திக் குழு



# மலர் வெளியீட்டுக் குழு



# மலர் குழுவிடமிருந்து ......

இறைவன் தந்த இனிமையான இயற்கை பொக்கிசங்களில் மலர்களும் ஒன்று. மலர்கள் மலர்ந்து, இனிய நறுமணம் கமழ்ந்து, மனித மனங்களுக்கு புத்துயிரும் இயற்கைக்கு அழகும் பெருமையும் சேர்க்கின்றன. இத்தகைய மென்மையான அழகான மலர்கள் மனிதனது வாழ்வின் பல சந்தர்ப்பங்களில் அவனுடன் இரண்டறக் கலக்கின்றது. மனிதன் தனது மகிழ்ச்சியான, மங்களகரமான மற்றும் தனது அன்பை வெளிப்படுத்திடக்கூட மலர்களை உபயோகிக்கின்றான். அனைத்துக்கும் மேலாக தன்னைப்படைத்த பரம் பொருளைப் பணிந்து அர்ச்சனை செய்யும் போது மலர்கள் அவன் அர்ச்சனைப் பொருளாகின்றன.

மனிதன் இறைவனுக்கு அளிக்கும் அரிச்சனைப் பொருளாக அமையும் மலருக்கு ஒப்பாக இன்று எம் கரங்களில் இவ் நூற்றுப்பத்தாவது ஆண்டு மலர் மலர்ந்து, நறுமணம் கமழ்ந்து நிற்கின்றது. முத்துவாத்தியாரினால் மட்டுவில் பதியில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வித்தியாலயம் இன்று தனது 110 ஆவது அகவையில் மிளிரும் போது ஸ்தாபகருக்கு இவ்அர்ச்சனை மலரை காணிக்கையாக்குவதில் மட்டற்ற மகிழ்சியும் பெருமையும் கொள்கின்றோம். இம்மலர் தாங்கி வரும் அருளடி யாளர்களின் ஆசிச் செய்திகளும் பெரியோரின் வாழ்த்துக்களும் இப்பாடசாலைக்கும் அதன் சமூகத்திற்கும் புத்துயிரளிக்கும் நறுமணமாக அமைகின்றது. மேலும் இம் மலரின் இதழ்களாக விரியும் ஆன்றோரின் அனுபவக் கட்டுரைகள் அறிவுப்பசிக்கு அருமருந்தாகின்றன. இவ்வித்தியாலய ஆசிரியர்கள் மற்றும் பிள்ளைச் செல்வங்களின் முத்து முத்தான ஆக்கங்கள் பாடசாலை நிறுவுனரின் கனவுகளை மெய்ப்பிக்கும் சான்றுகளாக மிளிர்கின்றன.

அந்த வகையில் இம்மலரை இன்று காணிக்கையாக முன்வைக்க உழைத்த பலருக்கு மலர்க்குழு சார்பாக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். முதலில் இறை ஆசிகளையும், தங்கள் உளம் நிறைந்த ஆசீர்வாதங்களையும் வாழ்த்துக்களையும் வழங்கி நிற்கும் அருளடியார்கள் மற்றும் பெரியோர்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகள். தங்கள் நிபுணத்துவ ஆக்கங்களைத் தந்துதவிய கல்விமான்கள், எமது ஆசிரியர்கள், ஸ்தாபகர் குடும்பத்தினர் மற்றும் மாணவர்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகள். இம் மலர் வெளிவருவதற்கு நிதியுதவியுடன் ஆக்கபூர்வமான அனுசரணை வழங்கிய ஸ்தாபகர் குடும்பத்தினருக்கு நன்றி பாராட்டி வாழ்த்தி நிற்கின்றோம். இம்மலர் மிக அழகுற வெளிவர கணினி வடிவமைப்பு மற்றும் அச்சு வடிவமைப்பு செய்த “கிங்ஸ் அச்சகம்” நிறுவனத்தினருக்கும், புகைப் படங்கள், ஆவணப்படங்கள் போன்றவற்றை பெறுவதற்கு உதவி செய்த “குகன் ஸ்ரூடியோ” மற்றும் “வசி ஸ்ரூடியோ” நிறுவனத்தினருக்கும் நன்றிகள் பல. அத்துடன் இம் மலர் வெளிவர நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உதவிபுரிந்த அனைவருக்கும் நன்றி கூறுவதுடன், தவறு ஏதும் இருப்பின் பெருமனதுடன் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டி நிற்கின்றோம்.

- மலர்க்குழு-

ஸ்தாபகரின் தம்பி அமரர் முருகேசு செல்லப்பா (ஆசிரியர்)
நிறுவுனரின் பாதையில் பணியைத் தொடர்ந்தவர்.



1885 - 1975

# ஸ்தாபகர் வாழ்வியல்
# பதிவுகள்

# ஸ்தாபகர் அமரர் முருகேசு முத்துத்தம்பி



## ஸ்தாபகரின் உருவச்சிலை

யாழ் அரசாங்க அதிபர் திருவாளர் நா. வேதநாயகன் அவர்களால்
110ஆவது ஆண்டு விழாவில் 08.05.2018 அன்று
திரைநீக்கம் செய்யப்பட்டது.

# மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய நிறுவுநர்
## திரு. முருகேசு முத்துத்தம்பி அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

யாழ் எனும் இசைக்கருவியை வாழ்வெனக் கொண்ட பாணன் வழிவந்த சூழ் தமிழ் தங்கிய யாழ்ப்பாணத்தில் தென்னைகளுடன் தென்னைகள் தொட்டு தென்றல் காற்று வீசும் தென்மராட்சியில் இறைவி சாந்தநாயகி அம்மையும் சந்திரமௌலீச பகவானும் எழுந்தருளியிருக்கும் சிவன் ஆலயம் அமைந்த மட்டுவில் சந்திரபுரம் எனவும் அழைக்கப்பட்டு வந்தது. பயன்பெறும் மரங்களாலும் பச்சை உமிழ்ந்த உயரமான மரங்களாலும் சூழப்பெற்ற பசுமைப்பூமி மட்டுவில் தெற்கு என்னும் ஊரில் தாமோதரம்பிள்ளை வழிவந்த உயர்திரு முருகேசு என்னும் மூதறிஞர் வல்லிபுரம், சின்னத்துரை ஆகிய சகோதரர்களுடன் வாழ்ந்து வர மூதறிஞர் முருகேசு மட்டுவில் தெற்கைச் சேர்ந்த கதிர்காமப் புலவர் கால்வழிவந்த சிவகாமிப்பிள்ளை எனும் தையலைத் திருமணம் முடித்தார். இவர்களின் இல்வாழ்க்கை இன்பச் சிறப்பாக இவ் வரலாற்றுக் கதாநாயகன் முத்துத்தம்பி முத்தென முதற் பிள்ளையாக ஆவணித் திங்கள் 5ம் நாள் 1881 ஆம் ஆண்டு பூமியில் பிறந்தார். இவருக்குப் பின் சக இதரங்களாக தம்பி செல்லப்பாவும் சின்னத்தம்பியும் தங்கை கண்ணகைப்பிள்ளையும் கூடப் பிறந்தனர். இவர்களை சைவசமய ஒழுக்கம், பண்பாடு, கலாசாரங்களுடன் நெறி தவறாத வகையில் பெற்றோர் வழிநடாத்தி வந்தனர்.

முத்துத்தம்பி அவர்கள் சிறு வயதிலேயே கல்விமேல் ஆசையும் ஆவலும் கொண்டார். சரியான முறையில் சிறப்பான கல்வியைக் கற்கவேண்டும் என்ற உறுதி கொண்டு தனது 8 ஆவது வயதினில் திண்ணைப் பாடசாலையை தேடிப் புறப்பட்டார். ஆங்கிலப் பாடசாலைகள் ஆங்கிலத்தையும் கிறிஸ்தவ மதத்தையும் இணைத்து கோலோச்சிய காலம் அது. சைவப் பாரம்பரியம் மிக்க குடும்பம் என்பதால் ஆங்கிலப் பாடசாலைகளை அறவே மறுத்தனர் பெற்றோர். மட்டுவில் வடக்கு ம.க.வேற்பிள்ளை அவர்களைக் குருவாக ஏற்றுக் கொண்டு அவரது வீட்டில் அமைந்த திண்ணைப் பாடசாலையில் இணைந்தார். ஏடுடன் எழுத்தாணியும் கொண்டு செவிவழியாகவும் பாடங்களை அங்கு கற்கத் தொடங்கினார். தமிழ், சமயம், புராணம், இலக்கிய இலக்கணம், சோதிடம், சாஸ்திரம்,கணிதம், வாலாறு, தத்துவம் ஆகிய பாடங்களைக் கற்றார். பின்னர் இந்தியாவுக்குக் கப்பல் வழியாகச் சென்று சமஸ்கிருத மொழியும் கற்றுத் தேறினார்.

தித்திக்கும் தமிழ்மொழி மீது அளவிலாப் பற்றுக் கொண்டார். அத் தமிழை சொத்தெனவும் எண்ணினார். தான் கற்ற கல்வி வீண் போகக் கூடாது எனவும் ஊரில் அடுத்த தலைமுறை கல்வி பெற்று அறியாமையில் இருந்து விடுபட வேண்டும்

எனவும் எண்ணங் கொண்டு தான் வாழ்ந்து வந்த பருத்துறை வீதியில் சரஸ்வதி வித்தியாசாலைக்கும் நுணாவில் சந்திக்கும் இடையில் இருக்கும் சேகண்டி 1 ஆம் ஒழுங்கையில் முதல் சந்தியில் இடப்பக்கத்து ஒழுங்கையிலுள்ள வீட்டின் மரத்தின் கீழ் இயற்கையின் மடியில் மாணவர்களுக்கு கற்பிக்கத் தொடங்கினார். ஆங்கிலக் கல்வியும் அந்நிய மதமும் ஊடுருவி இருந்த அக்காலம் சைவ சமய வீழ்ச்சியைத் தாங்கிக்கொள்ள முடியாதவர்கள் தங்கள் பிள்ளைகளை இவரிடம் மாணவர்களாக சேர்ப்பித்தனர். சமயப்பிறப்பின் அடையாளம் அதன் நெறி தவறக் கூடாது என்ற கொள்கையில் மாணவரின் முதுகுகளில் சைவன் என்று எழுதி அடையாளப்படுத்துவார். அந்தணர்களுக்குச் சமஸ்கிருத மொழி பாடங்களை பயில்வதற்கும் ஆசானாய் இருந்து அவர்களுடைய ஐயங்களைத் தீர்த்து வைத்தார்.

முத்துத் தம்பி அவர்கள் நுணாவிலைச் சேர்ந்த மலேசியாவில் வசித்த காசிநாதன் என்பவரின் கனிஸ்ட புத்திரியும் உடுவில் தனபாலசிங்கத்தின் தங்கையுமாகிய செல்வநாயகியைத் திருமணம் செய்தார். முறைப்படி நான்கு நாட்கள் அக்கினி ஓமம் வளர்த்து வீட்டிற்கு புண்ணியாதானம் செய்து மணமகளுக்கு சைவதீட்சை கொடுத்து, புண்ணிய அந்தணர் முறைப்படி மங்கல மாங்கல்ய திருமணம் செய்தார். இல்வாழ்வை நல்லறமாக்கிய இவர்களின் இல்லறத்தின் பயனாக ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தார்கள். இல்லறம் வாழ்ந்த இல்லம் இரண்டு அறைகள், சமையல் அறையுடன் கூடிய சாப்பாட்டு அறை அதனுடன் அகன்ற விறாந்தையுமான நுணாவில் மேற்கில் இன்றைய ஆனந்தா வைத்தியசாலை அமைந்துள்ள இடமாகும்.

வழக்கமாகப் பிரதி திங்கட்கிழமைகளில் மட்டுவில் தெற்கு சிவன் கோவிலுக்குச் செல்வது வழக்கம். அப்படி ஒரு திங்கள் இவர் சிவனைத் தரிசித்து விட்டு திரும்பி வரும் வழியில் துரதிஸ்டவசமாக நோய்வாய்ப்பட்ட ஐந்து வயதுக் குழந்தை இறந்த செய்தி வர நிலைகுலைந்து போனார். புத்திர சோகத்தில் நித்தமும் துவண்டு வர இளம் வயதில் மனைவியும் இறைவனடி சேர்ந்தார். இல்லறத்தை இறைவன் வெற்றிடமாக திறந்துவிட உயிர் காக்கும் உழவும், மதி காக்கும் கல்வியும், உளம் காக்கும் பக்தியும் தான் மேலானவை என முக்கிய மூன்று வழிகளில் வாழத் தொடங்கினார். சோகம் ததும்பிய இல்வாழ்க்கையுடன் சேராமல் மன வலிமை பெற்று பொது வாழ்க்கைக்கு முழுவதுமாக தன்னை அர்ப்பணம் செய்தார். எந்தப் பிரதிபலனும் இல்லை என்றபொழுதில் எதனையும் எதிர்பாராமல் நன்மைகளும், தொண்டும் செய்து தான் இவரது உயர்பிறப்பின் பெருமை உள்ளத்தின் தூய்மை என அடுக்கிக் கொண்டே போகலாம்.

1904 ஆம் ஆண்டு இவரது இல்லத்து திண்ணைப் பாடசாலை காவியப் பாடசாலையானது. ஆத்திசூடி, நல்வழி, மூதுரை என்னும் அற நூல்களையும் கற்பித்தார். இதன் காரணமாக ஊர் மக்களால் "முத்து உபாத்தியார்" என அழைக்கப்பட்டார். அதில் மகிழ்வும் கண்டார். இதுவே அவருக்குப் பின் நாளில்

பெரும் அடையாளமானது. காவியப் பாடசாலையைப் போதனா பாடசாலையாகத் தரம் உயர்த்த மட்டுவில் தெற்கு சிவன் கோவிலடியில் தனது தந்தைக்கு சொந்தமான நிலபுலன்களை விற்று இன்று சரஸ்வதி வித்தியாலயம் அமைந்துள்ள முழுக் காணியையும் சொத்துடமைச் சட்டத்தின்படி வாங்கினார். காவியப் பாடசாலை காலத்திலிருந்து தம்பி செல்லப்பா அவர்கள் எல்லா கல்வி செயற்பாடுகளிற்கும் பக்கபலமாக இருந்தார். இவரும் செல்லப்பா உபாத்தியார் என அழைக்கப்பட்டார். இக் காணியின் முன் புறத்தில் தம்பி செல்லப்பா அவர்களின் உதவியுடன் 1908 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 8 ஆம் திகதி இலவச போதனா பாடசாலைக்கான கட்டடம் அமைக்கப்பட்டது. அதன் தென்கிழக்குப்புற மூலையில் தம்பி செல்லப்பா ஆசிரியரினால் கச்சாயிலிருந்து கொண்டுவரப்பட்டு நாட்டப்பட்ட பலா மரம் இன்றும் அவர்களுடைய நாமத்தை பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. சைவசமயம் வீழ்ச்சி கண்ட காலம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வழியில் சைவத்தை நிலைநிறுத்தும் உறுதியுடன் தமிழ், சமயம், இலக்கிய இலக்கணம் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். முத்து உபாத்தியார் தனது தம்பியுடன் மேலும் சில ஆசிரியர்களை நியமித்து அவர்களுக்கு தனது பணத்தினை வேதனமாகக் கொடுத்தார். ஆயினும் பாடசாலையை விஸ்தரிக்கும் நோக்கில் அரசாங்க நிதி உதவி பெறும் பாடசாலையாக மாற்றும் முயற்சியில் இறங்கினார். 1910 ஆம் ஆண்டு முத்து உபாத்தியாரால் சைவப்பிரகாச வித்தியாலயம் எனப் பெயர் சூட்டப்பட்டது. 1914 ஆம் ஆண்டு இவரது முயற்சியின் பயனாக அரச உதவி பெறும் அரசாங்கப் பாடசாலையாக பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் யாழ்ப்பாணத்தை வாழ்விடமாகக் கொண்ட திரு.காசிப்பிள்ளை அவர்களும் அவரைத் தொடர்ந்து காசிப்பிள்ளையின் மகன் திரு.அருளம்பலம் என்பவரும் முகாமையாளராகக் கடமை செய்ய முத்து உபாத்தியார் தலைமை ஆசிரியராக செல்லப்பா உபாத்தியாருடன் இணைந்து பாடசாலையைச் செவ்வனே நடாத்தி வந்தனர். ஒவ்வொரு வருடமும் நவராத்திரி விழாவை மிகச் சிறப்பாக செய்து மழலைகள் கரங்கள் தொட்டு வித்தியாரம்பம் தொடக்கி வந்தார். மேலும் தனது செலவில் மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளையும் வழங்கினார்.

மிகுந்த சிவபக்தன், நிறைந்த ஆன்மீகவாதி, மட்டுவில் தெற்கு சிவன் ஆலயம் இவர் வாழ்வின் ஒரு பகுதி என்றே கூறலாம். ஒவ்வொரு திங்களும் அப் பெருமானைத் தவறாது தரிசித்து வந்தார். சோமவாரங்களில் அந்தி நேரப் பூசையை நேர்த்தியாகத் தனது உபயமாக செய்து வந்தார். வருடம் ஒருமுறை கீரிமலை நகுலேஸ்வர ஆலயம் செல்வது வழக்கம். அங்கு தனது தம்பி மகள் மகேஸ்வரி அவர்களையும் உடன் அழைத்துச் செல்வார். திருமதி மகேஸ்வரி நல்லையா அவர்களும் தம்பி பொன்னம்பலவாணர் அவர்களும் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். முத்து உபாத்தியார் நெற்றியில் குங்குமம், சந்தனம், திருநீற்றுக் குறிகளுடன் நான்கு முழ வேட்டியில் குறுகிய சால்வை சாத்தி கடுக்கன் ஜொலிக்கும் காதுகளுடனும் காலில் மிதியடியுடனும் ஆன்மீகத் தோற்றமாய் இருப்பார். சாஸ்திரம், சோதிடம் கற்றுத் தேர்ந்தவர். இவர் சோதிடம் எழுதுதல், சாஸ்திரம் பார்த்தல், நிலையம் கணித்தல்,

திருமணப் பொருத்தம் பார்த்தல் ஆகியவற்றை ஊதியம் பெறாமல் செய்து வந்தார். முத்து உபாத்தியார் வாழ்ந்த காலம் ஊரில் மேதைகளும் கல்வியாளர்களும் நிறைந்த நிலைமை இருந்தது. ம.க.வேற்பிள்ளையும், மகாகவியும் வரகவியுமான மட்டுவில் மகாலிங்கசிவம், ராமலிங்க வித்துவான், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை என்போரும் சிலர்.

இவ்வாறு சிறப்புப்பெற்று வாழ்ந்து வந்த முத்து வாத்தியார் குரோதி வருடம் 1964 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 13 ஆம் திகதி 83 ஆவது வயதில் சிவனடி சேர்ந்தார். இறையடி சேரும்பொழுது. கண்களை மூடி திருவாதவூரர் புராணம் படித்த படியே முடியும் தறுவாயில் இறைவனடி சேர்ந்தார்.

இவரது மரணத்துக்குப் பின் இவரது பணிகள் தம்பி செல்லப்பா உபாத்தியாரால் முன்னெடுக்கப்பட்டன. சரஸ்வதி வித்தியாலயப் பணிகள், ஆசிரியப் பணி, விமரிசையான பாடசாலை சமூகத்துடன் இணைந்த நவராத்திரி பூசையும் மழலைகள் கரங்கள் தொட்டு வித்தியாரம்பமும் தொடக்கி வைப்பார். சாஸ்திரம் பார்த்தல், சோதிடம் எழுதுதல், நிலையம் கணித்தல், திருமணப் பொருத்தம் என்பன அண்ணன் வழியில் இவரின் இறப்பு வரை தொடர்ந்தன.

எப்பலனும் இல்லாது சேவை புரிந்த முத்து உபாத்தியார் என்கின்ற உயர்ந்த உள்ளம் இன்றும் பலர் உள்ளங்களில் வாழ்ந்துகொண்டிருப்பது இவர் மதிப்பை மெருகேற்றுகிறது. சிப்பியுடன் முத்து வாழ்ந்ததை விட இறந்த பின்னர்தான் பெறுமானமும் பயனும் அதிகம். அதுபோலவே முத்துத்தம்பி மறைந்த பின்னர் அளவிடமுடியாத பெறுமானக் கல்வியாய் அவர் பயன்கள் தொடர்கின்றன.

> தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
> தோன்றலின் தோன்றாமை நன்று
>
> - குறள் 236 -

## BIOGRAPHY OF LATE MR.MURUGESU MUTHUTHAMBY, FOUNDER OF MADDUVIL SOUTH SARASWATHY VIDYALAYAM

He was born on 05 August 1881 into a hindu orthodox family from madduvil south, in the Thenmaradchy division of jaffna district. Also identified as chandrapuram, because of the close proximity to the Hindu sivan temple of adored deities Chandra Mouleesar and santhannayaki, Madduvil South is blessed with abundant varieties of valuable and beneficial trees, plants and tall coconut trees, and the green paddy fields, patronized by gentle breeze. In Madduvil South, born as the eldest child to Murugesu - Sivagamipillai, Muthuthamby was brought up in and guided under rich cumulative tradition of Hindu affiliation, along with his siblings, Sellappah ( alter to become teacher of the same school) Sinnathamby ( died of young age ) and Kannagaipillai.

Urged by his desire to pursue education in his very young age, Muthuthamby was in search of a school and finally reached a *Thinnai Pallikoodam* (veranda school ) at his age of eight. *Thinnai Pallikoodam* of the ancient days was on a *Thinnai* of a veranda, which was an outward extended platform in front to the house, where the children felt safe and secure and had their first lessons mentored. It was time when english schools and Christianity dominated the country. Being a Hindu traditional and conformist family, Parents of Muthuthamby registered the English education and accepted Maha Vetpillai of Madduvil North as the veranda school run by him at his residence.

In those days, stylus was used to write on palm ( Ola ) leave which were later treated with turmeric applied to the Olas to get emergence of clear and distinct writings. Muthuthamby started his education with Maha Vetpillai. The method of teaching was mostly oral. He carried Olas and stylus to school. Subsequently, he pursued his studies in Hinduism, Puranas (Legends), Literture, Grammar, Arithmetic, History, Astrology and Philosophy. Having compeleted these studies, he proceded to India to learn Sanskrit.

His love of Tamil and its rich literature as a heritage along with hinduism as his religion, which he learned were tools to emancipate the next generation from ignorance. At a time when western civilization, religion and language were intrusive into Tamils in Ceylon (Sri Lanka ), Muthuthamby had the willingness and generated the courage to conjure the minds of young minds. Children were taught Tamil and Hinduism in the shade of a large tree in his premises as a start. Parents who could not tolerate the decline of the Tamil Language and Hinduism because of the western eggression, admitted their children to the classes conducted by Muthuthamby. As an identification of religion, every student was categorized and branded as a 'Saivan' or Hindu.

When he reached his marriageable age, he entered into wedlock. He married Selvanayaki, the youngest daughter of Kasinathan of Malaysia and sister of Thanabalasingam of Uduvil, after a four day rigorous Hindu rituals of the Brahmin community. As a result of the matrimony, they had a son. Their joy did not stay long when the child died at the age of five years after a brief illness. His sorrow grew further. His wife too died at the young age. Though engulfed in grief and misery created by the vacuum by the demises, Muthuthamby was determined and sacrificed his days to teaching , traditional farming and the faith he adored in the deities.

In 1904, his Veranda school, which had transformed from the class under the tree, became the conventional teaching school at Madduvil South in a land purchased from the proceeding from the sale of properties belonging to Muthuthamby's parents. Appointing his younger brother Sellappah as a Teacher among others, Muthuthamy gave importance to teaching Tamil Grammar and Literature, and Hinduism as the prime subjects following the parth of Arumuga Navalar, who struggled to preserve the religion and language. Wages of all teachers were paid by Muthuthamby from his own monies. sellappah teacher contributed in a big ways for the development at the school along with his brothers.

In 1920, he named the school as Saivapragasa Saraswathy Vidyalayam in an effort to make it a government assisted school. His vision to expand the school brought

is results. The school was registered by the government in 1914 as a Government Assisted School, which he managed by Kasipillai of Jaffna and subsequently by his son Arulampalam with Muthuthamby as its Head Master.

During his days and after his retirement, Navarathri was celebrated in a grand level in the school, followed by Vidyarambam ( beginning learning) for the kids on the Viyayadasami day.

Adorning Saiva symbols and wearing Veshdi and shawl as his identies, known ag Muthu Upathiyayar (Teacher), Muthuthamby was a regular devotee to attend Madduvil Sivan Temple every monday. Descendants of Muthuthamby's brother and sister and that of his wife are leading blessed and contented life. His brother Sellappah's daughter Maheswary, married to (late) Dr. Nallaiah , his sister's son , and ponnampalavanar (canada) are still living.

Muthuthamby's era saw many elites, noteworthy among them were Maha Vetpillai, Maha Kavi (poet) Madduvil Mahalinga Sivam, Vidvan Ramalingam and Pandithamani C.Kanapathippillai, to name a few.

Nature brings illness during old age Muthuthamby was no exception. Even during ailing, he apportioned his belongings to his nearest and dearest ones and the Brahmins. His residence at Nunavil stands as a landmark even today as it houses Anantha Medical Centre.

He died in October 13, 1964, at the age of 83 years after fulfilling ambitions in his late life. His allegiance and service to the language and religion were good services as those to god. His blissful life of 83 years is ample testimony to the principled and disciplined life he led. His contribution to Saraswathy Vidyalayam is commemorated today as the Founder's Day.

**Mr. P. Ganeshalingam.**

Grandson of Sellappah.

# மறவாதிருக்க வழி செய்வோம்

நான் முத்து வாத்தியாரோடு கதைத்தவனுமில்லை , அவரைக் கண்டவனுமில்லை. 1975ம் ஆண்டு மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றத் தொடங்கிய காலப்பகுதியில் ஸ்தாபகர் முத்துவாத்தியார் தினம் ஒக்டோபர் மாதத்தில் மாணவர்கள் மட்டத்தில் தவறாமல் கொண்டாடப்பட்டு வந்தது. முத்து வாத்தியாரோடு தொடர்பு பட்டவர்களும் அவரோடு நெருங்கிப் பழகியவர்களும் அவருடைய குணாதிசையங்கள் பற்றி மாணவர்களுக்கு எடுத்துக் கூறுவார்கள். அவரது தன்னலமற்ற பண்பு என்னை மிகவும் கவர்ந்தது. மறைந்த பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் விரிவுரை நடாத்தும் போது கரடியைக் கண்டவனைக் கண்டவர்கள்தான் பலர் என்று நகைச்சுவையாகக் கூறுவார்கள்.கரடியைக் கண்டவனைக் கண்டவரைப் போல முத்துவாத்தியாரைக் கண்டவர்களைக் கண்டவன் என்ற பாக்கியம் எனக்குண்டு. இன்றைய காலகட்டத்தில் முத்துவாத்தியாரைக் கண்டவர்களைக் காணக்கூடிய பாக்கியம் பலருக்கில்லை.

சைவசமயத்தவர்கள் பலர் மதமாற்றஞ் செய்யப்பட்ட காலப்பகுதியில் சைவப் பண்பாட்டுடன் பிள்ளைகள் கல்வி கற்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டே இன்றைய சரஸ்வதி வித்தியாலயம் உருப்பெறுவதற்கு அன்று முத்து வாத்தியார் அத்திபாரமிட்டார். இந்த அவரது உன்னத நோக்கத்திற்கு இன்றைய சூழ்நிலை பாதகமாக அமையாது பார்த்துக் கொள்ள வேண்டியது ஊர்மக்களினதும், பெற்றோரினதும் கடமையாகும்.

முருகேசு முத்துத்தம்பி என்ற இயற்பெயர் கொண்டவர் செல்லமாக முத்துவாத்தியார் என்று அழைக்கப்பட்டு வந்தமையைப் பலர் அறியாமல் இருக்கலாம். முத்துவாத்தியார் மீது மிகுந்த பற்றுக் கொண்ட எனது மாமனார் திரு.வ. படைவீரசிங்கம் அவர்கள் பாடசாலை நிர்வாகத்தினரின் ஒத்துழைப்புடன் தனது செலவில் அவர் மறையும் காலம் வரை சிறிய அளவில் முத்துவாத்தியார் தினத்தை நடாத்தி வந்தமையை இவ்விடத்தில் குறிப்பிட்டாக வேண்டும். அவர் மறைவிற்குப் பிற்பாடு நான் பாடசாலை அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டதன் பின் வசதிக்கட்டணத்தில் ஒரு பகுதியைச் செலவிட்டு வருடாவருடம் முத்துவாத்தியார் தினத்தைப் பாடசாலை மட்டத்தில் கொண்டாடி அவரின் அரிய பணியை மறவாதிருக்க வழி செய்தேன். இன்றைய காலகட்டத்தில் அவரின் உயர்ந்த இலட்சியத்தைப் பறை சாற்றும் வகையில் சிலை அமைக்க அவரது உறவினர்கள்,பழைய மாணவர்கள்,நலன் விரும்பிகள் எடுத்துக் கொண்ட முயற்சி யாவராலும் பாராட்டத்தக்கது.

**திரு. சி. நாகராஜா**

ஓய்வு நிலை அதிபர், யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்

# இது எங்கள் வாழ்த்து

அள்ளித் தெளிக்கும்
கொள்ளை அழகாய்
வெள்ளைப் பூக்கள்..........
வெற்றி வாழ்க்கை தொட்டுவிட
வீர வாழ்க்கை விளைந்துவிட
வேரூன்றி விருட்சமாகிய
சரஸ்வதி வித்தியாலயம்
வாழ்க வாழ்கவென
வாழ்த்துக்கள் பல கோடி
வாழ்க! வாழ்க! வாழ்க!

முத்துத் தமிழை முத்துத்தம்பி தத்தெடுத்து
மொத்தக் கல்விக்கும்
கற்பனைக்கும்
மெத்தை விரித்து
வித்தகக் கல்வியை
விதைத்தே காக்கும்
சரஸ்வதி வித்தியாலயம்
வாழ்க! வாழ்க! வாழ்க!

வானுயர வாழ்த்துக்கள்
சீர்தொடவும் சிறப்பான வாழ்த்துக்கள்
கல்விக் கடவுள் சரஸ்வதி
கடாட்சமாய் என்றென்றும்
உயர்ந்து உயர்ந்து
உயர்ந்தே
வாழ்க! வாழ்க! வாழ்க!



யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய
**திருவுநர் முத்துத்தம்பி சாரர் குடும்பத்தினர்.**
மட்டுவில் தெற்கு வாழ் மக்கள்
பழைய மாணவர்கள்

அமரர் முருகேசு முத்துத்தம்பி அவர்களின்

# முத்துக்குளித்தகாவியம்

பல்லோரும் பல்லூரும் பணிந்துபோற்றும் நல்லூர் முருகனும்,எரிந்தபின்னரும் துளிர்விட்டபெரு நூலகத்துவரலாற்றையும், தொல்லியலையும் உயர்த்திக் காட்டும் கோட்டையை அணிகல ஆரமாய் சூடி பெருமைக்கோலம் கொண்டிருப்பது யாழ்ப்பாண மாவட்டம். இதில் சாவகனின் தலைமையான அரசு இருந்த காரணப் பெயரான சாவகச்சேரியை தலைமையாகக் கொண்டது தென்மராட்சி.

குயில் கூவும் வைகறைகுருவிகளின் குதூகலப் பள்ளியெழுச்சி, மாமரங்களும், பலாக்களும், தென்னைகளும், பனைகளும், இலுப்பைகளும், நாவல்களும் பூத்தும், பூக்காமலிருக்கும் பூங்கன்றுகளும் சோலையாக்கிய தென்றலின் முத்தம் முற்றங்களை வருடிவிடும் விளக்குமாற்றுக் கீற்றுக்களின் சத்தம் ஆன்மீக அசரீரியாய் ஆலயங்களின் மணிஓசை இன்னும் இன்னும் அழகுததும்பும் அழகுக் கிராமம் மட்டுவில் தெற்கு.

இவ்வழகு ஊரில் வாழ்வியலுக்கு வரைவிலக்கணம் வகுத்த கல்வியாளர் சரஸ்வதி வித்தியாசாலை நிறுவுநர் முருகேசுமுத்துத்தம்பிஅவர்களின் முத்துக்குளித்த காவியம் இது. மட்டுவில் தெற்கு சிவன்கோவிலடியைச் சேர்ந்த முருகேசு என்பவரும் மட்டுவில் தெற்குசிவகாமிப்பிள்ளைக்கும் 05-08-1881 ஆம் ஆண்டு முத்துத்தம்பி என்பவர் தம்பி செல்லப்பா, தங்கை கண்ணகைப்பிள்ளை, இளைய சகோதரன் சின்னத்தம்பி ஆகியோருடன் சரஸ்வதி வித்தியாசாலைக்கும் நுணாவில் சந்திக்கு இடையிலான 1-ம் சேகண்டி வாய்க்கால் ஒழுங்கையின் முதலாம் சந்தியில் இடது பக்கமாகவிருக்கும் ஒழுங்கையில் வலப்பக்கத்தில் அமைந்த ஒரு அறையும் விறாந்தையுடன் கூடிய கல் வீடும் தலைவாசலும் கொண்ட வீட்டின் இயற்கையான சூழலில் முருகேசு முத்துத்தம்பி அவதரித்தார். இன்றுஅந்த மனை அமரர் திருமதி பொன்னம்மா கணபதிப்பிள்ளைக்குச் சொந்தமானது.

சிவவழிச் சைவநெறி நன்நெறியென நெறிபட்ட வாழ்க்கை, கல்வி அதற்கு அணிகலன். எளிமை அவர் மகுடம் எனமக்களுடன் மக்களாய் மனம் நிறைந்து மற்றவர் மனம் நிறைத்துதன் வாழ்வில் வசந்தம் கண்ட கல்வி வள்ளல் முத்துத்தம்பி. நிறைந்த சிவபக்தன். நித்தம் இவர், மட்டுவில் தெற்கு சாந்தநாயகி அம்மையுடன் அமர்ந்து அருள்பொழியும் சந்திரமௌலீச பகவானை கால் நடையாகச் சென்று தரிசனம் செய்து தன்கையால் அமுதுபொங்கி சிவனுக்குப் படைத்துதானும் மதிய

உணவாக உண்டு மகிழ்வார். அப்படி ஒருநாள் சிவனின் பஞ்சவர்ணங்களும் கண்ணில் தோன்றியதாக இன்றுவரை பாடசாலைக்கு அருகில் வசிக்கும் ஆசிரியர் திருமதி விமலேஸ்வரிநாகராசா அவர்கள் கூறுவார். தான் கண்ட பஞ்சவர்ணத்தை தனது குருவான ம. க. வேற்பிள்ளை அவர்களின் இளைய புதல்வனான வே. நடராசா அவர்களிடம் கூறியதுண்டு. அவர் வாயிலாக வெளி வந்தது இந்த உண்மை. (இது12-12-1965 இன் ஈழநாடு இதழின் பிரசுரம்) தான் நடந்து செல்லும் தருணம் எல்லாம் சிவனும் தன்னுடன் நடந்துவருவதை உணர்கிறேன் எனவும் கூறியிருந்தார். முத்து உபாத்தியாயரும் தம்பி செல்லப்பா உபாத்தியாயரும் கால் நடையாக வந்து சிவனைத் தரிசித்துச் செல்வதாக முன்னாள் மட்டுவில் மகாவித்தியாலய அதிபர் திரு. மனோகரன் அவர்கள் இன்றும் கூறுகின்றார்.

அதாவது சிவபெருமானை முகச்சிவன் என்றும் கூறுவார்கள். ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்பன அந்த பஞ்சமுகங்கள். "நிறங்களோர் ஐந்துடையாய்" என்று மணிவாசகர் குறிப்பிடுகின்றார். நடுவிலிருக்கும் ஈசானம் பளிங்குநிறம். கிழக்கு முகமானதத் புருஷம் பொன்னிறம். தெற்கு முகமாகிய அகோரம் கருமை. வடக்குமுகமானவாமதேவம் சிவப்பு. சத்தியோஜாதம் வெண்மையென ஆதிசிவனுக்கு நிறங்களும் ஐந்தே.

இவர் மட்டுவில் வடக்கு ம.க. வேற்பிள்ளை அவர்களை குருவாக ஏற்றுக்கொண்டு தனது எட்டாவது வயதினில் தமிழ், சமயம், புராணம், இலக்கிய இலக்கணம், சோதிடம், சாஸ்திரம், கணிதம், வரலாறு, தத்துவம், ஆத்திசூடி, நல்வழி, மூதுரை ஆகிய பாடங்களை கற்றுத் தேறினார். அதன் பின்னர் கப்பல் வழியாக இந்தியா சென்று குருகுலக் கல்வியான வேதம், ஆகமம் ஆகியவற்றை முறையே கற்றார்.

அந்நாளில் சாவகச்சேரி சிவன்கோயில் சந்தனக்குருக்களும் மட்டுவில் தெற்கு ஞானசர்மா அவர்களின் மாமனாரானபொன்னுத்துரைக் குருக்களும் உற்ற நண்பர்கள். மூவரும் ஒருவரைஒருவர் கண்டதும் கைகோர்த்துநட்பைவெளிப்படுத்துவார்கள். இவர் தனதுவீட்டில் மாணவர்களுக்கு திண்ணைப் பாடசாலையைஆரம்பித்து 1904 ஆம் ஆண்டுகாவியப் பாடசாலையானது 1908 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 8 ஆந் திகதி இலவசபோதனாசாலைக் கட்டடம் அமைக்கப்பட்டது. 1914 ஆம் ஆண்டு இவரது அயராத முயற்சியால் அரச உதவிபெறும் பாடசாலையாக்கப்பட்டது.

சரஸ்வதிதேவியை மிகப்பெரும் உயரமாக்கிபக்தியை அதிகமாக்கி பாடசாலைக்கு முழுமுதல் தேவியாக்கினார். பிரதிவருடங்கள் தோறும் பாடசாலை

சரஸ்வதி பூசையை ஊர் மக்கள் அனைவரும் புடை சூழ விமரிசையாக்கினார். எல்லாப் பாகங்களும் பயன்கொடுக்கும் பனைமரத்து ஓலையால் இழைக்கப்பட்ட பெட்டிகளில் ஊரவர் சரஸ்வதி பூஜைக்கு மூலப் பொருட்களைக் கொடுக்க அவற்றைப் பிரசாதமாக்கி எல்லோரும் ருசிக்கும் நினைவை இன்றும் ஊர்மக்கள் நினைந்து நெஞ்சில் நிறுத்துவார்கள். சரஸ்வதி பூசை தினத்தன்று ஊரே விழாக்கோலம் பூண்டு தம்பி செல்லப்பாவுடன் மட்டுவில் தெற்கு பொன்னுத்துரை ஐயா பூசையை இனிதே நிறைவேற்றுவார்.

முத்து உபாத்தியாயர் நுணாவிலைச் சேர்ந்த காசிநாதர் என்பவரின் புதல்வியும் தனபாலசிங்கத்தின் தங்கையுமாகிய செல்வநாயகியை கரம் பற்றி சிவனின் நாமம் கொண்ட ஓர் புதல்வனைப் பெற்றெடுத்தனர். புதல்வன் ஐந்து வயதினில் நோய்வாய்ப்பட்டு இறைவனடிசேர, அதனைத் தொடர்ந்து மனைவியும் இறையடி சேர்ந்தார். அதன்பின் கல்வியேதன் இரு கண்களெனப் போற்றினார். பாடசாலை நாட்களில் மாணவர்களை வரிசையாக உட்காரவைத்து மதிய உணவு பரிமாறுவார். அதேபோல், பலாப்பழக் காலத்தில் மாணவர்களுக்கு ஒவ்வோர் சுளையாக பகிர்ந்து கொடுத்து மகிழ்வாராம்.

முத்து உபாத்தியாயரின் தந்தை முருகேசு என்பவர் வல்லிபுரம், சின்னத்துரை ஆகிய சகோதரர்களுடன் வாழ்ந்து வந்தார். வல்லிபுரம் அவர்களின் வழியில் அமரர் பவானி என்பவர் அதிபர் வீரகத்தி அவர்களை திருமணம் செய்தார். சின்னத்துரை வம்சாவழியில் அழகுராணி என்பவர் அதிபர் க. மயில்வாகனம் அவர்களைத் திருமணம் செய்து அனைவரும் மட்டுவில் தெற்கில் வாழ்கின்றனர்.

முத்துத்தம்பி அவர்களின் சகோதரர்களான செல்லப்பாவும் சின்னத்தம்பியும் அவரிடம் கற்றுத் தேறினார்கள். அவருடைய இளைய சகோதரன் இளம் வயதினில் இறைவனடி சேர்ந்தார். இறக்கும் தறுவாயில் "முத்துஅண்ணா! நான் காசிகாண்டத்தைக் கற்கவில்லை. மேல் உலகத்திற்கு சென்று அங்கேகற்றுக் கொள்கின்றேன்" என்று கூறிச் சென்றார். தம்பி செல்லப்பா என்பவர் அண்ணன் வழியில் சென்றுசெல்லப்பாச் சட்டம்பியார் என ஊரவர்களால் அழைக்கப்பட்டு அண்ணனுக்குப் பக்கபலமாக அண்ணனின் கடமைகளை தனது கடமையென எண்ணிச் செய்து முடிப்பார்.

ஊரும், உறவினரும், சுற்றமும் சூழ வாழ்ந்தபெருந்தகை. தம்பி செல்லப்பா மட்டுவில் தெற்கு தையல் ஆசிரியை தங்கம்மா அவர்களை மணம் முடித்து

சொர்ணலட்சுமி, பீதாம்பரம், மகேஸ்வரி, குமாரசாமி, பொன்னம்பலவாணர் ஆகியபிள்ளைகளுடன் வாழ்ந்துவந்தார். தங்கை கண்ணகைப் பிள்ளைகார் காத்தவேளான் திலகமான கதிரேசு என்பவரை மணம் முடித்து ஆசிரியர் குமாரசாமி, திருமதி பொன்னம்மா கணபதிப்பிள்ளை, வைத்தியர் நல்லையா ஆகியோரை பிள்ளைகளாகப் பெற்றனர். இவர்கள் முத்து உபாத்தியாயரை சிறப்பாகக் கவனித்து வந்தனர். மருமகள் பொன்னம்மா தனது அம்மானுக்கு விரும்பிய வெந்தயக் குழம்புடன் சேர்ந்த உணவு தயாரித்து தனது மகன்களான சரவணபவான், கணேசமூர்த்தியிடமும் மருமகனான சோமச்கந்தராஜாவிடமும் கொடுத்து அனுப்புவார். இவர்கள் மிகக் கரிசனமாக தனது கடமையாக "பள்ளிக்கூடப்பா" எனப் பாசமாக அழைத்து அன்பார்த்தி வந்தார்கள். அவருடைய எழுத்துவேலைகளுக்கு சரவணபவான் அவர்கள் உதவி செய்துவந்தார். மருமகள் பொன்னம்மா அவர்களின் மகள்களான சிவகாமசௌந்தரி, பரமேஸ்வரி இருவரும் செல்விகளாக இவருக்கு சிறு உதவிகளுடன் தேநீரும் தயாரித்துக் கொடுத்தார்கள். முத்து உபாத்தியாயரின் துணைவியாரின் உறவினர்களான திரு. திருமதி முத்தாச்சி குடும்பத்தினரும் நித்தம் பக்கபலமாக உதவிகள் செய்து வந்தனர். இவர்களின் மகன்களான நகுலநாதன், பரமநாதன் அவர்களும் சோதிடம் முதலியவற்றிற்கு எழுத்து உதவிகளும் செய்து வந்தார்கள்.

முதுமையெனும் இயல்பு இயற்கையாய் வந்துவிடவும் நோய் வாய்ப்பட்டு இருக்க, தம்பிசெல்லப்பா, மருமகள் பொன்னம்மா, உறவினர் கனகசபை குடும்பம் ஆகியோர் மிக அன்பாக கவனித்தனர். தளர்ந்த காலத்தில் இருந்தபடியே மௌன விரதம், சிவனுக்கு அகப்பூசை என தெய்வீக வழி நின்றார். இறப்பை அறிந்து இறப்புக்கு பின்னரும் கடமை உண்டு என சொத்துக்களை வகைப்படுத்தினார். அந்தணர்களை அழைத்துதான் வளர்த்த கோமாதாக்களை தானம் கொடுத்தார். இவர் குடியிருந்த தனது மனைவியின் நுணாவில் வீட்டை மனைவியின் தம்பி தனபாலசிங்கத்தின் மகள் சங்கீத வித்துவாட்டி சறோஜினிதேவிக்கு கொடுத்து, சரஸ்வதி பாடசாலையின் முன்னாள் அதிபரான அகிலேசர் கந்தையாவின் மகன் வருமானவரித்துறை உதவி ஆணையாளரான திரு. தனபாலசிங்கத்திற்கு திருமணம் செய்து வைத்தார். தனது சொத்துக்களை தங்கை மகன் வைத்தியர் நல்லையா அவர்களுக்கும், தம்பி செல்லப்பா ஆசிரியரின் மகள் மகேஸ்வரி அவர்களுக்கும் கொடுத்து இருவரையும் கணவன் மனைவி என்ற உறவில் இணைத்து மகிழ்ந்தார்.

குரோதவருடம் 1964 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 13 ஆம் திகதி 83 ஆவது வயதில் சிவனடிசேர்ந்தார். இறையடி சேரும்பொழுது கண்களை மூடி திருவாதவூரர் புராணம் முழுவதும் படித்து முடித்துவிட்டு அருகில் இருந்த மருமகள் பொன்னம்மாவைப் பார்த்து "மருமகளே! இதில் சிலபிழைகள் உள்ளனதிருத்தி அமைக்க வேண்டும்" என இறுதிவார்த்தை கூறியதுடன் புண்ணியம் நிறைந்த புனித உயிர் புகழவனை விட்டுப் பிரிந்தது.

இன்று நூற்றுப் பத்தாவதுஆண்டை நிறைவு செய்த மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய ஸ்தாபகர் முருகேசு முத்துத்தம்பி அவர்கள் கந்தபுராணம் படித்து பயன் சொல்வதற்கு ஆயத்தமாகி, கையில் புத்தகத்துடன் பாடசாலைவளவினுள் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றார். அந்நாளில் அந்திநேரங்களில் மட்டுவில் தெற்கு பொன்னுத்துரை ஐயா, முத்து உபாத்தியாயர், தம்பிசெல்லப்பா உபாத்தியாயர், வே. கணபதிப்பிள்ளை ஆசிரியர், அகிலேசர் கனகசபை ஆகியோர் கந்தபுராணம் பாடிபயன் சொல்லுவார்கள். மட்டுவில் தெற்கு வாழ் மக்கள் மனதில் மீண்டும் முத்து உபாத்தியாயர் வந்து விட்டார்.

"இவர் ஓர் வலம்புரிமுத்து" எனபண்டிதமணிசி. கணபதிப்பிள்ளைஅவர்கள் கூறியுள்ளார்.

**திருமதி. மகேஸ்வரி நல்லையா**
*முன்னாள் ஆசிரியை,*

ஸ்தாபர்கள் அமரர் முத்துத்தம்பி அவர்கள் பிறந்த வீடு


( தற்போது அமரர் திருமதி பொன்னையா கணபதிப்பிள்ளைக்குச் சொந்தம் )



தலைவாசல் எச்சங்களும்



அவர் பாவித்த வாங்கு



ஸ்தாபர்கள் அமரர் முத்துத்தம்பி அவர்கள் வாழ்ந்த வீடு

( தற்போது ஆனந்தா வைத்தியாசாலை உட்புறம் )



# ஓய்வு பெற்ற ஆசிரியரின் உள்ளத்திலிருந்து

நூற்றுப் பத்தாவது ஆண்டில் வசந்தமாய்க் காலடி வைக்கும் சரஸ்வதி வித்தியாலயத்துக்கு வசந்த வாழ்த்துக்கள். மலர்கள் மலர்கின்ற காலம் பூமிக்கு எப்படி வசந்த காலமோ அப்படி இப் பாடசாலையில் சேவை செய்த காலம் எனக்கு வசந்த காலம்.

1987 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் திரு. ஆ. செல்லையா அவர்கள் அதிபராகவும், திரு சி. நாகராசா அவர்கள் பிரதி அதிபராகவும் இருந்த காலத்தில் எனது ஆசிரியர் சேவையை இப் பாடசாலையில் தொடங்கினேன். அதன் பின்னர் திரு. இ. கணேசன் அவர்கள் அதிபராக இருந்தார்.

பின்னராக திரு. சி. நாகராசா அதிபராக, திரு. நடராசா அவர்கள் பிரதி அதிபராக பொறுப்பேற்ற பின்னர் பாடசாலையின் ஒழுங்கமைப்பானது ஒழுக்கம், பண்பாடு, கலாசாரம், என கட்டுப்பாடானது ஒவ்வொரு மாணவர்களதும் எதிர்காலம் பற்றிய நேர்த்தியான வழிநடத்தல் இவரிடம் இருந்தது. ஆசிரியர்களின் உயர்வும் மதிப்பும் அதிபர் திரு. சி. நாகராசா அவர்களால் தனித்துவமாக்கப்பட்டது. ஒவ்வொரு ஆசிரியர் தினத்துக்கும் நாகராசா அதிபர் அவர்கள் தனது வீட்டில் விருந்தளித்தமை இன்றும் என்றும் நெஞ்சம் மறக்காத வசந்தமாய்ப்போன நினைவுகள். ஊர் பெரியவர்களை மதிப்புடனும் ஊரவர்களை அன்புடனும் அணைத்து இப் பாடசாலை கல்வி,கலாசாரம் பேணுவதில் தனித்துவமானது. 1998 ஆம் ஆண்டு நான் இங்கிருந்து பணி மாற்றம் எடுத்து கொழும்பு சென்று விட்டேன். ஆயினும் எனக்கு மனதை விட்டகலாத மண்வாசனை தான் இப்பாடசாலை.

சரஸ்வதி வித்தியாலயத்தில் ஆசிரியப் பணி செய்த காலம் எனக்குப் பொற்காலம்.

நிறைய நிறைய வசந்தங்களை மனதுக்கும் வாழ்க்கைக்கும் வாரிக் கொடுத்த வசந்த காலம். எதுவரை உயர முடியுமோ அதுவரை இப் பாடசாலையின் புகழ் உயர வாழ்த்துக்கள்.

**திருமதி. பத்மினி பூவேந்தன்**

*முன்னாள் ஆசிரியை,*

## வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து கடமையாற்றிய அதிபர்கள்.

திரு . M. முத்துத்தம்பி
திரு . P. சிப்பிறியாம்பிள்ளை
திரு . S. ஆறுமுகம்
திரு . S. கார்த்திகேசு
திரு . V. பொன்னையா
திரு . A. கந்தையா
திருமதி . A. இராமலிங்கம்
திரு . S. தம்பிராஜா
திரு . S. மகாலிங்கம்
திரு . A. பரமநாதன்
திரு . வீரகத்தி
திரு . A. செல்லையா
திரு . E. கணேசன்
திரு . S. நாகராஜா
திரு . S.R. மகேந்திரன்
திருமதி . V. மேகலிங்கம்
திரு . V. நடராஜா
திரு . K. குணசிங்கம்
திரு . S. பேரின்பநாதன்
திரு . K. உதயகுமாரன்


திரு. A. கந்தையா


திருமதி. A. இராமலிங்கம்


திரு. S. மகாலிங்கம்


திரு. A. செல்லையா


திரு. S. நாகராஜா


திரு. S. R மகேந்திரன்


திருமதி . V. மேகலிங்கம்


திரு . V. நடராஜா


திரு . K. குணசிங்கம்


திரு . S. பேரின்பநாதன்

பாடசாலையின் முன்னாள் அதிபர்கள் சிலர்...

# மட்டுவிலின் மாண்பு

கி.பி 12 ஆம் நூற்றாண்டில் புகழும் வீரமும் சிறந்த இராஜாதிராஜ சோழ மன்னன் தமிழகத்தில் அரசாட்சி நடத்திய காலத்தில் அவனது படைகள் வட இலங்கை மீது படையெடுத்து மட்டிவால் என்ற ஊரில் தங்கியிருந்ததாகவும், அங்கிருந்து படைவீரர்களையும் யானைகளையும் சிறைப்பிடித்து தமிழகத்திற்கு கொண்டு சென்றதாகவும் திருவாலங்காடு மற்றும் பல்லவராயன் பேட்டை கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவ்வாறு கல்வெட்டுக்கள் கூறும் மட்டிவால் எனும் இடத்தை வரலாற்று ஆராய்ச்சியாளர்களான பேராசிரியர் பரணவிதான, பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி ஆகியோர் தென்மராட்சியில் உள்ள இன்றைய மட்டுவில் கிராமம் என உறுதிப்படுத்தியுள்ளனர்.

அரச வரலாற்றுச் சிறப்புள்ள இக் கிராமத்தில் தென் பகுதியில் சரஸ்வதி பூசையை சிறப்பாக்கி சரஸ்வதி தேவியைத் தன் பெயராக்கிக் கொண்ட சரஸ்வதி வித்தியாலயம் 110 ஆவது அகவை தொடுவதில் அக வணக்கங்களையும் அக வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மனமகிழ்வடைகின்றேன். இச்சிறப்பு, விளம்பி வருடத்தில் பாடசாலை நிறுவுநரது உருவச்சிலை நிறுவப்பட்டு திரைநீக்கம் செய்யப்படுவது இப்பாடசாலையினதும் ஊரினதும் மகோன்னதம் என்பதே உண்மை. தன்னுடைய சேவைக்காலத்தில் பாடசாலையின் பாரம்பரியங்களையும் விழுமியங்களையும் பாதுகாக்கவும் நிறுவுநர் சிலையை நிறுவும் முயற்சிக்கு முழுத்துணையாக நிற்கும் இன்றைய அதிபர் திரு. க. உதயகுமாரன் அவர்களுக்கு நெஞ்சம் நெகிழ்வான நன்றிகளும் வாழ்த்துக்களும் கூறுகின்றேன். செந்தமிழ்ச் சாரல் வருடி வெண்டாமரை மலரில் அமரும் சரஸ்வதி நாமத்தைக் கொண்ட இவ் வித்தியாலயம் யாதெங்கும் புகழ்மணம் பரப்பி யாவரும் நெகிழ் மனம் சேர வாழியவே.

நிதர்சனமாக நன்றிகள்

**நிரோஷனி கணேசலிங்கம்**

பழைய மாணவி

(B.A.Hons)

# எங்கள் கிராமம்

கடல் சூழ்ந்த இலங்கை முத்தில் தமிழ் கலாசாரத்தின் மையம் என திகழும் யாழ்ப்பாணத்தில் பெருநிலப்பரப்புத்தொகை கொண்டு எவை எவை வாழ்வுக்கும் வாழ்வாதாரத்துக்கும் தேவையோ அவை அவை அத்தனையும் நிறையப் பெற்ற செழுமைப்பரப்பு தென்மராட்சி. தென்மராட்சியில் வரம்புகளுடன் வரம்புகள் இணையும் வயல்களின் நேசமும் கதிர்களுடன் கதிர்கள் இணையும் காற்றின் கீதமும் கலந்து நெல்லெடுத்து புத்தம் புது அரிசியினை பாலுடன் தேங்காய் கலந்து பஞ்சாய் நுரை தள்ளி பொங்கிப் பொங்கலிட்டு ஒவ்வொருவரும் வருட வாழ்வினைத் தொடங்கக்கூடிய பசும் பொன் பூமி மட்டுவில் தெற்கு கிராமம்.

மட்டுவில் தெற்கு வரலாற்றுச் சிறப்பு உள்ள இடம். தென்பொதிகைச் சந்தனத்தமிழ் சாரலுக்கும் எமக்கும் பூர்வீகத் தொடர்பு இருப்பது போல தென் மட்டுவிலுக்கும் தென்னிந்தியாவிற்கும் ஆத்மார்த்த தொடர்பு உள்ளது. இந்தியாவில் மன்மதன் எனும் அரசன் நிறைந்த சிவபக்தனாய் பூசை செய்த சிவலிங்கம் நல்லூர் கைலாசநாதர் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு பூசை நடைபெற்றது. சைவ விழுமியங்கள் அழிக்கப்பட்டு ஆங்கில ஆதிக்கம் மேலோங்கிய ஆங்கில ஆட்சியாளர் காலம் அது. அச்சிவலிங்கம் அழிக்கப்பட்டு விடுமோ என்ற அச்சத்தில் யாரும் அறியாமல் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த அந்தணர் ஒருவர் இருள் சூழ்ந்த இரவு வேளைதனில் மாட்டு வண்டியில் அதனை எடுத்து வந்து இன்றைய சிவன் கோவிலுக்கு முன்னே இருந்த பாழடைந்த திருமஞ்சக் கிணற்றில் இட்டு மறைத்துச் சென்றார்.

அதன் பின்னர் அக் கோயில் அந்தணருக்கு தெய்வீக அருளால் கனவில் அச்சிவலிங்கம் உள்ள இடம் தெரிய வந்தது. அந்தணர் பக்தர்களுடன் இணைந்து இலிங்கத்தை மீட்டு பிரதிஷ்டைசெய்து நித்தமும் பூசை செய்து வந்தார். இதுவே சந்திர மௌலீஸ்வரசிவன். இச்சிவன் சாந்தநாயகி அம்மையுடன் அமர்ந்து அருள் பாலித்து வருகின்றார். இதனாலேயே மட்டுவில் சந்திரபுரம் என்னும் பெயரும் பெற்றுள்ளது. தெய்வீக அருளும் தெய்வச் சிறப்பும் தான் ஓர் ஊரின் முதற்கண். சிவன் கோவிலிற்கு அருகிலிருக்கும் செல்லப் பிள்ளையார் கோவில் ஆதீனம் இந்தியாவிலுள்ள வேதாரணியத்துடன் தொடர்பு உள்ளது என்பதும் தெரிய வந்துள்ளது.

நிறைந்த கல்வியலாளர்களின் பற்றுத் தொடர்புகள் எங்கள் கிராமத்தை மேன்மேலும் மெருகேற்றியது. சைவத்தொண்டரும் மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய நிறுவுநர் திரு.மு.முத்துத்தம்பியை தத்தெடுத்த கிராமம் இது. மட்டுவில் வடக்கைச் சேர்ந்த திரு.ம.க.வேற்பிள்ளை அவர்கள், சைவப்பெரியார் உயர்திரு.சு.சிவபாதசுந்தரம் அவர்களின் சகோதரி மகேஸ்வரி அம்மையாரை மாங்கல்யம் செய்து கல்விக்கணையால் எம் கிராமம் தொட்ட பெருங்கல்வியியலாளர். இவர் இந்தியாவில் சிதம்பரம் நாவலர் பாடசாலை அதிபராக இருந்தார். திருவாதவூரடிகள் புராணத்துக்கு உரை எழுதி மிகச் சிறந்த உரையாசிரியர் என நிரூபணம் ஆகினார்.

இவர் வம்சாவழியில் இந்துசாதன பத்திரிகை ஆசிரியர் திரு. ஞானசம்பந்தபிள்ளையும், கவிஞரும் மதிப்புக்குரியவருமாகிய திரு.மகாலிங்கசிவம் அவர்களும் வாழ்ந்து அடி தொட்ட இடம் இது. இதன் வழி பெருவழியென ஈழத்து இலக்கிய வளர்ச்சி தொட்டது மட்டுமன்றி இந்திய இலக்கியவாதிகளையும் ஈர்த்த புகழுக்கும் புலமைக்கும் சொத்தான உயர்திரு. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களும் தன் தாள்மலர் தொட்டு வாழ்ந்திருந்த கிராமம் என்பதில் இன்னும் பெருமை கொள்கின்றது. இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கௌரவ இலக்கிய கலாநிதி பட்டம் பெற்று கௌரவம் சேர்த்தார். பலாலி ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராக விசேட பணியாற்றினார்.


மட்டுவில் தெற்கு ஆலயங்களும், பாடசாலைகளும், சனசமூக நிலையங்களும் சூழ்ந்த கிராமம். ஆன்மீகமும் கல்வியும் ஊட்டி வளர்த்து சந்தனக்குளிர்ச்சி நிறைந்த மனங்களை உடைய மானிடர்களை உருவாக்கிய அக வளமான கிராமம். மேலும் எமது கிராமத்தில் நுணாவிற்குளம் கண்ணகை அம்மன் கோவிலும் வேரக்கேணி கந்தசுவாமி கோவிலும் அமைந்துள்ளது.

**திரு. காசிநாதன் சிவபாலன்**

*( பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் பேரனார்)*

*மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.*

**தரம் 10 மாணவன் ச. அபிவிஸ்ணு அவர்களால் வரையப்பட்ட ஸ்தாபர்கரின் படம்**



# துறைசார் நிபுணர்களின் படைப்புக்கள்

# ஆசிரியத்துவமும் மாணவர் கல்வியும்

**பேராசிரியர் க. கந்தசாமி**

கல்வி என்பது எமது ஆத்மாவுடன் இரண்டறக் கலந்த ஒன்று. ஆனபடியால்தான் கற்பதற்குரிய இடங்களை நாம் நேசிக்கின்றோம் . பாடசாலைகளை ஆலயங்களாகவும், பண்பாட்டு மையங்களாகவும் , ஏன் எமது வளமான எதிர்காலத்துக்காக தவம் செய்யும் தவச்சாலைகளாகவும் நோக்குகிறோம். எமது சமூகம் கற்க மறுப்பவர்களை வாழ மறுப்பவர்களாகவே பார்க்கிறது. ஏனெனில் கல்விதான் ஒரு மனிதனை அவன் சார்ந்த பண்பாட்டுச் சூழலில் ஆளுமைமிக்க முழுமனிதனாக வாழ்வதற்கு உதவுகிறது. தனிமனிதன் ஒவ்வொருவரது தனித்துவமான ஆற்றல்களை வளர்ச்சியடையச் செய்வது கல்வியின் உயர்ந்த நோக்கமாகக் காணப்படுகிறது. கல்வி வாயிலாக ஒவ்வொருவரும் தத்தமது திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்பு ஏற்படுகிறது. கல்வியின் வாயிலாக ஒருவர் தனது தலைவிதியைத் தானே உருவாக்கவும் முடிகிறது. அதாவது கல்வியால் ஒவ்வொருவரும் தம்மை தாமே உருவாக்கும் சிற்பிகளாக மாறுகின்றனர். இதனால் கல்வி கற்பதற்கு கால எல்லையோ, கற்பதற்குரிய வரையறையோ இன்றி ஒருவன் வாழ்நாள் முழுவதும் கல்விகற்கத் தூண்டப்படுகிறான். இருப்பினும் கல்வியின் நோக்கம் கற்பது மட்டுமல்ல. கற்றபடி ஒழுக வேண்டும் என்பதையும் அக்கல்வியே வலியுறுத்துகிறது. இதனால்தான் கல்வி மட்டுமல்ல கல்வியைப் போதிக்கும் ஆசிரியத் தொழிலும் புனிதமாகப் பார்க்கப்படுகிறது.

மாணவர்கள் தான் ஒரு நாட்டின் விலைமதிப்பற்ற சொத்துகள். அவர்கள் நாட்டின் எதிர் காலத்தை நிர்ணயிப்பவர்கள். நாட்டின் உயிர் நாடிகள், நாளைக்கு அவர்கள் உயிர் காக்கும் வைத்தியர்களாகவோ, நாட்டை வடிவமைக்கும் பொறியியலாளர்களாகவோ, வாழ்வை வளப்படுத்தும் தொழில்நுட்பவியலாளர்களாகவோ, நாட்டை வழிநடத்தும் அரசியல் வாதிகளாகவோ, சமூகத்தை உருவாக்கும் கல்வியளார்களாகவோ அல்லது மனித நேயம்மிக்க நாட்டுப்பற்றாளர்களாகவோ மிளிரப்போகிறவர்கள். எனவேதான் மாணவ சமூகத்தை வழிநடத்துபவர்கள் கையில் நாடொன்றின் எதிர்காலம் தங்கியுள்ளதென கற்றோர் கூறுவர். அதாவது எமது நாட்டின் எதிர் காலம் , சமூகத்தின் எதிர்பார்ப்பை வழங்கக்கூடியவர்களாக மாணவர்களை கல்வியின் ஊடாக உருவாக்கல் ஆசிரியர்களின் கைகளில் தங்கியுள்ளதாக நான் பூரணமாக நம்புகின்றவன் என்ற நிலையில் இந்தக் கட்டுரையில் கல்விக்கும் ஆசிரிய சமூகத்திற்கும் இடையில் இருக்க வேண்டிய தொடர்பு பற்றிய சில விடயங்களை பதிதல் பொருத்தமானதெனக்கருதுகிறேன்.

சமகாலத்தில் கல்வி அபிவிருத்தி பற்றிய கருத்துப் பரிமாற்றத்தில் பலராலும் முதன்மைப்படுத்தி ஆராயப்படும் முக்கிய அம்சம் ஆசிரியத்துவத்தின் பங்கும், பணியும் பற்றிய விடையமாகும். இக்கருத்துப் பரிமாற்றத்தை எமது சமூகத்தின் எதிர்கால முன்னேற்றம் ஆசிரியர்களின் பங்களிப்பால் தீர்மானிக்கபடுகின்றது என்ற சமூக நம்பிக்கையின் குறியீடாக நாம் எடுத்துக் கொள்ளவேண்டும். ஏனெனில் ஆசிரியத்தொழில் என்பது எமது சமூகத்தின் பார்வையில் மிக உயர்ந்த, புனிதமான, கண்ணியம் மிக்க தொழிலாக என்றும் பார்க்கப்படுகிறது. மனித நாகரிக வரலாற்றில் ஆசிரியர்களே கல்விச் செயற்பாட்டின் நடுநாயமாகவும், சமூகச் செயற்பாட்டின் குறியீடாகவும் விளங்குகிறார்கள். அதாவது ஆசிரியர் ஒருவரின் செயல் அவர் சார்ந்த சமூகத்தின் செயற்பாட்டின் பிரதிபலிப்பாகவே பார்க்கப்படுகிறது. ஆசிரியர் ஒருவருக்கு ஆழ்ந்த அறிவு, நுண்ணிய புலமை, துறைபோகக் கற்றல், எப்போதும் கற்றல், சீரிய ஒழுக்கம், மதிநுட்பம், எதையும் கிரகிக்கும் திறன், நடுநிலைமைப் பண்பு, சமூக இயைவாக்கம் என்பன முக்கிய இலட்சணங்களாகக் காணப்படுகின்றன. இதன் காரணமாக ஆசிரிய சமூகம் எல்லாக் கால கட்டத்திலும், எல்லோராலும் போற்றப்பட்டு, மதிக்கப்படும் குழாமாகக் காணப்படுகிறது. இதனால் காலத்தின் தேவை கருதி கல்வியின் நோக்கமும், கல்விச் செயற்பாடும் மாற்றமடையும் போது ஆசிரியரின் பங்கும், பணியும் மாற்றம் பெறுவது தவிர்க்க முடியாது போகிறது என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

இன்றைய சமூகத்தில் ஆசிரியருக்கு இருந்து வந்த மதிப்பு குறைவடைந்து போகின்றதென்ற ஆதங்கம் எம் எல்லோரிடமும் உண்டு என்பதை நான் மறுக்கவில்லை. இதற்குரிய காரணங்களை அறிய ஆசிரித்தொழிலின் சமூக எதிர்பார்ப்பை சமகால உலகளாவிய மாற்றங்களுடன் தொடர்புபடுத்தி ஆழமாக ஆராய்ந்து பார்க்க வேண்டியதாக இருக்கும். நான் ஆசிரிய வாண்மையையும், அல்லது ஆழுமையையும், அதாவது ஆசிரியர் மீதான சமூக எதிர்பார்ப்பையும், அவர்கள் மீது சமூகம் கொண்டுள்ள மதிப்பையும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாகப் பார்க்கவிழைகிறேன். வாண்மையில்வாத ஆசிரியர் ஒருவரைச் சமூகம் மதிக்காது. சமூகம் மதிக்காத ஆசிரியர் ஒருவரிடம் ஆசிரிய வாண்மை இருக்கும் எனவும் கருதமுடியாது. ஆசிரியவாண்மை என்ற சொல்லக்குள் ஆசிரியரின் பல தரப்பட்ட அறிவுத் திறன் மட்டும் உள்ளடங்கவில்லை. அதற்கு அப்பால் அவரது நடத்தை, மாணவ சமூகத்தை வழிநடாத்தும் ஆற்றல், தனது செயற்பாட்டுக்கு பொறுப்பெற்கும் பக்குவம், நேர்மானப்பான்மை என்பவையும் உள்ளடங்கியுள்ளன. இதனால்தான் ஆசிரிய வாண்மையை உயர்த்துவதற்கான சேவைக்கால கருத்தரங்குகளில் ஆசிரியர்களுக்கு இருக்க வேண்டிய பாடம் சம்பந்தமான விடயம் மட்டும் கதைக்கப்படுவதில்லை. இத்திறமைகள் பற்றியும் கதைக்கப் படுகிறது. இன்று ஆசிரிய சமூகத்தின் மதிப்பு குறைவடைந்து வருவதற்கான காரணங்கள் பற்றிப் பலரும் ஆராய்ந்து வருகின்றனர். தனியார் கல்லூரிகளின் அபரிமித வளர்ச்சி, பாடபோதனையில், பரீட்சையில் முறையில் பின்பற்றப்படும் புதிய நடைமுறைகள், பல்கலைக்கழக அனுமதியில் காணப்படும்

போட்டித் தன்மை, சமகால மாறுதல்கள் எனப் பல காரணங்கள் கூறப்பட்டு வருவதுடன் அதற்குரிய தீர்வுகளும் முன்வைக்கப்பட்டும் வருகின்றன. அவை அவரவர் அனுபவத்தின் அடிப்படையில் எழுந்த கருத்துக்களாகவே நான் பார்க்கிறேன். அவை பலவற்றில் எனக்கும் உடன்பாடு உண்டு. ஆயினும் எனது பார்வையில் இருண்டு முக்கிய காரணங்களை இவ்விடத்தில் முதன்மைப்படுத்திக் பதிய விரும்புகிறேன்.

அவற்றில் ஒன்று, எப்போது எல்லோருக்கும் கல்வி என்ற எண்ணக்கரு நம் சமூகத்தில் தோன்றியதோ, அப்போதே குறிப்பிட்ட ஒரு மக்களுக்கு மட்டும் உரியதாக இருந்த எமது பாரம்பரிய குருகுலக் கல்வியிலும், திண்ணைப் பள்ளியிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இந்த மாற்றம் தான் நாளடைவில் கல்வியின் நோக்கத்திலும், பாடவிதானத்திலும், கற்றோரின் எண்ணிக்கையிலும் பல மாற்றங்கள் ஏற்பட வழிவகுத்தன. இந்த மாற்றங்கள் புதிய ஆசிரியர்களின் வருகையைப் பல மடங்காக உயர்த்தியது. இதனால் ஒரு வகுப்பில் பல பாடத்திற்கு ஒரு ஆசிரியர் என்ற நிலை மாறி ஒரு பாடத்திற்கு பல ஆசிரியர்கள் என்ற நிலை உருவாகியது. ஒரு வகுப்பில் உள்ள மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் பல பாடங்களைப் போதித்த போது அவரின் பொறுப்பும், வகிபாகமும் பல மடங்காக உயர்ந்து இருந்தது. மேலும் மாணவர்களை வழிநடாத்தும் தலைமைத்துவம் குறிப்பிட்ட ஆசிரியரிடமே இருந்ததினால் அந்த ஆசிரியர் மிக உயர்வாக மாணவர்களாலும், சமூகத்தாலும் மதிக்கப்பட்டார். தற்காலத்தில் இதற்கு மாற்றிடாக ஒரு வகுப்பு மாணவர்களுக்குப் பல ஆசிரியர், ஒரு பாடத்திற்குப் பல ஆசிரியர் என்ற நிலை உருவாகியுள்ளது. இதை ஆரோக்கியமான முன்னேற்றம் என்பதை நான் மறுக்கவில்லை. அதேவேளை இந்த மாற்றத்தால் ஆசிரியரின் வகிபாகமும், பொறுப்புக்களும் பகிரப்படுகின்றன என்பதற்கு அப்பால், தட்டிக்களிப்பதற்கான வாய்ப்பும் உருவாகியுள்ளது, அதற்கும் அப்பால் வகைகூறும் தேவையும் இல்லாமல் போகிறது. இந்நிலையில் வேறுபட்ட ஆசிரிய தலைமைத்துவத்தில் மாணவர்களை முறையாக வழிநடாத்துவதில் ஆசிரியர்களிடையே பொறுப்பற்ற நிலை உருவாகியுள்ளது. இந்நிலமையே மறைமுகமாக, ஆசிரியர் மீது மாணவர்களும், சமூகமும் கொண்டிருந்த மதிப்பு படிப்படியாகக் குறைவடையக் காரணமென நான் கருதுகிறேன்.

மற்றைய முக்கிய காரணம் இன்றைய மாணவசமூகத்தின் தேவைகளை ஆசிரியர்களால் முற்றாகப் பூர்த்தி செய்ய முடியாதிருப்பதாகும். ஒரு காலகட்டத்தில் மாணவர்களுக்கு வேண்டிய அனைத்து அறிவுரைகளும், ஒழுக்கம் பற்றிய வழிகாட்டல்களும், ஆசிரியர்கள் உடாகவே மாணவர்களுக்குச் சென்றடைந்தன. பின்னர் அவை சமூகத்தையும் சென்றடைந்தன. ஆனால் இன்றைய நவீன தொழில் நுட்ப வளர்ச்சியால் அறிவுப் பரிமாற்றத்தில் உலகம் ஒரு கிராமமாகச் சுருங்கி விட்டது. இன்று உலகில் ஏற்படும் மாற்றங்கள், புதிய கண்டுபிடிப்புக்கள், சிந்தனைகள் என்பனவற்றை உடனுக்குடன் தெரிந்து கொள்ளும் வகையில் தகவல் தொழில் நுட்பம் அபரிமித வளர்ச்சி அடைந்துள்ளது. இவற்றைக் கையாளுவதில் மாணவர்கள் எம்மை முந்திக்

கொண்டுள்ளனர். அதாவது பரிட்சயப்பட்டவராய்யுள்ளனர். புதிய விடயங்களை, உலக மாற்றங்களை தெரிந்து கொள்வதிலும், அவற்றைப் பிறருக்கு எடுத்துரைப்பதிலும் மாணவர்கள் ஆர்வமாக உள்ளனர். இதனால் ஆசிரியர்களுக்கு தெரியாத பல புதிய விடங்கள் மாணவர்களுக்குத் தெரிய வருகின்றன. இது வரவேற்கத் தக்க மாற்றமாகவே நான் பார்க்கிறேன். அதேவேளை இந்த மாற்றத்தால் மாணவர்கள் ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கும் சில ஆலோசனைகளை எல்லா ஆசிரியர்களாலும் முழுமையாக வழங்கமுடியாது போகிறது. எல்லாவற்றிற்கும் ஆசிரியரைத்தான் நம்பியிருக்க வேண்டும் என்ற முன்னைய நிலைப்பாடு தற்போது மாறுகிறது. இதனால் ஆசிரியர் பால் மாணவனுக்கு இருந்த மதிப்பும் ஈர்ப்பும் குறைவடைந்து வருகிறதெனலாம்.

இந்த மாற்றம் இலங்கையில் மட்டுமல்ல ஏனைய ஆசிய நாடுகள் பலவற்றிலும் ஏற்பட்டுள்ளது. இது தவிர்க்க முடியாத நிலைப்பாடுதான். இருப்பினும் இந்த மாற்றங்களுக்கு முகம் கொடுப்பதன் ஊடாக எப்படி ஆசிரியர் தமக்குரிய மதிப்பைத் தொடர்ந்து தக்கவைப்பதென்பதே இன்று அவர்களுக்குள்ள கட்டாய பணியாகும். இதுதான் ஆசிரியத்துவத்தின் இன்றைய பிரதான சவாலாக நான் ஓர் ஆசிரியன் என்ற வகையில் பார்க்கின்றேன். இந்த சவாலை சந்திக்க, தம்மை வாண்மையுள்ளவராக மாற்ற ஆசிரியர்கள் நேர்மனப் பான்மையுடன் தினமும் தம்மை தயார் செய்பவர்களாக , அதாவது அறிவை தொடர்ந்தும் தேடுபவர்களாக மாறவேண்டும். உண்மையில் இன்றைய மாணவர்களின் தேவைகளை ஆசிரியர் ஒருவர் பூர்த்தி செய்வதாயின் அவருக்கு தினமும் அறிவுப் பசியெடுக்கும். இந்த இடத்தில் எனக்கு கவிஞர் வைரமுத்துவின் திரைப்படப் பாடல் ஒன்றில் கூறப்பட்ட "தேடலுள்ள உயிர்களுக்குத் தினமும் பசியெடுக்கும்" என்ற அடி நினைவுக்கு வருகிறது. இவ்வடியானது ஆசிரியர் ஒருவர் சமூதாயம் மதிப்பராக உயர்வதற்குரிய வழியைக் கூறுவதாக உள்ளது. அதாவது ஆசிரியத்தொழிலுக்கு வேண்டிய அறிவை, தேர்ச்சியை, திறமைகளை தினமும் தேடும் ஆசிரியரொருவர் நாளடைவில் சமூகத்தின் மதிப்பைப் பெற்ற ஆசிரியராக உயர்வார் என்பதில் நான் நம்பிக்கை உள்ளவன். எனது நிலைப்பாட்டை நீங்களும் ஏற்றுக் கோள்வீர்கள் என்று நம்புகின்றேன்.

சமீப காலங்களில் வெளிவந்த கல்விக்கொள்கை அறிக்கைகளில், ஆசிரியர்கள் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டத்தை மாணவர்களுக்கு கற்பிப்பவர்களாகவும், குறிக்கப்பட்ட திறன்களையும், தகுதிகளையும் மாணவர்கள் பெறுவதற்கு ஊக்கப்படுத்துபவர்களாகவும் இருக்கவேண்டும் என உருவகப்படுத்தப்பட்டுள்ளனர். அதேநேரத்தில் பொது ஊடகங்களால் வெளிப்படுத்தப்படும் எதிர்பார்ப்புக்களில், பாடசாலைகளிலிருந்தும், ஆசிரியர்களிடத்திருந்தும் சமூகத்தின் எதிர்பார்ப்பு மேலும் விரிவானதாக இருக்கின்றதென்ற தொனிப்பொருள் காணப்படுகின்றது. அதாவது பாடசாலைகள் அறிவையும், குறிப்பிட்ட திறன்களையும் மாணவர்களுக்கு வழங்கும் நல்லதொரு நிலையங்களாக இயங்குவதுடன் அவை மாணவர்களை சமூகத்துக்குரியவர்களாக, சமூகத்தைப்பற்றிய தெளிவான கண்ணோட்டம், புரிந்துணர்வு உள்ளவர்களாக, சமகாலத் தொழில் நுட்பத்தில் அறிவும், பயிற்சியும்

உடையவர்களாக, தொழில் உலகத்தைப்பற்றி தெரிந்தவர்களாக இருப்பதற்குரிய அறிவைப் புகட்டுவதுடன் பொறுப்புள்ள தேசப்பற்றுள்ள நாட்டுப்பிரசைகளை உருவாக்கும் நிறுவனங்களாகவும் இருக்கவேண்டுமென்ற எதிர்பார்ப்பை பொது ஊடகங்கள், வலியுறுத்துகின்றன. மேலும் இன்றைய அறிவுசார் பொருளாதார உலகில், உலகமயமாக்கலால் சமூகமாற்றங்கள் தீவிரமடைந்த நிலையில், கல்வி விற்பனைப் பொருளாகவும், கல்விக்கூடங்கள் விற்பனை நிலையங்களாகவும் மாற்றமடைந்துள்ளதைக் காணமுடிகிறது. இதனால் பாடசாலைகளிடமிருந்தும் ஆசிரியர்களிடமிருந்தும் இன்றைய சமூக எதிர்பார்ப்பு கல்வியின் நோக்கத்தை மேலும் விரிவாக்கியுள்ளதென்றே கூறலாம்.

மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு இளம் மாணவ சமுதாயத்தை வளர்த்தெடுக்கும் பொறுப்பு ஆசிரியர்களின் கைகளில் தங்கியுள்ளது. இதற்கு ஆசிரியரொருவர் சுயமாகக் அறிவைத்தேடும் திறனை உடையவராக இருக்கவேண்டும். மேலும் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளுக்கான தரவுகள், தகவல்கள் சேகரிப்பதற்கு உலகளாவிய தொடர்பாடல் வலைபின்னலை வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் பயன்படுத்தும் திறனும் உடையவராக இருக்கவேண்டும். ஆசிரியரிடமிருந்து சமூகத்தின் இத்தகைய எதிர்பார்ப்புக்கள் ஆசிரியத்தொழிலை வாண்மைத் தொழில்களில் ஒன்றாக்கி விட்டது என்று கூறில் மிகையாகாது. ஏன்னெனில் சாதாரணமானவொருவர் ஆசிரியராக இருக்க முடியாது என்றநிலை இன்று உருவாகியுள்ளது. ஆசியத்தொழில் வாண்மைத் தொழிலாகும் போது ஆசிரியர் தனது செயற்பாட்டுக்கு பொறுப்பேற்க வேண்டியவருமாகிறாரென கல்வியுலகம் கூறுகின்றது.

சுருக்கமாக எடுத்துரைப்பில் இன்றைய காலகட்டத்தில் ஒரு நாட்டினதும், ஒரு சமூகத்தினதும், ஏன் ஒரு தனி மனிதனது வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும், வாழ்வியல் விருத்திக்கும் ஆசிரியர்களின் செயற்பாடே மையப்புள்ளியாக காணப்படுகிறது. இதனால் இன்றைய சமூகத்தில் ஆசிரியருக்குரிய பங்கும், பணியும் நாங்கள் அனுபவித்த பாரம்பரிய கல்வி முறையில் இருந்து பெரிதும் வேறுபடுகிறது. இன்றைய ஆசிரியர்கள் கல்வியையும், சமூகவிழுமியங்களையும் மாணவர்களுக்குப் புகட்டுவதுடன் சமூகத் தொழில்பாட்டின் வேகத்துக்கும் மாற்றத்துக்கும், தொழில் உலகின் தேவைகளுக்கும் ஈடுகொடுக்கக்கூடிய இளம் சமூகத்தை உருவாக்குபவர்களாகவும் இவர்களின் வாழ்க்கை உயர்வுக்கு ஆலோசனை வழங்குபவராகவும், மாணவர்களின் மன அழுத்தங்களுக்கும், இடர்பாடுகளுக்கும் தீர்வு காணக்கூடிய நண்பர்களாகவும், இவை எல்லாவற்றிற்கும் மேலாக சமூகவிழுமியங்களை பேணும் பண்பாளராகவும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் ஒவ்வொரு ஆசிரியரும் ஆசிரியத்தொழிலின் வாண்மை விருத்திக்கான தேடலில் ஆர்வமுள்ளவராக இருப்பது காலத்தின் தேவையெனலாம்.

மாணவர்களுக்கு அறிவைப் புகட்டும் ஆசிரியர்கள் காருண்ணியத்தையும், நல்லொழுக்கத்தையும் போதிப்பவராகவும் இருக்க வேண்டுமென மேலே கூறியிருந்தேன். எமது மதங்களும் கல்வியின் இறுதி இலக்கு மனித விழுமியங்களை வளர்த்தெடுப்பதாக

இருக்க வேண்டும் எனக் கூறுகின்றன. பண்பாடு இல்லாத புலமை பெறுமதியற்றது. பண்பாடும் கல்வியும் இணையும் போதுதான் மனித வாழ்வு மேம்படுகிறது. இதற்கு ஆசிரியர்கள் நல்லவர்களாக, உணர்வுள்ளவர்களாக, மனதநேயம்மிக்கவர்களாக இருக்க வேண்டும். அவர்கள்தான் தம்மிடமுள்ளதைப் பிறருக்கு கொடுக்கமுடியும். ஒருவருக்கு ஞானமில்லாவிட்டால் அவரால் அறிவின்மையைத்தான் கொடுக்க முடியும். ஒருவரிடம் மகிழ்ச்சி இல்லாவிட்டால் அவரால் இன்னொருவருக்கு மனமுடைந்த நம்பிக்கையைதான் கொடுக்க முடியும். இதற்கு கற்றவரிடம், கற்பிப்பவரிடமும் மனித நேயம் இல்லாவிட்டால் எற்படும் அழிவுக்கு யப்பானிய ஆசிரியர் "கயிம்" என்பவர் கூறிய அனுபவத்தை இவ்விடத்தில் நினைவுபடுத்த விரும்புகின்றேன். இரண்டாம் உலகமகாயுத்தத்தின் போது சிறையில் இருந்து தப்பிய அவ்வாசிரியர் தான் நேரில் பார்த்த கொடூரமான சம்பவத்தைப் பின்வருமாறு கூறுகிறார். எனது கண்முன்னே பலகோடி மக்கள் சிறையில் அடைக்கப்பட்டு அதற்குள் நச்சுவாயு செலுத்தப்பட்டது. அந்த நச்சுவாயு அறையை அமைத்துக் கொடுத்தவர்கள் மெத்தப்படித்த பொறியியலாளர். அச்சிறைக்குள் சிறுவர்களுக்கு நஞ்சூட்டி கொன்றொழித்தவர்கள் வேறு யாருமில்லை நன்கு படித்த மருத்துவர்கள், நன்றாகப் பயிற்றப்பட்ட தாதியர்கள். சிறுவர்களையும் பெண்களையும் சுட்டுக் கொன்றார்கள். கொன்றவர்கள் பள்ளிக்கூடத்திலும், பல்கலைக்கழகத்திலும் பாடம் போதித்த ஆசிரியர்கள், பேராசிரியர்கள். இவற்றை எல்லாம் கண்ணீர் மல்க எழுதிய அவ்வாசிரியர் இறுதியில் கற்றவர்களைப்பார்த்து மனிதநேயமிக்க மாணவ சமூகத்தை உருவாக்க முன்வருமாறு அறைகூவல் விடுக்கிறார். அதையே நானும் இவ்விடத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஒரு ஆசிரியர் தன்னிடம் கற்கும் மாணவர்களின் ஆற்றல்களை, தனித்துவத்தை அடையாளம் கண்டு அவற்றை வளர்க்க உதவுவராகவும் இருக்க வேண்டும். ஆனால் நடைமுறையில் ஆசிரியர்கள் தாம் சொல்லிக் கொடுப்பதையே மாணவர்களும் திருப்பிச் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். ஆனால் மாணவர்கள் எல்லோரும் ஒரே அறிவு, ஆற்றலோடு குறிப்பிட்ட ஒரு வகுப்பில் கற்பவர்கள் அல்ல. ஒவ்வொருவரிடமும் வேறுபட்ட ஆற்றல், திறமை இருக்கலாம், ஆசிரியர் சொல்லிக் கொடுத்ததையே மாணவர்கள் அப்படியே திருப்பிச் செய்ய வேண்டும் என எதிர்பார்ப்பது மாணவரின் தனித்துவமான ஆற்றலை மழுங்கடிக்கச் செய்வதாக அமையும். கல்வி என்பது சில தரவுகளை மணவர்களுக்கு திணிப்பதாக இருக்க கூடாது. மாறாக அவர்களின் ஆற்றல்களை வெளிக்கிளம்பச்செய்யும் தூண்டியாக இருக்கவேண்டும். ஆங்கிலத்தில் "Education" என வரும் சொல் "Educare" என்ற லத்தீன் சொல்லின் அடியாகப் பிறந்தது. இதன் பொருள் "வழிகாட்டுதல்" என்பதாகும்.. ஆகவே ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழிகாட்டுபவராகவும் இருக்க வேண்டும் என நாம் எதிர்பார்ப்பதில் தவறேதும் இருக்கமுடியாது. மாணவர்களின் சிறந்த கல்விக்கு வழிகாட்டுதலும், பிறழ்வற்ற சமூக உருவாக்குவதும் தான் ஆசிரியத்துவத்தின் முதன்மைக் குறியீடுகள் என்று கூறுவதில் இருகருத்துக்களுக்கு இடமில்லையென்ற நம்பிக்கையுடன் இக்கட்டுரையை முடிக்கின்றேன்.

# வெப்பகாலத்தில் இயற்கையில் ஏற்படும் மாற்றங்களும் அதனை எதிர்கொள்ள சித்தமருத்துவம் கூறும் சிந்தனைகளும்

திருமதி. வி. ஆனந்தஜோதி
( B.S.M.S. (SL), M.Phil. (SL)
*கிராம சித்த வைத்தியாசாலை, கொடிகாமம்*

சித்த மருத்துவம் என்பது சித்தர்களின் மெய்ஞ்ஞானத்தில் உதித்த பழைமை வாய்ந்த விஞ்ஞானமாகும். நோயாளிகளை சிகிச்சிப்பதைவிட ஆரோக்கியசாலிகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதே அப் பழைமை வாய்ந்த விஞ்ஞானத்தின் விந்தையாகும்.


ஆரம்பகாலத்தில் மனிதன் இயற்கையின் மாற்றங்களை அவதானித்து அதனை அனுசரித்து அதற்கேற்ற படி இயற்கையில் கிடைக்கும் பொருட்களை பயன்படுத்தி தனது வாழ்க்கை முறையை திட்டமிட்டு ஆரோக்கியமாக வாழப் பழகிக்கொண்டான்.

ஆனால் தற்காலத்தில் மனிதன் தனக்கியைந்தபடி சுலபமான வாழ்வினை வாழும் வகையில் இயற்கையினைத் தாண்டி செயற்கை முறையிலான வாழ்வினை வாழத் தொடங்கி விட்டான். பழைமை பழைமையாக மக்களுடன் ஊறிக் கலந்து வந்த கலாச்சாரம், உணவுப் பழக்கவழக்கம் மற்றும் காலத்திற்கு ஏற்றவாறான வாழ்க்கை முறை என்பவை இப்போது கல்வித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டே பிள்ளைகள் கற்பதன் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது என்பது கவலைக்கிடமான விடயமாகும்.

இயற்கையுடன் எவ்வாறு சமநிலையில் வாழ்வது என்பது பற்றிய அறிவின்மையால் இயற்கை மாற்றங்களினை ஏற்றுக்கொள்ள முடியாது தடுமாறுகின்றான் மனிதன். சித்தமருத்துவமானது பருவகாலங்களின் அடிப்படையில் இயற்கையில் ஏற்படும் மாற்றங்களையும் அதன் காரணமாக உடலில் ஏற்படும் மாற்றங்களையும் எடுத்துரைப்பதோடு பருவகாலங்களிங் கேற்ப வாழவேண்டிய முறைகளை 'ருதுசரியை' எனும் கோட்பாட்டின் மூலம் விளங்கப்படுத்துகின்றது.

பருவகாலமானது சூரியன் அசையும் திசையினைப் பொறுத்து வட சங்கிராந்தி, தென் சங்கிராந்தி என இரு காலங்களாக பிரிக்கப்படுகிறது. இவ் ஒவ்வொரு காலமும் மூன்று பருவ காலங்களைக் கொண்டுள்ளது.

வடசங்கிராந்தியானது பின்பனிக்காலம், இளவேனிற்காலம், முதுவேனிற் காலம் என மூன்று காலங்களையும் தென் சங்கிராந்தியானது கார் காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம் என மூன்று காலங்களையும் கொண்டுள்ளது.




பருவகாலங்களின் கால வட்டம்

இங்கு ஒவ்வொரு பருவகாலத்தின் தொடக்கத்திலும் அதற்கு முந்திய பருவகாலத்தின் பண்புகள் செல்வாக்குச் செலுத்தும். வட சங்கிராந்தியானது தை மாதத்திலிருந்து ஆனிமாதம் (தமிழ்மாதம்) வரையும், தென் சங்கிராந்தியானது ஆவணிமாதம் தொடக்கம் மார்கழிமாதம் (தமிழ்மாதம்) வரையும் ஒவ்வொரு பருவ காலங்களிற்கு இரண்டு மாதங்கள் வரை நீடிக்கின்றது.

வட சங்கிராந்திகாலத்தில் சூரியன், காற்று என்பன மிகவும் வீறு கொண்டனவாகக் காணப்படும். இக்காலத்தில் சூரியசக்தியினால் மக்களது பலம் இழக்கப்படுவதோடு பூமியானது தனது குளிர்ச்சித் தன்மையை இழந்ததாகவும் காணப்படும். அத்துடன் உடலானது வரட்சித்தன்மையையும் பெறுகின்றது.

தென் சங்கிராந்தி காலத்தில் சூரியனின் வெப்பமானது பெருமளவில் குறைகின்றது. கார்மேகங்களினாலும், மழையினாலும், குளிர் காற்றினாலும் சுற்றாடலானது குளிர்ச்சியடைகின்றது. இவ்விருசங்கிராந்தி காலங்களிலும் அடங்கும் ஆறு பருவகாலங்களில் இயற்கையில் ஏற்படும் மாற்றங்களையும் அதனை எதிர்கொள்ள நாம் கடைப்பிடிக்கவேண்டிய உணவுப்பழக்க வழக்கங்கள் மற்றும் வாழ்க்கை முறை என்பவை பற்றியும் சித்தமருத்துவத்தில் குறிப்பிடப்படுகின்றது. அதில் வெப்பகாலத்தில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் கடைப்பிடிக்கவேண்டிய உணவு, வாழ்க்கை முறைகளைப் பற்றி இங்கு விளக்கப்படுகின்றது.

ஆறு பருவகாலங்களிலும் அதிகூடிய வெப்பகாலமானது முதுவேனில் காலமாகும். இக்காலத்தில் சூரியனானது பூமியிற்கு மிக அருகில் காணப்படும்.



இக்காலத்தில் சூரியக் கதிர்கள் குறுகியனவாகவும் மிகவும் வெப்பமானதாகவும் இருப்பதால் இயற்கையின் ஈரப்பதனானது உறிஞ்சப்படுகின்றது. இதனால் சூழலானது கூடிய வெப்பத்தைக் கொண்டதாகவும் ஈரலிப்பற்ற காற்றினைக் கொண்டதாகவும் காணப்படும். அதிகளவிலான வியர்வை வெளியேற்றப்படுவதுடன் உடலிலிருந்து சக்தியானது இழக்கப்படும். சிறிய வேலைகள் செய்யும்போதும் கூடியளவுகளைப்பு ஏற்படும். வரட்சியான காலநிலைகாணப்படுவதுடன் நீர்நிலைகளும் வரட்சியடைந்து காணப்படும். கூடுதலான நோய்கள் இக்காலத்தில் ஏற்படும்.

இக்காலத்தில் இலகுவாக செமிபாடடையக் கூடிய உணவுகளை எடுத்தல் சிறந்தது. சம்பா அரிசிச் சோறு, பயறு, கோதுமை, ஆட்டு இறைச்சி, பாகற்காய், பூசணி, உள்ளி, பச்சை இலைவகைகள், வெந்தயம், வெந்தயக்கீரை என்பன உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

அதிகளவிலான நீர் அருந்த வேண்டும். விசேடமாக, மட்பாண்டங்களில் அறுகு அல்லது வசம்பை இட்டு அதற்குள் நீரைசேமித்து அருந்துதல் நன்று. மேலும் வெண்ணெய், இறைச்சி சூப்வகைகள், மிளகுப்பொடி சேர்க்கப்பட்டதயிர், நெய் மற்றும் பால் வகைகள் போன்ற பானங்கள் அருந்திக்கொள்ளலாம். அத்துடன் தோடம்பழச்சாறு, இக்காலத்தில் கிடைக்கக்கூடிய ஏனைய பழச்சாறுகள், இளநீர் மற்றம் கரும்புச் சாறு என்பவை அருந்த வேண்டும். படுக்கைக்குப் போகுமுன் கற்கண்டு சேர்த்துக் காய்ச்சியபால் அருந்துதல் நன்று. இக்காலத்தில் தேனையும் பானங்களில் சேர்த்துக் கொள்ளுதல் நன்மை பயக்கும். சூடான உணவுகளை குறைத்தல் நன்று.

வாழ்க்கை முறையைப் பொறுத்தவரையில் இருக்கும் இடங்களை குளிர்ச்சியாக வைத்திருத்தல் வேண்டும். பூக்கள் நிறைந்த பிரதேசத்தில் சஞ்சரித்தல், இலகுவான பருத்தியிலான ஆடைகள் மற்றும் பூமாலைகள் அணிதல் நன்று. பகல்நேரத்தில் சிறு தூக்கம் கொள்ளலாம். இரவுநேரத்தில் குளிர்ச்சியான சந்திரனின் வெளிச்சத்தில் இதமானகாற்றில் சஞ்சரிக்கலாம். குளிர்நீரில் குளித்தல் வேண்டும். இக்காலத்தில் நீச்சலில் ஈடுபடலாம். குளித்தபின் சந்தனம், இலாமிச்சைசேர்ந்தகளிம்புஉடலில் பூசுதல் குளிர்ச்சிதரும். முத்துக்கள் சேர்ந்தநகைகள் அணிவதுநன்று.

வாழும் இடங்களைக் குளிர்மையாக்க,திரைச்சீலைகளை (curtains) வெட்டிவேர், மாவிலைகளில் தயாரித்துபயன்படுத்தினால் வீட்டினுள் அதிகவெப்பம் உட்செல்வதைத் தடுக்கமுடிவதோடு குளிர்ந்த காற்று வீட்டினுள் செல்லவும் வழிவகுக்கும்.

வெட்டிவேரினாலான திரைச்சேலைகள்

அடர்த்தியான பூங்காக்கள்,சோலைகளில் நேரத்தை செலவிடலாம். இரவில் வீட்டின் வெளிப்புறத்தில் சந்திரவெளிச்சம் உள்ள இடத்தில் இரவில் உறங்கலாம். படுக்கையானது இலகுவானதாகவும், உறுத்தாததாகவும், பூக்களின் வாசனையால் சூழப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும். விசிறிகள் வெட்டிவேரினாலோ அல்லது மயிலிறகினாலோ ஆக்கப்பட்டிருத்தல் குளிர்ச்சியான காற்றைப் பெற உதவியாக இருக்கும்.

மேலும் இக்காலங்களில் கடுமையாக உடற்பயிற்சி செய்தல், கடுமையான வேலை செய்தல் மற்றும் மதுபானங்கள் அருந்துதல் என்பன தவிர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறு இயற்கையின் மாறுபாட்டிற் கேற்ப ஒவ்வொரு பருவகாலங்களிலும் கூறப்பட்டிருக்கும் வாழ்க்கை முறைகளை கடைப்பிடிப்பதன் மூலம் ஆரோக்கியத்தினை பேணிப் பாதுகாக்க முடிவதோடு தற்பொழுது ஏற்படும் புதுப்புது நோய்களிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

# தரமான கற்றல் செயற்பாடுகளும் பணியாளர்களின் ஆற்றுகைகளும்

வேல்நாயகம் திருச்சுபேசன்
(MPhil in Ed,Med, PGDE(Merit), BA)
*ஆசிரியர் கல்வியியலாளர்(SLTES),*
*முகாமையாளர், வரணி ஆசிரியர் மத்திய நிலையம்*

வரலாற்றுப் போக்கினை ஆராய்ந்தால்,உலக மக்களிடம் நீண்ட காலமாக உணரப்படாதிருந்தகல்வியின் பெறுமதி மற்றும் கல்விசார் பிரயோகத்திற்குரிய புலக்காட்சிஇன்று மாற்றம் பெற்றுள்ளது. கல்விக்கும், விசேடமாக கல்வியால் பெற்ற பிரயோகத்திறனிற்கும் முக்கியத்துவம் வழங்க வேண்டிய சூழலினுள் நாம் பிரவேசித்துள்ளோம். அக்கால மக்களின் வாழ்க்கை முறையியலில் தேவைகள் குறைந்த மட்டத்திலும் மக்கள் தொகை குறைந்த அளவிலும் இயற்கை வளங்கள் தாராளமாகவும் உள்ள சூழலில் வாழ்ந்தனர். சமூகத்தின் ஒவ்வொரு நபரும் தனக்குத் தேவையான வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்கான அடிப்படைப் பொருளாதார நிழல் மற்றும் சமூக ஒத்துழைப்புக்கள் போதியளவில் கிடைக்கப் பெற்றன. சமூகக்கூட்டுணர்வான வாழ்க்கை முறை நிலவியது. ஆனால், இன்று அறிவுப் பெருக்கத்தினதும் அதன் விளைவுகளினதும் வளர்ச்சியும் செல்வாக்கும் மிகவிரைவான வேகத்தைப் பெற்றமையால் சமநிலைத் தன்மை பாதிக்கப்பட்டு தொழில் நுட்ப அறிவின் செல்வாக்கு, சனத்தொகைப் பெருக்கம் மற்றும் வளப் பற்றாக்குறைகள் காரணமாக செயற்றிறனிற்கும் வினைத்திறனுக்கும் முக்கியத்துவம் தரும் காலகட்டத்திற்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

சமூகத்தின் தேவைகள் இன்றைய காலத்துடன் ஒப்பிடுகையில் அன்று குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.தொழிற் போட்டி நிலமைகள் பெரும்பாலும் குறைவாக இருந்தது. ஒழுங்கமைக்கப்பட்ட சமூகக் கட்டமைப்புக்களும் தொழிற் பிரிப்புக்களும் காணப்பட்டன. தேவைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. முதல் நிலைத் தொழில் துறைகளான விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழில், அவற்றுடன் தொடர்பான தொழில்கள் என்ற வகையில் வருமானத்துறைகள் மட்டுப்படுத்தப்பட்டனவையாகக் காணப்பட்டன.

கைத்தொழிற்புரட்சியின் ஆரம்பம் மற்றும் தொழில் நுட்ப அறிவின் பிரயோகப் பாங்கு அதிகரித்த நிலையில் உலக நாடுகளிற்கிடையில் அதிகாரப் பரவல், தொழில் வருமான தேடல், உலகமயமாதலின் படிமுறை வளர்ச்சி போன்ற பல்வேறு காரணிகளின் செல்வாக்கால் போட்டித் தன்மைகள் உருவாகின. சேவைத் தொழில் தனியாள் வருமதிக்கான பிரதான துறைகளாகவும், கனவானுக்கான தன்மையையும் பெற்றுத் தந்தது. எனவே, இவற்றை அடைவதற்கான முதன்நிலைத் தகுதிநிலையில்

கல்விக்கான கேள்வி அடிப்படைத் தேவையாகியது. கல்வியினால் ஏற்பட்ட தேர்ச்சிநிலை அடிப்படையில் எவ்வளவு தூரம் பிரயோகப்பாங்கான கல்வியைப் பெற்றுள்ளார் என்ற உயர் தகைமை கொண்ட மதிப்பிடலாக கல்வியின் முக்கியத்துவம் மாற்றம் பெற்றுள்ளது.

இன்று கல்வி வழங்கல் பெறுதல் செயற்பாடுகளில் பாரிய மாற்றங்களை உலக நாடுகள் உள்வாங்கியுள்ளன. குறிப்பாக வளர்ச்சியடைந்த நாடுகள் இவ்விடயத்தில் அதீத கவனஞ் செலுத்துகின்றன. தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவால் நேருக்கு நேர் முகம்பார்த்து வெவ்வேறு இடங்களில் இருந்தவாறு கற்றல், கலைத்திட்ட உள்ளடக்கங்கள், கற்போனின் இயல்பு, ஒழுங்கமைப்பு முறையியல்கள், அதன் எண்ணக்கருப்பிரயோகம் போன்ற சகல துறைகளிலும் உரிய பாட ஏற்பாடுகள் மூலம் குறித்த தேர்ச்சியை அடையச் செய்தலில் பிரயோகரீதியான வெளியீடுகள் உருவாக்கப்பட வேண்டும் எனத் திட்டமிடப்படுகிறது. கற்றலின் செயல் விளைவு, அமுலாக்கம், கற்போனின் செயல்ரீதியான பங்குபற்றல் போன்ற சகல துறைகளிலும் தரம் பற்றிய எண்ணக்கருக்களை மையப்படுத்தி இருப்பதனைக் காணலாம். மாணவனின் வெற்றிகரமான கற்றல் செயற்பாடுகள் இயற்கை திறன்களுடனும் அதனை மேம்படுத்தும் வகையிலும் அமைவதுடன் கற்றவிடயத்தின் காரணமாக கற்றல் இடமாற்றம் புத்தாக்கம் போன்ற விளைவுகளை மையப்படுத்திய தரமான செயல் எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்படும்.

தரமான உற்பத்தி மற்றும் சேவைகள் அபிவிருத்திக்கான கண்ணோட்டத்தில் வழிகாட்டப்பட்டு கல்விச் செயற்பாடுகள் நெறியாள்கை செய்யப்படல் வேண்டும். உலகமயமாதலின் கல்விப் போக்கில் புலம்பெயர்ந்து சென்று கற்றல் மூலம் பலதரப்பட்ட குறுகிய காலத்திலான உயர்தேர்ச்சிகளைப் பெறுவதற்கான வாய்ப்புக்ளையும் வசதிகளையும் தேடிச் செல்லக் கூடியதாக உள்ளது. பல்சமூகப் பண்பாட்டு மற்றும் வேலைவாய்ப்புக்கள் கற்றதற்கான பெறுமதிக்கு மேலான வருமதியைப் பெறுதல் என்றவகையில் பல்வகைப் பரிமாணங்களிலும் கல்விப் பெறுமதி உணரப்படுகிறது. கல்வியியலாளர்கள் இதற்கான நாடு கடந்த வகையில் கல்வியை வழங்குவதில் இன்று பிரபல்யம் பெற்றுள்ளனர். அபிவிருத்திக்குத் தேவையான நிபுணத்துவம் பெறும் வகையிலான அறிவு தேர்ச்சிகளை வழங்குவதில் யதார்த்தமான நடவடிக்கைகள் காணப்படுகிறது. இது இன்று முழுமைசார் பண்புத் தரமுகாமைத்துவமாகப் பார்க்கப்படுகிறது.

எனவே, இவற்றின் விளைவுகளை நாம் எமது பாடசாலைச் சூழல்களுடன் பிரயோக ரீதியாக சிந்திக்க வேண்டும். உலக நிலைமைகளை எமது சூழலுக்குரியவாறு மாற்றம் செய்தல் வேண்டப்படுகிறது. கள நிலைமையில் பாடசாலைச் செயற்பாடுகளிலும் கற்பித்தல் – கற்றல் – மதிப்பிடல் செயற்பாடுகளிலும் பிரயோகப்பாங்கு பற்றியும் செயல்களின் தரம் பற்றியும் வலியுறுத்தப்படுதல் வேண்டும். ஆரம்ப காலங்களில் கற்றவிடயங்களை மீள ஒப்படைத்தல் என்ற வகையில் பரீட்சை

மையமாகக் காணப்பட்ட கற்றல் செயற்பாடுகள் இன்று ஒருவரின் ஆளுமை, சிந்தனைத்திறன்,சுயதிறன் விருத்தி ஊடாக சமூகத்திறன், பிரயோகத்திறன் என்றவகையில் ஒருவரின் வெளிப்பாடுகளில் உயர் மட்டச் செயற்பாடுகளினூடாக மதிப்பிடப்படுவதனைக் காணலாம். இதற்கான அடித்தளங்களை இன்றைய கல்வி மறுசீரமைப்பின் சாயலில் காணலாம். வளர்ச்சியடைந்த நாடுகளில் கல்வியின் மூலம் வாடிக்கையாளனிடம் உயர் மட்ட ஆற்றல்களை உருவாக்குதல் பற்றி அதிக அக்கறை கொண்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதனைக் காணலாம். அதற்காக முழுக் கட்டமைப்புக்களும் தரமுள்ளதாக்கப்பட்டு வரும் நிலையிலும் அவை அடிக்கடி மதிப்பிடப்பட்டு இற்றைப்படுத்தல்களிற்கும் உள்ளாக்கப்படும் போக்கும் சர்வசாதாரணமாகப் பின்பற்றப்படுவதனை அறியலாம்.ஆனால், எமது பழமைவாதிகள் மற்றும் தமது ஆசிரியத்தொழிலில் இற்றைப்படுத்தாதவர்களின் செல்வாக்குக் காரணமாக உரிய நிலைமையை அடைவதில் வருந்தத்தக்க நிலைமை காணப்படுவதுடன் தொடர்ந்தும் எமது பல மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

கலைத்திட்டத்தின் விரிவாக்கமாக பங்குதாரர்களின் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட உடல் மற்றும் பௌதீக வளங்கள் பாடசாலை வசதிகள் முகாமைத்துவ முறைகள் போன்றன திடமான அடித்தளமாக பார்க்கப்படுகிறது. ஆசிரியர், மாணவர் பார்வையிலும் தேவையின் அடிப்படையிலும் அர்த்தமுள்ள வகையில் கருத்துக்களினை உள்வாங்கி கற்றல் சூழலில் பயன்படுத்தக் கூடிய உபகரணங்கள், அவற்றின் மறுசீரமைப்பு போன்றவற்றின் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். உதாரணமாக பலவகையான பணிகள், கற்போனின் திறன், தனியாள் மற்றும் குழு முறைக் கற்றல் போன்ற கட்டமைப்புகள், உள நிலைமைகள் கருத்திற்கு எடுக்கப்படல் வேண்டும். உண்மையான கற்றல் சமூகத்திற்கு வினைத்திறனாக நன்கு வடிவமைக்கப்பட்ட கணனி வலைப்பின்னல் மூலம் கற்றல் வழிகாட்டல் மேற்கொள்ளப்படும் போது அறிவியல், பொருளாதார வினைத்திறன் இணைக்கப்பட்டு ஆற்றல், பொருள், பணி, நேரம் மற்றும் சீரான கற்றல் செயல் அர்த்தமுள்ளதாகிறது.

ஆசிரியர் கல்வி அல்லது ஆசிரியர் வாண்மை விருத்தி மற்றும் நாளாந்தம் கல்விப்புலத்தில் ஏற்படும் மாற்றங்கள் தேவைகள் அவற்றினை வாடிக்கையாளர்களிற்கு வழங்கக் கூடிய ஆற்றல்கள் பற்றிய இற்றைப்படுத்தல்களில் அர்த்தமுள்ள நடைமுறைகள் ஆசிரியர்களிடம் பரவச் செய்தல் காலத்தின் தேவையாக உள்ளது. உண்மையில் நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகளும் அமுலாக்கமும் அதன் மூலம் ஆசிரியர்களிற்கான ஊக்குவிப்புக்களும் அவசியமாகிறது. கிடைக்கப்பெறும் ஊக்குவிப்புக்கள், வழிப்படுத்தல்கள் மற்றும் வகுப்பறைப் பிரயோகமற்ற ஆசிரிய வாண்மை விருத்தி அமுலாக்கங்கள் பயனுறுதியற்ற செயற்பாடாக அனுபவிக்கப்படுகிறது. இதனால் வாண்மை விருத்தி என்பது ஒதுக்கப்பட்ட நிதியினை செலவிட்டு அறிக்கைப்படுத்தவும் நடைமுறையில் ஆசிரியர்கள், அதிபர்களிற்கு தொந்தரவுகளையும் வேலைப்பளுவினையும் ஏற்படுத்தும் செயல்களாக விமர்சிக்கப்படுவதனைக் காணலாம்.

சாதாரண கற்றல் அனுபவத்தினை மாணவர்களிடம் நிலைப்படுத்துவதற்கு பாடசாலைகளிலும் அதன் தொடர்ச்சியாக வீடுகளிலும் கற்றல் கள நிலைமைகள் ஏற்படுத்தப்படுதல் அவசியமாகிறது. மாணவனிடம் உள்ளார்ந்த ஊக்கல் நிலைமைகளை ஏற்படுத்தித் தக்க வைப்பதன் மூலம் எதிர்பார்க்கப்படும் கற்றல் பேறுகளை எய்த முடியும் என ஆய்வுகள் காட்டுகின்றன. அதாவது கற்போனுக்கு, பாடசாலையிலிருந்து வீடு வரை தொடர்ச்சியான கற்றல் சூழல் உருவாக்கப்படுதலிலும் தக்கவைப்பதிலும் கற்றல் வினைத்திறன் தங்கியுள்ளது.

இயற்கை அமைப்புக்களை மையப்படுத்தி பாடத்திட்டத்தின் மூலம் அடையப்பட வேண்டிய தேர்ச்சிகளை ஆதாரமாக கொண்டு வகுப்பறையில் கட்டியெழுப்பப்பட்டவையாகக் கற்றல் பேறுகள் காணப்படும். தேர்ச்சிகள், மதிப்பீட்டு முறைகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட வகையில் வகுப்பறைச் செயற்பாடுகளைத் திட்டமிட்டு ஒருங்கிணைந்த வகையில் அமைத்துக் கொள்ளல் அவசியம். கல்வித் தரத்தினையும் மாணவர் அடைவுத் திறனையும் மையப்படுத்தி பாடத்திட்ட அமுலாக்கமும் மதிப்பீடும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளும் இணைப்புப் பெறல் வேண்டும். இணைபாடவிதானச் செயற்பாடுகளில் ஒவ்வொரு மாணவனின் பங்குபற்றலும், பாடவிதானத்துடன் இணைந்த வகையில் மிகவும் அவதானமாகத் திட்டமிட்டு தொடர்புபடுத்தப்படுதலும் அவசியமாகும். உடற்றகைமை உளத்தகைமை மற்றும் போசாக்கு என்பன மேம்படுத்தும் வகையில் செயற்பாடுகள் முறையாக அமுலாக்கப்படுதல் அவசியமாகும்.

தரமான கற்றல் என்பது ஈடுபட்டு கருத்துக்களை கட்டியெழுப்பி எண்ணக்கருவாக்கம் பெறச் செய்தல் ஆகும். தனியே முழுமையாக கருத்துக்களைத் தொகுக்க முடியாது. வைகொற்சிகியின் (Zone of Proximal Development – ZPD)கருத்துப்படி ஆசிரியர் மாணவனின் கற்றலுக்கு சாரம் கட்டி வளங்களை வழங்கி வழிப்படுத்தி கட்டளைகளை வழங்கும் போதுதான் தரமான கற்றல் நிகழும் என்பதற்கமைய ஆசிரியரின் பங்களிப்பு தேவைப்படுகிறது.மாணவன் கற்க வேண்டிய விடயத்தினை நோக்கி அண்மிக்கச் செய்தல் வேண்டும். மாணவனின் கற்றலுக்கு உடனிருத்தல், தொடர்ந்து தலையீடு செய்தல், தோன்றும் களநிலைமைகளிற்கு ஏற்ப இடர்களைக் களைந்து சுய கற்றலுக்கு உறுதுணையாக இருத்தலே ஆசிரியப்பணியாகும்.இது ஓர் ஆழமான அணுகுமுறையாகும். கருத்துக்களை உருவாக்கி விளங்கிக் கொள்ள உதவுதலாகும். கற்ற விடயங்களில் பயிற்சி பெற்று எண்ணக்கருக்களை இற்றைப்படுத்த துணை நிற்றலாகும்.

மேலும்,மதிப்பிடல் செயன்முறைகள் அர்த்த புஷ்டியுடன் முன்னெடுக்கப்படல் வேண்டும். உதாரணமாக பரீட்சை ஒன்று வைக்கப்படுமாயின் அவனால் முன்வைக்கப்பட்ட விடைகள் தொடர்பில் எதிர்பார்த்த விடைக்கும் மாணவன் முன்வைத்த விடைக்கும் இடையிலுள்ள இடைவெளிகள் தொடர்பில் உடனேயே பகுப்பாய்வு நோக்கில் அணுகுவதற்கான வழிப்படுத்தல்களை ஆசிரியர் மேற்கொள்ள வேண்டும். இது

மேலதிக கற்றலாகவும் வினாக்களிற்கு எவ்வாறு விடை எழுதுதல் மற்றும் கடந்து சிந்தித்து எவ்வாறான சொற்பிரயோகங்களின் மூலம் வினாவிற்கு மிகவும் கிட்டியதும், வினாத்தயாரிப்போனால் எதிர்பார்த்த கருத்துக்களை முன்வைக்கும் ஆற்றலை ஏற்படுத்துவதற்கும் உதவும். மாணவனிடம் சரியானதும் குறுகிய நேரத்தில் தீர்மானம் எடுக்கும் ஆற்றலையும் இந்த அணுகுமுறை மேம்படுத்தும். எனவே **கற்பித்தல் என்பது கற்றலுக்கான வசதிப்படுத்தலாகும்.** மாணவர் உயர்நிலை கல்வி நோக்கங்களைப் பெற்றுக் கொள்வார். இதற்காக கற்போனின் கற்கும் ஊக்கல் தரமான கற்றல் செயற்பாட்டில் ஆழமாகத் தங்கியுள்ளது. மாணவன் எதனைக் கற்கிறார், கற்கும் முறை, மதிப்பிடலும் அதனைப் பயன்படுத்தும் முறை போன்ற கற்றல் உபாயங்கள் செல்வாக்குச் செலுத்துகிறது.

ஆசிரியர்களும், பெற்றோரும் மாணவனின் கற்றலுக்கான பணியாளர்களாவர். இங்கு ஆசிரியர்கள் துறைசார் நிபுணர்களாகவும், இப்பணிக்காக ஊதியம் வழங்கி நியமிக்கப்பட்டவர்களுமாவர். பணியாளர்களின் முக்கிய கடமை மாணவர்களிடம் கற்றலை ஊக்குவித்தலாகும். கற்றல், பிரதிபலிக்கச் செய்தல், சகபாடிகளின் ஒத்துழைப்பை பெற்றுத் தருதல், உணர்வு ரீதியாக தரமான கற்றல் பேற்றை அடையச் செய்தல் போன்ற பணியாளர்களின் முக்கிய தொடர் செயற்பாடாகும். பணியாளர்கள் செயற்பட்டு எதிர் கொள்ளும் சவால்களிற்கு முகங்கொடுத்து தமது அனுபவங்களை மாணவர்களிற்காகப் பிரயோகித்தல் எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, மாணவனின் கற்றல் மேம்பாட்டினை நோக்காகக் கொண்டு கற்றல் சூழலையும் வழிகாட்டலையும் வள ஒருங்கிணைப்பினையும் வழங்குதல்.

ஏற்றுக் கொள்ளப்பட்ட பாரம்பரிய பாடசாலைக் கட்டமைப்புக்கள் பௌதீக ரீதியான கற்றல் சூழலை வழங்குகின்றன. ஆனால் பாடசாலைகளின் பௌதீக நிலைமைகள் போதிய நெகிழ்வுத் தன்மையுடன் தற்போதைய தேவைகளுக்கேற்ப மாற்றியமைக்கும் வகையில் காணப்படவில்லை. கட்டமைக்கப்பட்ட அல்லது வரையறைகளிற்கு உட்பட்ட வகையில் பௌதீக ஒழுங்கமைப்புக்கள் காணப்படுகிறது. இன்றைய கற்றல் தேவைகளுடனும் அதற்கான வகுப்பறைச் செயற்பாடுகளுடனும் ஈடு கொடுக்கும் வகையில் மாற்றியமைப்பது ஆசிரியருக்கும் கல்வி முகாமையாளர்களிற்கும் சவாலான விடயமாக உள்ளது. அல்லது அதுபற்றிய புரிந்துணர்வுகள் ஏற்படுவதில்லை. மேலாளர்கள் தாபன விதிக் கோவை சுற்று நிருபங்கள் மற்றும் நிதிசார் ஒழுங்குகளை முன்வைத்து தமக்கான கேடயங்களை உருவாக்கி விளைதிறன் கொண்ட வெளியீடுகளிற்கு உதவ பின்தங்கிவிடுகின்றனர். இயலாமை காரணமாகவே எதிர்க்கருத்துக்கள் முன்வைக்கப்படுவதாக உளவியலாளர்கள் எதிர்மனப்பாங்கு பற்றி வரையறுக்கின்றனர். இதனால் வகுப்பறை மற்றும் பாடசாலை முகாமைத்துவ நுட்பங்கள் இற்றைப்படுத்தப்படல் போதியதாக அமைவதில்லை. இருப்பினும் சில புதிய ஏற்பாடுகளுடன் வகுப்பறைகள் நவீனப்படுத்தப்பட்டு வருகின்ற போதும் பழைய தளத்திலேயே அவை மேற்கொள்ளப்படுவதனை இனங்காணலாம். வகுப்பறையில் பௌதீக நிலைமைகள் குறிப்பாக காற்றோட்டம், ஒளி, கதிரைகள் மேசைகளின்

கையாள்கை, எழுது பொருட்கள், காட்சிப்படுத்தல்கள்,கவனக்கலைப்பான்களினை இழிவு நிலையில் பேணி கற்றல் வசதிகளை விரைவாக மாற்றியமைக்கும் பொறிமுறைகள் போன்ற பல விடயங்களில் இன்று நவீனத்துவம் உள்வாங்கப்பட்டுள்ளது. கற்றல் இலக்குகளிற்கு அமைய வகுப்பறைச் சூழலை மாற்றியமைப்பதற்காக ஏற்பாடுகள் உள்வாங்கப்பட வேண்டும் என கல்விச் சீர்திருத்தம் எதிர்பார்க்கிறது. கற்றலுக்கு வசதியளிக்கும் வகுப்பறையாக அதிக பிரயாசையும் மற்றும் நேர இழப்பீடு இன்றியும் மாற்றியமைக்கக் கூடிய கண்ணோட்டத்தில் புத்தாக்கங்கள் புகுத்தப்பட்டுள்ளன. மேலும்,சர்வதேச மற்றும் உள்ளூர் நிலைமைகளிற்கு அமையவும் ஏற்பாடுகள் புகுத்தப்படுதலுக்காக முயற்சிகள் வேண்டப்படுகிறது.

பாடசாலைகளின் மூலதாரமான செயற்பாடுகள் வகுப்பறைகளில் நடைபெறுகிறது. அவற்றின் ஒழுங்கமைப்பும் வேலைப்பகிர்வுகளும் அமுலாக்கங்களும் மதிப்பிடலும் மற்றும் பின்நடவடிக்கைகளும் மாணவனின் பண்புசார் அபிவிருத்தியையும் வாழ்க்கைப் பிரயோகத்திற்கான தேர்ச்சிகளையும் பெறுவதற்கான ஆளுமையை வழங்குகிறது. எனவே வகுப்பறை முகாமைத்துவம் பாடவிதான அமுலாக்கம் அதன் வழியிலான தேர்ச்சிகளை உறுதிப்படுத்தல் செயன்முறைகள் அதிக கவனம் பெறவேண்டிய தந்திரோபாயங்களை உள்வாங்கிக் கொள்ளும் சிக்கற் தன்மைகள் கொண்டவையாகவும், இசைவாக்கிக் கொள்ளப்பட முடியாத நாளாந்த மாற்றங்களை வேண்டி நிற்கும் பாடசாலைச் செயற்பாடாகவும் காணப்படுகிறது. இன்றைய தந்திரோபாயம் நாளைக்குக் காலாவதியாகிவிடும். அதனையே தொடர்ச்சியாகப் பின்பற்றப்போவதாக அடம்பிடிக்கும் யதார்த்தநிலைப் போக்குகள் சில பணியாளர்கள் மத்தியில் இன்றும் அவதானிக்கப்படுகிறது. இதனால் மாணவனின் கற்றல் தேர்ச்சி நிலை கேள்விக்குரியதாகிறது. பாடசாலைகள் விளைதிறன் குறைந்து செல்வதற்கான ஏது நிலைகளை உருவாக்குகிறது.

எனவே, ஆசிரியர் பணிகள் பற்றிய சில விடயங்களை இங்கு அவதானிப்போம். மாணவனின் கற்றலுக்கான வழிகாட்டியாகவும் வசதிப்படுத்துநராகவும் செயற்படும் ஆசிரியரும் பாடசாலை சார் சமூகமும் இவ் அணுகுமுறைகள் பற்றித்தெரிந்து கொள்ளுதல் நன்மை பயக்கலாம். ஆய்வுகளின் மூலம் இச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டவையாகவும் இவ் அணுகுமுறைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

கற்றலை மேம்படுத்துவதற்கான வகைகூறல் ஆசிரியர்களையே சாரும். கற்பித்தல் - கற்றல் சூழலை உருவாக்கி பங்கு கொள்வகையில் கற்றல் செயற்பாடுளில் மாணவர் ஒவ்வொருவரும் ஈடுபடச் செய்தல் வேண்டும். பாடவிதானத்தினை இலகுபடுத்தி கருத்துள்ள வகையில் பகுதிகளாக்கி பாட உள்ளடக்கம் சிதைவுறா வண்ணம் முறையான கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டு நடைமுறைகளால் மாணவனின் பேறுகளை உணரச் செய்து குறித்த காலத்தினுள் அடைய வேண்டிய தேர்ச்சிகளை

பெறச் செய்தல் ஆசிரியரின் வகைகூறலுடனான கடமையாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்காகவே அவர்கள் ஊதியம் பெறுகின்றனர்.

- மாணவர்கள் கற்க வேண்டியன பற்றிய தெளிவான வரையறைகளையும் கால எல்லை தேர்ச்சி மட்டங்கள் மற்றும் முறையியல்களையும் ஆசிரியர் முன்வைத்தல். இவை பாடத்திட்டத்தினை மையப்படுத்தியும் தமது மாணாக்கரினை இனங்கண்டு அவர்களிற்குப் பொருத்தமான மொழிப்பிரயோகத்திலும், அளவுகளிலும் பகுதிகளாக்கியும் மாற்றங்கள் தேவையாயின் அதனையும் உட்படுத்தி ஆசிரியர் தனது புலக்காட்சிக்குள் கொண்டு வந்து நன்கு திட்டமிட்டுத் தயாரித்தல்.

- அடையவேண்டிய இலக்குகளைத் தலைப்புக்களாக்கி அவற்றினை பளிச்சீட்டு அட்டைகளில் அல்லது வேலைப்படிவங்களாகப் பொறித்து படிமுறையாக மாணாக்கரிற்கு முன்வைத்தல். குறித்த கால எல்லைகளையும் முன்வைத்தல். நிபந்தனைகளையும் முன்னிறுத்தி காட்சிப்படுத்தப்படும் போது வினைத்திறனான செயற்பாட்டை எதிர்பார்க்கலாம். முதன் நாளில் இவற்றினை வழங்கி அடுத்த நாள் வகுப்பறைச் செயற்பாட்டினூடாக வெளிக் கொணர்தல் மேலும் சிறந்த விளைவுகளைப் பெறக் கூடியதாக அமையும்.

- மாணவர்களின் அடைவுகளை மதிப்பீடு செய்வதற்கு வழங்கப்பட்ட விடயத்தினூடாக எவற்றை ஆற்றியிருக்க வேண்டும் என்ற தெளிவை காட்சிப்படுத்தல்கள் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். இவை மாணவனின் குறிப்புப் புத்தகத்தில் விளைவாக வரும் வகையிலும் தூர நோக்குடனும் மாணவனின் நடத்தையில் அவதானிக்கக் கூடியவாறும் ஒழுங்கமைத்தல் வேண்டும். பயிற்சிகளிலும் வழங்கப்பட்ட வழிகாட்டல்களிலும் மற்றும் பாடப்புத்தகங்களிலும் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி எண்ணக்கருக்களை வெளிக் கொணரும் சொற்றொடர்கள் கருத்துக்கள் என்பவற்றைப் பெறக்கூடிய விடைகளாக கண்டறியக் கூடியதாக காட்சிப்படுத்தல்களில் மறைமுகமாகவோ நேரிடையாகவோ உள்ளடக்கப்படுதல். மதிப்பீடுகள் சரிபார்க்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மீள் வலியுறுத்தல் செய்யப்படல் வேண்டும்.

- பல்தரத்தில் அமையுமாறு கற்றலுடன் வாசிப்பு மற்றும் ஏனைய ஊடகங்களிலிருந்து தேடல் கலந்துரையாடல் மூலம் குறித்த தேர்ச்சி அல்லது தலைப்பிற்கு ஏற்ப தகவல்களைத் திரட்டி அவற்றினை வினாத் தொகுதிக்கமைய மாற்றியமைத்து எண்ணக்கருவாக இனங்காட்டும் வெளிப்பாட்டு சொற்களைக் கொண்ட குறுகிய முன்வைப்பாக மாணவனால் சொல்லக் கூடியவாறான தேர்ச்சிநிலையை நோக்கி கற்போனை வழிநடாத்துதல்.

- மாணவர் கற்றலை தொடர்பான காட்சிப்படுத்தல்களை மாணவர் ஆக்கங்களாக குறித்த காலப்பகுதிக்கானவையாக வகுப்பறையில் காட்சிப்படுத்தலுக்கு

வழிப்படுத்துவதுடன் சகல மாணாக்கரும் சந்தர்ப்பம் பெறும் வகையிலான உத்திகளைக் கையாளுதல். காட்சிப்படுத்தல்களை குறித்த கால இடைவேளையில் காலாவதியாக்கி புதியனவற்றால் அவற்றினை பிரதியீடு செய்வதற்குத் தூண்டுதல்.

- மாணவர்க்குத் தாம் குறித்த காலப்பகுதியில் கற்க வேண்டியவை பற்றியும், அதற்கான படிமுறைகளையும் மாணவரிடம் தெளிவு ஏற்படுவதனால் தன்னம்பிக்கையும் உள்ளார்ந்த ஊக்கல்களும் இயல்பாகவே ஏற்பட வாய்ப்புக் கிடைக்கிறது. ஆசிரியரும் மாணவரும் இணைந்து இயங்கிக் கற்றல் செயற்பாட்டிற்காக அர்ப்பணிப்புடன் ஈடுபாடு கொள்ள ஆரம்பிப்பர்.

- பாடத்திட்டத்தின் நடைமுறைகளிற்கு மேலதிகமாகவும் பாடத்திட்டத்துடன் இணைந்தவாறும் விசேடமான பின்வரும் நுட்ப முறைகளையும் இணைத்துக் கொள்ளுதல் கற்றலில் ஊக்கலை ஏற்படுத்தும். ஆவண ரீதியான வினாக்களை முன்வைப்புக்களாக உரத்து வாசித்து அதற்கான விடைகளைக் குறித்த மாணவனிடம் கூறச்செய்தல் மூலம் ஒவ்வொரு மாணவரினதும் கவனத்தினைத் தக்க வைக்க முடிகிறது. அத்துடன் இவற்றின் நடைமுறைகளில் மாற்றம் செய்து விநாடி வினா போட்டி, எழுந்தமாறாக தெரிவோரிடம் வினாக்களைத் தொடுத்தல், அவர்களிற்கு ஊக்குவிப்புக்களை அளித்தல் போன்ற வகைகளில் கற்றல் உத்திகளைப் பிரயோகிக்க முனைதல்.

- வகுப்பறையில் ஒவ்வொரு மாணவனும் தனக்குரியவாறு தான் விளங்கிக் கொண்டவாறு இயங்குவது இயல்பாகும். எனவே பொருத்தமான கணிப்பீட்டு நுட்பங்களைப் பிரயோகிப்பதன் மூலம் மாணவனின் இயக்கத்திற்கான பாதையை அவனது பலவீனங்களை உண்மையாக இடர்படும் இடத்தினை அறிந்து கொள்ள முடிகிறது. இதன் மூலம் உடனுக்குடன் கற்றலுக்கான தடைகளை அகற்றுவதற்கான பொருத்தமான வழிகாட்டல்களை ஆசிரியர் நல்கக் கூடியவாறாதல்.

மாணவனின் பிரதான கற்றல் களமாகவும் ஆசிரியரின் தொழிற்களமாகவும் தனது வாண்மையை வெளிப்படுத்தும் பிரதான இடமாகவும் கருதப்படும் வகுப்பறைச் செயற்பாடுகளில் ஆசிரியரின் பாடம் பற்றியதும் மாணவனின் தனியாள் ஆற்றல்கள் கற்கும் திறன் இயல்புகள் பற்றிய புலக்காட்சியும் ஒட்டு மொத்தமாக தனது பாடத்துடனும் ஏனைய பாடங்களினூடாகவும் மேலும் புறக்கிருத்தியங்கள் தகவற்தொடர்புகளின் மூலமும் விளைவாகப் பெறவேண்டிய மொத்த அடைவுகளை பற்றியும் சரியான புலக்காட்சி பெறுதல் ஆசிரியரின் உண்மையான தொழிற்றுறை ஆற்றுகைகளாகும். அதற்கமைய தனது பாடத்தினை - கலைத்திட்டத்தினை மையப்படுத்தி கற்றல் பாதையை திட்டமிட்டு வடிவமைக்கும் ஆற்றல்களின் நிறைமையில் மாணவனின் கற்றல் அதிக செல்வாக்குப் பெறுகிறது. இவை ஆசிரியரின்

உண்மையான வாண்மை விருத்தியாகக் கருதப்படுகிறது. நிறுவன ரீதியான பாடசாலைக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி மற்றும் தொழில்நுட்பத்திறன் கொண்ட மூன்றாம் நிலைக் கல்விச் செயற்பாடுகள் யாவற்றிலும் முழுப்பண்பு சார் முகாமைத்துவமானது பொருத்தமான நேரத்திற்கான தருணத்திற்கான பிரயோக உத்திகளை வழங்கும் வகையில் ஒருவரைத் தேர்ச்சி பெறச் செய்தல் கற்றல் விளைவாகப்பார்க்கப்படுகிறது. இதன் அடிப்படையில் உள்ளடக்கம் அமைதல் மற்றும் பயனுறுதி கொண்ட முகாமைத்துவ உத்திகள் மூலம் விளைதிறனான அமுலாக்கம் இலக்கினை அடைதலை உறுதிப்படுத்தும். ஆசிரியரை தனது தொழிற்றுறையில் தரமான வகையில் தேர்ச்சி பெறச்செய்தற்கான சந்தர்ப்பங்களை பாடசாலை உருவாக்கித் தருதல் விரும்பப்படுகிறது. கற்றல் செயற்பாடுகளில் கலந்துரையாடல், பாடப்புத்தகங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகள், கள ஆய்வுகள், சவால்கள், எண்ணக்கரு விடய பரிசோதனைகள், இதவடிவ கற்றல் வழிகாட்டல்கள் போன்ற பல்வகைத் தந்திரோபாய கற்றல் ஆற்றுகைகள் கொண்ட பல்பரிமாணங்களினூடாகக் கற்றல் இன்று உயர்மட்டக் கற்றலாக முன்வைக்கப்பட்டு அவற்றின் தரத்தினை உறுதிப்பாடுத்தியவாறு செல்வதற்கான கல்வி ஏற்பாடுகள் முன்வைக்கப்படுகிறது. அத்துடன் ஒத்துழைப்புக்கற்றலாக தம்முள் கலந்துரையாடி அல்லது செயற்பட்டு நம்பகமான வெளிப்பாடுகளை மதிப்பிட்டு உற்சாகம் வழங்குவதாக தரமுகாமைத்துவ அணுகுமுறைகளின் கீழ் வகுப்பறையினுள்ளும் தரமான செயற்பாடுகள் உறுதிப்படுதல் அவசியமாகிறது. தரமான கற்றல் பேறால் தரமான தொழிற்சந்தைக்கான பிரஜையை உருவாக்கி நற்பெயரையும் கற்போனின் மனத்தில் இடம்பிடிக்கும் தொழிற்திருப்தி நிலையையும் பெற ஆசிரியர்கள் தமது வாண்மையையும் சந்தர்ப்பத்தினையும் நன்கு பயன்படுத்துவார்களாக.

உசாத்துணை நூல்கள்:


1. தேசிய கல்வி நிறுவக வெளியீடு, 1991,பாடசாலை **முகாமைத்துவச் செயற்பாடுகள்**, சிறப்பு வெளியீடு -1, கல்வி முகாமைத்துவ அபிவிருத்தித் துறை, மகரகம.

2. செல்வராசா.மா., 1995,**கல்வி அபிவிருத்தி முகாமைத்துவம்**, செபஸ்ரியன் அச்சகம், மட்டக்களப்பு.

3. Armstrong.M & Baron.A, 1998. **Performance Management – The new realities**. The Institutional for Personnel Development, London.

4. Dr.Javier Martinez, 2001, **Assessing Quality outcomes &Performance Management**, World Health Organization, Department of Organization of Health Services Deliver, Geneva, Switzerland.

5. Hammond, Machelle LaPointe, Debra Meterson, Margaret Terry Orr, Carol Cohen, April 2007, **Preparing School Leaders for a Changing World**: Lesson from Exemplary Leadership Development Programs, Stanford University, The Finance Project, West Commissioned The Wallace Foundation.

# ஒருங்கிணைந்த காவிக்கட்டுப்பாட்டின் மூலம் ஈடிஸ் நுளம்புகளை அழித்து டெங்கு நுளம்பினை விரட்டுவோம்

ஆ.ஜென்சன் றொனால்ட்
(MSc in Health management, BA)
பொது சுகாதார பரிசோதகர், கொடிகாமம்.

இலங்கையின் பொது சுகாதாரத்தில்பெரும் பாதிப்பை ஏற்படுத்துவது டெங்குக் காய்ச்சலே (Dengue Fever) எனும் விடயமே ஆகும். டெங்குக் காய்ச்சல் மத்தியகோட்டை அண்டிய அயன் மண்டல நாடுகளில் தொடர்ச்சியாக தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது.

நோய்க் காரணி

டெங்கு காய்ச்சலை ஏற்படுத்துவது வைரசு (Virus) வகையைச் சேர்ந்த நுண்ணங்கியாகும். இது நான்கு வகையில் காணப்படும். ஒருவகை தொற்று ஏற்படும் போது அதற்கான எதிர்ப்பு சக்தி எமது எமது உடலில் தோன்றிவிடுகிறது. எனினும் ஏனைய வகை வைரசுக்களினால் தொற்று ஏற்படும் வாய்ப்பு உள்ளது. இதிலும் இரண்டாந் தடவை தொற்று ஏற்படும் போது ஆபத்து நிலை அதிகமாக இருக்கும்.

நோய்க் காவி

டெங்குக் காய்ச்சலை காவுகின்ற காவியாக ஈடிஸ் எஜிப்ரை (Aedes aegypti) எனும் நுளம்பின் பெண்நுளம்புகள் பங்கு வகிக்கின்றன. இவை புறத் தோற்றத்தில் தெளிவாக இனங்காணக்கூடிய வெள்ளைப் புள்ளிகள், வரிகளை உடலில் கொண்டிருக்கும்.

இந்தவகை நுளம்புக்கள் பெரும்பாலும் மக்கள் வாழும் இடங்களை அண்டிய சிறியளவிலான நீர் தேங்கும் பாத்திரங்களில் முட்டைகளை இட்டு இனப்பெருக்கமடைகின்றன. இவை இடும் முட்டைகள் நீருள்ள பாத்திரங்களில் அவர்கள் ஒட்டியிருப்பதோடு நீரின்றிய உலர்ந்த காலங்களிலும் பாத்திரங்களுடன் ஆறு தொடக்கம் பன்னிரண்டு மாத காலங்கள் உயிர்ப்பாக இருக்கக் கூடியவை. மீண்டும் நீர் கிடைக்கும் போது இனப்பெருக்கமடையக் கூடியவை. டெங்கு வைரஸ் தொற்றுடைய ஒருவரை நுளம்பு கடிக்கும் போது நுளம்பினுள் செல்லும் வைரசு அதன் முட்டைகளையும் அடைகின்றது.

ஒரு தடவையில் 200 வரையான முட்டைகளை இடுவதோடு தனது வாழ்நாளில் நான்கு தடவைகள் முட்டைகளை இடக்கூடியன. பெரும்பாலும் வீட்டுக்க வெளியே

சிறிய புதர்கள் பற்றைப் பகுதிகளை அண்டி வாழும் இந் நுளம்புகள் அதிகாலை மற்றும் மாலை வேளைகளிலேயே கடிக்கின்றன.

பெண் நுளம்புகள் தமது வயிற்றிலுள்ள முட்டைகளின் விருத்திக்காக தேவைப்படும் புரத உணவைப் பெறவே விலங்குகளைத் தேடி வந்து கடிக்கின்றன.

ஈடிஸ் எஜிப்ரை வகை நுளம்புகள் மனிதனால் உருவாக்கப்படும் சிறியளவிலான நீர்த் தேக்கங்களை அதிகளவு முட்டையிட நாடுவதோடு ஏனைய முள்ளந்தண்டுண்ணிகளை விட மனிதனையே அதிகம் தேடி வந்து கடிக்கின்றன.

**நோய் பரவும் விதம்**

வைரஸ் தொற்றுள்ள நுளம்பு சுகதேகி ஒருவரைக் கடிக்கும் போது (ஒரு கடியே போதுமானது) அதன் உமிழ்நீருடன் சேர்ந்து வைரசுக்கள் மனித குருதித் தொகுதியில் கலந்து விடுகின்றன. பொதுவாக தொற்று ஏற்பட்டு மூன்று முதல் பதினான்கு நாட்களில் (பெரும்பாலும் 4 - 7 நாட்கள்) நோய் அறிகுறிகள் தென்படும். அறிகுறிகளாக திடீரென அதிகரிக்கும் காய்ச்சல் ($40^0C$), தலைவலி, கண்களுக்குப் பின்னரான நோவு, தசை-மூட்டுக்களில் நோவு, ஓங்காளமும் சத்தியும், அடிவயிற்று நோவு, தோலில் சிவப்பு தடங்கள்,மூக்கு-முரசு மென்சவ்வுகளில் இரத்தக்கசிவு என்பன காணப்படலாம்.

காய்ச்சல் ஏற்பட்டு இரண்டு முதல் பத்து நாட்களுக்கிடையில் தொற்றை ஏற்படுத்தக்கூடிய நிலையில் நோயாளியின் குருதியில் வைரசுக்கள் காணப்படும். இந்தக் காலப்பகுதியில் நுளம்புத் தொற்றுக்கு உள்ளானவரை கடிக்கும் போது அது தொற்றுக்கு உள்ளாகிறது.

இவ்வாறு டெங்கு வைரசால் தொற்றுக்கு உள்ளான ஈடிஸ் நுளம்பின் உமிழ்நீரில் 8-10 நாட்களில் தொற்றை ஏற்படுத்தக் கூடிய நிலையில் நுளம்பு இன்னொருஆரோக்கியமானவரைக் கடிக்கும் போது டெங்கு தொற்று உருவாகிறது.

டெங்கு தொற்று ஏற்படுவோரில் 80% மானவருக்கு அதன் அறிகுறிகள்வெளிக்காட்டப்படாது அல்லது மிகக் குறைவான அறிகுறிகளே வெளிப்படும். 20மூ ஆனவர்களுக்கே அடையாளங் காணக்கூடிய அளவில் அறிகுறிகள் காணப்படும்.

**டெங்கு நோய் நிலைகள்**

டெங்கு வைரசுக்களால் ஏற்படும் நோய் நிலைகள் பிரதானமாக மூன்று வகைப்படும்.

1. டெங்குக் காய்ச்சல் (Dengue Fever)
2. டெங்குக் குருதிப் பெருக்கு (Dengue Hemorrhagic)
3. டெங்கு அதிர்ச்சி நிலை (Dengue Shock)

இதில் டெங்குக் காய்ச்சல் முன்னர் குறிப்பிட்டது போன்று காய்ச்சலுடன் ஏனைய இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட அறிகுறிகளுடன் ஏற்படும். போதிய ஓய்வும் நீராகாரமும் மருத்துவ பராமரிப்பும் வழங்கப்படுகையில் இலகுவில் குணமடையக் கூடியது.

டெங்கு குருதிப் பெருக்கு நிலையானது ஆபத்தானது. இது நெஞ்சு, வயிற்றுப்

பகுதிகளில் உடலினுள் குருதித் திரவவிழையம் வெளியேறும் நிலையாகும். இதனால் குருதியின் கனவளவு குருதிச்சுற்றோட்டத்தில் குறைவடைந்து முக்கிய உடல் அங்கங்களுக்கான குருதி விநியோகம் பாதிக்கப்படுவதால் இறப்பு ஏற்பட வாய்ப்புண்டு இதற்காக வைத்தியர்களின் தீவிர கண்காணிப்புடன் நாளங்களுடான திரவ ஊட்டம் மற்றும் குருதி மாற்றீடு எனும் தீவிரசிகிச்சைகளும் வழங்க வேண்டி ஏற்படலாம். பெரும்பாலும் இரண்டாந் தடவை டெங்கு தொற்றுக்கு ஆளாகுபவருக்கு இந்த நிலை தோன்றும் வாய்ப்பு அதிகமாகும்.

டெங்கு அதிர்ச்சி நிலையானது மிக மிக பாரதூரமான ஆபத்தான நிலையாகும். இதன்போது காய்ச்சல் வெகுவாக குறைவடைவதோடு, சோர்வு, மயக்கம், தோல்பிசுபிசுப்பு தன்மை அடைதல், மாறாட்டம் எனும் அறிகுறிகள் காணப்படலாம். இது இறப்பை நோக்கி விரைவாக இட்டுச் செல்லக்கூடிய நிலையாகும்.

## நோய்த் தடுப்பு முறை

நோய் அறிகுறிகள் (காய்ச்சல்) ஏற்பட்டால் ஆறு மணித்தியாலங்களுக்கு ஒரு தடவைகள் என பரசிற்றமோல் வில்லைகளை மட்டும் பாவித்தபடி போதிய ஓய்வும், நீராகார உள்ளெடுத்தலும் மேற்கொள்ள வேண்டும். இரண்டு நாட்களுக்கு மேல் காண்ச்சல் குறையாவிடின் உடனடியாக தகுந்த மருத்துவரின் ஆலோசனையுடன் குருதிப் பரிசோதனை (FBC) செய்து டெங்குக் காய்ச்சல் தானா என இனங்கண்டு சிகிச்சை பெற வேண்டும்.

நோயாளிகள் எப்போதும் நுளம்பு வலைக்குள் ஓய்வெடுக்க வேண்டும் நீராகாரங்கள் கிரமமாக உள்ளெடுக்க வேண்டும்.

பொதுவாக கடுமையான காய்ச்சலுடன் ஏனைய இரண்டு அறிகுறிகளும், குருதிப் பரிசோதனையில் வெண்குருதிச் சிறு துணிக்கைகள், குருதிச் சிறுதட்டுக்களின் பெறுமானம் சாதாரண அளவைவிட குறைவடையும் போது டெங்குக் காய்ச்சல் என சந்தேகித்து வைத்தியசாலையில் தனிமைப்படுத்தி பராமரிப்பு சிகிச்சை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மிகமுக்கியமாக கர்ப்பிணிப் பெண்களுக்கு டெங்கு தொற்று ஏற்படுவதால் கருக்கலைதல், குறைமாதப் பிரசவம், வளர்ச்சிப் பாதிப்பு, பிறப்பு நிறை குறைதல் மற்றும் உயிராபத்தையும் ஏற்படுத்தக் கூடியது.எனவே ஆரம்பத்திலேயே உரிய மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

## காவிக் கட்டுப்பாடு

டெங்கு நோயைக் கட்டுப்படுத்த மிகவும் செலவு குறைந்த பயனுறுதி மிக்கதுமான கட்டுப்பாட்டு முறையாக "ஒருங்கிணைந்த கட்டுப்பாடு" எனும் முறை விளங்குகிறது. இதில் மூன்று பிரிவுகளை நோக்கலாம்

1. மனிதர்களை நுளம்பு கடிப்பதிலிருந்து தடுத்தல்.
2. நுளம்பு குடம்பிகளை அழித்தல்.
3. நிறையுடலி நுளம்புகளை அழித்தல்.

மனிதர்களை நுளம்பு கடிப்பதிலிருந்து தடுப்பதற்காக பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

டெங்கு தொற்று அதிகமுள்ள பகுதிகளுக்கான நடமாட்டத்தை தவிர்த்தல்.

தோலை இயன்றளவு மூடி வைத்திருத்தல்.

நுளம்பு விரட்டி எண்ணெய்(சித்தாலேப எண்ணெய்), நுளம்பு விரட்டியளைப் பயன்படுத்தல்.

நுளம்பு வலைகளுக்குள் ஓய்வெடுத்தல்.

சுற்றுப்புறச் சூழலை துப்பரவாக வைத்திருத்தல்.

குடம்பிகளை அழிப்பதற்கு/கட்டுப்படுத்துவதற்கு

சிறியளவான நீர் தேங்கும் கொள்கலன்களை நீர் தேங்காவண்ணம் அப்புறப்படுத்தல்.

நீர் தேங்கும் கொள்கலன்களை அவற்றின் உட்புற சுவரை தேய்த்துக் கழுவி வாரமொருமுறையாவது நீரை வெளியேற்ற வேண்டும்.

நீரை வெளியேற்ற முடியாத நீர் தேங்கும் இடங்களுக்கு கப்பீஸ், திலாப்பியா மீனினங்களை இட்டு உயிரியல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

குடம்பி உள்ள நீர் நிலைகளுக்கு குடம்பியை அழிக்கும் பக்ரீரியாக்களை இடுதல் (உயிரியல் கட்டுப்பாடு)

குடம்பி உள்ள நீர் நிலைகளுக்கு அபேற் போன்ற இரசாயனங்களை விசிறி குடம்பிகளை அழித்தல்.

நிறைவுடலிகளை அழிக்க/கட்டுப்படுத்த

வீட்டுச் சூழலை பற்றைகள் அற்றதாக தூய்மையாகப் பேணுதல்

புகையூட்டல் மூலம் நிறையுடலி நுளம்புகளை அழித்தல்

நுளம்புகளைக் கொல்லக்கூடிய இரசாயனம் பூசப்பட்ட நுளம்பு வலை, ஜன்னல் சீலைகளைப் பயன்படுத்தல்.

நுளம்புகளைக் கொல்லும் பூச்சி கொல்லிகளை பயன்படுத்தல்

மேற்படி நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதன் மூலம் நுளம்புகளைக் கட்டுப்படுத்தி காவிக் கட்டுப்பாட்டினூடாக டெங்குத் தொற்று பரவல் ஏற்படுவதை தடுக்கமுடியும். எனவே வீடுகள், பாடசாலைகள், அலுவலகங்கள், கோவில்கள், வைத்தியசாலைகள், பொது இடங்களை வாரமொருமுறை கண்ணானித்து நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்த அனைவரும் ஒருங்கிணைத்து நடவடிக்கை எடுத்தால் டெங்கு எனும் உயிர்கொல்லி நோயை அகற்றிவிடலாம்.

## எதிர்காலப் பொருத்தப்பாடுடைய இலங்கைப் பிரசையை உருவாக்குவதில் பன்மைச் சமூகத்தின் உறுப்பினராகவும் ஜனநாயகப் பிரஜையாகவும் ஆசிரியர்கள் ஆற்றும் பணியும் சாவல்களும்.

**மயில்வாகனம் லினாஷ்குமார்**
B.A,PGDE,M.Ed,SLPS
அதிபர், யா / குடமியன் அ.த.க.பாடசாலை

கடந்த தசாப்தங்களில் ஏற்பட்ட உலக மற்றும் உள்நாட்டு யுத்தங்கள் கல்விப் புலத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளன. குறிப்பாக வளர்முக நாடுகளான ஆசிய ஆபிரிக்க நாடுகளில் சுதந்திரத்தின் முன்னரான கல்விக் கொள்கைகளும் சுதந்திரத்தின் பின்னரான கல்விக் கொள்கைகளும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளன. பன்மைச் சமூகத்தைக் கொண்டுள்ள இவ் வளர்முக நாடுகள் கல்வியின் தரத்தை நிலைநாட்ட பாரிய சவால்களை எதிர்கொள்ளவேண்டி உள்ளது. மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய ஒரு வகிபங்கை கொண்டுள்ள ஆசரியர்களின் பங்கு இவ்விடயத்தில் அளப்பரியது.அந்த வகையில்

பன்மைச் சமூகத்தைக் கொண்ட ஒரு வளர்முக நாட்டின் கல்வி அபிவிருத்தியை மேம்படுத்த ஒரு ஆசிரியர் பலவகையான சவால்களை எதிர்கொள்ள வேண்டிய கடப்பாடுடையவராகின்றார். பொருளாரதார கலாச்சார சமய மாற்றங்கள், அரசியல் தலையீடுகள், தேசிய மயமாக்கல் எனப் பலவித சவால்களை சந்திக்கவேண்டிய ஒரு முக்கிய வகிபங்கு இங்கு ஆசிரியர்களிற்கு உண்டு. ஒரு நாட்டின் ஜனநாயகப் பிரஜை என்ற வகையிலும் ஒரு பன்மைச் சமூக அங்கத்தவர் என்ன வகையிலும் ஒரு எதிர்கால பொருத்தப்பாட்டிற்கு ஏற்ப ஒரு மாணவச் சமூகத்தைக் கட்டி எழுப்ப வேண்டிய முக்கிய பங்கில் ஆசிரியர் உள்ளார். ஆசிரியரது வாண்மைத்துவத் திறன் மற்றும் தொடர்பாடல் திறன்கள் இத்தகைய சவால்களை வெற்றிகொண்டு மாற்றத்தை ஏற்படுத்தும் பணியை வெற்றிகரமாக முன்னெடுக்க உதவுகின்றன.

மாறிவரும் யதார்த்த உலகில் எதிர்காலத்திற்குப் பொருத்தமான பயனுள்ள இலங்கைப் பிரசையை உருவாக்குதல் என்கின்ற பாரிய பொறுப்பு கல்வித் துறையினரிடம் விடப்பட்டுள்ளது. அந்த வகையில் சமூக மாற்றத்தின் முகவராகத் திகழும் ஆசிரியர்கள் பல்வேறு சவால்களைச் சந்திக்க வேண்டி உள்ளன.

### அ. பன்மைச் சமூகத்தின் உறுப்பினர் என்ற வகையில் .....

பன்மைச் சமூகம் என்பது பல்வேறு கலாச்சார பண்புகள் கொண்ட மக்கள் வாழும் சமூகமாகும். அத்தகைய பன்மைக் கலாச்சாரம் மிகவும் சிக்கல் நிறைந்ததாகக் காணப்படும். அத்தகை சமூகத்தில் இனம், மொழி, மதம், பழக்கவழக்கம், வாழ்வியல் அம்சங்கள் என்பன வேறுபட்டுக் காணப்படுவது தான் அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது கலாச்சார பண்புக்குரிய முக்கியத்துவத்தைக் கொடுப்பர். இந்த நிலையில் பன்மைக் கலாச்சாரத்தின் உறுப்பினராகிய ஆசிரியர் இவ்வேறுபட்ட சமூகங்களை

ஒன்றிணைத்து கருமமாற்ற வேண்டிய சவாலை எதிர்கொள்ள வேண்டி உள்ளது.பன்மைக் கலாச்சாரமானது அபிவிருத்தியடைந்த அடைந்து வருகின்ற நாடுகளில் காணப்பட்டாலும் இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் சமூகக்கட்டமைப்புக்கள் இறுக்கமான தன்மைகளைக் கொண்டுள்ளதுடன் அத்தகைய சூழலில் பன்மைக் கலாச்சார அங்கத்தவராக எதிர்காலப் பொருத்தப்பாடுடைய பிரசையை உருவாக்குவதில் ஆசிரியர் பாரிய சவாலை எதிர்கொள்ள வேண்டி உள்ளது. இங்கு ஒவ்வொரு ஆசிரியரும் வெவ்வேறு கலாச்சாரங்களைச் சாரந்தவராகக் காணப்படுவதனால் சமூகம் அவர்களை குறித்த ஒவ்வோரு தனித்த கலாச்சார உறுப்பினராகவே பார்க்க செய்கின்றது. இந்த நிலையில் எதிர்காலப் பொருத்தப்பாடுடைய இலங்கைப் பிரசையை உருவாக்குவது தொடர்பான செயற்பாட்டிலோ அல்லது கருத்து தெரிவிக்கும்போதோ பல்வேறு கோணங்களிலிருந்து தவறான பார்வை ஏற்பட சந்தர்ப்பம் அதிகமாகக் காணப்படுகிறது.

மேலும் இலங்கைத் தீவில் பல்கலாச்சார சமூகம் காணப்பட்டாலும் அவை பிரதேச ரீதியாக பார்க்கின்ற போது தனிக்கலாச்சாரப் பண்புகள் கொண்டதாகக் காணப்படுகிறது. உதாரணம் தென்மாகாணத்து சிங்கள மக்களும் வடமாகாணத்தில் தமிழ் மக்களும் கிழக்கு மாகாணத்தின் ஒரு பகுதியில் முஸ்லிம் மக்களும் என தனிக் கலாச்சார அடையாளங்கள் தென்படுகின்றன. இந்நிலையில் உலக மாற்றங்கள், மாறும் தொழினுட்ப மாற்றங்களிற்கு ஈடுகொடுக்கக் கூடிய பிரஜையை உருவாக்குவது தொடர்பாக சமூகப் பின்னணியில் பலத்த சவாலாக அமைகிறது. அத்துடன் குறித்த பிரதேச ஆசிரியர் அந்தப் பிரதேச தனித்துவத்திற்கு மாறாக மாற்றத்தை ஏற்படுத்துவது எதிர் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டிய சூழல் ஏற்பட வாய்ப்புக்கள் காணப்படுகின்றது.

நகர கிராம என்ற அடிப்படையில் பார்க்கும்போது நகரங்களில் பல்கலாச்சாரப் பண்பு ஓரவு ஏற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் காணப்படுவதுடன் அங்கு ஆசிரியர் இலகுவாக மாணவர்களிடத்தே நேரிய மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாகக் காணப்படினும் கிராமப்புற மாணவர்கள் வெளியுலகத் தொடர்புகளற்ற அல்லது தொடர்புகள் குறைந்தவர்களாகவும் அவர்களிடத்தில் அனுபவரீதியான சமூக மாற்றத்தை ஏற்படுத்த ஆசிரியருக்கு போதிய சந்தர்ப்பம் கிடைப்பதில்லை என்பது பாரிய சவாலாக அமைகின்றது.

மேலும் வசதி கூடிய பாடசாலைகள் வசதி குறைந்த கஸ்டப் பிரதேச பாடசாலைகள் என்ற அடிப்படையில் வசதி குறைந்த பாடசாலைகள் என ஆசிரியர் போதிய வசதிகள் அற்ற நிலையில் கற்றல் கற்வித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் குறித்த கலாச்சாரத்தினின்றும் மாணவர்களை வெளிக் கொணர்வதற்கு தேவையான எடுத்துக் காட்டுக்களை இணையத்தளங்கள் மற்றும் தொடர்பு சாதனங்களின் ஊடாக முன்வைக்கும் சந்தர்ப்பம் இல்லாது போவதால் குறித்த பிரதேசத்து ஆசிரியர்கள் மாற்றத்தை ஏற்படுத்துவதில் சவால்களை எதிர்நோக்கவேண்டி உள்ளது.

உலக மயமாக்கல் காரணமாக ஏற்படும் பல்வேறு சவால்களை எதிர்கொள்ளக்கூடிய எதிர்காலப் பொருத்தப்பாடுடைய பிரஜையை உருவாக்கும் நோக்கில் பாடத்திட்டத்தினூடாக அதாவது ஆரம்ப நிலையில் சுற்றாடல் பாடமூடாகவும் இடைநிலையில் குடியுரிமைக்கல்வி பாடத்தினூடகவும் பல்லினக் கலாச்சாரக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் அவற்றினை அனுபவ ரீதியில் மனநிலை மாற்றத்தை ஏற்படுத்தி பல்கலாச்சாரங்கள் அபிவிருத்திக்கு பயன்படும் திறனை வளர்ப்பதற்கான களங்களை உருவாக்குவது பாரிய சவால் மிக்கபணியாகவே காணப்படுகிறது.

பல்லினச் சமூக சூழலில் கலாச்சார ரீதியான பலமான குழுக்கள் சில காணப்படுவதனாலும் அவற்றின் செயற்பாடுகளும் பல்லின மக்கள் சமூகத்தில் கல்வி இலக்குகளை அடைவதில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்:துகின்றது. மேலும் கடந்த முப்பது ஆண்டு காலம் நடைபெற்ற போரின் வடுக்கள் இனங்களிடையே நம்பிக்கையின்மையையும் பரஸ்பர ஒத்துழைப்பு குறைந்த நிலையினையும் ஏற்படுத்தி உள்ளது. இவற்றிலிருந்து சமூகத்தை எதிர்காலப் பொருத்தப்பாடு நோக்கி பல்கலாச்சார சூழலில் கொண்டு செல்வது ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்ட ஒரு சவால்மிக்க பணியாகவே அமைகின்றது.

**b. ஜனநாயகப் பிரசை என்ற வகையில்..........**

ஜனநாயகம் என்பது மக்கள் ஆட்சி ஆகும். ஜனநாயக ஆட்சியில் அனைத்து மக்களும் உரிமைகளை அனுபவிக்கின்ற நிலை காணப்படும். அத்தகைய சமூகத்தின் பிரசை ஜனநாயகப் பிரசை ஆவார். ஒர் ஜனநாயக சமூகத்தின் பிரசை என்ற வகையில் ஆசிரியரானவர் மாணவர்களை ஜனநாயகப் பிரசைகளாக உருவாக்க வேண்டிய பொறுப்பை உடையவர். அத்தகைய பிரசைகளை எதிர்கால பொருத்தப்பாடுடைய இலங்கைப் பிரசையாகவும் உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. அந்த வகையில் ஆசிரியர் பல்வேறு சவால்களையும் எதிர்நோக்க வேண்டி உள்ளது.

தற்போதைய கல்வி இலக்குகளில் ஒன்றாக ஜனநாயகப் பண்புடைய சிறந்த பிரசையை உருவாக்குதல் அமைகிறது. சிறந்த நடத்தை உள்ள ஒரு பிரசையை உருவாக்குதல் என்ற விடயத்தில் ஆசிரியர் ஒருவர் திட்டமிட்டு மாணவர் ஒருவருக்கு அத்தகைய எதிர்பார்ப்புக்களை பூரணமாக நிறைவேற்றிக் கொள்ளல் கடினமானதாகும். அது கல்வித் துறைக்குப் பொருத்தமான எதிர்பார்ப்புக்களாக இருப்பினும் அவற்றை நிறைவேற்றிக் கொள்ள நீண்ட கால செயன்முறை தேவை. அது எப்போது முடிவடையும் என்பது எவரும் கூறமுடியாது. அத்தகைய ஒரு முடிவற்ற செயற்பாட்டை ஆசிரியர் ஏற்றுக் கொள்வது சவால் மிக்கதாக அமைகிறது.

ஆசிரியர் ஒருவர் ஜனநாயகப் பிரசை என்ற வகையிலும் எதிர்காலப் பொருத்தப்பாடுடைய பயனுள்ள இலங்கைப் பிரசைகளை ஜனநாயகப் பிரசைகளாகவும்

உருவாக்க வேண்டிய செயன்முறையில் மாணவர்களை ஜனநாயப் பிரசை ஒருவரிடம் காணப்படும் பண்புடையவர்களாக அதாவது சுதந்திரமாகக் கருத்து தெரிவிக்கும் உரிமை, ஏனையோரது உரிமைகளை மதித்தல் சட்டத்தை மதித்தல் சிறுபாண்மையினரை பாதிக்காது பெரும்பாண்மையினரது விருப்புக்கு அமைவாகச் செயற்படல் போன்ற பல ஜனநாயகப் பண்புகளை மாணவர்கள் மத்தியில் வரையறுக்கப்பட்ட கட்டமைப்புக்குள் உருவாக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஆசிரியருக்கு உள்ளது.

மாணவர்களை அறிவு சார்ந்தவர்களாக ஜனநாயத் தன்மைகளை உள்வாங்கிக் கொண்ட ஜனநாயப் பிரசைகளாக உருவாக்குவதற்க 1945 ஆம் ஆண்டிலிருந்து இலவசக் கல்வியினூடாக வாழ்வை மேம்படுத்திக் கொள்வதற்கான ஆக்கபூர்வமாக சிந்திக்கும் ஆற்றல் உடையவர்களாக அறிவு திறன் மனப்பாங்கை விருத்தி செய்து செயலாற்ற வேண்டிய சவால் மிக்க பொறுப்பும் ஆசிரியரிடம் காணப்படுகின்றது.

எனவே ஜனநாயக சமூகத்தின் பிரசையான ஆசிரியர் மாணவர்களை ஜனநாயகப் பண்புடையவர்களாக எதிர்காலப் பொருத்தப்பாடுடைய இலங்கைப் பிரசைகளாக உருவாக்குவது அர்ப்பணிப்புடனும் ஆழ்ந்த சிந்தனையுடனும் நேரிய மாற்றத்திற்காக வரையறுக்கப்பட்ட வளங்கள் மற்றும் மிகக் குறைந்த அதிகாரத்துடனும் செயலாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியன் ஆனவன் வேகமாக மாறிவரும் சமூக மாற்றங்களுக்கு மத்தியிலும் பல்கலாச்சாரத்தின் உறுப்பினராகவும் ஜனநாயகப் பிரசையாகவும் தனது வாண்மைத்துவ திறன் மற்றும் தொடர்பாடல் திறனூடாக தனது அர்பணிப்பு மிக்க சேவையுடன் சவால்களை வெற்றிகொண்டு கல்வி அறிவுடைய எதிர்காலப் பொருத்தப்பாடுடைய இலங்கைப் பிரசைகளை உருவாக்கும் இணையற்ற பணியினூடாக சிறப்படைவதை நோக்க முடிகின்றது.

### உசாத்துணைகள்


1. முத்துலிங்கம்.ச. (1974). கல்வியியல் ஓர் அறிமுகம். யாழ்ப்பாணம் : கீதாஞ்சலி
2. ஜெயராசா.சபா. (2008). கல்விக் கோட்பாடுகளும் மாற்றுச் சிந்தனைகளும். கொழும்பு: சேமமடு பதிப்பகம்.
3. கருணாநிதி.மா. (2011)கற்கும் சமூகத்தில் ஆசிரியர் வகிபங்கு: அகவிழி-மே. கொழும்பு. அகவிழி
4. சந்திரசேகரம்.சோ. (2004). நவீன கல்விமுறையில் ஆசிரியரின் மாறிவரும் வகிபாகம். அகவிழி-ஆகஸ்ட். கொழும்பு: அகவிழி
5. ஜெயராசா.சபா. (2006). கல்வியில் புதிய சீர்திஐத்தங்கள் ஓர் விளக்கநில நோக்கு. கொழும்பு: அகவிழி

# மட்டுவில் தெற்கு கிராமமும் மானிடவியலும் ஆய்வு நோக்கு

செல்வி. ச. ரஜிதா
( பழைய மாணவி 2011)
கிழக்குப் பல்கலைக் கழகம்

மட்டுவில் என்பது யாழ்ப்பாணத்தில் சாவகச்சேரி பகுதியில் அமைந்துள்ளது. மட்டுவில் கிராமம் பரந்த பிரதேசம் என்பதால் அதை மட்டுவில் வடக்கு மட்டுவில் தெற்கு மட்டுவில் கிழக்கு மட்டுவில் மேற்கு மட்டுவில் மத்தி எனப் பிரிக்கப்பட்டுள்ளது. மட்டுவில் என்பது மட்டு என்பது தேன் வில் என்பது குளம் ஆகவே மட்டுவில் என்பது தேன் குளங்கள் நிறைந்த இடம் என்பது அதன் பொருளாகும். இது பிரதேச சபை என்னும் உள்ளூராட்சித் தொகுதிக்குள் உட்பட்டதாகும். இக்கிராமத்தின் எல்லைகளாக வடக்கே மட்டுவில் நுணாவில் பிரதேசமும் கிழக்கே நுணாவில் மேற்கு பிரதேசமும் தெற்கே கைதடி நுணாவில் பிரதேசமும் மேற்கே கைதடி கிழக்கு பிரதேசத்தையும் எல்லைளாகக் கொண்டுள்ளது. இப்பிரதேசத்தின் காலநிலையானது ஆண்டு தோறும் ஒரு பருவ மழைவீழ்ச்சியையும் மற்றைய காலங்களில் வெப்பம் நிறைந்த பிரதேசமாகவும் காணப்படுகின்றது. பொதுவான வருடாந்த வெப்பநிலை $28^0c$-$29^0c$ ஆகும். வருடாந்தமழைவீழ்ச்சி 150mm-250mm ஆகும்.

| கிராமத்தின் சனத்தொகை | | |
|---|---|---|
| ஆண் | பெண் | மொத்தம் |
| 399 | 456 | 855 |
| 46.6 | 53.4 | 100 |

இக் கிராமத்தின் பொருளாதாரம் பெரும்பான்மை பயிர்ச் செய்கையாக காணப்படுகின்றது. கிராமத்தில் உற்பத்தி செய்கின்ற உற்பத்திகளில் பெரும்பான்மை இக்கிராமமக்களால் நுகரப்படுகின்றன. அவற்றினை விடதேவைகளுக்கு அதிகமானவை சந்தைக்கு அனுப்பப்படுகின்றன. இவை சந்தைகளில் சந்தை வியாபாரிகளால் வாங்கப்படுகின்றன. மற்றும் சிலர் குடிசைக் கைத்தொழிலிலும் ஈடுபடுகின்றனர். அவர்கள் மட்பாண்டம் மற்றும் தச்சுவேலையிலும் ஈடுபடுகின்றன. ஏனையோர் வீடுகளில் கால்நடைப் பண்ணைகளையும் வைத்துள்ளனர். குறிப்பாக பசுமாடு ஆடு கோழி என்பவற்றை வீடுகளில் வளர்க்கின்றமை குறிப்பிடதக்கதாகும். பசுமாடுகளின் மூலமாகபால் பெற்றும் கோழிகளின் மூலம் முட்டைகளை பெற்றும் மற்றும் இறைச்சிக்காக விற்றும் பயன் பெறுகின்றமை குறிப்பிடதக்கதாகும்

இக்கிராமத்தில் வசிக்கும் மக்களின் தொழில்கள் பற்றி நோக்குவோமானால் சிலர் அரசதுறைகளிலும் சிலர் தனியார் துறைகளிலும் ஏனையோர் சுயதொழிலும் சிலர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களிலும் ஈடுபட்டள்ளனர்.

1.வேலைவாய்ப்புக்களின் மொத்தசனத்தொகை

| ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|
| 140 | 154 | 294 |

3.தொழிலற்றோர் விபரம்

| ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|
| 130 | 120 | 250 |

கிராம மக்களின் மதம்

| | பௌத்தம் | இந்து | கிறஸ்தவம் | முஸ்லீம் |
|---|---|---|---|---|
| குடும்பங்களின் எண்ணிக்கை | | 296 | 8 | |
| ஆட்களின் எண்ணிக்கை | | 831 | 24 | |
| ஆட்களின் எண்ணிக்கையின் வீதாசாரம் | | 296 | 28 | |

இக்கிராமத்தில் தோன்றும் பிணக்குகளை தீர்த்துவைக்க இணக்கசபை எனும் அமைப்பு காணப்படுகின்றது. அதாவது இச் சபையானது பிரச்சனையில் கலந்து கொண்ட இரு தரப்பினரையும் அழைத்து தீர்ப்பினை நன்கு ஆராய்ந்து நீதியைக் கூறுகின்ற இடமாக காணப்படுகின்றது. இச்சபையில் கொடுக்கப்படும் தீர்ப்பு தமக்கு மனநிறைவு கொடுக்கவில்லை எனக் கருதும் சாரார் பின்பு நீதிமன்றத்திற்கு மனுக்கடிதம் அனுப்பலாம். இவ் இணக்கசபையெனும் அமைப்பு இரு சாரரையும் பகையின்றி இணங்கி போகவைப்பதற்காகவே தோன்றிய ஒருஅமைப்பாக காணப்படுகிறது.

மட்டுவில் என்னும் கிராமத்தின் சுகாதார நிலை பற்றி நோக்குகின்றபோது இங்கு சுகாதாரவசதிகள் நிறைந்து காணப்படுகின்றது எனவே கூறலாம். இங்கு கிராமத்திற்கு எனவே சுகாதாரநிலையம் காணப்படுகின்றது. இங்கு கர்ப்பபிணித் தாய்மார்கள், குழந்தைகளுக்கு மாதாமாதம் மருத்துவப் பரிசோதனை இடம்பெறுகிறது. அதுதவிர

இலவச மூக்குக் கண்ணாடிகளும் அவரவர் பார்வை தூரங்களும் குறைபாடுகளும் பரிசோதனை செய்யப்பட்டு வழங்கப்படும்.

ஊரிலுள்ள சுகாதார சேவை மையத்தினால் மாதந்தோறும் ஆறு வயதிற்குட்பட்ட பிள்ளைகளின் போசாக்குநிலை, எடை, உயரம், போன்றன அளவிடப்பட்டு அவர்களின் தாய்மார்களுக்கும் உணவு பற்றிய அறிவுறுத்தல்கள் கொடுக்கப்படுகின்றன. ஊரிலுள்ள ஆரம்ப முன்பள்ளியில் சிறார்களுக்கு ஒவ்வொருநாளும் காலையில் ஒவ்வொரு கப் பால் கொடுக்கப்பட்டு அவர்களின் எடை வளர்ச்சியில் ஏற்படும் மாற்றம் அளவிடப்படுகிறது. ஊரிலுள்ள வைத்தியர்களினால் கர்ப்பிணிதாய்மார்களுக்கும் குழந்தைகளை வைத்திருக்கும் தாய்மார்களிற்கும் உணவு பற்றிய பயன்தரு செய்திகள் கருத்தரங்குகள் வைத்து கூறப்படுகிறது.

இக்கிராமத்தில் காணப்படுகின்ற வளங்களில் ஒன்றாக மண்வளத்தைக் குறிப்பிடலாம். இருவாட்டிகலந்தமணல் மண் காணப்படுவதால் இங்குசிறந்ததோட்டப் பயிர்செய்கை இடம்பெறுகின்றது. இதனால் மக்கள் பலபயன்களைப் பெற்றுக்கொள்கின்றன. தமது தேவைக்காகவும் மிகுதியை விற்றுபணமாகவும் பெற்றுக்கொள்கின்றன. மற்றும் சிலர் நெல்பயிற்செய்கையிலும் ஈடுபட்டுபயன்பெறுகின்றனர் மற்றும் இங்கு அதிகமாக காணப்படும் பனை தென்னை மரங்களும் ஓர் சிறந்தவளமாகும். இவை வீடுகளின் கட்டடத் தேவைகளுக்காகவும் மற்றும் அவற்றில் இருந்து பல உற்பத்தி பொருட்களும் உற்பத்தி செய்யபடுகின்றது.


இக்கிராமத்தில் சுயதேவைப் பொருளாதாரம். நிலவுகின்ற காரணத்தினால் இக்கிராமத்தின் மக்கள் உண்ணும் உணவுபெரும்பாலும் கிராமத்தினுள்ளேயே விளைந்த உணவுப் பொருட்கள் மூலம் கிடைக்கபெறுகின்றன. இம்மக்கள் தம் வீடுகளில் வீட்டுத்தோட்டம் வைத்திருப்பதுடன் தமக்குச் சொந்தமான நிலங்களிலும் மரக்கறிவகைகளையும் நாட்டி அவற்றுக்கு வீடுகளில் சேரும் சேதனக் கழிவுகளை இட்டு வளர்கின்றனர். இது மட்டுமன்றி கமத்தொழில் செய்யும் விவசாயிகளும் தமது பிரதான பயிர் வகைகளுடன் மரக்கறிவகைகளையும் சேர்த்து பயிரிட்டு வருகின்றனர். தமது உணவுத் தேவைகளுக்கு இம் மரக்கறிகளை எடுப்பதுடன் மேலதிகமானவற்றை ஊரில் காணப்படும் கடைகளிற்கும் விற்பனைக்காகக் கொடுக்கின்றார்கள். இவை தவிர ஊரில் மாடுகள் ஆடுகள் கோழிகள் போன்றவற்றை வளர்த்து அவற்றின் மூலம் கிடைக்கும் பால் முட்டை போன்றவற்றை கிராமத்தினுள்ளேயே விற்பனை செய்தும் வருகின்றனர

மட்டுவில் கிராமத்தின் கல்வி வளரச்சி பற்றி நோக்கும் போது ஏனைய கிராமங்களைப் பார்க்கிலும் இக் கிராமம் கல்வியில் முன்னேற்றமடைந்தே காணப்படுகிறது. ஆரம்பகாலந் தொட்டு இந்தக்கிராமத்தில் கல்வியில் உயர்ந்த பெரியோர்கள் வாழ்ந்த கிராமமாக காணப்படுகின்றது. இக்கிராமத்தில் கல்விகற்ற பெரியவர்கள் மிகவும் புலமை பெற்று நாடெங்கும் பணியாற்றிவருகின்றனர். இக் கிராமத்தின் கல்வி வளர்ச்சியை

எடுத்துக்காட்டும் வகையில் இக் கிராம பாடசாலைகள், முன்பள்ளிகள், தனியார் கல்வி நிலையங்கள் காணப்படுகின்றன.

இக் கிராமத்தின் பாடசாலைகள் பற்றி நோக்கும் போது இக் கிராமத்தில் காணப்படும் பாடசாலையாக யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் காணப்படுகிறது. இப் பாடசாலை நடுத்தர பாடசாலையாக காணப்படுகிறது. இக் கிராமத்தில் உள்ள மாணவர்களுக்கு சிறந்த கல்வியை அள்ளி வழங்கும் கல்வித் தாயாக விளங்குகிறது. இப்பாடசாலையின் தலைவராக திரு.க.உதயகுமாரன் காணப்படுகின்றார்.

தரம் 11 மாணவர்களின் பரீட்சைசித்திவீதம்




தரம்5 மாணவர்களின் புலமைப்பரீட்சைசித்திவீதம்




## பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

1.மாணவர் ஒருவர் தொடர்ந்து 3 நாட்கள் பாடசாலை வராவிடின் பாடசாலை சமூகம் வீட்டிற்கு சென்று மாணவர்களின் பிரச்சனையை இணங்கண்டு தீர்வு காணுதல்

2.வழிகாட்டல் ஆலோசனைகள் வழங்குதல்

3.பெற்றோர் கலந்துரையாடல்

4.மெல்ல கற்கும் மாணவர்களுக்கான பின்னூட்டல் வகுப்புக்கள் செயற்திட்டம் மாலை நேர வகுப்புக்கள்

5. தரம்11 தரம்5 மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள் மாலை நேர வகுப்புக்கள் நடைபெறுதல்

6.தரமான போஷாக்குள்ள உணவுகள் வழங்குதல்7.உதவி தொகைகள் வழங்குதல்

- புலமைப்பரிசில் நிதியம்
- கல்விஊக்குவிப்புநிதிகள் வழங்குதல்
    - செல்வி. ஞானேஸ்வரிகுமாரசாமிபுலமைப்பரிசில் நிதி
    - கொலண்ட் புலமைப்பரிசில் நிதி
    - அமரர் மகாலிங்கம் அறக்கட்டளை
    - கிருபாவீரசிங்கம் புலமைப்பரிசில் நிதி
    - கலாவதிபுலமைப்பரிசில்
    - கைத்தொழில் வணிகர் மன்றம்
    - மட்டுவில் நலன்பேணும் சங்கம்

8.சரஸ்வதி சிலை அமைக்கப்பட்டுள்ளமை.

9.ஸ்தாபகர் சிலை அமைக்கப்பட்டுள்ளமை.

## பாடசாலையில் காணப்படும் பிரச்சனைகள்

- விளையாட்டு மைதானம் போதியதாக இல்லாமை.
- விளையாட்டு உபகரணங்கள் பற்றாக்குறை.
- ஆய்வுகூட செயற்பாட்டு அறை வசதியின்மை.
- சிறந்த நூலக வசதியின்மை.
- வகுப்பறையின் கல்வி நிலையை உயர்த்த முடியாமைக்கு காரணம் வகுப்பறையில் போதியளவு தளபாடவசதியின்மை.
- மூலிகை தோட்டங்களுக்கு பாதுகாப்பு இன்மை.
- தரம் 01 மாணவர்களின் வகுப்பறைக்கு மின்சாரவசதியின்மை.

1. வளர்மதி சிறுவர் முன்பள்ளி.

மட்டுவில் கிராமத்தின் கல்வி அத்திவாரமாக விளங்குவது வளர்மதி முன்பள்ளி ஆகும். இது சிறார்களின் கற்றலுக்குத் தனது முழுப்பங்களிப்பை வழங்குகின்றது. இங்கு 2 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர். 35 சிறார்கள் கல்வி கற்கின்றனர் வருடந்தோறும் விளையாட்டுப் போட்டிகள் விழாக்களும் நடாத்தப்படுகின்றன. இங்கு கல்விகற்கும் பிள்ளைகளுக்கு தினமும் அவர்களின் போசாக்கு கருதி பால் உணவு என்பன வழங்கப்படுகின்றன.

சிறார்களுக்கு சுகாதாரம் தொடர்பாகவும் நற்பழக்கவழக்கங்களும் கற்றுக் கொடுக்கப்படுகின்றது. இங்கு கல்விகற்கும் மாணவர்களுக்கு தனியான சீருடைகள் உண்டு சிறார்களின் உளநலத்திலும் கவனம் செலுத்தப்படுகின்றது.

இக்கிராமத்தில் காணப்படுகின்ற சமுதாய அமைப்புக்களாக விவசாய சங்கம் மகளிர்சங்கம் சமுத்தி என்பவற்றைக் குறிப்பிடமுடியும். இவ் சங்கங்கள் மக்களுக்கு பெரும் உதவி புரிபவையாகவும் கிராம மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துபவையாகவும் செயற்பட்டு வருகின்றன.விவசாய சங்கம் பற்றிநோக்கும் போது இக்கிராமத்தில் காணப்படும் விவசாயசங்கமானது 38 அங்கத்தவர்களைக் கொண்டு செயற்பட்டுவருகின்றது. இவ் விவசாயசங்கத்தில் இருப்பவர்கள் அதிகம் நெற்பயிர்ச்செய்கையிலேயே ஈடுபட்டுவருகின்ற மக்களாககாணப்படுகின்றனர். இவ் விவசாயசங்கமானது மக்களுக்கு பல உதவிகளை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்தவகையில் வழங்கு உதவிகளாக பின்வருவனவற்றை கூறலாம்.

- விதை நெல், உரம் போன்றவற்றை குறைந்த பணத்தில் வழங்குதல்.
- விவசாயிகளுக்குகடன் உதவிவழங்குதல்.
- விவசாய குடும்பங்களுக்கு ஆலோசனை வழிகாட்டல் வழங்குதல்.
- செயற்கை உரம் பூச்சிகொல்லி வழங்குதல். போன்றவற்றை குறிப்பிடலாம்.

சமுர்த்தி சங்கம் பற்றிநோக்கினால் இக் கிராமத்தில் காணப்படும் சமுர்த்தி சங்கமானது 185 அங்கத்தவர்களை கொண்டு காணப்படுகிறது. இச் சங்கமானது மக்களுக்கு வழங்கும் உதவியாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

- ஒரு குடும்பத்திற்கு ஒரு உறுப்பினருக்கு 500 ரூபாவீதம் அக்குடும்பத்தில் உள்ள மொத்தஉறுப்பினருக்கும் உதவி தொகை மாதாந்தம் வழங்குதல்.
- உணவுப் பொருட்கள் வழங்குதல்.
- கடன் உதவிவழங்குதல்.
- அங்கவீன உறுப்பினர்களை கொண்ட குடும்பத்திற்கு விசேட சலுகைகள் வழங்குதல். போன்றவற்றை குறிப்பிடலம்.

இவ்வாறே மகளிர் சங்கமானது தனது சேவையை வழங்குகிறது. இச் சங்கத்தில் 80 உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். இதனால் வழங்கப்படும் உதவிகளாக

- பெண்களுக்கு சுயதெழில் ஊக்குவிப்பு.
- கடன் உதவிவழங்குதல்.
- பெண்களுக்கு மகளிர்தினம் போன்ற நிகழ்வுகளை கொண்டாடுதல்

இக்கிராமத்தில் காணப்படும் பிரச்சினைகளாக என்னால் இனங்காணப்பட்டவை.

01.அதிக செயற்கைஉரங்கள், கிருமிநாசினிகள் பயர்ச்செய்கையின்போது இக் கிராம விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். இதனால் மண் வளமற்றுபோவதுடன் நீரும் உவராகின்றது

02.விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கையினால் போதியவருமானம் கிடைக்காமல் நட்டம் ஏற்படுகின்றது. இப்பயிர்ச்செய்கையை நம்பிவங்கிகளில் கடன் பெற்ற விவசாயிகள் வங்கிக் கடனை மீளளிக்க வழி தெரியாமல் தற்கொலை செய்துகொள்கின்றனர்.

03.சுயதொழிலுக்கென வாழ்வாதாரம் இன்றி வறுமையிலுள்ளோர், கணவனை இழந்த மாதர் போன்றோருக்கு சில உணவு உற்பத்தி இயந்திரங்கள் ஒவ்வொரு பிரதேச நிலையத்திற்கும் வழங்கப்படடன. இவ் இயந்திரங்களை செயற்படுத்தும் போதியளவு அறிவு இல்லாமை போன்றகாரணங்களால் இயந்திரங்களின் மூலம் பயன் பெறாது உற்பத்திநிலையத்தில் அவைமுடங்கிக் கிடக்கின்றனர்

04. பொது நோக்கு மண்டபம் ஒன்று கிராமத்தில் காணப்படாமை.

05. தச்ச வெட்டை வீதி புனரமைக்கப்பட வேண்டும்

# ஆசிரியர் மாணாக்கர் ஆக்கங்கள்


ஆசிரிய ஆளணியினர் 2017

# தென்னைப் பயிர்ச் செய்கையில் பீடைகளினால் ஏற்படும் பிரச்சினைகளும், அவற்றைக் கட்டுப்படுததும் முறைகளும்.

இலங்கையில் பெருந்தோட்ட பயிர்களில் ஒன்றாக தென்னை விளங்குகின்றது. இப்பயிரானது இலங்கையில் கடற்கரையை அண்டிய மணற்பாங்கான இடங்களில் செழிப்பாக வளரக் கூடியது. எமது தென்மராட்சிப் பிரதேசத்தில் எங்கும் வளரக் கூடிய பயிர் இதுவாகும். இப் பயிரைத் தாக்கும் பீடைகளாவன

1. செவ்வண்டு
2. கருவண்டு
3. தென்னோலை செதில் பூச்சி
4. தென்னோலை சுரங்கமாக்கி
5. பிளஸிஸ்பா வண்டு
6. குருத்தழுகல் நோய்
7. கறையான்
8. தென்னைக் குருத்தழுகல்
9. முலையூட்டல் பீடைகள் (எலி, வௌவால்)

இவற்றில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் பீடைகளாக விளங்குவது செவ்வண்டு, கருவண்டு ஆகும். அவற்றின் சேதம், கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி ஆராய்வோம்.

## 1. செவ்வண்டு



விஞ்ஞான ரீதியாக ரின்கோபோரஸ் பெருன்ஜினஸ் என்று அழைக்கப்படும் செவ்வண்டு நாட்டில் தென்னை வளரும் இடங்கள் எல்லாவற்றிலும் காணப்படும். இது 3-15 வயதுடைய சிறு வயது பராய தென்னை மரங்களை பாதிக்கும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த தீவிரமான பீடையாகும்.

## செவ்வண்டு தாக்கத்தின் செயற்பாடு:-

செவ்வண்டுகள் இளம் தென்னை மரங்களின் புதுக்காயங்களில் மட்டுமே முட்டை இடுகின்றன.நிறையுடலி வண்டு முட்டையிடுவதற்காக மரத்தில் காயத்தை ஏற்படுத்துவதில்லை. இவ் வண்டுகள் மிருகங்கள், மற்றும் மனித நடவடிக்கையால் ஏற்படுத்தப்படும் புதிய காயங்களை நோக்கி கவரப்படுகின்றன. அத்துடன் இயற்கையாக ஏற்படும் வெடிப்புக்களிலும் முட்டைகளை இடுவதன் மூலம் அவற்றில் சேதம் ஆரம்பமாகின்றது.

செவ்வண்டுகளின் குடம்பிப் பருவத்தினாலேயே சேதம் ஏற்படுத்தப் படுகின்றது. குடம்பிக் குடித்தொகைகள் அடிமரத்திலுள்ள இழையங்களை பெருமளவில் உண்ணுவதால் உச்சிப்பகுதியையோ அடிமரத்தையோ வீழ்த்தி மரத்தை இறக்கச் செய்கின்றது. 3 -15 வருட வயதுடைய இளம் மரங்களின் கூட்டங்கள் இத்தாக்கத்தினால் அதிகளவு பாதிக்கப்படுகின்றது. பெரிய அடிகளைக் கொண்ட மரங்களின் வெடிப்புக்களும் மரம் வளரும் போது வளருவதால் இலகுவில் பாதிக்கப்படுகின்றன. இது முட்டையிடுவதற்கு ஏற்ற பொருத்தமான இடமாக அமைகின்றது.

ஆரம்ப தொற்றுதலின் போது இப்பீடைத் தாக்கத்தை கண்டுபிடிப்பது மிகவும் கடினமானது. கடுமையாகப் பாதிக்கப்பட்ட பின்னர் மாத்திரமே கண்டுபிடிக்கக் கூடியதாக இருக்கும். எனினும் மிக நுணுக்கமாக அவதானிப்பதன் மூலம் இப்பீடையின் தாக்கத்தை கண்டுபிடிக்கலாம்.

## தாக்கத்தின் அறிகுறிகள்:-

1. உச்சிப் பகுதி அல்லது அடிமரத்தில் துளைகள் காணப்படும். இவற்றிலிருந்து பீடைகளினால் மெல்லப்பட்ட நார்கள் வெளியே வீசப்படும். இது துளையின் கீழுள்ள இழையங்களின் நிறம் அற்றுப் போவதாலும் ஒரு கபில நிற பால் திரவத்தின் கசிவு ஏற்படுவதை அவதானிக்கலாம்.
2. அடிமரம் அல்லது உச்சியில் உள்ள குடம்பிகள் உண்ணுவதால் ஏற்படுத்தப்படும் மெல்லும் சத்தத்தை அடிமரத்தின் அருகே காதை வைத்து கேட்டறிய முடியும்.
3. இலைகள் மங்கலாதல்.
4. அரும்புகள் வாடிச் சரியும். (குருத்துப் பகுதி)
5. இலைக்காம்புகளின் அடிகளிலும் பட்டைகளின் அடியிலும் நார்த்தன்மையான புழுக் கூடுகளை காணலாம்.

## பீடைத்தாக்கத்தை கட்டுப்படுத்தல்:-

1. இளம் மரங்களை தொடர்ச்சியாக கணகாணிப்பதன் மூலம் செவ்வண்டின் இருப்பையும் புதிய காயத்தையும் கண்டு பிடித்தல்.
2. செவ்வண்டு முட்டையிடுவதை தடுப்பதற்கு எல்லா இளந் தென்னை மரங்களின் அடிப்பகுதிக்கு அல்லது இலைக் காம்புகளின் புதுக் காயங்களுக்கு நிலக்கரித் தார் அல்லது கழிக்கப்பட்ட என்ஜின் எண்ணெய் பூசுதல்.
3. இளம் மரங்களில் ஏற்பட்டிருக்கும் புதிய துவாரங்கள் யாவற்றையும் சிபார்சு செய்யப்பட்ட பங்கசு நாசினியை பாவித்தல் அவசியமாகும்.
4. ஏற்கனவே கருவண்டினால் காயங்களினூடாக செவ்வண்டுகள் முட்டை இட வாய்ப்பு உண்டு அவற்றையும் கண்காணித்தல்.
5. இளமரங்களுள்ள தோட்டங்களில் இயந்திரங்களினாலும் உபகரணங்களினாலும் மரங்களில் காயமேற்படுவதை தவிர்த்தல்.

## நோய்க் கட்டுப்பாட்டு முறைகள்:-

1. தொற்றுக்குள்ளான மரத்தை தொகுதிப் பூச்சிநாசினி பாவித்து பரிகரிக்க வேண்டும்.
2. சேதம் அதிகரிக்கும் பொழுது அரும்புகள் வாடலை ஏற்படுத்தும். இதன்போது மரங்கள் வெட்டி பிரிக்கப்பட்டு உடனடியாக எரிக்க வேண்டும்.

## பூச்சிநாசினி பாவிக்கும் முறைகள்:-

1. முற்றாக விருத்தியடைந்த மரத்தின் அடிமரத்துக்கு உட் செலுத்தல், காய்கள் காய்த்திருந்தால் பூச்சிநாசினி பாவிக்க முன்னர் எல்லா முதிர் தேங்காய்களும் பறிக்கப்பட வேண்டும்.
2. முற்றாக விருத்தியடையாத இளம் மரங்களைப் பரிகரிப்பதற்கு அரும்புப் பகுதிக்கு பூச்சிநாசினி ஊற்றப்பட வேண்டும்.
3. வேருக்கு உட்செலுத்தும் முறை - சிபார்சு செய்யப்பட்ட பூச்சி நாசினியை சிபார்சு செய்யப்பட்ட அளவில் பாவிக்க வேண்டும்.
4. பெரமோன் பொறியை பாவித்து கட்டுப்படுத்தல்.
5. பயிர்ச் சுகாதாரம் பேணப்பட வேண்டும்.


## வாழ்க்கை வட்டம்:-




நிறையுடலி வண்டு சிவப்பு சார் கபில நிறமாகவும் ஏறக்குறைய 36 மில்லிமீற்றர் நீளமுடையதாகவும் 10மில்லிமீற்றர் அகலம் கொண்டதாகவும் இருக்கும். தலைப்பகுதியில் காணப்படும் நீண்ட மூக்கினால் இனங்காணலாம். பெண் வண்டுகள் மரத்தில் உள்ள காயங்களில் உண்டாகும் திரவத்தின் வாசனையால் கவரப்படும். இத்துவாரங்களில் பெரும் எண்ணிக்கையான மிகச்சிறிய வெண்ணிற முட்டைகளை இடுகின்றன. முட்டைகள் 3-5 நாட்களில் குடம்பியாக வெளிவந்து மரத்தின் அடிப்பகுதி அல்லது அரும்புப் பகுதிகளின் நார் இழையங்களை உணவாக உட்கொள்ளும். இதனால் மரங்கள் தாக்கப்பட்டு இறக்கும். இக் குடம்பி 35 மில்லிலீற்றர் நீளமான கபிலநிற தலையையும் வெண்ணிற கால்கள் அற்ற உடம்பினையும் கொண்டது. இது 55 நாட்களின் பின்னர் அடிமரத்தின் மேற்பரப்பிற்கு அருகில் நார் போன்ற புழுக் கூட்டை உருவாக்கும். இது கூட்டுப் புழுவின் ஓய்வுப் பருவமாகும். இப்பருவம் 20 நாட்களாகும். இக்காலப்பகுதியில் முழுமையான உருமாற்றத்திற்கு உட்படுத்தப் படுகின்றது. நிறையுடலியானதும் துளையிட்டு வெளியேறுகின்றது. இவ்வாறு வெளியேறும் வண்டுகளில் ஆண்வண்டு ஒரு பெரமோன் சேர்க்கையை வெளிவிடும். இச் சேர்வை ஆண், பெண் வண்டுகளை கவர்ந்து மீண்டும் சேர்க்கை அடைந்து இனப் பெருக்கத்தை மேற்கொள்கின்றன. இவ்வாறு தனது இனத்தை பெருக்கி தென்னை மரத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. எனவே இவ் வண்டின் தாக்கத்திலிருந்து தென்னை மரங்களைப் பாதுகாக்க நாம் முறையான பயிர்ச்

சுகாதாரத்தை மேற்கொள்வதுடன் மரங்களை நன்கு அவதானித்தல் வேண்டும். வண்டின் தாக்கத்தை கண்டால் உடனடியாக மேற்குறிப்பிட்ட கட்டுப்பாட்டு முறைகளில் பொருத்தமான முறையைப் பயன்படுத்த இப்பீடையின் தாக்கத்திலிருந்து தென்னை மரங்களை பாதுகாத்துக் கொள்ளலாம்.

## 2. கருவண்டு



இது எர்க்டஸ் ரைனோசரஸ் என்று அழைக்கப்படும். இதையே நாம் கருவண்டு என்கின்றோம். இது தென்னை வளரும் எல்லா இடங்களிலும் காணப்படும் பிரதான பீடைகளில் ஒன்றாகும். இது பெரும்பாலும் இளம் பருவ தென்னங்கன்றுகளைத் தாக்குகின்றது. உரிய கவனிப்பு மேற்கொள்ளாவிடின் இறப்பையும் ஏற்படுத்தும்.

### சேதத்தின் தன்மை:-

நிறையுடலி வண்டுகளினால் அரும்பின் அடியிலிருக்கும் மென்மையான பகுதியை உணவாக உட்கொள்ளும். தொடர்ந்து உண்ணுவதால் பிரிக்கப்படாத சுருளான இலைகளும் அவற்றுக்கிடையான இலைக்காம்புகளையும் சேதத்தை உண்டுபண்ணும் இவ்வாறு பாதிப்படைந்த குருத்தோலை விரிவடையும் போது ஒரு வகையான கேத்திரகணித அமைப்பை காணக் கூடியதாக இருக்கும். இலைக்காம்பு பாதிப்படைந்தால் குருத்தோலை முறிவு ஏற்படும். இவ்வாறு அடிக்கடி ஏற்படுவதனால் வளர்ச்சி குறைந்த இலைகள் தோன்றுவதுடன் மரத்திற்கு இறப்பையும் ஏற்படுத்தும்.

### பீடைக்கட்டுப்படுத்தல் முறை:-

1. தென்னங்கன்று அடிக்கடி கண்காணிக்கப்படல் வேண்டும். அரும்பின் அடியில் துவாரங்கள் அல்லது பூச்சியின் கழிவுகள் என்பவற்றைக் கொண்டு நிறையுடலி வண்டு உள்ளே இருப்பதை அடையாளம் காணலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் கூரான உலோக கொழுவியைப் பயன்படுத்தி அகற்ற வேண்டும்.
2. உக்கலடையும் தென்னங்குற்றி எரித்தல் அல்லது ஆழமாக புதைத்தல்.
3. குடம்பிகள் வளரக் கூடிய காணி, தென்னந்தும்புச்சோற்றுக் குவியல் என்பவற்றை சரியான முறையில் முகாமை செய்தல்.
4. அரும்புப் பகுதியைச் சுற்றியுள்ள இலை அச்சுப்பகுதிக்கு நிலக்கரித் தார் அல்லது பாவித்த என்ஜின் எண்ணெய் பூசுதல்.
5. இலை அச்சுகளுக்குள்ளே நப்தலின் உருண்டை போடுதல்.
6. தாக்கம் அதிகமாக இருந்தால் துளைக்கப்பட்ட தொகுதியில் பூச்சிநாசினி பாவித்தல். இதை மண்ணுடன் கலந்து இலை அரும்புகளுக்கு இடையில் இடல்.
7. பயிர்ச் சுகாதாரம் பேணல் போன்ற முறைகளைப் பயன்படுத்தி கருவண்டின் தாக்கத்தை கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

வாழ்க்கை வட்டம்.

நிறையுடலி கருநிறமானது 30-40 மில்லிமீற்றர் நீளமான ஆண்வண்டின் தலைப்பகுதி கூரான கொம்பைக் கொண்டிருக்கும். பெண்வண்டு உக்கலடையும் தென்னங்குற்றி சேதனப்பசளை குவியல், உக்கிய சேதனப் பொருட்களின்மேல் சிறிய வெண்ணிற முட்டைகளை இடும். முட்டை பொரித்து வெளிவந்து சேதனப் பொருட்களை உட்கொண்டு வாழும் குடம்பி வெண்ணிறமானது. 3 சோடி கால்களையும் கபில நிறத் தலையையும் கொண்டிருக்கும் இக்குடம்பி 60 மில்லி மீற்றர் நீளமானது. இக்குடம்பிப் பருவமானது 3 மாதங்களாகும். இதன் இறுதிப் பகுதியில் மண் சேதனப் பொருட்களைப் பயன்படுத்தி கோளுருவான புழுக் கூட்டை அமைத்து அதனுள் 3-4 வாரங்கள் வரை வாழும். இதன்போது உருமாற்றங்கள் ஏற்படும். நிறையுடலியானதும் கூட்டிலிருந்து வெளியே வரும். இவ்வாறு வெளிவரும் நிறையுடலி வண்டானது இனப்பெருக்கத்தில் ஈடுபட்டு தனது இனத்தைப் பெருக்கி தென்னையின் குருத்துப் பகுதியை சேதப்படுத்துவதுடன் இறப்பையும் ஏற்படுத்தும். எனவே இவ்வண்டின் தாக்கத்திலிருந்து பாதுகாக்க முறையான பயிர்ச் சுகாதாரத்தையும் பாதிக்கப்பட்ட மரங்களை நன்கு அவதானித்து அதற்குரிய பரிகாரத்தை மேற்கொள்வதன் மூலம் தென்னை மரத்தின் குருத்துப்பகுதியில் ஏற்படும் பாதிப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

**திரு. ஐ. தெய்வேந்திரம்**
விவசாய பாட ஆசிரியர்
யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்

# Extra curricular activities in schools Educate better than classroom teaching

A model school gives the scope and the spirit of healthy competitions to excel at all levels. Our Thenmaradchy Education zone conducts a large number of Extracurricular activities , especially English language competitions annually as talent search. Class work and the home work given by teachers have their academic importance; in this also one who excels wins the praise and appreciation from the teachers. But academic distinctions alone do not fulfill all the purposes.

A school is the workshop of life-building in which the raw materials are the young students . The Principal, the teachers are molders of this raw material into the ideal mold. The students learn the same books and appear the same examinations. But, in our school some students are very far better than others. Because, some take part in the extracurricular activities and others don't. For the all-round development of a student, only the course books and class room activities are not enough. Extracurricular play very important role.

There are lot of English language games, quiz contests, spelling contests, dancing, drawing, writing poems, stories, essays , dramas , impromptu or prepared speeches, role plays solo acting , recitation etc. To educate means, to develop the inherent capacity of the students. We should give them changes to take part in the activities of their interest. Everyone likes to win and show oneself superior to others. So even if a student is weak at theoretical study, he/she can be brilliant at other extracurricular activities. There are boys and girls who have talent of oration. They have such amount of self confidence that they can face spectators and audience. Contests and debate offer them the chance to exhibit this talent , such school activities should be held regularly in the schools which would further help them to become good debaters.

Cultural shows, dynamic performance, mono-acting are events which schools generally hold and it is so necessary for schools to hold them. That is also a part of total education. Taking part in such events gives children a sense of self-confidence and embellishes their accomplishments which they possess or can even develop. Any activity which helps in the development of the total personality of young boy or girl is a part of education There can be students whose natural bent of mind is towards creative art and the art room is his field where he needs to be given the chance to exhibit his potential. One cannot and does not know how much talent in what direction lies in a child's brain. This can only come out when he or she is given that opportunity. The school has to provide such chances an explore out the pearls from the sea depth of the young mind. A variety of competitions in different levels of students need to be arranged and the

excellence on that to be rewarded and encouraged. Parents and students do not understand the importance of extracurricular activities . Over the years I have had to persuade a number of parents to allow their children to continue participating in the English day competitions , because they felt that these activities distracted their offspring from their academic work. This scenario tended to unfold either when a student was struggling academically or when the student wanted to focus totally on academics, to the exclusion of everything else. They felt that extra-curricular involvement was a waste of precious time and that it caused their children to get home too late in the evening.

Nothing could be further from the truth than this notion of wasting time. Academic subjects and extra-curricular activities complement each other and develop a well-rounded, socially skilled, and healthier student. There are so many possible extra-curricular activities that each student can choose one that appeals to him or her personally. Activities , not only based on English language but also range from athletics, various sports, scouts, girl guides, debating, music and chess to paramilitary groups like the cadets. This list is not even exhaustive. Some students choose more than one pursuit.

Extra-curricular activities help to develop the whole student. We cannot just produce one-dimensional students in our schools. Many students use their skills in extra-curricular activities like athletics or sports and their academic ability to gain athletic or sports scholarships to various universities. Numerous students from this school are granted opportunity to follow higher studies . Students who are involved in extra-curricular pursuits tend to improve their academic grades as well. This may be due to increased self-esteem, motivation and better time management. They become better organized in the classroom. They demonstrate a reduction of at-risk behavior and a heightened sense of belonging, resulting in better behavior.

They learn useful new skills from their chosen activity, and in integrating these activities into their everyday school lives, they learn time management, critical thinking, teamwork and social skills. They develop life-long relationships with their peers and learn how to lead others. These skills will be beneficial in later life and in the workplace. Extra-curricular activities also foster a sense of commitment to a cause or purpose and they reduce selfish behavior. Students become more marketable in the workplace. Through the avenue of extra-curricular activities students find it much easier to gain admission into universities. Modern universities are more interested in recruiting students who have something to offer besides academic qualifications. They seek out students who can make a contribution in other areas to the university and the society at large. Many universities and some schools make money and gain prestige through their extra-curricular engagement in various arenas. Hopefully, more parents and students will see the importance of extra-curricular activities and diversify and deepen their interests and

hobbies. The whole society will benefit "All play and no work makes Jack a dull boy" Somehow, this proverb has been sent for a toss in these super competitive times. Children these days are not interested in extra-curricular activities offered by the school. The parents(that's what the source says)/ students are bothered about the subjects that appear on their final scorecard. Today's kids are told to "Play less and study more!" Kids today are forced to get very high marks and high cut offs in most of the colleges and universities in our country Sri Lanka , For competitive exams children go through a hell of a time, leaving them no time for anything other than studies. The curriculum and syllabus framed is so vast that children don't find the time to pursue their hobbies seriously, however the parents also have forgotten the fact that activities such as sports taken up at school help in the overall physical and mental development of a child. Nowadays, we see young lads complaining of ill health , because of the lack of physical activity/ exercise involved in their daily life. Similarly, other activities like various English language activities, dance, music, art helps in the overall development of a child's personality. The parents should understand that each activity/ course offered by the school is for a reason collectively aiming for the child's growth. As per the experts study, if a child is cramming into the books throughout the day with no other activity, the concentration level is bound to decline. Therefore, there should be mix of both studies and the other activities in a student's daily life cycle. Having said this, it is imperative that the parents encourage their children to participate in the extra- curricular activities at school. The students should try out different tasks as the current scenario is such that there are a number of opportunities in every sector and sky is the limit toper form.

There is some special talent in everyone, if you start taking chances, grab opportunities and try out everything you can do. You will definitely identify your forte' and find your niche'. We must let our children take part in many extra curricular activities so that they discover and learn about their talents. Their strengths, weaknesses and aptitude can be clearly identified. They will then discover a new side to themselves, previously unknown! It can lead to unconventional, but very rewarding career choices. It can even change their lives forever, for they discover what they are capable of achieving. People who are good at many things are preferred over people who can only do one thing correctly! When children are encouraged in extra curricular activities, they acquire many skills, which fosters their all round development. They grow holistically. If you are skillful in many things, it makes you more reliable. You also become independent. You become multi-faceted and versatile, and you will become skillful , talented and a world wide great personality ..

**MR.S.BAKEERATHAN**

**TEACHER IN –CHARGE**

**ENGLISH LANGUAGE**

# SCHOOL STAFF



**MR.S.BAKEERATHAN**
SLTS - 2 I
Dip in Teaching (English)



**MR.G. INPAGARAN**
SLTS - 2 II
Science special Trd.



**MR.S.SIVANANTHAM**
SLTS - 2 I
B.A (Gentral)



**MR.S KUGATHASAN**
SLTS - 2 II
B.com. ( Commerce )



**MR. P. RAJENDRA**
SLTS - 1
Technical Skill & Construction



**MR. I. THEIVENDRAN**
SLTS - 2 I
Argriculture Trd.



**MR.S.R. RANJITHARAJ**
SLTS - 2 II
BTh. (Christianity)



**MR.S. NANTHAKUMAR**
SLTS - 2 I
Dip.TESL (English)



**MRS.N.SIVANESAN**
SLTS - I
B.A ( Tamil )



**MS.K. SIVAPACKIYAM**
SLTS I
Home science Trd.



**MRS.U. BALASUNDRAM**
SLTS I
Maths Trd.



**MRS.M.SASIKUMAR**
SLTS 2 - II
Na.Dip in Teach (Primary)

# SCHOOL STAFF



**MRS.R.BASKARAN**
SLTS - 2 I
Primary Trd



**MRS. N. RAJAKULENDRAN**
SLTS - 1
Primary Trd



**MRS.G.CHANDRAKUMAR**
SLTS - 2 I
B.A. ( Tamil )



**MRS.J.MUKILVANNAN**
SLTS - 2 I
B.A. (Music)



**MRS.T.PERINPAN**
SLTS - 2 II
Na.Dip.in Teach (Social Science)



**MRS.S.SUTHARSAN**
SLTS - 3 I
Primary Trd



**MRS Y.SIVAPATHASAKTHY**
SLTS - 1
Music Diploma



**MRS. A.D. PRINCE**
SLTS - 2 II
BFA (Bharatham)



**MRS.S.PAVALAKUMARAN**
SLTS - 1
Science Trd



**MRS.S.SIVATHASAN**
SLTS - 2 I
Na. Dip.in Teach (Primary)



**MRS. R.CHANARASEGARAM**
SLTS - 1
Primary Trd



**MRS.T. ARAVINTHAN**
SLTS - 3 I
Dip in Teaching (ICT)

# SCHOOL STAFF



**MRS.N. RATHEES**
SLTS - 2 I
Na.Dip in Teach (Primary)



**MRS.S.SIVATHASAN**
SLTS - 2 I
B.A (TAMIL)



**MR. J.S. DINESHKUMAR**
OES I



**MR. T. NIRMALAN**
OES III



**MR. R. SIVANESAN**
OES III ( Watcher )

## 2018இல் ஆசிரியர் அணியில் இணைந்து கொண்டவர்கள்



# சிறுவர் துஸ்பிரயோகமும் சிறுவர் பாதுகாப்பும்

உலகம் முழுவதும் பிள்ளைகளைப் பேரன்புடன் அரவணைக்கின்றது. அவர்களின் சிரிப்பினால் உலகம் ஒளி பெறுகின்றது. பிள்ளைகளுக்குகந்த சிறந்த இடமாக உலகை மாற்றுவது பெற்றோரினதும், பாடசாலையினதும், சமூகத்தினதும் முக்கிய பொறுப்பாகும். எந்தவொரு பிள்ளையும் தமது இளம் பராயத்தில் துஷ்பிரயோகத்திற்கும் அச்சுறுத்தலுக்கும் புறக்கணிப்பிற்கும் உட்படுத்தப்படக்கூடாது. நாள்தோறும் பிள்ளைகள் துஷ்பிரயோகம், புறக்கணிப்பு, வன்முறை என்பவற்றுக்கு இலக்காக்கப்படுகின்றனர். குறிப்பாக சிறுவர் பாலியல் துஷ்பிரயோகமானது சமூகத்தின் சகல மட்டங்களிலும் இடம்பெறுகின்ற பாரிய பிரச்சினையாக மாறி வருகின்றது.

சமூகம் இப்பிரச்சினை தொடர்பில் ஏற்படக் கூடிய அபாயங்கள் குறித்து சிறுவர் அறிவூட்டப்படாத எச்சரிக்கை செய்யப்படாத அவலநிலை இன்றுவரை தொடர்கிறது. சிறுவர் துஷ்பிரயோகங்கள் தகுந்த இடத்திற்கு முறைப்பாடு செய்யப்படாததோடு பாதிக்கப்பட்ட சிறுவர்கள் கவனிப்பையும் அரவணைப்பையும் பெற்றுக் கொள்ளாமை மீண்டும் பாதாளத்துக்குள் தள்ளப்படுவதற்கே வழிவகுக்கின்றது. பெற்றோர் மற்றும் பாதுகாவலர் என்ற வகையில் பிள்ளைகள் ஏதேனும் துஷ்பிரயோகத்திற்கு இலக்காக்கப்பட்டிருப்பின் அவர்களுக்கு நம்பிக்கையளித்து மீட்டெடுப்பதற்குரிய தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

சிறுவர் துஷ்பிரயோகமானது குழப்பமான மனநிலை மற்றும் சமூக காரணிகளின் விளைவாகவே இடம்பெறுகின்றது. பிள்ளைகளின் நலனில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துவதனால் பிள்ளையின் வாழ்க்கையை மீளமைக்க முடியாது சிதைந்து போகின்றது. பிள்ளையானது அதிர்ச்சிக்குள்ளாதல், அச்சமடைதல், தன்னம்பிக்கையை இழத்தல், உடல் உள ரீதியான தாக்கம்,கல்வி நடவடிக்கைகளில் பின்னடைவு, உணவினை உட்கொள்ள முடியாமலிருத்தல் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆளாகின்றது..

**சிறுவர் துஷ்பிரயோகத்தின் வகைகள்**

1. உடல் ரீதியான துஷ்பிரயோகம்
2. பாலியல் ரீதியான துஷ்பிரயோகம்
3. உணர்ச்சி ரீதியான துஷ்பிரயோகம்
4. புறக்கணிப்பு
5. துன்புறுத்தல்.

உடல்ரீதியான துஷ்பிரயோகம் எனப்படுவது பிள்ளையொன்றுக்கு ஊறுவிளைவிக்கக்கூடிய வகையில் ஒருவரால் ஏற்படுத்தப்படும் உடல் ரீதியான ஒரு செயற்பாடாகும். அடித்தல், உதைத்தல், துன்புறுத்தல், கசையடி வழங்குதல்

போன்ற செயற்பாடுகள் இதற்குள் உள்ளடங்குகின்றன. கடுமையான தண்டனைகளுக்கு முகங் கொடுத்த பிள்ளைகள் அவர்கள் வளரும் போது வன்முறையாளர்களாக மாறுவதற்கு அதிக வாய்ப்புள்ளதாக தெரிய வந்துள்ளது. ஆசிரியர்கள், மற்றும் பெற்றோர்கள் சிறுவர்களுக்கு உடல் ரீதியான தண்டனை வழங்காது அதற்கு பதிலான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

பாலியல் துஷ்பிரயோகம் என்பது எவரேனுமொருவர் அதிகாரத்தின் மூலமாகவோ அல்லது பலத்தை பிரயோகிப்பதன் மூலமாகவோ ஒரு பிள்ளையை பாலியல் ரீதியான நடத்தையில் ஈடுபடுத்துவதாகும். பாலியல் காட்சிகள் உள்ளடங்கிய திரைப்படக் காட்சிகளை காட்சிப்படுத்தல் வார்த்தை ரீதியான பாலியல் நடத்தைகள் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

உணர்வு ரீதியான துஷ்பிரயோகம் என்பது சிறுவர்களின் வளர்ச்சியில் மற்றும் ஆளுமையில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகளாகும். புறக்கணித்தல், அச்சுறுத்தல், அவமானப்படுத்தல், இழிவுபடுத்தல் இதற்குள் அடங்கும். பிள்ளையொன்றினால் அல்லது பிள்ளைகளை உள்ளடக்கிய குழுவினால் வேண்டுமென்றே ஒரு பிள்ளையை இழிவுபடுத்தல் இதனால் பிள்ளை மன அழுத்தத்துக்கு உள்ளாகின்றது. பாடசாலைச் சூழலில் இதனைப் பெரும்பாலும் காணமுடியும். சிறுவர் பாதுகாப்பு என்பது சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் போன்றவற்றை தடுத்தல், சிறுவர்களுக்கு பாதுகாப்பானதும் அன்பு, பாசம் மிகுந்த சூழலை கட்டியெழுப்புதலுக்கான முதல் அத்திபாரம் குடும்பம் மற்றும் பாடசாலை சமூகமாகும்.

**குடும்பத்தின் மூலமான சிறுவர் பாதுகாப்பு**

- பிள்ளைகளுடன் மனம் விட்டுக் கதைத்தல்.
  இயந்திரமான வாழ்க்கைப் போக்கில் பிள்ளைகளுடன் மனம் விட்டு கதைப்பதற்கும், ஒன்றாக இருப்பதற்கும் நேரத்தை ஒதுக்கிக் கொள்ள வேண்டும். மனம் விட்டு கதைப்பதனால் அவர்களின் மனதில் எழும் சந்தேகங்களையும் கேள்விகளையும் மனம் திறந்து நேரடியாக வெளிப்படுத்த முடியும்.

- ஆபத்தானவர்கள் யாரென கற்றுக் கொடுத்தல்.
  ஆபத்தானவர்கள் எப்பொழுதும் அச்சமூட்டும் தோற்றம், மற்றும் வித்தியாசமான உடை, பாவனை உடையவர்களாக இருக்கவேண்டுமென்றில்லை. சில வேளைகளில் நெருங்கியவர்களாகவும், விரும்பத்தக்கவர்களாகவும் இருக்கலாம் என்பதையும் கற்றுக் கொடுத்தல்.

- பிள்ளைகளுக்கு சுயபாதுகாப்பை கற்றுக் கொடுத்தல்.
  பிள்ளைகள் தனித்திருக்கும் போது அவர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளக்கூடிய வழிமுறைகளை பிள்ளைகளுடன் கலந்துரையாட வேண்டும்.

- பிள்ளைகள் அவர்களுடைய பெயர், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் மற்றும் தொலைபேசி பயன்படுத்தும் முறையினை அறிந்திருக்க வேண்டும்.
- பெற்றோர்களிடம் அனுமதி பெறாமல் எந்தவொரு நபருடனும் எந்தவொரு இடத்திற்கும் செல்லக்கூடாது என்பதனை பிள்ளைகளுக்கு அறிவூட்டல்.
- விரும்பத்தகாத மனதுக்குத் தொல்லை தரக்கூடிய எந்தவொரு சம்பவம் நிகழ்ந்த போதிலும் அவற்றை பெற்றோருக்கு வெளிப்படுத்துமாறு அறிவூட்டல்.
- தெரியாத நபர்கள் கொடுக்கின்ற இனிப்பு மற்றும் பரிசுப்பொருட்களை ஒருபோதும் வாங்கக்கூடாது என அறிவுறுத்தல்.
- எந்த சந்தர்ப்பத்திலும் வாகனம் ஒன்றில் தனியாக செல்ல வேண்டாமெனவும் பெற்றோரின் அனுமதியின்றி அவர்களுடன் செல்லக்கூடாது எனவும் அறிவுறுத்தல்.

**பாடசாலையில் பிள்ளைகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தல்.**

- பிள்ளைகள் வழக்கமான நேரம் முடிவதற்கு முன்னர் ஒருபோதும் பாடசாலை வளாகத்தை விட்டு வெளியேறக்கூடாது என பிள்ளைகளுக்கு அறிவூட்டல்.
- பாடசாலையின் அருகில் பொருட்கள் விற்பனை செய்பவர்களிடம் அவதானிப்பாகவும், எச்சரிக்கையாகவும் இருப்பதற்கு அறிவூட்டல்.
- பிள்ளையொன்று தனியாக இருக்கும் சந்தர்ப்பங்களிலேயே பெரும்பாலும் ஆபத்திற்குள்ளாகின்றது. எனவே நண்பர்களுடன் இருக்குமாறு அறிவுறுத்தல்.
- பாடசாலை வாகனங்களில், துவிச்சக்கரவண்டிகளில் செல்பவர்களாயின் சாரதி நம்பிக்கைக்குரியவராகவும், ஒழுக்கமானவராகவும் இருக்கின்றார் என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

**இணையப் பாவனையின் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை**

- பிள்ளைகள் கணினியை பயன்படுத்தும் போது பெற்றோர்களுக்கு தெரியக்கூடிய வகையில் வீட்டின் பொதுவான ஓரிடத்தில் கணினியை வைத்தல்.
- அறிவினை வளர்ப்பதற்கும் தகவல்களை பெறுவதற்கும் அரிய சாதனமாக உள்ளபோதிலும் எதிர்பாராத விதமாக சில பிரச்சினைகளில் சிக்கவைக்கக்கூடிய பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாகவும் இருப்பதாக அறிவுறுத்தல்.
- சமூக வலைத்தளங்களில் பிள்ளைகள் தமது பெயர், வீட்டுமுகவரி, பாடசாலையின் பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படங்களை ஒருபோதும் பகிர்ந்துகொள்ளக் கூடாது என அறிவுறுத்தல்.
- வலைத்தளங்கள் மற்றும் இணையம் மூலமாக அறிமுகமற்றவர்கள் அனுப்புகின்ற நட்பு ரீதியான அழைப்புக்களை ஏற்றுக் கொள்ளக்கூடாது என அவர்களுக்கு தெளிவுபடுத்தல்.
- இணையத்தில் தங்கள் தகவல்களை பகிர்ந்து கொள்ளும் நபர்கள் உண்மையான தகவல்களை பகிர்ந்து கொள்கின்றார்கள் என நம்பி ஏமாறக்கூடாது எனக்கூறுதல்.

**துஷ்பிரயோகத்துக்கு இலக்கான பிள்ளைகளில் தென்படக்கூடிய அறிகுறிகள் சில.**

- ♦ சோர்வான உருவம்
- ♦ தூக்கமின்மை, பயங்கரமான கனவுகளின் வெளிப்பாடு.
- ♦ பிறரை நம்பாமை மற்றும் அன்பு செலுத்தாமை.
- ♦ மன அழுத்தத்திற்கு உள்ளான நிலை.
- ♦ தன்னைத்தானே காயப்படுத்திக் கொள்ளல், தற்கொலை செய்தல் போன்ற நடத்தைகளை வெளிக்காட்டல்.
- ♦ பாடசாலைக்கு செல்வதை புறக்கணித்தல்.
- ♦ வீட்டுக்கு செல்ல அஞ்சுதல்.
- ♦ நடத்தை ரீதியான பிரச்சினைகள்.
- ♦ போதைப் பொருள் மற்றும் மதுபான பாவனை

**சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறின்.........**

- ♦ துஷ்பிரயோகத்தை தகுந்த நிறுவனத்திற்கு அல்லது உத்தியோகத்தருக்கு அறிவித்தல் வேண்டும்.
- ♦ பாதிக்கப்பட்ட பிள்ளையை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தல் வேண்டும்.
- ♦ பாதிக்கப்பட்ட பிள்ளையின் உளரீதியான மதிப்பீட்டை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**சிறுவர் துஷ்பிரயோகம் எனின் உதவி நாடக்கூடிய இடங்கள்**

- ♦ தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை.
- ♦ 1929 இலங்கை சிறுவர் தொலைபேசி சேவை
- ♦ சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சு
- ♦ சிறுவர் செயலகம் - 5 வயதுக்கு குறைவான பிள்ளைகளின் நலன் மற்றும் முன்பள்ளி மாணவர்களின் பிரச்சினை தொடர்பாக செயற்படும் நிறுவனம்.
- ♦ நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவை திணைக்களம் - ஆதரவற்ற கைவிடப்பட்ட துஷ்பிரயோகத்திற்கு இலக்கான மற்றும் பாதுகாப்பற்ற பிள்ளைகளின் நலனுக்காக செயற்படும் அரச நிறுவனம்.

சிறுவர்களை துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாத்து இன்றைய சிறார்களை நாளைய பெரும் தலைவர்களாக மாற்றுவோம்.

**திருமதி. தேவிகா பேரின்பன்**
ஆசிரியர் ( சமூக விஞ்ஞானம் )
யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்

# இலங்கையின் ஆரம்பக் கல்வி - புதிய போக்கு

வளர்முக நாடுகளின் கல்வியின் பாரம்பரியம் தொடர்ச்சியாக மாற்றம் பெற்று வருகின்றது. இலங்கை போன்ற நாடுகள் கல்வியில் ஏற்படுத்தப்படும் மாற்றம் நாட்டின் சகல உற்பத்தித் துறைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் என நம்பியுள்ளனர். தொடர்ச்சியாக மாறிவரும் கல்வியின் புதிய சிந்தனைகளும் போக்குகளும் நாட்டின் அனைத்து நடவடிக்கைகளையும் வினைத்திறனுடையதாக்குவதுடன் ஒரு புதிய பரிமாணத்தையும் ஏற்படுத்தி வருகின்றது. கல்வியியலாளர்களால் மேற்கொள்ளப்படும் கல்வி ஆய்வுகள் மூலம் பெறப்படும் தரவுகள் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மாற்றம் குறித்த செய்திகளும் சிந்தனைகளும் வலுப்பெற்றுள்ளன.

அண்மைக் காலங்களில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஆய்வு ஒரு முக்கிய கருவியாகவும் திருப்புமுனையை (Turning point) ஏற்படுத்தும் ஒன்றாக இருந்து வருகின்றது. இலங்கையின் கல்விக் கொள்கைகள், சீர்திருத்தங்கள் தொடர்ச்சியாக ஏற்படுவதுடன் குறிப்பாக ஆரம்பக்கல்வி ஒரு முக்கிய செயற்படுமையமாக கருதப்படுகின்றது. முன்பிள்ளைப் பருவத்தின் பெரும் பகுதியையும் பிள்ளைப் பருவத்தின் சிறு பகுதியையும் கொண்டுள்ள ஆரம்பக்கல்வியானது மாற்றம் ஒன்றின் அடிப்படைத் தளமாக இருக்கின்றது. பிள்ளை கருவுற்ற காலம் முதல் கற்றுக் கொள்ள ஆரம்பித்துவிட்டது. பிறப்பு முதல் பிள்ளையின் கல்வியில் தாய், தந்தையர்,உற்றார் என வீட்டுச் சூழலில் உள்ளோரும் முன்பள்ளி பருவத்தில் முன்பள்ளி ஆசிரியர்களும் பிள்ளைகளின் கற்றலில் பயனுள்ள தலையீட்டினை (Effective Intervention) மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையின் கல்வி தொடர்பான திட்டமிடலிலும் வடிவமைப்பிலும் பிரதான பங்குதாரராகவும் வகைகூறுநர்களாகவும் இருக்கும் தேசிய கல்வி நிறுவகத்தின் முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறையானது தேசிய கல்விக் கொள்கைகளுக்கமைவாக ஆரம்பக்கல்விக்கான கல்வி மறு சீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

## 2016 ஆம் ஆண்டு முதல் ஆரம்பக்கல்வியில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றம்

1998 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீர்திருத்தம் பரீட்சார்த்தமாக கம்பஹா மாவட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டு அதன் மூலம் பெறப்பட்ட

3. அடுத்த முதன்மை நிலை ஒன்றிற்கு ஆசிரியர் மாற்றம் பெறும்போது புதிய மாணவர்களின் புதிய முகங்கள் கற்பித்தலுக்கான உற்சாகத்தை ஆசிரியருக்கு வழங்கும்
4. ஆசிரியர்கள் முதன்மை நிலைகள் தொடர்பான பாண்டித்தியத்தைப் பெறும்போது அவரது கற்பித்தல் ஆற்றல் உயர்நிலைப்படுத்தப்படும்.
5. புதியதொரு முதன்மைநிலைக்கு ஆசிரியர் மாற்றம் பெறும்போது அவர் புதிய அனுபவத்தையும் புதிய ஆற்றலையும் பெற்றவர் ஆவார்.
6. சில சந்தர்ப்பங்களில் மாணவன் விரும்பாத ஆசிரியராக ஏதாவதொரு முதன்மை நிலையில் உள்ள ஆசிரியர் இருப்பாராயின் மாணவன் அடுத்த முதன்மை நிலைக்கு மாற்றம் பெறும்போது அம் மாணவரின் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படும்.

### 3. பாடசாலைக் கல்விக்கு மகிழ்ச்சிகரமான ஆரம்பம்

'பிள்ளையை அறிவோம்' செயற்பாடாக இருந்த முன்னைய கலைத்திட்டம் 2016 இன் பின்னர் "பாடசாலைக் கல்விக்கு மகிழ்ச்சிகரமான ஆரம்பம்" எனும் பெயரில் உருவாக்கம் பெற்றுள்ளது.

பாடசாலை ஒன்றினுள் தரம் 1 இல் பிரவேசிக்கும் பிள்ளை பாடசாலைச் சூழலில் மகிழ்ச்சிகரமாக கற்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். வீட்டுச் சூழலில் இருந்து புதிய சூழல் ஒன்றிற்கு வரும் மாணவர்கள் அந்த சூழலுக்கு தம்மை இயைபாக்கிக் கொள்வதற்கு பொருத்தமானதாக பாடசாலைச் சூழல் அமைந்திருக்க வேண்டும் எனும் சிந்தனையில், பாடசாலைக்கு வருகின்ற புதிய மாணவர்களைப் போசிப்பதற்கு அந்தப் பாடசாலையானது எந்தளவிற்கு தயாராக இருக்கின்றது எனும் அடிப்படையில் பாடசாலைத் தயார்நிலைகள் தொடர்பாக இம் மறுசீரமைப்பு மாற்றம் கொண்டுள்ளது. அந்தவகையில்

1. பாடசாலை எந்தளவிற்கு தயாராக உள்ளது?
2. ஆசிரியர் எந்தளவிற்கு தயாராக உள்ளார்?
3. பிள்ளை எந்தளவிற்கு தயாராகவுள்ளது?
4. பெற்றோர் எந்தளவிற்கு தயாராக உள்ளனர்?

போன்ற விடயங்கள்கருத்திற் கொள்ளப்பட்டன. இது விடயம் தொடர்பாக தகவல்களைப் பதிவுசெய்துகொள்வதற்கென வடிவமைக்கப்பட்ட பல்வேறு படிவங்களும் பூரணப்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் பாடசாலைச் சூழலுக்குள் வந்தபிள்ளை என்னென்ன விடயங்களைக் கற்றுக் கொண்டு வந்துள்ளது. எந்தளவிற்கு தெரிந்துகொண்டுள்ளது என்பதை ஆசிரியர் அறிந்து கொள்வதற்கும் தொடர்ச்சியான

கற்பித்தல் முறைகளைத் திட்டமிடுவதற்கும் பிள்ளையினை அறியும் செயற்பாடு அறிமுகம்செய்யப்பட்டது. அது புதிய வடிவமைப்பில் பின்வருமாறு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

1. அளவீட்டுக்கான பிரதான துறைகள் - 7
2. பிரதான செயற்பாடுகள் - 16
3. துணைச் செயற்பாடுகள் - 69

இச் செயற்பாடுகளை நிறைவு செய்வதற்காகவும் பதிவிடுவதற்காகவும் பாடசாலை ஆரம்பம் முதல் 15 நாட்கள் ஒதுக்கப்பட்டதுடன் உரிய செயற்பாட்டிற்கான பாண்டித்தியம் குறித்து பதிவு செய்வதற்கான குறிகாட்டியும் வழங்கப்பட்டுள்ளது. குறித்த அக் காலப்பகுதியில் மாணவர்கள் வீட்டில் அணியும் உடையுடன் பாடசாலைக்கு வருவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் நாடு பூராகவும் கால்கோள் விழாவொன்றினை குறித்தொதுக்கப்பட்ட தினமொன்றில் ஒழுங்கு செய்து தரம் இரண்டு மாணவர்களால் தரம் ஒன்று மாணவர்கள் வரவேற்கப்படுவர். அன்றைய தினம் பாடசாலைகளின் தனித்துவமான கலாசாரத்திற்கேற்ப நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுவதுடன் வருகை தந்துள்ள பெற்றோர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் முகமாக கல்வி மறுசீரமைப்பு குறித்த சிறப்புரை ஒன்றினை ஆசிரியர் ஒருவர் முன்வைக்கப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. அன்றையதினம் முதல் புதிய மாணவர்கள் பாடசாலைச் சீருடையுடன் பாடசாலைக்கு பிரசன்னமாவர்.

## 4. பாடத்திட்டத்தில் ஏற்பட்டிருக்கும் உள்ளடக்க மாற்றம்

பாடத்திட்டம் பல உள்ளடக்க மாற்றத்தினைக் கொண்டுள்ளது. வரலாறு காணாத வகையில் ஆசிரியர்களை அது இலகுபடுத்தியுள்ளது. ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாட்டினை இலகுபடுத்துவதுடன் தேர்ச்சிகளுக்கும் உள்ளடக்கத்திற்கும் பொருந்தும் வகையிலான கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகளையும் கொண்டிருக்கின்றது.

• வழமையாக தேர்ச்சி தொடர்பான விளக்கத்தினையே முன்னைய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி கொண்டிருந்தது. ஆனால் புதிய ஆசிரியர் வழிகாட்டி திட்டமிடப்பட்ட வகையிலான கற்பித்தல் செயற்பாடுகள் அதற்குப் பொருத்தமான கணிப்பீட்டு முறைகள், அதனூடாக மாணவர்கள் அடைந்திருக்கவேண்டிய கற்றல் தேர்ச்சிகள் என்பனவற்றை தெளிவாக வரையறுத்துக் கூறுகின்றது.

• இவ் ஆசிரியர் வழிகாட்டியானது ஒன்றுக்கு மேற்பட்ட பல செயற்பாடுகளையும் பொருத்தமான கற்பித்தல் முறைகளையும் தேர்ச்சிக்குப் பொருத்தமான உதாரணங்களையும் மிகத் திருத்தமாகக் காட்டியுள்ளது.

• தரம் 3 இற்கான பாடத்திட்டமும் ஆசிரியர் வழிகாட்டியும் வர்ணப்படங்களை இணைத்து வழங்கப்பட்டிருப்பது ஆசிரியர்களை அதிகம் கவர்ந்ததுடன் உரிய தேர்ச்சிகள் பாடநூலில் வழங்கப்பட்டுள்ள விடயங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

• ஆசிரியர் வழிகாட்டியின்றி எந்தவொரு ஆசிரியரும் கற்பித்தலில் ஈடுபடமுடியாதவாறு மிகக்காத்திரமான செயற்பாட்டுப் படிமுறைகளைக் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது.

• முற்றிலும் மாறுபட்ட வகையில் செயற்பாடுகள் சார்ந்த கற்பித்தல் அணுகுமுறைகளுக்கு முன்னுரிமையளித்துள்ளது. மாணவர்கள் இயங்குவதனூடாகவே கற்றல் அனுபவத்தைப் பெற வழி செய்துள்ளது.

• கணித பாடத்தில் தரம் 3 இல் உள்ள சில விடயங்கள் தரம் 2 இற்கு மாற்றப்பட்டுள்ளதுடன் தரம் 3 உரிய நிலைக்கேற்ற விடயங்கள் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

• சுற்றாடல் சார் செயற்பாடுகள் இலங்கையின் பல்லின, பல்மத வசதிகளைக் கருதிக்கொண்டு பண்டிகைகள் தேசிய தினங்கள் தொடர்பான விடயங்கள் அந்தந்தக் காலத்திற்கேற்றவாறு இடமாற்றப்பட்டுள்ளது.

• ஆசிரியர் வழிகாட்டியில் ஒவ்வொரு தரத்திலும் தவணை ரீதியாக கற்பிக்கப்படவேண்டிய தேர்ச்சிகள், பாட உள்ளடக்கங்கள் ஆசிரியரின் சுயதேடல்களுக்கு இடமளிக்காது அவை படிமுறையாக ஒழுங்குபடுத்தி வழிப்படுத்தப்பட்டுள்ளது.

1. தமிழ்மொழிப் பாடமானது :

திறன்கள், தேர்ச்சிகள், விடய உள்ளடக்கம், கற்றல் பேறுகள், வளங்கள், கற்பித்தல் அணுகுமுறைகள் என்றவாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

2. சுற்றாடல் சார் செயற்பாடுகள்:

கருப்பொருள், தேர்ச்சிகள், கற்றல் பேறுகள், கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் என்றவாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

3. கணித பாடமானது:

தேர்ச்சி, கற்றல் பேறுகள், சொற்களஞ்சியம், கற்றல் வளங்கள், கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் என்றவாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது

5. அத்தியாவசியக் கற்றத் தேர்ச்சியில் ஏற்படும் மாற்றம்

வழமையான அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் ஒவ்வொரு முதன்மை நிலைகளுக்கும் உரிய தேர்ச்சிகளைக் மாத்திரமே குறிப்பிட்டு வழங்கப்பட்டிருந்தது. இதனால் அந்தந்த தேர்ச்சிகளை அடைவதை உறுதிப்படுத்துவதற்கு ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டு அணுகுமுறைகளே கையாளப்பட்டுள்ளன. இது ஆசிரியர்களுக்கு ஆசிரியர் வேறுபடுவதுடன் அளவீட்டைப் பொதுமைப்படுத்துவது தேர்ச்சி பற்றிய உறுதியை மதிப்பிடுவதற்கும் சாத்தியக் குறைவான வழுவினைக் கொண்டதாக இருந்தது. ஆனால் புதிய அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சியானது பின்வருமாறு ஆசிரியர் கையாளுவதற்கு ஏற்றவாறு வடிவமைக்கப் பட்டுள்ளது.

1. தேர்ச்சி,
2. எதிர்பார்க்கப்படும்வரையறை
3. கணிப்பீட்டினை நடாத்தத் தொடங்குவதற்கு பொருத்தமான காலம்
4. முன்னாயத்தம்
5. செயலொழுங்கு
6. பாண்டித்தியத்தை தீர்மானிப்பதற்கான நியமங்கள்
7. எதிர்பார்த்த பாண்டித்தியத்தை அடையாத மாணவர்களுக்கான வழிகாட்டல் ஆகிய விடயங்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டிருப்பது ஆசிரியர்கள் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சி தொடர்பான பாண்டித்தியத்தை உறுதிப்படுத்துவதற்கு வசதியளிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சி எண்ணிக்கையில் உள்ள மாற்றம்.

1. முதன்மை நிலை I - 40 - 48
2. முதன்மை நிலை II - 52 - 50
3. முதன்மை நிலை III - 55 - வெளியிடவில்லை
6. வாய்மொழி ஆங்கிலம்

ஆரம்பக் கல்வியில் வாய்மொழி ஆங்கிலமானது தரம் ஒன்றுமுதல் 5 வரை சுற்றாடல் சார் செயற்பாட்டுடன் இணைக்கப்பட்டதாக இருந்தது. தரம் 1,2 வாய்மொழி ஆங்கிலத்தை மட்டும் கொண்டதாகவும் தரம் 3 முதல் 5 வரை வாய்மொழி ஆங்கிலத்துடன் பாடலையும் கொண்டதாகவும் இருந்தது. தற்போது தரம் 1,2 இற்கு விசேடமாக பின்வருமாறு ஆங்கிலம் மாற்றப்பட்டுள்ளது.

**'Let's Listen & Learn' series**

1. Birds
2. Veggie Friends
3. Fruits
4. My Family
5. Sinhala & Tamil New Year Festival
6. Let's Go Out
7. Our Environment
8. Animal Friends
9. Rabbits
10. Songs for Grade 1
11. Songs for Grade 2
12. ABOE Activity Book Grade 1
13. ABOE Activity Book Grade 2

இவ்விதம் உள்ளவாறான புத்தகங்களையும் பாடல்களையும் மாணவர்கள் கற்றுக் கொள்ள முடியும். இவ்வாறு மாற்றம் பெற்றுள்ள ஆரம்பக்கல்வி கலைத்திட்ட மறுசீரமைப்பு மாணவர்களை ஆற்றல் மிக்க, ஆளுமை மிக்க நற்பிரஜை ஆக்கும் பணியினை நோக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை முன்னெடுப்பதற்காக கல்வி அமைச்சின் கீழான சகல படிநிலை அதிகாரிகளின் கைகளில் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. எனவே இக் காத்திரமான கலைத்திட்டத்தினை மாணவர்கள் பயன்பெற ஆசிரியர்கள் வெற்றிகரமாக நிறைவேற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் ஆய்வுகள் அடுத்து வரும் காலங்களிலும் மேலும் பல மாற்றங்களுடன் வெளிவரக் காத்துள்ளன.

**திருமதி. சுதாஜினி சிவதாசன்**
ஆசிரியர் (ஆரம்பக்கல்வி)
யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்

# வாசிப்புத்திறன்

மொழி என்பது தொடர்பாடல் ஊடகம் ஒருவர் தம் உள்ளத்திலெழும் கருத்துக்களை பிறருக்கு உணர்த்தும் செயற்பாட்டுக்கு உதவும் பிரதான கருவி மொழியாகும். மனிதர்களினது முழுமையான வளர்ச்சிப்படிக்கும், அவர்களது சமூகமயமாக்கும் உறுதுணையாக மொழித்திறன்கள் வளர்க்கப்பட வேண்டியது அவசியமானதாகும். தத்தம் தாய்மொழி சார்ந்த மொழித்திறன்களை கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து என்னும் அடிப்படைத்திறன்களை வளர்த்தலிலூடாக மேம்படுத்த முடியும் என கல்வியியலாளர் கூறுவர். ஒருவர் தான் சார்ந்த மொழியில் தேர்ச்சி பெற வேண்டுமாயின் மொழித்திறன்களை வளர்த்தலின் மூலமே அது சாத்தியமானதாக அமையும்.

வாசிப்புத் திறனானது மொழித் தேர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாததாக காணப்படுகின்றது. வாசித்தல் என்பது வரிவடிவத்தை அறிதல், ஒலித்தல், பொருள் உணர்தல் ஆகிய கூறுகளை அடக்கிய செயல்களைக் குறிக்கும். வாய்படிக்க அறிவு மூலம் அதன் பொருள் உணர்த்தல் வேண்டும். பொருள் உணர்வதற்கு தொடர்ச்சியான பயிற்சி அவசியம். வாசிப்பே ஒருவனை முழுமனிதனாக்கும். வாசிப்பில் ஆர்வம் காட்டும் அளவிற்கு ஒருவரது அறிவு விரிவடைவதோடு மனப்பாங்கிலும் மாற்றம் ஏற்படும். முக்கியமாக மொழித்தேர்ச்சிக்கு அதிகளவிலான நூல்களை வாசிக்க வேண்டும். நல்ல நூல்களை நண்பர்களாக்கிக் கொள்ள வேண்டும் அதன் வாயிலாக கிடைக்கும் மகிழ்ச்சி எல்லையற்றது.

மாணவர்களைப் பொறுத்தவரையில் மொழியாற்றலில் முன்னேற்றம் காண்பதற்கு வாசிப்பே முதன்மைநிலையாக அமைகிறது. இவ்வாசிப்பு முறைகளாக உரத்த வாசிப்பு, மௌனவாசிப்பு, மேலோட்டமான வாசிப்பு, கிரகித்தல் வாசிப்பு எனப்பலவுள்ளர். மாணவர்களிடையே வாசிப்புத்திறனை வளர்க்கப் பொருத்தமான முறைகள் பயன்படுத்தப்பட வேண்டும். ஆரம்ப, இடைநிலை வகுப்புக்களில் உரத்து வாசித்தலை அதிகம் பயன்படுத்துவது உசிதமானதாகும். ஏனெனில் உரத்தவாசிப்பின் போதே வாசிப்புப்பொறிமுறைகளை அனுசரித்து முறையாக வாசிக்கின்றனரா என்பதை அறிந்து கொள்ளலாம். எழுத்துகளுக்குரிய ஒலியமைப்புகளுக்கேற்ப உச்சரித்து வாசித்தல் வேண்டும். எழுத்தை மாறுபட ஒலித்தால் சொல்லும் பொருளும் மாறுபட்டு கருத்துத் தெளிவின்மையைத் தோற்றுவித்துவிடும். உரத்துப்படிப்பதால் நாவுக்கும்

பயிற்சி வழங்கப்படுகின்றது. அதன் பயனாக நல்ல தமிழ் ஒலிப்புப் பயிற்சி கிடைக்கிறது. அத்துடன் உரக்கப்படிப்பதால் எந்த இடத்தில் நிறுத்தி வாசிக்க வேண்டும். எந்த இடத்தில் சேர்ந்து வாசிக்கவேண்டும் என்ற தெளிவும் ஏற்படுத்தப்படுகிறது. இத்தகைய வாசிப்பின் மூலமே கேட்பவர்களுக்கு வாசித்த பகுதியின் பொருள் தெளிவாக விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கும். உரத்து வாசிப்பதால் எழுத்துக்களின் ஒலிவேறுபாடுகள் நன்கு தெளிவு பெறுகின்றன. பொருள் தெளிவிற்கும் இதுவே வழியேற்படுத்தும். இப்பயிற்சி எழுத்துப்பிழைகளின்றி எழுதுவதற்கும் உதவுகிறது எனலாம்.

மாணவர்களது இடைநிலை வகுப்புகளில் உரத்தவாசிப்புடன் மௌனமாக வாசித்தலும் இன்றியமையாதது உரத்து வாசித்தலின் மூலம் ஒலித்தெளிவு ஒலிமயக்கம், எழுத்து சொற்களின் பொருள் வேறுபாட்டுத் தெளிவு என்பவற்றைப் பெற்றவுடன் மௌனமாக வாசித்தல் நன்று. பாடநூல்கள், துணைநூல்கள் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றை மௌனமாக வாசிக்கலாம். மௌனமாக வாசிப்பதனால் விரைவில் வாசிக்க முடிகின்றது. இப்பயிற்சி நாளடைவில் மேலும் விரைவாகப் படிக்கும் ஆற்றலை வளர்க்கும். பரீட்சைக்காலத்தில் இப்பயிற்சி பெரிதும் உதவும். அத்துடன் மௌன வாசிப்பால் குறுகிய காலத்தில் அதிகம் வாசிக்கமுடியுமாகையால் அறிவு பெருக்கமடைகின்றது.

மேலோட்டமான வாசிப்பானது பத்திரிகை, சஞ்சிகை வாசிப்புக்களுடன் தொடர்பானது. அத்துடன் சில தகவல்களை மட்டும் தேடிப் பெற்றுக் கொள்வதற்கான வாசிப்பாகவும் அமைந்துவிடுகிறது. அத்துடன் மிக பிரதானமான கிரகித்தல் வாசிப்பு இடைநிலைப்பிரிவு, உயர்பிரிவு மாணவர்களுக்கு மிக அத்தியாவசியமானது பாடநூல்கள், பயிற்சிநூல்கள் வாசிப்பதற்கு இப்பயிற்சி பெரிதும் உதவியாக அமையும். வாசிப்பின் உயர்நிலைமட்டம் கிரகித்தலுடன் கூடிய வாசிப்பே எனலாம். கிரகித்தலுடன் கூடிய வாசிப்பு பல படிநிலைகளுடன் கூடியதாகும். வாசிக்கப்படும் விடயப்பொருளை அறிவதற்கும் படைப்பாளியின் உள்ளார்ந்த நோக்கத்தினைப் புரிந்துகொள்வதற்கும் கிரகித்தல் வாசிப்பு அவசியமாகிறது. இவ்வாறான வாசிப்பு முறைகளைப் பொருத்தமான சந்தர்ப்பங்களில் நேர்த்தியாகப் பயன்படுத்தி வாசிப்பாற்றலை மேம்படுத்திக் கொள்ள முடியும்.

"இளமையிற்கல்வி சிலையில் எழுத்து" என்பது முதுமொழி. இளமைப்பருவத்தில் கற்கும் கல்வி சிதையாது, சிதறாது. மனதிலே நன்றாகப் பதியும். கல்விக்கு அடித்தளமாக அமையும் வாசிப்புப்பழக்கம் இளமையிலேயே அரும்பி வளர்ந்து

முதிர்ச்சிபெறுதல் வேண்டும். வாசித்து விளங்கி வெளிப்படுத்தும் ஆற்றலே மெய்யான மொழியாற்றலாகும். செம்மையான வாசிப்புத்திறன் பெறாத மாணவன் பயிலும் பாடங்களிலும் சிறப்புநிலை *அடையமுடியாதவாறு திண்டாடுவான். பாடசாலையில்* கற்கும் பாடங்களோடு மட்டும் நில்லாது பற்பல நல்ல நூல்களையும் வாசித்து ஆழ்ந்தகன்ற அறிவினை பெருக்கிக் கொள்ளவேண்டும். அறிவுச்செல்வர்களாய் உள்ளத்தால் உயர்ந்தவர்களாய் உருவாக வாசிப்புத்திறனை விருத்தி செய்தல் வேண்டும்.

இருப்பினும் இன்றைய மாணவரிடையே வாசிப்பதிலுள்ள ஆர்வம் குறைந்து வருகின்றது என்பதை ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. இன்றைய நவீனயுகத்தில் நூல்களை வாசிப்பதிலிருந்து இளைய சமுதாயத்தினர் விலகி நவீன தகவல் தொடர்பு சாதனங்களுக்குள் நுழைந்திருக்கிறார்கள். தொலைக்காட்சி, கணினி, இணையம், முகப்புத்தகம் போன்றவற்றிலிருந்து முழுவாசிப்புப் பயன்பாட்டை பெற்றுக்கொள்ள முடியாது. வாசிப்பின்போது மட்டுமே நன்கு அறிந்து உள்வாங்கப்படுகின்ற பல ஆக்கபூர்வமான விடயங்கள் மனதில் நீண்டகாலத்திற்கு நிலைத்து நிற்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அத்துடன் இயந்திரகதியாக மாறிவிட்ட இன்றைய நவீன உலகத்தில் வாசிப்பதற்கு நேரமில்லை என்ற கருத்தும் அனைவராலும் எடுத்துச் சொல்லப்படுகின்றது. நேரத்தை நாமே ஒதுக்கிக்கொள்ள முயற்சிக்க வேண்டும். இன்று மனிதர்களது அதிகளவு நேரத்தை சூறையாடிக் கொண்டிருப்பவை இத்தகைய நவீன தொடர்பாடல் சாதனங்களின் பாவனையேயாகும். இச்சாதனங்களுடன் செலவிடும் அதிக நேரத்தை வாசிப்புக்கும் செலவிட பழகுவோமாயின் மகிழ்ச்சி என்ற வாயிற்கதவை திறந்தவராவோம்.

ஆகவே மொழியறிவைப் பெறுவதற்கும், எமது அனுபவத்தை தெளிவாக விளக்கவும், சிந்தனை விருத்திக்கும், செயலாற்றலுக்கும், அறிவுக்களஞ்சியத்தை விருத்தி செய்து கொள்ளவும் நல்லநூல்களை வாசிக்கவேண்டும். நூல்களை வாசித்து சிந்தனையை விரிவுபெறச் செய்பவனே முழுமனிதனாவான். இதற்கமைய எதிர்காலத் தலைவர்களாக மிளிர இருக்கின்ற இன்றைய மாணவர்களின் வாசிப்பாற்றலை மேம்படுத்தி, அவர்களை சிறந்த ஆளுமையுடையோராக்குவது அனைவரது கடமையுமாகும் என்பதையுணர்ந்து செயற்படுவோம்.

**திருமதி. கௌ. சந்திரகுமார்**
ஆசிரியர், யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்

# வாழ்நாள் கல்வியின் திறவுகோலாக ஆரம்பக்கல்வி

கல்வியின் திறவுகோல் ஆரம்பக்கல்வியே. திண்ணைப் பள்ளியிலிருந்து வகுப்பறைக் கல்விக்குள் முகம் கொடுக்கும் மாணவர்கள் கற்பித்தல் செயற்பாட்டின் பரிணாம வளர்ச்சியின் அனுபவங்களுக்குள் பிரவேசிக்கின்றனர். தற்கால விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியானது அவனின் கற்றல் தொழிற்பாட்டில் பிரதான பங்களிப்பைச் செய்கின்றது.

ஆரம்பக் கல்வியில் மாணவர்கள் ஒலிவடிவங்கள், வரிவடிவங்கள். எண்கோலங்களை அறிந்து கொள்ளும் வாய்ப்புக்கு ஆளாக்கப்படுகின்றனர். இசையின் இனிமையையும் ஒலிகளின் வேறுபாட்டையும் ஊகித்து உணர்ந்து கொள்ளும் சந்தர்ப்பம் ஆரம்பக் கல்வியிலேயே மாணவர்களுக்குக் கிடைக்கின்றது. ஆரம்பக் கல்வியில் ஆரம்பமாகும் குழு முயற்சிகள் மாணவர்களின் தனிப்பட்ட குறைபாடுகளிலிருந்து விடுபட வைக்கின்றது. இக் குழுச் செயற்பாடுகளின் மூலம் விட்டுக் கொடுத்தல் சேர்ந்து ஒற்றுமையாக தொழிற்படல் போன்ற நற்பண்புகள் வளரவும் குறைபாடுகள் விடுபடவும் செயற்படத் தூண்டுகிறது.

இலங்கையைப் பொறுத்தவரை முன்பள்ளிக்கு விடை கொடுத்த மாணவன் ஆரம்பப் பாடசாலையில் அனுமதிக்கப்படுகிறான். இங்கு தாய்மொழி, இரண்டாம் மொழிகள், கணிதம், சுற்றாடல், பொதுஅறிவு ஆகிய பாடங்களுடன் பாடவிருத்திக்குப் புறம்பான நிகழ்ச்சி நிரலுக்குள்ளும் உள்வாங்கப்படுகின்றான். இங்கு இவன் தனது அடுத்த கட்ட கல்விக்காக வழிநடத்தப்படுகிறான். இங்குதான் இவனின் மகிழ்நிலைத்திறனை வெளிப்படுத்தும் முகமாக புலமைப் பரீட்சையோ அன்றி அதை ஒத்த ஏனைய பரீட்சைகளை எதிர் கொள்கிறான்.

உலகமயமாக்கல் என்னும் பொழுது நாமும் அதில் ஒரு பங்காளியாக மாறிவிடுகின்றோம். உலகமயமாக்கல் என்னும் எண்ணக்கருவுடன் நம்மை இணைக்கும் பொழுது இன்றைய நவீன விஞ்ஞான தொழில் நுட்பங்களுள் பிரவேசிக்க வேண்டியவர்களாகியுள்ளோம். மேற்குறித்த கல்வி முறைகளுடன் இன்றைய மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வியில் இருந்தே தொலைத்தொடர்பு சாதனங்கள் கணினி கைபேசி போன்ற இன்னோரன்ன சாதனங்களைப் பற்றி அறிவூட்டல் தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. ஆகவே இன்றைய கல்வியூட்டலில் மேற்குறித்த சாதனங்கள் அவற்றின் பயன்பாடு பயன்படுத்தும் முறைகள் என்பனவும் ஆரம்பக் கல்வியில் இருந்து ஆரம்பிக்கப்படவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகிவிட்டது. கல்விமான்கள் கல்விக் கொள்கை வகுப்போர் மேற்குறிப்பிட்ட நவீன சாதனங்கள் தொடர்பானஅறிவூட்டலையும் பாடவிதானத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டிய தேவையுள்ளது.

ஆரம்பக் கல்வியின் குறிக்கோள் ஒவ்வொரு குழந்தையும் சமுதாயத்திற்கு பயனுள்ள பொறுப்புள்ள குடிமகனாகத் திகழவேண்டும் என்பதேயாகும். பொதுவாக ஆரம்பக் கல்வி குடும்பக் கல்வி முறையில் பல பரிமாணங்களில் பிள்ளை பெற்ற கல்வியை முறைசார் அமைப்பில் குறித்து நிற்கும் சமநிலைக் கல்வித் திட்டத்தினூடாக பிள்ளைகளை மையப்படுத்தி நன்கு திட்டமிட்டு பிள்ளையின் தேவையை உணர்ந்து கற்றல் சூழலுக்குட்படுத்தி கல்வியைப் புகட்டும் திறவுகோலாக அமைகிறது. ஆரம்பக் கல்வி பற்றி சிந்தனையாளர் கூறும் கருத்தை அவதானித்தால் கொமினியஸ் (J.A.comenius) குறிப்பிடுவது சகலரும் கல்வி கற்க வேண்டும் சமயம் கட்டாயமாக இடம்பெற வேண்டும். தாய்மொழி மூலம் கற்பிக்க வேண்டும். படங்களுடன் கூடிய பாடப்புத்தகம் சொற்களுக்குப் பொருட்கள் உபகரணங்களுடன் கற்பித்தல். புலக்காட்சி மூலம் பெறும் அனுபவங்கள் அடிப்படையானவை. அடுத்து "ரூசோ" என்ற கல்விச் சிந்தனையாளர் இயற்கை வாதம் மூலம் மனவெழுச்சி காண்பது (Emotion) மனிதனது உண்மை இயல்பின் சிறந்த வெளிப்பாடாகும். குழந்தையிடம் தனிப்பட்ட தேவைகள் உள்ளன என்பதை குறிப்பிட்ட பிள்ளைகளின் தேவைகளை அறிந்து சுயமாக செயற்பாடுகள் செய்து கற்றல் (Clearing by doing) உற்று நோக்கல், அனுபவங்களைப் பெறுதல் என்பவற்றுக்கூடாகவே கல்வி பெறவேண்டும் எனக் கூறுகிறது.

குழந்தைகளிடம் காணப்படும் இயல்பான ஆற்றல்களைத் தேர்ந்தெடுத்து கலந்துரையாடி கற்பிக்கவேண்டும் என குறிப்பிடப்படுகின்றது. அடுத்து புரோமாவின் கல்விச் சிந்தனையாளர் பிள்ளையின் திறன்களை வளர்த்திடும் நோக்கில் ஆக்கம் அழகியல், விளையாட்டுக்கள் மூலம் இயற்கைத் திறன்களை வளர்த்தார். ஜோன் டூஜி (John Dewey) குழந்தை மகிழ்ச்சியாக வாழும் இடமாக அமைய வேண்டும் என்ற குறிப்பிடுகிறார். இவர் பிள்ளையை மையமாகக் கொண்ட கல்வியை அறிமுகப்படுத்தியவர். பிளேட்டோ என்ற கல்வித் தத்துவவியலாளர் கல்வி மூலம் பூரண ஒழுக்கம் நிறைந்த நபர்களை உருவாக்க வேண்டும் என வாழ்நாள் கல்வியை அறிமுகஞ் செய்தார். மகாத்மா காந்தி அடிகள் கல்வியானது உடல் நுண்மதி ஆன்மீகப் பயிற்சி அடிப்படையில் அமைய வேண்டும் என்றார்.

இன்றைய ஆரம்பக் கல்வி மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்களின் வழிகாட்டலில் அறிவுள்ள வளமுள்ள சமுதாயத்தை உருவாக்குவதற்கு ஆரம்பக் கல்வி ஒரு திறவு கோலாக அமைகிறது என்றால் அது மிகையாகாது.

**திருமதி. ச. சுதர்சன்**

ஆசிரியர்,

யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்

## மாணவர்களிடத்தே விழுமியப் பண்புகளை வளர்ப்பதன் முக்கியத்துவம்

மனித வாழ்வு மிக எளிமையான தன்மையையும் உயர்வான எண்ணங்களையும் கொண்டதாக அமையவேண்டும். மனித வாழ்வை வளப்படுத்துவதற்காக எல்லாமதங்களும் அறக்கருத்துக்களையும் விழுமியங்களையும் எடுத்துக்கூறுகின்றன. மாணவர்களுக்கு கல்வியறிவைப் போதிப்பதுடன் மட்டும் நின்றுவிடாது அவர்களிடத்தில் விழுமியப்பண்புகளை வளர்ப்பதில் பாடசாலைகள் பெரும் பங்காற்ற வேண்டியது இன்றைய காலகட்டத்தின் தேவையாகும். உலகம் ஒரு கைக்குள் அடங்கிவிட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப யுகத்தில் மாணவர்களுக்கு பாடசாலையிலும் பாடசாலைக்கு வெளியிலும் அதாவது சமூகத்திலும் விழுமியங்களை பேணி நடப்பதற்கு அவர்களுக்க வழிப்படுத்த வேண்டியது ஆசிரியர்களின் தலையாய கடமையாகும். பாடசாலையில் கடைப்பிடிக்கப்படும் நல்லொழுக்கங்கள் மாணவர்கள் தம் வாழ்க்கையில் உன்னத நிலையை அடைய துணைபுரிகின்றன.

குடும்பசூழல் எல்லா மாணவர்களுக்கும் வளமானதாக அமைவதில்லை. கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறை மாறி கருக்குடும்ப வாழ்க்கை முறை இன்று காணப்படுகின்றது. பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக பெற்றோர் இருவரும் வேலைக்கு செல்கின்றனர். இந்த வேளையில் அன்னையின் அறிவுரைகள், தந்தையின் வழிகாட்டல்கள் பிள்ளைக்கு போதியளவு கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் அருகிவிட்டன. கிடைக்கின்ற ஓய்வு நேரத்தையும் தொலைக்காட்சி தொடர்கள் பெருமளவிற்கு விழுங்கிவிடுகின்றன. எனவே பாடசாலைகள் மாணவர்களுக்கு கல்வியறிவை போதிப்பதுடன் மட்டும் நின்றுவிடாது விழுமியங்களை வளர்ப்பதிலும் அக்கறை காட்ட வேண்டியது இன்றியமையாதது ஆகும்.

இன்றைக்கு முப்பது ஆண்டுகளிற்கு முன்பிருந்த சமுதாய சூழலுடன் ஒப்பிடும் போது தற்போது விழுமியப்பண்புகள் இளஞ்சந்ததியினரிடையே நலிவடைந்து வருவதை காணக்கூடியதாக உள்ளது. சமயக்கல்வி வாழ்வியலுடன் தொடர்புடைய ஒரு பாடமாகும்.அதனால் கற்றல்-கற்பித்தல் செயற்பாடினூடாக மாணவரிடம் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவதில் ஆசிரியரின் வகிபங்கு முக்கிய இடத்தை பெறுகின்றது. ஒவ்வொரு சமயபாட ஆசிரியரும், ஆரம்பக்கல்வி ஆசிரியரும் தமது வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்கயுக்குகடவுள்பக்தி,தாய்,தந்தை,குரு ஆகியோரை தினம்தினம் வணங்குதல் ,மூத்தோரிடம் மரியாதை,ஒழுக்கம், தியாகமும்தொண்டும், சமயப்பற்று, அறநெறிப்பண்புகள் ஆகிய நற்பண்புகளை உடையவர்களாக மிளிரச்செய்தல்

வேண்டும். ஆசிரியர்கள் தமது மாணவர்களை நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் உருவாக்குவதை இலட்சியமாகக்கொண்டு செயற்படல் வேண்டும். இப்பண்புகளை கலைத்திட்டத்தினூடாகவும், இணைக்கலைத்திட்டத்தினூடாகவும் வளர்க்கின்றபோது எமது சமூகத்தின் அபிவிருத்திக்கு தேவையான தேர்ச்சிகளை கொண்ட புத்தாக்கம் புரிவோரையும் மனிதப்பண்புள்ளவர்களையும் குறைவின்றி உருவாக்கலாம். சமய ஒழுகலாறுகள் நாளாந்த வாழ்வை செம்மைப்படுத்துகின்றன. இவை உடல், உள, சமூக ஆரோக்கியத்திற்கும் அவசியமானவை. மாணவர்கள் வீட்டிலும், பாடசாலையிலும் சமயஒழுகலாறுகளை பின்பற்றி நடக்க பெற்றோரும் ஆசிரியரும் வழிசமைத்துக் கொடுக்க வேண்டும். விழுமியப்பண்புகளை பேணி நடக்கின்ற போது பாராட்டுக்களை வழங்கி ஊக்கப்படுத்த வேண்டும். பிறழ்வான நடத்தைகள் காணப்படுகின்றபோது அதன் ஆபத்தை உணர்த்தி நன்மனப்பாங்கை விருத்தி செய்வது பெற்றோர், ஆசிரியர்களின் கடமைப்பொறுப்பாகின்றது. திருவள்ளுவப்பெருந்தகையின் "உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலாதார்" என்ற குறள முதத்திற்கு ஏற்பவும் "ஊரோடு ஒத்து வாழ் என்ற பழமொழிக்கு ஏற்பவும் வாழச்செய்தல் பாடசாலைச்சமூகத்தின் பொறுப்பாகும்.

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்ற ஔவையாரின் வாக்கிற்கேற்ப அரிய மானிடப்பிறவியை பெற்ற நாம் வாய்மை, நேர்மை, பொறுமை, ஒப்புரவு, ஈகை, பணிவு, அடக்கம், ஒழுக்கம் போன்ற விழுமியப்பண்புகளை அணிகலன்களாக கொண்டு வாழவேண்டும். தீயகுணங்களை விலக்கி அன்பும் பண்பும் பணிவும் நிறைந்தவர்களாக வாழ வேண்டும். நல்லொழுக்கம் மிக்க மனிதர்களாக திகழ வேண்டும். அவ்வாறு திகழும் போது எல்லோரும் இன்பமாகவும், சாந்தி, சமாதானமாவும் வாழமுடியும். அறநெறி நின்று ஒழுக்க சீலர்களாக சமுதாயத்தில் வாழ்தல் மூலமே வாழ்வில் எதிர்நோக்கும் துன்பங்கள், துயரங்களை தவிர்க்க முடியும்.

அதிவேகமாக மாறி வரும் உலகத்தில் மனித வாழ்வை மேம்படுத்த உதவும் பெறுமதி மிக்க வாழ்க்கை பண்புகளான விழுமியங்களை பேணும் உயரிய சமுதாயத்தை உருவாக்குவது பெற்றோர்,ஆசிரியர், சமுதாயத்தின் கடமையாகும்.

**திருமதி. நளாயினி சிவநேசன்**
ஆசிரியர்,
யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்

# ஆசிரியத்துவம்

ஆசிரியம் என்பது பணி அல்ல ஒரு தொண்டு. மாணவர்களின் அறியாமை எனும் இருளை நீக்கி அவர்களது வாழ்வில் ஒளி ஏற்றுபவர் ஆசிரியர்கள் என்ற உண்மையை மெய்ப்பிக்கும் வகையில் தோன்றியதுதான் எழுத்தறிவித்தவன் இறைவனாவான். என்னும் பொன் மொழி ஆசிரியர் தான் நம் கண்ணுக்குத் தெரியும் கடவுள். உலகில் இதுவரை இவ்வளவு உயர்ந்த இடத்தை யாருக்கும் அளித்தது இல்லை.

நாம் பிறக்கையில் இவ்வுலகிற்கு எதையும் கொண்டு வருவதில்லை. இறக்கும்போது எதனையும் கொண்டு போவதும் இல்லை. வாழும் வாழ்க்கையின் இடைப்பட்ட காலத்தில் கல்விச் செல்வத்தைப் பெற்று பகுத்தறிவுடன் இன்புற்று வாழவேண்டும் என்பதற்காகத்தான் "கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவர்க்கு மாடல்ல மற்றை யவை" எனத் திருவள்ளுவர் மிக அழகாகக் கூறியுள்ளார்.

அயராது உழைத்து மாணவர்களை தன் பிள்ளைகள் என எண்ணி பணிபுரியும் ஆசிரியர் மாணவர் உறவே முக்கியமான, முதன்மையான உறவு. இந்த உறவு மாணவர்களிடத்தில் உயரியதாகவும், உன்னதமாகவும் கருதப்பட்டு உயிர உள்ளவரை உணர்ச்சியில் கலந்ததாக, வாழ்க்கை முழுவதும் கூடவே பயணிக்கக் கூடிய ஒரு புனிதமான உறவாகப் போற்றப்படுகிறது. ஒவ்வொரு ஆசிரியரின் குறிக்கோள் மாணவர்கள் நல்லறிவுடனும் சமுதாயத்தில் வளமுடனும் சிறந்து விளங்க வேண்டும் என்பதுதான். மாணவர்களின் வெற்றியே ஆசிரியரின் வெற்றி. இவர்களை விட குழந்தைகள் மீது அக்கறை காட்டுபவர்கள் வேறு யாரும் இல்லை. கடவுளால் அனுப்பப்பட்ட ஒரு பிரதிநிதியே ஆசிரியர் எனலாம்.

'மாதா, பிதா, குரு, தெய்வம்'
'ஆசிரியர் பணியே அறப்பணி'
'அதற்கே உன்னை அர்ப்பணி'

என்பன மனித வரலாற்றில் வழி வழி வந்த மணி மொழிகள் ஆகும். குருவாகிய ஆசிரியர் தாயாகவும் தந்தையாகவும் விளங்கி அறிவையும் ஆற்றலையும் மாணவர்களுக்கு அளித்து தெய்வத்தை உணர வைப்பவர்கள் ஆசிரியர்கள். அறிவுடை ஒருவனை அரசனும் விரும்புவான் என்பது போல முடியுடை வேந்தர்களாக இருந்தாலும் புலவர்களைப் போற்றியதற்குக் காரணம் அவர்கள் குரு என்பதால் ஆகும். மாபெரும் இதிகாசமாகப் போற்றப்படும் மகாபாரதத்திலும் குருவாகிய துரோணர் கேட்டதற்கு இணங்க மாணவனாகிய ஏகலைவன் தன் கட்டைவிரலை வெட்டிக் கொடுத்த கதையை நாடறியும்.

மாணவனை சாதனையாளனாக மாற்ற வழிகாட்டியாக அமைபவர் ஆசிரியரே மாணவர்கள் தங்கள் வெற்றி இலக்கை அடைவதில் பல தடைகள் வாழ்க்கையிலும், கல்வியிலும், உணவு , உறக்கம் மறந்து உழைத்த உழைப்பையும் சந்தித்த சோதனைகளையும் வேதனைகளையும் பார்த்தால் அவனால் சாதனையாளனாக வர வாய்ப்பில்லாமல் போகலாம்.

தடைக்கல்லே உமக்கோர் படிக்கல் என்ற ஊக்கத்தையும் உணர்வுகளையும் ஆசிரியர் ஊட்டுவதால் குழந்தைகள் சாதனையாளர்களாக மாறுகின்றனர். ஒவ்வொரு சாதனைக்குப் பின்னாலும் ஆசிரியர்களின் பங்கு ஏதோ ஒரு விதத்தில் காணப்படுகிறது. மாணவர்களுக்கு குணநலம், தன்னம்பிக்கை, அடிப்படைக் கடமைகள், சுயகட்டுப்பாடு, பொதுநலநோக்கு,தலைமைத் தகுதி, நல்லொழுக்கம், நாட்டுப்பற்று போன்றவற்றை கற்பிக்க ஆசிரியர்கள் செயற்படுகின்றனர். ஒவ்வொரு மாணவனின் பலம், பலவீனத்தைக் கண்டறிந்து அடையாளப்படுத்துபவர் ஆசிரியர்கள்.

மாணவர்கள் நாட்டை நிர்ணயிக்கும் சிற்பிகள் அவர்களுக்குச் சரியான பயிற்சி அளிக்கவேண்டும். இல்லாவிடில் அவர்களது செயல் நாட்டிற்குத் தலை குனிவையும், ஏமாற்றத்தையும் உண்டுபண்ணும். ஆசிரியர் செய்வதையே மாணவர் பின்பற்றுவர். ஆகவே ஆசிரியர் சரியாக வழி காட்டுவது அவசியம். எனவே ஆசிரியப் பணி என்பது தொழில் அல்ல தொண்டு. மாணவர்களின் உடல் வளர்ச்சியோடு உள வளர்ச்சியையும் ஆராயக் கூடியவர்கள். மற்றத் துறையினர் செய்யும் தவறுகள் அந்தத் துறையோடு நின்றுவிடும் ஆனால் கல்வித் துறையில் ஏற்படும் தவறுகள் எதிர்கால சந்ததியினரையே சீரழித்துவிடும்.சேவை எனக் கருதப்படும் பணிகள் பல இருந்தாலும் அவை அனைத்திற்கும் முதன்மையாகவும், சிறப்பித்துப் போற்றப்படுவதுமான ஆசிரியப் பணியே மிகச் சிறந்த பணி.

"மாணவர்கள் கல் என்றால்
ஆசிரியர்கள் சிற்பிகள்"

அர்ப்பணிப்பும் தொண்டுள்ளமும் திறமையும் படைத்த ஆசிரியர்கள் மாணவர்களின் வருங்காலத்தையும் நாட்டின் எதிர்காலத்தையும் செம்மையாக்கப் பாடுபடுபவர்கள்.

"பயிற்றுப் பல கல்வி தந்து - இந்த
பாரை உயர்த்திட வேண்டும்"

என்ற பாரதியாரின் கனவை நனவாக்க வல்ல சமுதாய ஏணிப் படிகளான ஆசிரியர்கள் போற்றுதலுக்கும், மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரியவர்கள்.

கல்விக் கூடக் கோவில்களின்
கருவறைத் தெய்வங்களே.........
கரம் கூப்பி சிரம் தாழ்த்தி
தொழுகின்றோம் ....!! நும்
பணி சிறக்கட்டும் .............
வாழிய ....... பல்லாண்டு .................பல்லாண்டு

**திருமதி. உ.. பாலசுந்தரம்**

ஆசிரியர், யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்

# பரதக் கலையே முதன்மைக்கலை

ஆண்டவன் திருவடிகளில் மலர்ந்த அற்புதமான அழகு மலர் பரதம். கலை என்றால் என்ன என்பதற்கு பலராலும் பல விளக்கங்கள் தரப்பட்ட போதிலும் மனித வாழ்விற்குத் துணை செய்யும் பல வகையான தொழில்களையும் நாம் கலைகள் என்றே அழைக்கின்றோம். கண்களால் பார்த்துக் காதுகளால் கேட்டுப் பெறுகின்ற இன்ப உணர்வே கலை எனக் கொள்ளப்படுகிறது. இது தென்னிந்தியாவில் காணப்படும் சாஸ்திரிய நடனமாக மிளிர்கிறது. இது பாரத தேசத்தில் பரத முனிவரால் பாவ,ராக,தாளம் ஆகிய மூன்றையும் ஒருங்கே கொண்டு ஆக்கப்பட்டது. பரத நாட்டியத்தில் நால்வகை அபிநயமும், நடன பேதங்களாகிய நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் என்பனவும் உள்ளடக்கப்பட்டு ஒரு தனித் தன்மை வாய்ந்த கலையாக பரிணமிக்கின்றது.

நடனம் ஒரு தெய்வீகக் கலை என்றே கூறலாம். சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளான சிவபெருமான் இக் கலைக்கு அதிபதியாக விளங்குகின்றார். கம்பீரம் மிக்க தாண்டவம் மென்மையும் அழகு நிறைந்த லாஸ்யம் என்னும் இரு பிரிவுகளை உடையது. உடலுக்கும் உள்ளத்திற்கும் வலிமை தரும் முதன்மைக் கலையாக மிளிர்கிறது. பாத அசைவுகள், கை அசைவுகள், கண் அசைவுகள், தலையின் அசைவுகள், கை முத்திரைகள் ஆகியவை பரதநாட்டியக் கலையின் முக்கிய அம்சங்களாகும். அரைமண்டி, முழுமண்டி, நிற்றல் ஆகியவை பரத நாட்டியத்தின் நிலைகள் ஆகும். பரத முனிவர் எழுதிய பரத சாஸ்திரம் என அழைக்கப்படும் நாட்டிய சாஸ்திரம் என்ற நூலை அடிப்படையாகக் கொண்டது இப் பரதக் கலை.

உள்ளத்தின் எழுச்சியால் உடல் ஆடுகிறது. ஆரம்ப கால கட்டங்களில் அந்த ஆட்டம் வெற்று ஆட்டமாக இருந்தது. அதன் வரம்புகள் வகுக்கப்படவில்லை. இன்று ஆடற்கலை மிக மிக வளர்ச்சி பெற்றுள்ளது. இசைக்கலையும், நாட்டியக்கலையும் இணைந்து செழித்துள்ளன. பரதக் கலை பயில்வோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றது. நாட்டியக் கலை தேசியக் கல்வி முறையில் அதன் அவசியமும் நடனம் கற்பதன் பலாபலன்களை அறிந்து கொள்வதன் மூலம் நடனக் கலையே முதன்மைக் கலை என கொள்ளக் கூடிய வகையில் அமைந்துள்ளதை பின்வரும் விடயங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். நாட்டியக் கலை அழகு, உண்மை, நன்மை ஆகிய மூன்றையும் பயக்கிறது. உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்துவதுடன் தன்னை மறந்து சச்சிதானந்த நிலையை அடைந்து இறைவனுடன் ஒன்று கலக்கக் கூடிய அறிவையும் கொடுக்கிறது. ஆன்மீக வளர்ச்சிக்கு இது ஆதாரமாக உள்ளது. நாட்டியக் கலைஞன் அங்க அவயவங்கள் மூலம் நாட்டியத்தை வெளிப்படுத்துகிறான். உள்ளதை உள்ளபடி காட்டாமல் அதிலிருந்து மேலேபோய் தெய்வீக உணர்ச்சியையும் கருத்தின் உட்கிடக்கையையும்

உணர்த்துகிறார்கள். எனவே மன எழுச்சிக்குப் பிரதான வழியாகவும், காரண கர்த்தாவாகவும் இருப்பதுடன் சரீரத்துடன் மனதை விருத்தியடையச் செய்கிறது. இது மட்டுமன்றி அன்றாட வாழ்க்கையில் காணும் சுமையையும், பழுவையும் இவ் இசை, நடன நிகழ்ச்சிகள் அகற்றுகின்றன. நாள் முழுவதும் மூளையை உபயோகித்துத் தொழில் புரிவோருக்குச் சக்தி வாய்ந்த மருந்தாகும். உஸ்ணம் மிக்க மூளைக்குத் தண்மையைக் கொடுக்கும். நரம்புப் பகுதிகளை ஆசுவாசப்படுத்தும். மூர்க்கத்தை அடக்கும். இவ்விதமாகப் பல நோய்களுக்கு ஔடதமாக அமையும் நாட்டியம் மக்களை ஒற்றுமைப்படுத்துவதற்கும், தோழமைப்படுத்துவதற்கும் ஏதுவாயுள்ளது. பண்டிதர், பாமரர், சிறுவர், செல்வந்தர், வறியவர் ஆகிய அனைவரையும் வேறுபாடில்லாமல் ஒன்றாக இணைக்கும் ஈர்ப்புச் சக்தி வாய்ந்தது. சாதி சமய ஏற்றத் தாழ்வுகள் காண முடியாது. வாழ்க்கையில் ஒரு பரந்த விளிப்புணர்ச்சியை உருவாக்குகிறது இந் நாட்டியக் கலை.

நாட்டியப் பயிற்சியின் மூலம் சுவாசப்பைகளுக்கு அப்பியாசத்தைக் கொடுத்து நல்ல மூச்சுத்திறனை அளிக்கிறது. நல்ல உடற்பயிற்சியை அளிப்பதோடு தேக ஆரோக்கியத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்கிறது. நாட்டியக் கல்வியானது நல்லாலோசனை, கூட்டுமனப்பான்மை, முதலிய குணங்களை மனதிற் பதிய வைக்கிறது. ஒழுங்கு கட்டுப்பாடு, பொறுப்புணர்ச்சி ஆகிய பண்புகளையும் வளர்க்கிறது. தன்னலத்தை நீக்கி பிறர்நலத்தை உருவாக்கி அதன் பெறுபேறுகளைப் பகிர்ந்து கொள்ள உதவுகிறது. நான் என்ற உணர்வு இன்றி பிறர் நலம் கருதுதல். யாவருடனும் சேர்ந்து ஒத்துழைத்தல் போன்ற பண்புகளை ஏற்படுத்துகிறது. உள்ளக் கிளர்ச்சிகளையும், குண சீலங்களையும் விருத்தியடையச் செய்கிறது. திடசித்தம், பொறுமை, விடாமுயற்சி ஆகிய பண்புகளை கடைப்பிடிப்பதற்கு உதவி புரிகிறது.

கல்வி ஸ்தானங்களிலே குரு சிஸ்யர் இடையே சுமுகமாக இசைந்து வாழும் தன்மையையும், நல்லெண்ணத்தையும்கொடுக்கிறது. ஒருவருக்கு கீழ்ப்படிந்து, நற் குணங்களை ஏற்படுத்தி நல்ல குலமகனாய் வாழ இக்கலை பயன்படுகிறது. இலக்கியம்,சமயம் போன்ற துறைகளை அறிய உறுதுணையாய் இருக்கிறது. இசை அறிவு, தாள வேறுபாடுகள், உயர்ந்த கணித முறைகள் ஆகியவற்றையும் அறிய உதவி புரிகிறது. சமூகத்துடன் இணைந்து வாழ வழி வகுக்கின்றது. சிறந்த ரசனையுடைய, ஆளுமையுடைய மனிதனாக வாழ வழி செய்கிறது. எனவே நாட்டியக் கலையே முதன்மைக் கலையாக, புனித ஆன்மீக வளர்ச்சியுள்ள நற் பண்புகள் பொருந்தியுள்ள, சிறப்பாற்றலுள்ள ஒரு சமூகத்தை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை என்றே கூறலாம்.

**திருமதி. ஆன்ஸ்டெய்சி பிறின்ஸ்**

நடன ஆசிரியர்,

யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்

# ஆரம்பக்கல்வி ஒரு நோக்கு

பாடசாலைச் சூழல் என்பது பிள்ளைகளின் வாழ்வில் ஓர் முக்கிய பங்கு வகிக்கிறது. அச் சூழலில் மாணவரின் பல்வேறு ஆற்றல்கள், திறன்கள் தேர்ச்சிகள் இனங்காணப்பட்டு வளர்த்தெடுக்கப்படுகின்றன. அத்துடன அச் சூழல் அவர்கள் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து வெற்றிநடை போட வேண்டியவர்களாகவும் காணப்படுகின்றோம். எனவேதான் ஆரம்பக் கல்வி என்பது மாணவர்களது வாழ்க்கையை தீர்மானிக்கும் மூல காரணியாகவே அமைந்து விடுகிறது. ஆரம்பக் கல்வியில் 7 அடிப்படைத் தேர்ச்சிகள் இப்போது அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.

1. தொடர்பாடல் தொடர்பான தேர்ச்சிகள்
2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்
3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்
4. வேலை உலகிற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்
5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்
6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தும் விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்.
7. கற்றலுக்காக கற்றல் தொடர்பான தேர்ச்சிகள்.

என்பனவே அவை இவற்றை மையமாகக் கொண்டே ஆரம்பக் கல்வியின் கற்றல் கற்பித்தல் முன்னெடுக்கப்படுகின்றன. ஆரம்பக் கல்வியில் முதன்மை நிலை ஒன்றில் தரம் 1 உம் 2 உம் முதன்மை நிலை இரண்டில் தரம் 3 உம் 4 உம் முதன்மை நிலை மூன்றில் தரம் 5 உம் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆரம்பக் கல்வி மேலே கூறப்பட்ட 7 அடிப்படைத் தேர்ச்சிகளை மையமாகக் கொண்டு தாய்மொழி, கணிதம், சுற்றாடல் சார் செயற்பாடுகள், சமயம், ஆங்கிலம், வாய்மொழி ஆங்கிலம், வாய்மொழி சிங்களம் என்ற பாடங்களை உள்ளடக்கியதாகவும் அழகியல், ஆக்கம், விஞ்ஞானம், விழுமியங்கள், உடல் விருத்தி சுகாதாரம் சார்ந்த மேலதிக தேர்ச்சிகளுடன், இணைபாடவிதான செயற்பாடுகள் மூலமாகவும் விருத்தி செய்யப்படுகின்றன.

பிள்ளையின் முன்னேற்றம் கற்றல் இடர்பாடு தகவல்களை அறியும் முறைசாரா, முறை சார்ந்த கணிப்பீடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப் படுகின்றன.இதனூடாக மாணவர்கள் இனங்காணப்பட்டு சிறப்புத் தேர்ச்சி உடையவர்கள் மேலும் மேம்படுத்தப்படுபவர்களாகவும், பரிகாரம் தேவைப்படுபவர்களாகவும், வலுவூட்டப்படுபவர்களாகவும் கற்றலின் குறிக்கோள்களை எய்தச் , செய்வதற்கும் ஏற்றவாறு முழுமையான முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. மேலும் ஆரம்பக் கல்வியில் தற்போது ஒரு பிள்ளையின் அடைவை இன்னொரு பிள்ளையின் அடைவோடு ஒப்பிடாது குறித்த ஒரு நோக்குடன் நியதியுடன் ஒப்பிட்டுத் தீர்மானம் எடுப்பதற்கு நியதி சார்ந்த அடிப்படைக கணிப்பீட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ஆரம்பக் கல்வி மாணவர் உடல் விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தில் உடலியக்கச் செயற்பாடுகள் எனும் வேலைத்திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் விளையாட்டு, விநோதச் செயற்பாடுகளும், எழுத்து வேலைகள் என ஆரம்பக் கல்விப் பருவத்தினருக்கு பொருத்தமான கற்றல்

கற்பித்தல் முறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆரம்பக் கல்விக் கற்றல் கற்பித்தல் செயன்முறையில் மாணவர் செய்து கற்றல் என்பது மிகவும்மட சிறப்பானது என கல்வியியலாளர்களால் கூறப்பட்டுள்ளது. கன்பியூசியஸ் (Comfusius) என்ற அறிஞர்.

அவர்கள் கேட்பவற்றை மறந்து விடுகின்றனர்
பார்ப்பவற்றை நினைவில் கொள்கின்றனர். ஆனால்
செயல் ரீதியாகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும்
போது கற்றுக் கொள்கின்றனர்

என்ற கருத்தை ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் என்ற வகையில் நினைவிற் கொள்ள விழைகின்றேன். எனவே ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவத்தைஉணர்ந்து நாளைய தலைமுறை சிறக்க அரும்பெரும் கற்பித்தற் பெரும் பணியைச் செவ்வனே ஆற்றுவோம்

**திருமதி. இராஜரஞ்சிதம் சந்திரசேகரம்**
ஆசிரியர், யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்

## சங்கீதக் கலையின் வளர்ச்சி

நாதப்பிரம்மமாய் விளங்கும் இறைவனை அடைவதற்கு சிறந்த சாதனமாக விளங்குவது இசையே ஆகும். பாமர மக்கள் முதல் படித்தவர் வரை சுவைத்து அனுபவிக்கக்கூடிய தன்மையைக் கொண்டதும் இசையே. இக் கலையானது பல வழிகளிலும் சிறந்து விளங்குவதை அவதானிக்க முடிகிறது. சங்கீதம் ஒரு புனிதமான கலையாகும். மனிதன் நாகரிகம் அடைய முன்னரே இசை ஒரு தனிப் பாசையாக விளங்கியது. மொழி மூலம் தனது உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியாத காலத்தில் அதாவது சிந்துவெளி நாகரிகத்திற்கு முற்பட்ட காலத்தில் மனிதன் தனது உணர்ச்சிகளை ஓசை மூலம் வெளிப்படுத்தினான். பறவைகள், மிருகங்கள் வெளிப்படுத்திய ஓசைகள் மனிதனுக்கு முன்னோடியாக அமைந்தது எனலாம். முற்காலத்தில் மனிதன் மகிழ்ச்சியை வெளிப்படுத்த ஆரவாரித்தும் துன்பத்தின் போது ஓலமிட்டும் பயத்தை வெளிப்படுத்த இரைந்தும் தன் வாழ்க்கையை நடத்தினான். பறவைகளின் இனிமையான ஒலி ஆனந்தம் தந்தது. இனிமையான ஓசையிலிருந்து பிறந்தவையெல்லாம் இசையாகின.

நாகரிகம் வளர வளர கலைகளும் வளர்ந்தன. சாமவேத காலத்தில் நி, ஸ, ரி என்ற மூன்று ஸ்வரங்களுமே இசைக்கப்பட்டன. இவற்றை அடிப்படையாகக் கொண்டே ஏழு ஸ்வரங்களும் பிறந்தன. ஆதி காலத்தில் கீதம், வாத்தியம், நிருத்தியம் என்ற மூன்றும் சேர்ந்ததே சங்கீதம் எனக் கருதப்பட்டது. பின்னர் சங்கீதக் கலை விசேடமாக வளர்ச்சி அடைந்ததால் கீதம், வாத்தியம் இரண்டும் சேர்ந்து சங்கீதம் எனக்கருதப்பட்டது. நிருத்தியக் கலை தனியாக வளர்ச்சியடைந்தது. தற்போது இரு கலைகளும் பல்வேறு வகையில் விருத்தி அடைந்துள்ளன.

**திருமதி. ஜெ. முகில்வண்ணன்**
சங்கீத ஆசிரியர், யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்



ஆரம்பப் பிரிவு மாணவர்கள்


இடைநிலைப் பிரிவு மாணவர்கள்

# 2008 - 2018 வரையான சாதனையாளர்கள்

| ஆண்டு | நிகழ்ச்சியின் பெயர் | கோட்டம்,வலயம் மாவட்டம்,மாகாணம் | இடம் | பெயர் |
|---|---|---|---|---|
| 2008 | சைவசமய புராணபடலம் | வலய மட்டம் | சான்றிதழ் | சி.கம்சிகா |
| 2008 | சைவசமய புராணபடலம் | வலய மட்டம் | சான்றிதழ் | ர.தவபாலினி |
| 2008 | வலயக் கண்காட்சி | வலய மட்டம் | | ச.கௌசியா |
| | வலயக் கண்காட்சி | வலய மட்டம் | | உ.கஸ்தூரி |
| | வலயக் கண்காட்சி | வலய மட்டம் | | வ.எழில்ச்செல்வன் |
| | வலயக் கண்காட்சி | வலய மட்டம் | | க.இன்பநேசன் |
| 2008 | கட்டுரை வரைதல் | வலய மட்டம் | 2ம் இடம் | ம.தயாழினி |
| | நாட்டுக்கூத்து(சிந்து நடை) | வலய மட்டம் | 1ம் இடம் | குழு |
| 2008 | Dictation | வலய மட்டம் | 1ம் இடம் | த.றஜிந்தா |
| 2008 | சமூகவிஞ்ஞான பொதுஅறிவு | வலய மட்டம் | 1ம் இடம் | அ.மதுஜா |
| 2009 | கோலப்போட்டி | வலய மட்டம் | சாதாரணம் | வ.வேதினி |
| | கோலப்போட்டி | வலய மட்டம் | சிறப்பு | அ.ஜதுசனா |
| | கோலப்போட்டி | வலய மட்டம் | சிறப்பு | செ.ஜெனார்த்தனன் |
| 2010 | சிறுகதை ஆக்கம் | வலய மட்டம் | 2ம் இடம் | த.தர்மிகா |
| 2010 | இசைக்குழு | வலய மட்டம் | 2ம் இடம் | குழு |
| 2010 | விவசாய அறிவுப்போட்டி | வலய மட்டம் | 9ம் இடம் | ம.சுதாகரன் |
| 2010 | சமூகவிஞ்ஞான பொதுஅறிவு | வலய மட்டம் | 3ம் இடம் | க.கஸ்தூரி |
| | சமூகவிஞ்ஞான பொதுஅறிவு | வலய மட்டம் | 1ம் இடம் | ப.விஸ்ணுகரன் |
| | சமூகவிஞ்ஞான பொதுஅறிவு | வலய மட்டம் | 2ம் இடம் | கு.றஜீவா |
| | சமூகவிஞ்ஞான பொதுஅறிவு | வலய மட்டம் | 1ம் இடம் | ஞா.பிருசாந்தி |
| | சமூகவிஞ்ஞான பொதுஅறிவு | வலய மட்டம் | 2ம் இடம் | அ.மதுஜா |
| | சமூகவிஞ்ஞான பொதுஅறிவு | வலய மட்டம் | 3ம் இடம் | ம.தயாளினி |
| | சமூகவிஞ்ஞான பொதுஅறிவு | வலய மட்டம் | 1ம் இடம் | ம.சுதாகரன் |
| | சமூகவிஞ்ஞான பொதுஅறிவு | வலய மட்டம் | 2ம் இடம் | உ.கஸ்தூரி |
| | சமூகவிஞ்ஞான பொதுஅறிவு | வலய மட்டம் | 3ம் இடம் | த.தர்மிகா |
| 2010 | சமூகவிஞ்ஞான பொதுஅறிவு | மாகாணமட்டம் | 1ம் இடம் | ஞா.பிருசாந்தி |
| 2010 | சமூகவிஞ்ஞான பொதுஅறிவு | தேசியமட்டம் | 7ம் இடம் | ஞா.பிருசாந்தி |
| 2011 | Action Song (grade 1-2) | வலய மட்டம் | 2ம் இடம் | குழு |
| 2011 | | வலய மட்டம் | 3ம் இடம் | குழு |
| 2011 | Story Telling | வலய மட்டம் | 3ம் இடம் | பா.விதுசன் |
| 2011 | Story Telling | மாகாணமட்டம் | 2ம் இடம் | பா.கோசலா |
| 2011 | வாசிப்பு மாதம் (எழுத்து) | வலய மட்டம் | 1ம் இடம் | மோகன்ராஜ் |
| | வாசிப்பு மாதம் (வாசிப்பு) | வலய மட்டம் | 3ம் இடம் | ஜெ.ஜெகதீஸ்வரன் |
| 2011 | சமூகவிஞ்ஞானப் போட்டி | மாகாணமட்டம் | 1ம் இடம் | ஞா.பிருசாந்தி |
| | சமூகவிஞ்ஞானப் போட்டி | தேசிய மட்டம் | 5ம் இடம் | ஞா.பிருசாந்தி |
| 2012 | சமூகவிஞ்ஞானப் போட்டி | மாகாணமட்டம் | 1ம் இடம் | ஞா.பிருசாந்தி |
| | சமூகவிஞ்ஞானப் போட்டி | தேசிய மட்டம் | 5ம் இடம் | ஞா.பிருசாந்தி |
| 2013 | சைவசமயக் கண்காட்சி(ஆக்கம்) | வலய மட்டம் | தேர்ச்சி | செ.தர்சிகா |

| ஆண்டு | நிகழ்ச்சியின் பெயர் | கோட்டம்,வலயம் மாவட்டம்,மாகாணம் | இடம் | பெயர் |
|---|---|---|---|---|
| 2013 | சைவசமயக் கண்காட்சி(ஆக்கம்) | வலய மட்டம் | 2ம் இடம் | செ.ஜெனார்த்தனன் |
| | சைவசமயக் கண்காட்சி(ஆக்கம்) | வலய மட்டம் | தேர்ச்சி | விஇதர்சிகா |
| 2013 | சமூகவிஞ்ஞானப் போட்டி | வலய மட்டம் | 1ம் இடம் | ஜெ.ஜெகதீஸ்வரன் |
| 2013 | கோலப் போட்டி | வலய மட்டம் | தேர்ச்சி | பி.டனிசா |
| | கோலப் போட்டி | வலய மட்டம் | தேர்ச்சி | மோ.விசாளினி |
| | கோலப் போட்டி | வலய மட்டம் | தேர்ச்சி | வி.வைஸ்ணவன் |
| 2013 | துரிதகணிதச் செய்கை | வலய மட்டம் | | ஜெ.துவாரகா |
| | துரிதகணிதச் செய்கை | வலய மட்டம் | | சி.சுவேதா |
| | துரிதகணிதச் செய்கை | வலய மட்டம் | | வ.சரோணியா |
| | துரிதகணிதச் செய்கை | வலய மட்டம் | | பி.டனிசா |
| | துரிதகணிதச் செய்கை | வலய மட்டம் | | அ.மோகன்ராஜ் |
| | துரிதகணிதச் செய்கை | வலய மட்டம் | | சி.சிவபானு |
| 2013 | ICT Competation | வலய மட்டம் | 1ம் இடம் | அ.மோகன்ராஜ் |
| 2013 | கணித வினாடிவினா | வலய மட்டம் | 2ம் இடம் | ஜெ.ஜெகதீஸ்வரன் |
| 2013 | தேசியவாசிப்புமாதம்(வாசிப்பு) | வலய மட்டம் | 3ம் இடம் | அ.மோகன்ராஜ் |
| | தேசியவாசிப்புமாதம்(வாசிப்பு) | வலய மட்டம் | 2ம் இடம் | பா.லக்சிகா |
| | சித்திரப் போட்டி | வலய மட்டம் | 2ம் இடம் | யோ.தனோஜன் |
| 2013 | Dicatation | வலய மட்டம் | 2ம் இடம் | அ.மோகன்ராஜ் |
| | | வலய மட்டம் | 3ம் இடம் | சி.சிவபானு |
| 2013 | RECITATION | வலய மட்டம் | 1ம் இடம் | அ.மோகன்ராஜ் |
| 2013 | RECITATION | வலய மட்டம் | 5ம் இடம் | பா.கோசலா |
| 2013 | Reading | வலய மட்டம் | 1ம் இடம் | அ.மோகன்ராஜ் |
| 2013 | ROLE PLAY | வலய மட்டம் | 2ம் இடம் | குழு |
| 2013 | கணித வினா விடை | வலய மட்டம் | 2ம் இடம் | ஜெ.ஜெகதீஸ்வரன் |
| | கணித வினா விடை | மாகாணமட்டம் | 4ம் இடம் | ஜெ.ஜெகதீஸ்வரன் |
| 2014 | ஒலிம்பியாட் (கணிதம்) | வலய மட்டம் | 1ம் இடம் | ஜெ.ஜெகதீஸ்வரன் |
| | ஒலிம்பியாட் (கணிதம்) | வலய மட்டம் | 4ம் இடம் | பா.இலக்சன் |
| 2014 | கணித வினாடி வினா | வலய மட்டம் | 1ம் இடம் | ஜெ.ஜெகதீஸ்வரன் |
| 2014 | IMACS | வலய மட்டம் | 9ம் இடம் | சி.பிரணவி |
| | தகவல் தொடர்பாடல் வி.விடை | வலய மட்டம் | தேர்ச்சி | அ.ஜனுசன் |
| | தகவல் தொடர்பாடல் வி.விடை | வலய மட்டம் | தேர்ச்சி | கு.லக்ஸன் |
| 2014 | Recitation | வலய மட்டம் | 2ம் இடம் | சு.விதுசாலினி |
| 2014 | Recitation | வலய மட்டம் | 3ம் இடம் | பா.கோசலா |
| 2014 | Role Play | வலய மட்டம் | 2ம் இடம் | குழு |
| 2014 | Junior Drama | வலய மட்டம் | 2ம் இடம் | குழு |
| 2014 | வாசிப்பு மாதம் கட்டுரை | வலய மட்டம் | 2ம் இடம் | அ.ஜனுசன் |
| 2014 | வாசிப்பு மாதம் கட்டுரை | வலய மட்டம் | 3ம் இடம் | செ.யதுசன் |
| 2014 | வாசிப்பு மாதம் கட்டுரை | வலய மட்டம் | 2ம் இடம் | ம.கோபிகா |

| ஆண்டு | நிகழ்ச்சியின் பெயர் | கோட்டம்,வலயம் மாவட்டம்,மாகாணம் | இடம் | பெயர் |
|---|---|---|---|---|
| 2014 | வாசிப்பு மாதம் கட்டுரை | வலய மட்டம் | 3ம் இடம் | கு.றஜீவா |
| 2014 | குறுக்கெழுத்துப் போட்டி | வலய மட்டம் | 1ம் இடம் | ஜெ.ஜெகதீஸ்வரன் |
| 2014 | குறுக்கெழுத்துப் போட்டி | வலய மட்டம் | 2ம் இடம் | ஜே.றம்சியா |
| 2014 | குறுக்கெழுத்துப் போட்டி | வலய மட்டம் | 1ம் இடம் | து.சம்சிகா |
| 2014 | பேச்சுப் போட்டி | வலய மட்டம் | 2ம் இடம் | சு.விதுசாலினி |
| 2014 | பேச்சுப் போட்டி | வலய மட்டம் | 3ம் இடம் | வ.சரோணியா |
| 2014 | Reading Aloud | வலய மட்டம் | 2ம் இடம் | அ.ஜனுசன் |
| 2014 | Reading Aloud | வலய மட்டம் | 3ம் இடம் | பா.லினோஜன் |
| 2014 | சித்திரப் போட்டி | வலய மட்டம் | 3ம் இடம் | ந.பானுஜன் |
| 2015 | சைவசமயக் கண்காட்சி | வலய மட்டம் | 2ம் இடம் | செ.யதுசன் |
|  | சைவசமயக் கண்காட்சி | வலய மட்டம் | 1ம் இடம் | ச.அபிவிஸ்னு |
|  | சைவசமயக் கண்காட்சி | வலய மட்டம் | 2ம் இடம் | வி.விதுசன் |
|  | சைவசமயக் கண்காட்சி | வலய மட்டம் | தேர்ச்சி | செ.ஜெனார்த்தனன் |
| 2015 | சமூகவிஞ்ஞானப் போட்டி | வலய மட்டம் | 1ம் இடம் | லா.லக்சன் |
| 2015 | கணித வினாடிவினா | வலய மட்டம் | 1ம் இடம் | ஜெ.ஜெகதீஸ்வரன் |
|  | சித்திரப்போட்டி | வலய மட்டம் | 2ம் இடம் | ந.பானுஜன் |
| 2015 | Recitation | வலய மட்டம் | 3ம் இடம் | ச.அபிஸ்ணவி |
|  | Recitation | வலய மட்டம் | 1ம் இடம் | ச.அபிவிஸ்னு |
| 2016 | IMACS | வலய மட்டம் | சிற.தேர்ச்சி | சி.பிரணவி |
| 2016 | சித்திரப் போட்டி | வலய மட்டம் | சிற.தேர்ச்சி | த.பானுஜன் |
| 2016 | சமூகவிஞ்ஞானப் போட்டி | வலய மட்டம் | 2ம் இடம் | ஜெ.துவாரகன் |
|  | சமூகவிஞ்ஞானப் போட்டி | வலய மட்டம் | 3ம் இடம் | ச.அபிஸ்ணவி |
|  | சமூகவிஞ்ஞானப் போட்டி | வலய மட்டம் | 1ம் இடம் | பா.சோபினி |
| 2016 | சமூகவிஞ்ஞானப் போட்டி | மாகாண மட்டம் | 2ம் இடம் | ச.அபிஸ்ணவி |
| 2016 | சமூகவிஞ்ஞானப் போட்டி | தேசிய மட்டம் | 4ம் இடம் | ச.அபிஸ்ணவி |
| 2016 | கணிதஒலிம்பியாட் போட்டி | வலய மட்டம் |  | செ.யதுசன் |
|  | கணிதஒலிம்பியாட் போட்டி | வலய மட்டம் |  | நி.சயந்தா |
|  | கணிதஒலிம்பியாட் போட்டி | வலய மட்டம் |  | ச.அபிஸ்ணவி |
|  | கணிதஒலிம்பியாட் போட்டி | வலய மட்டம் |  | ஜெ.ஜெகதீஸ்வரன் |
| 2016 | Recitation | வலய மட்டம் | 1ம் இடம் | சி.அபர்ணா |
|  | Recitation | மாகாண மட்டம் | 4ம் இடம் | சி.அபர்ணா |
|  | Recitation | வலய மட்டம் | 1ம் இடம் | ச.அபிவிஸ்னு |
| 2016 | Pole Play | வலய மட்டம் | 2ம் இடம் | குழு |
|  | Senior Dialog Drama | வலய மட்டம் | 2ம் இடம் | குழு |
| 2017 | கணிதஒலிம்பியாட் | வலய மட்டம் |  | ஜெ.துவாரகா |
|  | கணிதஒலிம்பியாட் | வலய மட்டம் |  | செ.யதுசன் |
|  | கணிதஒலிம்பியாட் | வலய மட்டம் |  | ஜெ.ஜெகதீஸ்வரன் |
| 2017 | கணிதஒலிம்பியாட் | மாகாண மட்டம் | 3ம் இடம் | ஜெ.துவாரகா |

| ஆண்டு | நிகழ்ச்சியின் பெயர் | கோட்டம்,வலயம் மாவட்டம்,மாகாணம் | இடம் | பெயர் |
|---|---|---|---|---|
| 2017 | கணிதஒலிம்பியாட் | மாகாண மட்டம் | 3ம் இடம் | ஜெ.ஜெகதீஸ்வரன் |
| | கணிதவினாடி வினா | வலய மட்டம் | 2ம் இடம் | ஜெ.ஜெகதீஸ்வரன் |
| | சமூக விஞ்ஞானப் போட்டி | வலய மட்டம் | 2ம் இடம் | நஇபானுஜன் |
| | சமூக விஞ்ஞானப் போட்டி | வலய மட்டம் | 1ம் இடம் | ஜெ.துவாரகா |
| | சமூக விஞ்ஞானப் போட்டி | வலய மட்டம் | 2ம் இடம் | பா.சோமினி |
| | Recitation | வலய மட்டம் | 3ம் இடம் | ச.அஸ்வினி |
| | Recitation | வலய மட்டம் | 2ம் இடம் | சு.விதுசாளினி |
| | மாலை கட்டுதல் போட்டி | வலய மட்டம் | தேர்ச்சி | த.ஹர்ணிகா |
| | மாலை கட்டுதல் போட்டி | வலய மட்டம் | தேர்ச்சி | த.தர்மிகா |
| | தோரணம் பின்னல் | வலய மட்டம் | தேர்ச்சி | ஸ்ரீ.கபிந்யன் |
| | மகளிர்தினக்கட்டுரையாக்கம் | வலய மட்டம் | 3ம் இடம் | ச.சஞ்சியா |
| | | | | |

**2008 - 2017 வரை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றோர் விபரம்**

| ஆண்டு | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்தி வீதம் | புள்ளிகள் | பெயர் |
|---|---|---|---|---|---|
| 2008 | 17 | 03 | 18% | 143<br>120<br>114 | த.றஜித்தா<br>சி.சர்மிலன்<br>செ.துசீலன் |
| 2009 | 16 | - | - | - | - |
| 2010 | 15 | 02 | 13% | 149<br>148 | சி.பிரதீப்<br>லோ..தட்சரூபா |
| 2011 | 16 | - | - | - | - |
| 2012 | 23 | 01 | 04% | 157 | ஜெ.ஜெகதீஸ்வரன். |
| 2013 | 34 | 02 | 10% | 172<br>160 | அ.மோகனராஜ்<br>சா.பானுஜன் |
| 2014 | 21 | 02 | 6% | 156<br>155 | அ.யனுசன்<br>செ.யதுசன் |
| 2015 | 23 | 04 | 17% | 181<br>166<br>157<br>156 | பி.டனிசா<br>ஜெ.துவாரகா<br>வ.சரோனிஜா<br>ஜெ.துவாரகன் |
| 2016 | 07 | - | - | - | - |
| 2017 | 12 | 01 | 8% | 155 | ஸ்ரீ.பிரணவி |

# 2008 - 2018 வரையான விளையாட்டுத் துறைச் சாதனையாளர்கள்

| ஆண்டு | விளையாட்டின் பெயர் | கோட்டம்,வலயம் மாவட்டம்,மாகாணம் | இடம் | பெயர் |
|---|---|---|---|---|
| 2008 | 100 M ஓட்டம் | வலய மட்டம் | 1ம் இடம் | த.மதுசன் |
| 2008 | 200 M ஓட்டம் | வலய மட்டம் | 1ம் இடம் | த.மதுசன் |
| 2008 | நீளம் பாய்தல் | வலய மட்டம் | 2ம் இடம் | த.மதுசன் |
| 2008 | 110 M தடைதாண்டல் | வலய மட்டம் | 2ம் இடம் | செ.றொசாந் |
| 2008 | நீளம் பாய்தல் | மாவட்ட மட்டம் | 1ம் இடம் | த.மதுசன் |
| 2008 | 100 M ஓட்டம் | மாவட்ட மட்டம் | 2ம் இடம் | த.மதுசன் |
| 2008 | நீளம் பாய்தல் | மாகாண மட்டம் | 1ம் இடம் | த.மதுசன் |
| 2008 | 100 M ஓட்டம் | மாகாண மட்டம் | 2ம் இடம் | த.மதுசன் |
| 2009 | 100 M ஓட்டம் | வலய மட்டம் | 1ம் இடம் | ப.அஜித்குமார் |
| 2009 | 100 M ஓட்டம் | வலய மட்டம் | 2ம் இடம் | த.மதுசன் |
| 2009 | நீளம் | வலய மட்டம் | 1ம் இடம் | த.மதுசன் |
| 2010 | 100 M ஓட்டம் | வலய மட்டம் | 1ம் இடம் | த.மதுசன் |
| 2013 | குண்டு எறிதல் | வலய மட்டம் | 2ம் இடம் | கோபிகரர் |
| 2014 | கரம்போர்ட் | வலய மட்டம் | 1ம் இடம் | குழு |
| 2014 | Athletic 200M | வலய மட்டம் | 5ம் இடம் | கி.விதுசன் |
| 2014 | உயரம் பாய்தல் | வலய மட்டம் | 3ம் இடம் | கி.விதுசன் |
| 2014 | உயரம் பாய்தல் | வலய மட்டம் | 5ம் இடம் | யோ.தனோஜன் |
| 2014 | உயரம் பாய்தல் | வலய மட்டம் | 4ம் இடம் | பி.லக்சிகா |
| 2014 | 100 M ஓட்டம் | வலய மட்டம் | 2ம் இடம் | ஞா.லோஜினி |
| 2014 | உயரம் பாய்தல் | மாகாண மட்டம் | 1ம் இடம் | கி.விதுசன் |
| 2015 | குண்டு எறிதல் | வலய மட்டம் | 2ம் இடம் | கு.லக்சன் |
| 2015 | கபடிப் போட்டி | வலய மட்டம் | 3ம் இடம் | குழு |
| 2015 | தட்டெறிதல் | வலய மட்டம் | 3ம் இடம் | கு.லக்சன் |
| 2015 | 100 M ஓட்டம் | மாகாண மட்டம் | 3ம் இடம் | சு.விதுசாளினி |
| 2016 | குண்டெறிதல், தட்டு எறிதல் | தேசிய மட்டம் | 2ம் இடம் | நி.சாளினி |
| 2016 | 4 x100M அஞ்சல் | வலய மட்டம் | 2ம் இடம் | சு.விதுசாளினி |
| | | வலய மட்டம் | 2ம் இடம் | ஞா.லோஜினி |
| | | வலய மட்டம் | 2ம் இடம் | ச.சஞ்சியா |
| | | வலய மட்டம் | 2ம் இடம் | கு.கீர்த்திகா |
| 2017 | நீளம் பாய்தல் | வலய மட்டம் | 1ம் இடம் | செ.யதுசன் |
| 2017 | 100 M ஓட்டம் | மாகாண மட்டம் | 1ம் இடம் | த.தர்மிகா |
| 2017 | உயரம் பாய்தல் | வலய மட்டம் | 3ம் இடம் | ம.சாகிதா |
| 2017 | 100 M ஓட்டம் | வலய மட்டம் | 3ம் இடம் | சு.விதுசாளினி |
| 2017 | 100 M ஓட்டம் | வலய மட்டம் | 2ம் இடம் | ஞ.லோஜினி |
| 2017 | 4 x400M அஞ்சல் | வலய மட்டம் | 3ம் இடம் | சு.விதுசாளினி |
| | | | | ஞா.லோஜினி |
| | | | | கு.கீர்த்திகா |
| | | | | ச.சஞ்சியா |

# 2008 - 2017 வரையான சாதனையாளர்கள்

| ஆண்டு | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்தி வீதம் | உயர் சித்தி | | | | | பெயர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | A | B | C | S | W | |
| 2008 | 17 | 07 | 41% | 1 | 4 | - | 3 | 1 | த.டெலக்சன் |
| 2009 | 20 | 04 | 20% | 3 | 1 | - | 4 | 1 | அ.அமுதினி |
| 2010 | 11 | 06 | 55% | 4 | 3 | 1 | - | 1 | ம.சுதாகரன் |
| 2011 | 15 | 08 | 53% | 5 | 1 | 3 | - | - | த.தர்மிகா |
| 2012 | 22 | 09 | 41% | 4 | 3 | 1 | 1 | - | அ.மதுஜா |
| 2013 | 11 | 09 | 82% | 3 | 2 | 3 | - | 1 | ச.கஜிதா |
| 2014 | 13 | 09 | 69% | 4 | 2 | 1 | 2 | - | அ.மதுசாளினி |
| 2015 | 12 | 02 | 13% | - | 1 | 5 | 2 | 1 | த.கிரிசிகா |
| 2016 | 15 | 07 | 47% | 2 | 1 | 4 | 2 | - | வி.விதுசன் |
| 2017 | 17 | 08 | 47% | 7 | 1 | 1 | - | - | யே.ரம்சிகா |

## தேசிய போட்டியில் பங்கு பற்றிய சாதனையாளர்கள்



## 2017 க.பொ.த (சா.த)பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்று 110ஆவது நிறைவு ஆண்டில் பெருமை சேர்த்த மாணவர்கள்



யேசுதாஸ் ரம்சிகா
7A B C



இராசகுமார் மிதிலா
5A B 2C S



தர்மானந்தம் ஜனனி
4A 3B C S



பகீரதன் அர்ச்சனா
3A B 2C 2S



சிறீதரன் வித்தியா
3A 3C 2S

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து எமது பாடசாலையிலேயே கல்வி பயிலும் பெருமைக்குரிய மாணவர்கள்.



ஜெகநாதன் ஜெகதீஸ்வரன்
157 புள்ளிகள்



செல்வராசா யதுசன்
155 புள்ளிகள்



ஜெகநாதன் துவாரகா
166 புள்ளிகள்



ஜெகநாதன் துவாரகன்
156 புள்ளிகள்



சிறீராஜகுமார் பிரணவி
155 புள்ளிகள்

## அம்மா

உன் கருவறையினுள் என்னை
பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்து
அல்லும் பகலும் - கண்ணிமை
காப்பது போல் காத்தவளே!

உன் புடவை பிடித்து
சுத்தி சுத்தி வந்த நாட்கள்
இன்று எட்டி எட்டிப் பார்க்கின்றது -
என்
எழுது கோல் வழியாக

நினைவுகள் சரிய சரிய
கண்ணீர்த் துளி கசிய கசிய
பழைய நினைவுகள் பம்பரமாய் சுழல
மனதிற்குள் நிறம்பிரிகை நிகழ்கின்றது

அம்மா உன்
கைபட்டதால் தானே
கடுகுக்கும், கருவேப்பிலைக்கும்
சுவை கூடியது

உன் வெகுளித் தனத்திடம்
தோற்றுத் தானே - முழு
வெள்ளை நிலவு
தலை குனிந்தது

மழலைப் பருவத்தின்
விளையாட்டுக் காயங்களுக்காய்
விழிகளில் விளக் கெரித்து - என்
படுக்கைக்கு காவல் இருந்தாய்

எனது சிறு சிறு வெற்றிகளுக்கு
கோப்பைகள் கொடுத்தது
உனது இதயத் தழுவலும்
பெருமைப் புன்னகையுமல்லவா?

அன்பை அணு அணுவாய்
அனுபவிப்பதற்கு - அம்மா
உன் மடி மட்டுமே - எனக்கு
உத்தரவாதம்!

நான் எப்பொழுதும் தேடும்
சொர்க்கம் நீயே
மீண்டும் உன் கருவறைக்குள்
எனக்கோர் இடம் கிடைக்குமா...........?

**செல்வி. யே. ஜெனிவா**
**தரம் 10**

---

## ஒற்றுமை

இயற்கையின் ஒற்றமை மனிதனிடம் ஏது?
தனக்குக் கிடைத்த உணவினை
பகிர்ந்து உண்ணும் காக்கை..
ஒவ்வொன்றாக விண்ணில் தோன்றி
அழகினைக் கூட்டும் விண்மீன்கள்..
ஒன்றாக கூடி வந்து கரையை
உடைத்து விடும் அலைகள்
சூறாவளியாக வந்து மரத்தை
முறிக்கும் காற்று........
இவைகளிடம் கேட்டுத் தெரிந்து
கொள்ளுங்கள் ஒற்றுமையை........???

**செல்வன்.ந. பானுஜன்**
**தரம் 7**

# விஞ்ஞான வளர்ச்சியின் பயன்கள்

கல்லையும் கல்லையும் உரசி தீயைக் கண்டு பிடித்ததிலிருந்தே மனிதனின் கண்டுபிடிப்புக்கள் ஆரம்பித்தன. அன்றிலிருந்து இன்றுவரை விஞ்ஞானம் வானளாவிய ரீதியில் வளர்ந்து விண்ணுக்கும் மண்ணிற்கும் இடையே விந்தைகள் செய்துகொண்டிருக்கிறது. விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் இன்று எமக்கு எவ்வளவு நன்மைகள் ஏற்பட்டுள்ளன. மனிதன் கருவிலே தோன்றிய காலத்திலிருந்து அவனது ஆயுள் முடிந்தபின்பும் விஞ்ஞானத்தின் பணி தொடர்வதைக் காண்கிறோம்.

மருத்துவத் துறையில் நோய்களைக் கண்டுபிடித்த பின் அவற்றைக் குணப்படுத்துவதற்கும், விஞ்ஞான உபகரணங்கள் பெரிதும் உதவுகின்றன. இதனால் இன்று இறப்புக்கள் குறைந்து மக்களது வாழ்க்கைத்தரம் உயர்கின்றது. வருமுன் காப்பது சிறந்ததல்லவா? என்ற பொன்மொழிக்கேற்ப விஞ்ஞான தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்களும் மருத்துவ ஆராய்ச்சி முடிவுகளும் உதவுகின்றன.

கல்வித் துறையில் இன்று விஞ்ஞானத்தின் பங்களிப்பு அளப்பரியதாகும். தொலைக்காட்சி, வானொலி மட்டுமன்றி கணனியின் உபயோகம், கல்விக்கான ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் நவீன கற்பித்தல்முறை யாவும் விஞ்ஞான வளர்ச்சியின் விளைவுகள் ஆகும்.

போக்குவரத்து துறையின் முன்னேற்றத்திற்கும் விஞ்ஞானம் பலவகையில் சேவையாற்றி வருகின்றது. அந்தவகையில் இன்று ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக பரந்த உலகமானது சுருங்கிக் காணப்படுகின்றது. அதாவது உலகின் எப்பாகத்திலிருந்தும் நினைத்தவுடன் நினைத்த இடத்திற்கு செல்லக் கூடியதாக இருப்பது மிக விரைவான போக்குவரத்து வசதிகளினால் ஆகும். விண்வெளிப் பயணங்கள், கோள்கள், வானமண்டலங்கள் பற்றிய ஆராய்ச்சிகள் போன்றவை விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் ஏற்பட்டவை ஆகும்.

விவசாயத் துறையில் நவீன முறைகள் புகுத்தப்பட்டு விளைச்சல் பெருகியிருக்கிறது. இயற்கை அழிவுகள் முன்கூட்டியே அறியப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. விளைபொருட்கள் விளைந்த பின் நவீன முறைகளில் அறுவடை செய்யப்பட்டு நீண்ட காலம் வரை பழுதடையாது பாதுகாக்கப் படுகின்றன. அத்துடன் சமயலறைகளிலும் இன்று நவீன அடுப்புக்கள், மின்சாரத்தினால் இயங்கும் அரைக்கும் கருவிகள், குளிர்சாதனப் பெட்டிகள் எனப் பல்வேறு உபகரணங்கள் கையாளப்படுகின்றன.

விளையாட்டுத் துறையிலும் போக்குவரத்துத் துறையிலும் இன்று நவீனமயம் புகுந்துள்ளது. மக்களது பொருளாதார நடவடிக்கைகள் யாவும் இன்று விஞ்ஞானத்தின் உதவியால் விரைவாகவும் இலகுவாகவும் செய்து முடிக்கப்படுகின்றது.

இவ்வாறு பல்வேறு துறைகளிலும் நன்மைகள் புரிந்துவரும் விஞ்ஞான வளர்ச்சியே சில சந்தர்ப்பங்களில் மனிதனின் அழிவுக்கும் காரணமாகி விடுகின்றன. போர் ஆயுதங்கள் , யுத்தக்கப்பல்கள், துப்பாக்கிகள், ஏவுகணைகள் என்பனவும் மனிதகுலத்தின் அழிவுக்கான விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களே ஆகும். தீயவற்றை விலக்கி நல்லவற்றை பகுத்தறியும் அன்னப் பறவை நீரைத் தவிர்த்துப் பாலை அருந்துவது போல நாமும் விஞ்ஞானம் தரும் நன்மைகளைப் பயன்படுத்தி நன்மை பெறவேண்டுமே தவிர தீயனவற்றைப் பயன்படுத்தக் கூடாது. விஞ்ஞானத்தின் வளர்ச்சி மனிதகுலத்தின் நல்வாழ்விற்கு வழிவகுக்க வேண்டும்.

**செல்வன். செ. யதுசன்**
**தரம் 09**

# My Ambition

My ambition is to become a teacher of English.

As English is my favourite subject. I like learning and teaching English. I like this profession for various reasons. English is described as a great way to the world. It is on international language. In this fast moving world even a farmer or a housewife ever a beggar in cities needs a sound knowledge of English In this way English helps to enrich and update a student's knowledge.

Most of the students are weak in english such student's need a teacher of English. My main goal is to make teaching. My main goal is to make the children alert and active inthe classroom. Especially. I would like to be a teacher of English literature.

Although English literature is introduced for the G.C.E(O/L) G.C.E(A/L) as one of the subjects, there are shortage of English teachers. in teaching english literature. More over being a teacher of English. I can gather information about current affairs. and update my knowledge and be agood model for all.

The fame of a sincere English teacher will never dice, so this profession will give me a great satisfaction and live for ever.

**Saththiyaramesh Abishnavi**
Grade - 09
J/Madduvil South Saraswathy Vidyalayam

## உயிர்களிடத்தில் அன்பு கொள்வோம

"அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது". எனும் முதுமொழிக்கு அமைய தேர் எனும் உலகம் தங்கு தடையின்றி இயங்க அச்சாணி எனும் அன்பு அவசியம். அன்பு என்பது இனம், மதம், மொழி, பேதங்கள் அற்ற ஒன்றாகும். அன்பு எல்லை கடந்ததாகும். நாம் பெற்றோர், சகோதரர், உறவினர், நண்பர்கள் மற்றும் ஏனைய உயிரினங்கள் மீது அன்பு காட்டுகின்றோம்.

"அன்பின் வழியது உயிர்நிலை" என்பது வள்ளுவர் வாக்கு. மனிதர் மட்டுமன்றி உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளும் அன்பினை அடிப்படையாகக் கொண்டுள்ளன. பிற உயிர்களுக்கு அன்பு காட்டுதல், பேணுதல், என்பன அன்பே வடிவான கடவுளுக்குப் பிரியமான தொண்டாகும். அத்தோடு கடவுள் வழிபாடு அன்பினை அடிப்படையாகக் கொண்டு திகழ்கின்றது. அன்புதான் சிவம். அதனால் அன்பினை எப்பொழுதும் உள்ளத்திலிருந்து நினைத்துச் செயற்படல் வேண்டும். அன்பை மலராகவும் ஆர்வத்தை நீராகவும் கொண்டு வழிபாடு செய்யும் போது கடவுள் நம்பிக்கை பிறக்கிறது. அன்பினால் ஆகாதது ஒன்றுமில்லை. அன்பு வாழ்வுதான் சமய வாழ்வு. உலகிலுள்ள எல்லா உயிர்களிலும் கடவுள் நிறைந்திருப்பதால் எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்த வேண்டும். "அன்பில்லாத வாழ்க்கை என்பு தோல் போர்த்த உடம்பு" என்று திருவள்ளுவர் கூறுகிறார். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் உயர்ந்த பண்பாகும். அந்த மனோநிலை அன்பினாலே உருவாகிறது.

எமது உலகத்தில் முற்காலத்தில் பல்வேறு யுத்தங்கள் இடம்பெற்றன. இதற்கு முக்கிய காரணம் அன்பின்மையே ஆகும். இதற்கு எடுத்துக்காட்டாக ஜப்பான் நாட்டின் பாரம்பரிய நகரங்கள் மீதான தாக்குதல்களால் இலட்சக்கணக்கான மக்கள் காற்றோடு காற்றாக மறைந்தார்கள். இதற்கு முக்கிய காரணம் நாட்டுத் தலைவர்கள் மற்றும் நாட்டு மக்களிடையே அன்பின்மை ஆகும்.

ஒரு பக்கத்தில் இவ்வாறு அன்பின்மையால் உயிர்கள் காவுகொள்ளப்பட்ட போதும் இன்னொரு பக்கத்தில் அன்பு கொண்ட பல்வேறு நபர்களால் உயிர்கள் காக்கப்பட்டன. இதற்கு எடுத்துக்காட்டாக அன்னை திரேசா அம்மையார் பல்வேறு வறிய குழந்தைகளுக்கு உணவு இட்டு கல்வி வழங்கினார். அத்தோடு நைடிங் கேள் எனும் தாதியாகி தன் உயிரைப் பார்க்காது இரவு பகலாக யுத்தத்தில் காயப்பட்டவரை காப்பாற்றும் பணியில் அயராது பாடுபட்டார். இவர்கள் இப்படியெல்லாம் பணிகள் செய்வதற்கு முதற் காரணம் அன்பு எனும் அழகிய பொருளே ஆகும். எனவே மனிதர்களாகிய நாம் அன்பைக் கைக்கொண்டு எம் வாழ்வை வெற்றி கொள்வோம்.

**செல்வி.ஜெ. துவாரகா**

**தரம் 08**

# நம் தமிழர் பண்பாடு

மனித வரலாறு தொடங்கிய காலகட்டத்தில் நாகரிகம் குறைந்தவர்களாக அன்றைய மானிடர் இருந்தாலும் மனிதப் பண்பாடுகள் நிறையப் பெற்றவர்களாக அவர்கள் மிளிர்ந்திருக்கிறார்கள். உணவு, உடை, இருப்பிடம், போக்குவரத்து, சுகாதாரம், தொழில்கள் என்பவற்றில் மிகக் குறைந்தளவு வாழ்க்கை வசதியே கொண்டிருந்தாலும் விசாலமான மனங்களைப் பெற்றிருந்தனர். மனிதாபிமானம், மனிததர்மம்,வாழ்வியல் நெறிகள் என்பவற்றில் பெரிதும் முன்னேற்றம் கண்டிருந்தனர். சான்றாண்மையைப் போற்றி வாழ்க்கையிலும் கடைப்பிடித்து மனிதப் பண்பாட்டில் உயர்ந்தே விளங்கினர். ஆனால் தற்காலத்தில் சமூகங்களில் மனிதாபிமானமற்ற செயல்கள் அதிகரித்து செல்வது வேதனைக்குரிய விடயமே. அதிலும் பண்பாட்டில் உயர்நிலையில் விளங்கிய எம் தமிழர் சமூகம் பண்பாட்டில் கீழ்த்தரமான நிலைக்குச் சென்று கொண்டிருப்பதானது கண்டிக்கப்படவேண்டியதும் உடன் தடுத்து நிறுத்தப்படவேண்டியதும் காலத்தின் தேவையாகவுள்ளது.

”தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு”

என்று பாடினார் நாமக்கல் கவிஞர். அமிழ்தினும் இனிய தமிழ் மொழியைப் பேசும் தமிழர்களது வாழ்வு பல பண்பாட்டுச் சிறப்பியல்புகளால் வளம்பெற்றது. பழங்கால மக்கள் காடுகளில் விலங்குகளை வேட்டையாடி உணவு உண்டும், மரப்பட்டைகளையும், இலை தழைகளையும் ஆடையாக உடுத்தியும், மலைகளிலும், குகைகளிலும், மரப்பொந்துகளிலும் தம் வாழ்விடங்களை அமைத்து வாழ்ந்தனர். ஆனால் இன்று மக்களின் உணவு,உடை,உறையுள் பழக்கவழக்கம் முதலியவற்றில் வியத்தகு மாற்றங்களைக் காண்கின்றோம். மக்களின் இப்புறத்தோற்ற வளர்ச்சியினை கொண்ட நாகரிகமானது காலந்தோறும் மாறிக்கொண்டிருப்பதோடு நாட்டுக்குநாடு, காலத்துக்குக் காலம் வேறுபடும் இயல்புடையதே. ஆனால் பண்பாடு உள்ளத்தினின்றும் வெளிப்படும். சொல்லாலும் செயலாலும் வெளிப்பட்டு நிற்பது. பண்பட்ட உள்ளம் கொண்டோரே பண்பாடுடையவர்களாவர். இப் பண்பாடே உலக உறவாக வளர்கிறது. மாறும் தன்மையுடைய நாகரிகத்தை போன்றில்லாமல் மாறாத்தன்மையுடையது மட்டுமல்லாமல் என்றும் நிலைத்து நிற்பது பண்பாடு.

தமிழர் பண்பாட்டில் தலைசிறந்தது மானம். தமிழர் மானத்தை உயிரினும் மேலாக மதித்துப் போற்றுவர் என்பதற்கு பழந்தமிழ் இலக்கியங்களைச் சான்றாகக் கொள்ளலாம். மானம் இழந்து வாழ்தலிலும் உயிரைத் துறத்தலே பெருமை என வாழ்ந்து காட்டியவர்கள் எம் மறத் தமிழர்கள். அத்தோடு பிறருக்கு கொடுத்து புகழ் பெற்று வாழ்வதே பெருமை எனக் கருதுபவர் தமிழர். இல்லை என்னாது
ஈயும் பண்பு தமிழருக்கு உண்டு. புலவர் ஒருவரின் வறுமையைப் போக்க தன் தலையையே வெட்டிக் கொடுக்க முன்வந்த குமணவள்ளல். கொழுகொம்பின்றித் தவித்த முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி வள்ளல் போன்றோர் தமிழர் தம் ஈகைத்திறனுக்கு ஏற்ற சான்றாகும்.

வீரம்,மானம்,கொடை ஆகியவற்றை உயர்ந்த பண்பாகக் கருதிய நம் தமிழர் ஒழுக்கத்தை உயிர் எனப் போற்றி வாழ்ந்தனர்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்."

எனும் வள்ளுவர் வாக்கை அவர்கள் என்றும் மறந்ததில்லை. ஒருவனது வாழ்வின் உயர்வை அவனது வாழ்வின் வெற்றி தோல்வியை ஒழுக்கமே நிர்ணயம் செய்கிறது. சீரிய வாழ்வுக்கு சிகரமாக அமைவது சிறந்த ஒழுக்கமேயாகும்.

ஒருவனிடம் எத்தனை செல்வங்கள் இருந்தாலும் அவனிடம் ஒழுக்கம் இல்லையென்றால் உயர்வும்,சிறப்பும் இல்லாமல் போகிறது. மனிதன் மனிதனாக வாழ்வதே தலைசிறந்த ஒழுக்கம். இதனை நாம் உள்ளத்தில் நன்கு பதித்துக் கொள்ள வேண்டும். பல்வேறு திறமைகளை காட்டிலும் பல்வேறு பதவிகளைக் காட்டிலும் ஒருவனுக்கு ஒழுக்கமே சிறந்ததாக வேண்டப்படுகிறது.

மனிதப் பண்பாடு சுருங்கவே சமூகத்தில் அமைதி, சாந்தி, சமாதானம், என்பனவும் குறைந்துகொண்டே போகிறது. எல்லாச் செல்வங்களும் வாழ்க்கை வசதிகளும், உல்லாசங்களும் முன்னைவிட இன்று அதிகமாக கிடைக்கின்ற அதே வேளை மனிதர்கள் நிம்மதியின்றித் தவிக்கும் தவிப்பு முன்பு இருந்ததைவிட இன்று பெருகி விட்டதற்குக் காரணம் எம் பண்பாடு பெரும் பின்னடைவு பெற்றுள்ளமையே ஆகும். இன்று வன்செயல்களும் சமூக சீரழிவுகளும் கட்டுக்கடங்காமல் பெருகி வருவதற்கும் இதுவே ஏதுவாக அமைந்துள்ளது.

நம்முடைய நடை,உடை,பாவனை நம் பண்பாட்டுக்கேற்பவே அமைதல் அவசியம். எந்த ஒரு காரணத்தையும் கொண்டு எம் பண்பாட்டை இழந்துவிட்டால் எம் இனம் மயில் தன் தோகையை இழந்ததைப் போன்றதாகிவிடும். ஆகவே நாம் எல்லோரும் நம் பண்பாட்டை உயிர் எனக் கொண்டு வாழ்வோமாக!

**செல்வி. ச. சஞ்சியா**
**தரம் 11**



மாணவத் தலைவர்கள்



மேலைத்தேய வாத்திய அணி

# கலாநிதி சி. டபிள்யு. டபிள்யு கன்னங்கரா

இலவசக் கல்வியின் தந்தை எனப் போற்றப்படும் கலாநிதி கிறிஸ்டோபர் வில்லியம் விஜேகோன் கன்னங்கரா புகழ் பூத்த கல்வியியலாளரும் தேசிய வீரருமாவார். இவர் 1894 ஒக்டோபர் 18ஆந் திகதி பிறந்தார். இவர் அம்பலாங்கொடை வெஸ்லியன் கல்லூரி, காலி ரிச்மண்ட் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்று பிரித்தானிய ஏகாதிபத்திய நாடுகளில் மிகச் சிறந்த மாணவருக்குரிய பரிசையும் பெற்றார். ரிச் மண்ட் கல்லூரி ஆசிரியராக தனது வாழ்க்கையைத் தொடங்கிய இவர் மொரட்டுவ கொழும்பு ஆகிய இடங்களில் ஆசிரியராக கடமை புரிந்தார்.

1931 தொடக்கம் 1946 வரையில் இலங்கையில் கல்வி அமைச்சராக அளப்பரிய சேவை ஆற்றியுள்ளார். முதலாம் தரம் தொடக்கம் பல்கலைக்கழகம் வரையில் இலவசக் கல்வி வழங்குதல், தாய்மொழியை கல்வி ஊடாக மொழியாக்குதல். பாடசாலைகளை அரசு பெறுப்பேற்றல், மத்திய மகா வித்தியாலயங்கள் ஆரம்பித்தல், குறைந்தவருமானமுடைய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கும் புலமைப் பரிசில் வழங்குதல், பொதுவான பாடத்திட்டம் தயாரித்தல் இசை, நடனம், மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் ஆகயிவற்றைக் கற்க வாய்ப்பளித்தல், ஆங்கில பாடம் கற்பதை கட்டாயமாக்கல் போன்றவை அவர் ஆற்றிய சேவையில் முக்கியமானவைகள். இந்த மறுசீரமைப்புக் காரணமாக இலங்கையில் கல்வியில் புதிய திருப்பம் ஏற்பட்டது. கல்வியின் மாற்றத்திற்கு தோள் கொடுத்த சி. டபிள்யு. டபிள்யு கன்னங்கரா அவர்கள் சிறந்த கல்விமானும் தேசிய வீரருமாவார் இதனலேயே இவர் இலவசக் கல்வியின் தந்தை எனப் போற்றப்படுகின்றார்.

**செல்வி. பு. கபின்சிகா**
**தரம் 03**

---

# வாழ்க்கைக் கணிதம்

வாழ்க்கை ஒரு கணிதம்!
இதில்
தேவைகளைக் கூட்டினால்
முயற்சிகள் தானே பெருகும்!
முயற்சிகளைக் கூட்டினால்
அனுபவங்கள் தானே பெருகும்!

தெளிவான பாதையை
வகுத்துவிட்டால்
வேண்டாதவை தானே கழிகின்றன!
கற்கவேண்டியவை மட்டும்
வாழ்க்கையில் அதிகம்!

பிறரின் முயற்சியை
கடன் வாங்கி
தனது உறக்கத்தைக் கழிப்பதும்
சமுதாயப் பரபரப்புகளை
சாதகமாக்கும்
தசம ஸ்தானங்களும்
கற்று விட்டால்
வாழ்க்கை கணிதத்திற்கு
விடை தானே கிடைத்துவிடும்

**செல்வன். பா. சூரியா**
**தரம் 09**

# வாழக்கல்

மனிதன் வாழக் கற்க வேண்டும் என்ற கோட்பாடு இன்று உலகெங்கும் நிலை பெற்றுள்ளது. "கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு" என்னும் அறிவுரையை மக்கள் நன்குணர்ந்துள்ளனர். இதனாலேயே இன்று வாழும் வரை அதாவது இறக்கும் வரை கற்கவேண்டும். என்னும் கோட்பாடு வலுப்பெற்று உள்ளது. "பாடை ஏறினும் ஏடது கைவிடேல்" என்ற முதுமொழியும் இதனையே வலியுறுத்துகிறது. கற்றல் என்பது பண்டை நாள்முதல் மக்கள் கடைப்பிடித்து வரும் பெருமைக்குரியது. நாம் நன்கு வாழ வேண்டுமாயின் கற்றல் வேண்டும். வாழ்வதற்காகக் கற்றல் இன்றியமையாதது. "கல்வி கரையிலது கற்பவர் நாட்சிலது" என்றுரைக்கிறது நாலடியார். எனவே வாழும் நாளைப் பயனுடையதாக்க நாம் வாழக்கற்க வேண்டும்.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்று கூறுகிறது வெற்றிவேற்கை. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவன கால வகையினானே" என்பதற்கமைய நாம் வாழும் வரை கற்க வேண்டும்.தொடர்ந்து கற்று வந்தால் தான் காலப் போக்குக்கேற்ற புதியனவற்றை நாம் புரிந்து கொள்ள முடியும். எனவே கல்வி கற்றல் என்பது தொடர் செயலாக அமைதல் வேண்டும். "கருவறை முதல் கல்லறை வரை கல்வி தொடர வேண்டும்" என்ற கூற்றும் இதனையே நமக்கு உணர்த்துகிறது. மனிதன் தன் ஆயுள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்கவேண்டும் என்பது கல்வியியலாளர் தம் கருத்தாகும். "கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் ஆகின்றான்" என்ற கூற்றும் இதனையே வலியுறுத்துகிறது. கல்வி மூலம் அறிவை சூழலை, சமூகத்தை, நமது பண்பாட்டுமரபை நாம் ஆராய்ந்து கொள்ளலாம். ஆய்தலுக்கும் கல்வியே ஏற்ற கருவியாகும். கல்வியானது மனிதனிடத்து உள்ள பூரணத்தை வெளிப்படுத்துகிறது. அறியாமைத்திரையை அகற்றி அறிவென்னும் ஒளியைக் கொடுக்கிறது. ஒருவனிடத்து உள்ளமைந்து கிடக்கும் ஆற்றல்களை திறமைகளை வெளிப்படுத்தக் கல்வி துணைபுரிகிறது. அவனது திறன்களை பண்புகளை வளர்த்துக்கொள்ள வழி செய்கிறது. ஆளுமை வளர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் கல்வி வழிகாட்டுகிறது. எனவே தான் வாழக்கற்கவேண்டும் என பெரியோர் வலியுறுத்துகின்றனர். ஆங்கிலப்

பெரும் புலவரான வில்லியம் வோட்ஸ்வர்த் ''மனிதத் தன்மையினை மனிதர் பெற உறுதுணையாய் விளங்குவது கல்வி'' என்கிறார். இதனையே ''கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி'' என்று இடித்துரைக்கிறது கொன்றை வேந்தன் ''ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்புடைத்து என்கிறது திருக்குறள்'' கல்வி கற்றலின் சிறப்பை இது நன்கு புலப்படுத்துகிறது.

''மாந்தர் தம் கற்றனைதூறும் அறிவு'' என்பது வள்ளவர் கண்ட உண்மையாகும். கல்வி என்பது மனித அடிப்படை உரிமைகளில் ஒன்றாக இன்று கருதப்படுகிறது. அனைவருக்கும் கல்வி என்பது அரசுகளின் குறிக்கோளாகும். அறிவு அற்றங்காக்கும் கருவி என்பர். அறிவியற்கல்வி, அழகியற்கல்வி, சமூக அறிவியற்கல்வி ஆகிய மூன்றும் இன்று மனித வாழ்க்கைக்கு அவசியமானவையாகக் கருதப்படுகின்றன. வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது கல்வி. மனிதனைச் சூழ்நிலைக்கேற்பச் சிறந்த முறையில் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிப்படுத்துவதாகக் கல்வி திகழ்கிறது. சிறந்த சீரிய, ஒழுக்க நெறியில் மனிதனை வாழச் செய்வது கல்வியாகும். ஒருவனது நுண்ணறிவும், திறமையும், மனப்பான்மையும் கல்வி மூலமே வளரமுடியும். எனவே தான் வாழக்கல் என வலியுறுத்தப்படுகிறது.

கல்வி தொழிலுக்கு வழி காட்டுகிறது. வாழ்க்கை வாழ்வதற்காக உதவும் கருவியாக கல்வி திகழ்கிறது. எனவே தான் கல்வி நமது கண்ணுக்குச் சமமானதாக கருதப்படுகிறது. கண்ணுடையார் என்பர் கற்றார் என்னும் உண்மையை நாம் மறந்து விடக்கூடாது. வாழ்க்கையின் நோக்கம் இலட்சியம் என்ன என்பதை நாம் அறிந்து கொள்ளக்கல்வி உதவுகிறது. கற்றபடி ஒழுக நாம் பழக வேண்டும்.

''கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக'' என்னும் வள்ளவர் வாக்கின்படி வாழ்க்கையை நெறிப்படுத்தவும் மேம்படுத்தவும் நாம் பழகிக்கொள்ள வேண்டும். ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவற்கெழுமையும் ஏமாப்புடைத்து என்னும் குறளின் பொருளினை அறிந்து கொண்டால் கல்வியின் பயனை இலகுவில் விளங்கிக் கொள்லாம். ஒரு தலைமுறையில் பெறும் கல்வி அறிவானது ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமையும் என்கிறார் வள்ளுவர். இம்மையிலும் மறுமையிலும் உதவவல்லது கல்வி. எனவே அழிவற்ற செல்வமான கல்வியை நாம் அனுதினமும் கற்க வேண்டும்.

நூல்கள் வாயிலாகவும் கற்று வல்ல பெரியோர்களது தொடர்புகள் மூலமும் பயன்தரும் விடயங்களைக்கற்றிட வேண்டும். நாம் கற்க வேண்டியன உலகளவு உள்ளன. நாம் கற்றது கைம்மண்ணளவு என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். வாழ்க்கை வாழ்வதற்கே அதுவும் பயனுள்ள வாழ்க்கையாக அமைய வேண்டும். அதற்குரிய ஒரே வழி கல்வியைக் கருவியாகக் கொண்டு செயற்படுதலேயாகும். கற்கும் வழிகள் பல உள்ளன. அவற்றை தெரிந்து முறையாகக் கற்றல் நமது கடமையதாகும். கல்வி என்னும் கருவியை நாம் துணைக்கொள்ளவேண்டும். கசடறக்கற்று கற்றாங்கு ஒழுக முற்பட வேண்டும். கல்வி அழகே அழகு என்னும் நாலடியார் கூறும் நல்லுரையை நன்கு மனதிற் கொண்டு செயற்படுவோமாக

வாழக் கற்போம்

வாழ்வாங்கு வாழ்வோம்!

**செல்வி. ந. பதுமிகா**
**தரம் 11**

# My Village

My village is madduvil. It's town is chavakachcheri. It's district is Jaffna. Most of the people are farmers. They cultivate paddy. They also cultivate other crops like cowpea and green gram. The people also grow chillies and onions in their garden. They also have fruit trees like mango trees, jak trees & banana. The village people have their own houses some are given by government. They build their own houses as most of them are carpenters & masons.The children attend the village schools.They study there till O/L after they go to the town for the A/L.The village children play games in the evening. They have their own playground. The people are very religious . They go to the temples & churches to worship. My village is a beautiful village. I enjoy the fresh air & the clamness of my village. There is no noise & no crowded buildings & no night parties & clubs. I love my village.

**By:- S. Abarna.**
**Grade - 05.**

# சிறுவர் நலன் பேணுவோம்

குடும்பங்களின் சொத்தான சிறுவர்களைப் பெற்றோரும் மற்றோரும் அன்பாகவும் பண்பாகவும் நடத்துதல் அவசியம். எல்லோரதும் மனதைக் கவர்பவர்கள் சிறுவர்கள். சிறுவர் சமுதாயம் சிறப்பாக அமையும் எனின் நமது எதிர்காலச் சமூகம் சிறப்புறும். எனவே சிறுவர்கள் நற்பண்புடையவர்களாகவும் நல்லியல்பு உடையவர்களாகவும் வளர்க்கப்படவேண்டியது அவசியம். இன்று எமது சிறார்கள் பலவித பிரச்சனைகளுக்கு ஆளாகி வருவதால்தான் சிறுவர் தினம் என்று ஒரு நாளில் அவர்களின் நலத்தைப் பேண மக்கள் அனைவரையும் விழித்தெழச் செய்கின்றனர். இன்றைய சிறுவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் பெற்றோர்கள் மிகுந்த அக்கறை காட்டுகின்றனர். பாடசாலைகளும், சமய நிறுவனங்களும், அரசும் அரசசார்பற்ற நிறுவனங்களும், வேறு பல வெளிநாட்டு நிறுவனங்களும் சிறுவர் நலனுக்காக துரிதமாக ஈடுபடுகின்றன.

அண்மையில் இலங்கையில் யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் ஜனாதிபதி அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சிறுவருக்கான தேசியத் திட்டத்தில் சிறுவரின் கல்வி, சுகாதாரம், விளையாட்டு, குடும்ப சூழல் போன்ற பல விடயங்களில் கவனம் செலுத்தவேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டு அதற்கான வேலைத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவை நாடளாவிய ரீதியில் சிறாரின் முன்னேற்றத்திற்கு உதவுவன. எனினும் சாதாரணமாக மக்கள் தத்தம் சிறார்களில் கண்ணும் கருத்துமாகவே இருக்கின்றனர். பெற்றோர்கள் வீடுகளில் சிறார்களை நல்வழிப்படுத்துவதில் கூடிய அக்கறை காட்டுகின்றனர். கல்வி, விளையாட்டு, பொழுதுபோக்கு, இறைசிந்தனை என்பவற்றில் பிள்ளைகளுடன் தாமும் இணைந்தே ஈடுபடுவதைக் காண முடிகிறது. மேலதிக வகுப்புக்கள், கலைப்பயிற்சிகள் எனச் சிறார்களுடன் அலைந்து திரிகிறார்கள். இது சிறுவர் மேல் கொண்ட அதிக அக்கறையையும் வழிநடத்தலையுமே உணர்த்துகின்றது.

வீடுகளில் நடைபெறும் பண்டிகைகள், சமய விழாக்களின்போது பெற்றோருக்கும் சகோதரருக்கும் சிற்றுண்டி பரிமாறிக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்கின்றனர். வேற்றுச் சமூகங்களுடன் பழகுவதால் சமூக விழுமியங்கள், புரிந்துணர்வு, உதவும் மனப்பாங்கு என்பன வளர்கின்றன. இவ்வாறே பாடசாலைகளிலும் ஆசிரியர் சிறார்களுக்கு நற்பழக்கங்களை எடுத்துரைக்கின்றனர்.தலைமைத்துவப் பண்புகளையும் சமூக விழுமியங்களையும் மன்றங்கள் மூலமும் விழாக்கள் மூலமும் வளர்க்கின்றனர். பாடசாலையில் நிகழும் நிகழ்ச்சிகளுக்கான ஒழுங்குகள் அழைப்பு விடுதல், ஆசிரியரின் ஒத்துழைப்பைப் பெறுதல். என்பன யாவுமே மாணவர் தாமே பொறுப்பேற்றுச் செய்ய வழிநடாத்தப் படுகின்றனர். மாணவ தலைவர் ஒன்றியம், சாரணியம், மன்றங்கள் என்பனவும் தலைமைத்துவப் பண்புகளையும் சமூகவிழுமியங்களையும் வளர்க்க உதவுகின்றன. சாரணியம் குறிப்பாக எப்போதும் தயாராக இருந்து பிறருக்கு உதவி செய்தலையும் பண்பாக நடத்தலையும் உண்மை பேசுதலையும் இறைசிந்தனையையும் சிறார்கள் மத்தியில் வளர்க்கின்றது.

இன்றைய சிறார்களின் நலனில் பாடசாலைகளைப் போன்றே சமய நிறுவனங்களும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளன. பாடசாலை பாடத்திட்டத்திலேயே மாணவர் வழிபாட்டிடங்களை ஆசிரியருடன் சென்று வழிபாடுகளில் ஈடுபடுதல் அவசியம் எனக் குறிப்பிட்டுள்ளன. தத்தம் சமய வழிமுறைகளுடன் ஏனைய சமய வழிபாடுகளையும் அறியச் செய்வதுடன் மதங்களை மதிக்கும் பண்புகளையும் வளர்க்கின்றன. இவ்வாறாக இன்றைய சிறார்களின் நலனில் அக்கறை கொண்ட பெற்றோர்களும் பாடசாலைகளும் சமய நிறுவனங்களும் நற் பழக்கவழக்கங்களைப் புகட்டுவதுடன் சமூக விழுமியப் பண்புகளையும் தலைமைத்துவப் பண்புகளையும் வளர்த்து எதிர்காலச் சமுதாயம் சிறப்புற வழிவகுக்க வேண்டும்.

**செல்வன். பா. இலக்ஸன்**
**தரம் 11**

---

# வாழ்வியல் கணிதம்

வாழ்வில் அன்பைக் கூட்டிக் கொள்........!
அந்த (+)
கூட்டல்கள் ஈட்டித்தரும்... உனக்கு
சந்தோசத்தை

வாழ்வில் நட்பைப் பெருக்கி
கொள்.....! அந்த (x)
பெருக்கல்கள் உன் வாழ்வு முடிந்த
பின்பும்.......
வாழும் அவர்கள் நெஞ்சில்......

வாழ்வில் வாழும் முறைகளை(      )
வகுத்துக் கொள்... அந்த
வகுத்தல்கள் உன் வாழ்வை
வளர்பிறையாக்கும்..........

வாழ்வில் சோகத்தை கழித்துக்
கொள்....! அந்த (-)
கழித்தல்கள் உன்னை
அழித்தல்கள்
இல்லாத ஓவியமாய்க் காட்டும்.

வாழும் வாழ்வினை சமமாக்கிக்
கொள் ....... (=)
வேறுபாடு இல்லாத சமூகம் வேரில்
கிளை தளைக்க அது பயன்படும்
வாழ்வின் ஏற்ற இறக்கங்களைக்
கண்டு கொள்.....(< , >)
உன்னை வார்த்தெடுத்த தங்கமாய்
மாற்றி அமைக்கும்....

வாழ்வின் குறைநிறைகளைக்
கண்டறிந்து கொள்.... ( - ,+ )
வசந்தமாய் உன் வாழ்வு மாற அது
வகை செய்யும்

**செல்வன். பா. ஸினோஜன்**
**தரம் 09**


மாணவ பாராளுமன்றம்


சுற்றாடற் கழகம்

# தமிழ் மொழியும் கல்வியும்

வாழ்க்கை எனும் கடலை கடக்க
அறிவு எனும் ஆயுதம் ஏந்தி
கல்வி என்னும் படகில்
குறுகிய கால எதிர்நீச்சல்

தமிழ் எனும் இன் சொல்லிற்கு
சிந்தனையால் வளம் சேர்த்து
மாறிவரும் உலகினில் பல
புதியன படைத்திடுவோம்.

பாரதி வழி நின்று மனத்திண்மையை
தெளித்திடுவோம்
அறிவின் கூர்மையால் அற்புதங்கள்
செய்திடுவோம்

தன்னை உணரும் தத்துவம் பல
படித்திடுவோம்
உடலினை உறுதி செய்து ஓர் அமைதி
பேணிடுவோம்

சிறந்த நல் இலக்கியங்களை
படைப்பதன் மூலம்
தமிழ் மொழியினை
வளர்த்திடுவோம்

தமிழ் எனும் பயிர்
விருட்சமாய்விரிய
கல்வி என்னும் நீரினை
நாம் ஊற்றிடுவோம்.

மனதில் உறுதி வேண்டும்
வாக்கினில் இனிமை வேண்டும்
தமிழினை சரித்திரத்தில் பதித்திட வேண்டும்
காற்றினில் தேன் தமிழ் தெளித்திடவேண்டும்.

செல்வி. றே. கம்சிகா
தரம் 10

# பெரியோரை மதிப்போம்

மாணவராகிய நாங்கள் பெரியோரை மதித்து நடந்து நற்பிரஜையாக வாழ வேண்டியது மிக மிக முக்கியமானதாகும். இன்றைய சமுதாயத்தில் பெரியோரை மதித்து நடப்பது மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது. பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். இது கடவுள் எதிர்பார்க்கும் காரியம், ஏனென்றால் "உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும் உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் உன் தகப்பனையும் தாயையும் பெரியோரையும் கனம் பண்ணுவாயாக" என்று கடவுள் சொல்லி இருக்கிறார் இதை எந்த பெற்றோரும் பிள்ளைகளுக்கு சொல்லி கொடுப்பதில்லை. என் பிள்ளை எப்படியாவது வளர்ந்து ஒரு தொழில் செய்து நாலுபேர் மதிக்க பெருமையாக இருந்தால் போதும் என்று தான் நினைக்கின்றார்கள்.

இன்றைய பெற்றோர்கள் இயந்திர மனிதர்களாகவே செயற்படுகிறார்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஆலோசனைகளையோ, நல்ல புத்திமதிகளையோ சொல்லி கொடுப்பதற்கு நேரமில்லை. உணவை மாத்திரம் உடையை மாத்திரம் கொடுத்தால் போதாது. நல்ல பழக்க வழக்கங்களை கற்று கொடுக்க வேண்டியது மிக அவசியம் நாகரிகமாக வாழ்ந்தால் போதும் என்று நினைத்து அநாகரிகமான பிள்ளைகளை வளர்க்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

முன்னைய காலத்தில் பிள்ளைகள் பெரியவர்களோடு சமமாக இருப்பதில்லை, வீதிகளில் பெரியோரை கண்டால் அவர்களை மதித்து நடந்தார்கள் பேரூந்துகளில் யாராவது பெரியவர்கள் ஏறினால் அவர்களுக்கு ஆசனம் கொடுத்து, தனக்கு கற்பித்த ஆசிரியர்களை கண்டால் அவர்களுக்கு கனம் கொடுத்து வந்தார்கள் ஆனால் இன்று பெரியவர்களுடன சரிசமமாக இருப்பதும் பேரூந்துகளில் அவர்கள் நின்றால் தெரியாதவர்கள் போல காணவில்லை என்பது போல பாசாங்கு செய்வதுமாக இருக்கின்றார்கள் இந்த பிள்ளைகள் உணர்வதில்லை தாங்களும் ஒரு ஒரு நாள் முதியவர்களாக வருவோமென்று, மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுவடை செய்வான். இன்றைய சமுதாயத்தில் கீழ்ப்படிதல், கனம் பண்ணுதல் என்பது வேரோடு ஒழிந்து விட்டது என்று தான் கூறுவேண்டும்.

முன்னைய காலத்தில் குடும்பங்கள் ஒவ்வொன்றும் கூட்டாக சேர்ந்து வாழ்ந்தார்கள். உறவுகளை நேசித்து வாழ்ந்தார்கள் எந்த வீட்டிலும் முதியவர்கள் காட்டாயம் காணப்படுவார்கள். இந்த முதியவர்கள் பிள்ளைகளுக்கு நல்ல கதைகளை நல்ல ஆலோசனைகளை நல்ல பழக்க வழக்கங்களை சொல்லி வருவார்கள், அவர்கள் எதிர்பார்ப்பது எல்லாம் இந்த பிள்ளை எதிர்காலத்தில் நற்பண்புள்ள பிள்ளையாக நல்ல பிரஜையாக வாழவேண்டும் என்பது தான்.

ஒரு மனிதனுக்கு நிறைந்த செல்வம் இருக்கலாம். ஆனால் நல்ல பண்பு பழக்கவழக்கம் இல்லாவிட்டால் எந்தச் செல்வம் இருந்தும் பலனில்லை. நற்பண்பு இருந்து பணமிருந்தால் அதற்கு பெறுமதி உண்டு. ஆதலால் மாணவர்களாகிய நாங்கள் பெரியோரை மதித்து நற்பண்புள்ள பிரஜைகளாக மற்றவர்களுக்கு முன்மாதிரியானவர்களாக வாழ பழகிக் கொள்வோம்.

**செல்வி. சி. சுவேதா**
**தரம் 08**

# My school

My school name is J/Madduvil south Saraswathy Vidyalayam.
It is in Madduvil
My school is Mixed school
My school starts 7.30am and ends 1.30pm
My school principal name is mr.K.Uthayakumaran
Twenty teachers are in my school
About hundred and eighty students in my school
Grade one to eleven classes are in my school
English Acitivity Room, Play ground Library, Computer Lap.
Science Room are in my School
My School is very beautiful
I Love my School very Much.

**S. Amsavi**
Grade-3

# வாய்மையே வெல்லும்

உண்மை, வாய்மை, மெய்ம்மை என்பன ஒரு பொருள் தரும் சொற்களாகும். உள்ளத்திலிருந்து பெறப்படும் தூய்மைத் தன்மை உண்மை எனப்படும் . வாய்மை வாயிலிருந்து பெறப்படும் தூய்மைத் தன்மை வாய்மை என்றும் உடம்பினின்று பெறப்படும் தூய்மைத் தன்மை என்றும் கூறுவர். வாய்மை அழியாதது: என்றும் நிலைப்பது, எல்லோராலும் விரும்பப்படுவது எந்த மையினால் எழுதினாலும் அழித்திட முடியும் ஆனால் நமது உள்ளம் தயாரித்து எழுதும் வாய்மை என்ற மை விண்ணுள்ளவரை மண்ணுள்ளவரை அழியாது புகழ் சேர்க்கும் என்பர். வாய்மையால் தான் நேர்மை வளரும்: மேன்மை நிலைக்கும் உண்மை பேசுதலே வாய்மையாகும். பொய்யின்றி வாழ்தல் வாய்மைக்கு ஊன்றுகோலாகும்.

"புறத்தூய்மை நீரான் அமையும் அகத்தூய்மை
வாய்மையால் காணப்படும்" என்றார் திருவள்ளுவர்

உடலை தூய்மைப்படுத்தத் தினந்தோறும் குளிக்கிறோம். உள்ளக் குளியல்தான் வாய்மை. உள்ளத்தைத் தூய்மைப்படுத்த உண்மை பேசுதல் ஒரே வழியாகும். உண்மை வழியிற் செல்வோன் உலகத்தார் உள்ளத்தில் எல்லாம் இடம் பெறுவான். இதில் ஐயமில்லை இந்த உண்மையை நாம் மனதில் கொண்டொழுதல் வேண்டும் பொய்மை மாறக் கூடியது. நீண்ட நாட்களுக்கு நிலைக்க மாட்டாது. ஆனால் உண்மை எத்தனை முறை சொல்லிப் பார்த்தாலும் அது மாற்றம் அடையாது உண்மையாகத்தானிருக்கும் இதை யாராலும் மறுக்க முடியாது. "பொய் சொன்ன வாய்க்கு பொரியும் கிடையாது" "உண்மை பேசிக் கெட்டாருமில்லை பொய் சொல்லி வாழ்ந்தாரும் இல்லை" என்னும் முதுமொழிகள் உண்மை பேசுதலின் சிறப்பினையே உணர்த்துகின்றன. நமது தமிழ் நூல்கள் எல்லாம் உண்மை பேசுதலையே வலியுறுத்துகின்றன. திருக்குறள், நாலடியார் போன்ற அற நூல்கள் வாய்மையின் சிறப்பினை எடுத்துரைக்கின்றன. உண்மை பேசி உயர்ந்தோரை உலகம் போற்றும். நமது இதிகாசங்கள், புராணங்களே இதற்குச் சான்று பகிருகின்றன.

வாய்மை தவறாது நடக்கும் போது சில துன்பங்கள் நேரலாம், சோதனைகள் ஏற்படலாம். ஆனால் ஈற்றில் வாய்மையே வெல்லும். வாய்மையின் வெற்றிக்கு அரிச்சந்திர மகாராசாவினது கதையும், அவர் வழிநடந்த அண்ணல் காந்தியடிகள் வாழ்வும் ஏற்ற எடுத்துக் காட்டாகும். கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பர் உண்மைதான் ஆனால் கற்றோராயினும் வாய்மையுடையவர்களையே சமூகம் மதிக்கும். வாய்மை இருப்பின் உறிவினர் நண்பர் நம்மை விரும்புவர். போனாவின் மை இல்லையெனில் எழுத இயலாதல்லவா? அதுபோல மனிதர் நாவில் வாய்மை இல்லையெனில் ஒழுக்கமாக வாழ இயலாது. நேர்மை, தூய்மை, நட்பின் திண்மை இவைகளுக்கெல்லாம் சான்றளிப்பது வாய்மைதான். ஒருவனது செயற்பாடுகளே அவன் நல்லவன் கெட்டவன் என்பதைத் காட்டிக் கொடுத்து விடும். தீயவன் என்று

பெயர் பெறுவதற்கு ஒருநாள் போதும். மற்றவர்கள் மத்தியில் நல்லவன் நேர்மையானவன் என்று பெயர் பெறப் பல மாதங்கள் கூட ஆகலாம். வாய்மை ஒருவனை நல்லவன் ஆக்குகிறது. பெருமை பெறச் செய்கிறது. எனவே நாம் இளமையிலேயே வாய்மையின் மேன்மையுணர்ந்து அதனைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும். நமது சொல்லிலும் செயலிலும் வாய்மை வெளிப்பட வேண்டும்

"உண்மையே பேசுவோம் நன்மையே பெறுவோம்."

**செல்வி. ற. லக்சனா**
**தரம் 11**

## சிறுவர்களாகிய நாம் ஒழுக்கமாக வாழ்ந்திடுவோம்

இவ்வுலகில் மனிதர்களாக பிறந்த நாம் உயர்ந்தவர்களாக மதிக்கப்படுவதற்கு காரணமாக அமைவது எமது பழக்கவழக்கங்களும், பண்பாடுகளுமே ஆகும். நல்லொழுக்கங்களும், நற்பண்புகளும் எம்மை சிறந்தவர்களாக வாழச் செய்கின்றது.

இத்தகைய ஒழுக்கங்களை நாம் சிறு வயதினிலேயே பழகிக் கொள்ள வேண்டும். எமது பள்ளிப்பருவத்தில் நாம் நற்பண்புகளையும், நல்லொழுக்கங்களையும் கற்றுக்கொண்டு அதன்படி ஒழுக வேண்டும்.

பாடசாலையில் ஆசிரியர்கள் சொற்படி கேட்டு நடத்தல், அவர்களிற்கு மதிப்பளித்தல், சக நண்பர்களுடன் ஒன்றுபட்டிருத்தல், நன்றாக கற்றல், உண்மை பேசுதல் போன்ற ஒழுக்கங்களை கடைப்பிடித்து வாழவேண்டும். அத்தகைய ஒழுக்கங்களே முதுமை வரை நம்முடன் தொடர்ந்து வரும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

பாடசாலை நூலகத்தில் உள்ள நல்ல நூல்களைக் கற்கும் போதும் எமக்கு நல்லொழுக்கங்கள் மேம்படுகின்றன. திருக்குறள் என்ற இலக்கியத்தை எடுத்துக்கொண்டால்

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

என்ற குறட்பா ஒரு மனிதனுக்கு ஒழுக்கமானது உயிரையும் விட உயர்வானதாக சிறப்பிக்கப்படுகிறது. எனவே அத்தகைய ஒழுக்கத்தை சிறுவராகிய நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

இளம் வயதிலேயே நாம் பெரியோரை மதித்தல், களவெடுக்காமை, நேர்மையுடன் இருத்தல், பிறர் மதிக்கத்தக்க வகையில் நடத்தல் போன்ற ஒழுக்கங்களை கடைப்பிடித்து இவ் உலகில் நற் பிரஜையாகவும், ஒழுக்கமுள்ளவர்களாகவும் வாழ்ந்திடுவோமாக!

**செல்வி. சி. பிரணவி**
**தரம் OG**

## சுத்தம் பேணி சுகம் பெறுவோம்

"சுத்தம் சுகம் தரும்" "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பன முதுமொழிகள். இவை சுத்தம் பேணி சுகம் பெறும் வழியையே புலப்படுத்தப்படுகின்றன. "நோய்க்கு இடங்கொடேல்" என்கிறார் ஒளவைப்பாட்டி. நாம் நோய் நொடியின்றி சுகமாய் வாழ வேண்டுமாயின் சுத்தம் பேணுதல் மிக மிக அவசியம் என்பதை நாம் அனைவரும் உணர்தல் வேண்டும். சுத்தம் சோறிடும் என்பது ஆன்றோர் வாக்கு. இதுவும் நாம் சுத்தமாக இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றது. நம் நல்வாழ்விற்கு சுத்தம் மிக இன்றியமையாததாகும்.

நாம் சுத்தமாக இருப்பதற்கு சுத்தமான உணவு, சுத்தமானநீர், சுத்தமான உடை, சுத்தமான உடல், சுத்தமான சூழல் என்பன அவசியமானவை. புறத்தூய்மை நீரால் அமையும் என்ற வள்ளுவர் வாக்கை நினைவில் கொண்டு உடலில் அழுக்குப்படியாதபடி தினமும் நீராடி உடலைத் சுத்தம் செய்தல் வேண்டும் பற்களை நன்றாக துலக்கியும் நகங்களை அழுக்குச் சேராதபடி காலத்திற்குகாலம் வெட்டியும், உடைகளை நன்கு தோய்த்து உலரவிட்டு அணிந்தும் உடற்சுத்தத்தை பேணிவர வேண்டும். இவ்வாறு இருந்தோமேயானால் நோயின்றி இனிதாய் வாழலாம்.

உடலை மட்டும் சுத்தமாக வைத்திருந்தால் போதாது. நாம் வாழும் வீடு சுற்றுச்சூழல் அனைத்துமே சுத்தமாக இருக்க வேண்டும். அழுக்கு நிறைந்த இடங்களில் நாம் வாழ்வோமேயானால் நோய்த்தொற்றுக்கு ஆளாகி விரைவில் நோயாளியாகி விடுவோம் என்பதை நினைவிற் கொண்டு செயற்பட வேண்டும். அழுக்குப் பொருட்கள் வீட்டில் சேரவிடாது உடனுக்குடன் அவற்றை அகற்றி விட வேண்டும். இவற்றை தேங்கவிட்டால் நோய்க்கிருமிகள் பெருகி நோய்களை தோற்றுவிக்கும். இதனால் நம் வாழ்வில் சுகம் கெட்டு ஆரோக்கியம் குன்றிவிடும் என்பதை உணரவேண்டும்.

இவை மட்டுமல்ல நாம் சுகமாய் வாழ சுத்தமான உணவு, நீர், காற்று என்பனவும் இன்றியமையாதனவாகும். உணவுப்பண்டங்களை நோய்கிருமிகள் அண்டவிடாது மூடிவைத்து பயன்படுத்த வேண்டும். கொதித்தாறிய நீரையே எந்நாளும் பருகுதல் வேண்டும். இவை மட்டுமன்றி நம் அன்றாட வாழ்வுடன் நெருங்கிய தொடர்புடைய சுற்றுப்புறங்களிலும் சுத்தம் பேணப்பட வேண்டும். காடழித்தல், தொழிற்சாலைக் கழிவுகள், விவசாய இரசாயன பாவனைகள், பிளாஸ்ரிக் பொலித்தீன், பாவனை வாகனப்புகை போன்ற பல காரணிகளாலும் சுற்றுப்புறம் பாதிப்புக்குள்ளாகி வருகின்றது. இந்நிலைகளைத் தவிர்த்திட அனைவரும் முயற்சிக்க வேண்டும். ஒவ்வொருவரும் தம் கடமை உணர்ந்து செயற்பட்டால் தான் சூழல் சுத்தத்தை

பேண முடியும். நோய் வருமுன் காத்தலே நன்று. இதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடல் அவசியம். இதற்கு நாம் சுத்தமாக இருப்பதுடன் நாம் வாழும் சூழலையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இவ்விதமாக உடலிற்கும் உள்ளத்திற்கும் இன்பம் சேர்க்கும் வண்ணம் என்றும் எதிலும் சுத்தம்பேணி சுகம் பெறுவோமாக!

**செல்வன். அ. நற்குமரன்**
**தரம் 07**

## ஆண்டு நிறைவு விழாக்கள்

| | |
|---|---|
| 1 | ஆவது ஆண்டு நிறைவு விழா - கடதாசி விழா |
| 2 | ஆவது ஆண்டு நிறைவு விழா - பஞ்சு / பருத்தி விழா |
| 3 | ஆவது ஆண்டு நிறைவு விழா - தோல் விழா |
| 4 | ஆவது ஆண்டு நிறைவு விழா - மலர் விழா |
| 5 | ஆவது ஆண்டு நிறைவு விழா - மர விழா |
| 6 | ஆவது ஆண்டு நிறைவு விழா - சங்கர விழா |
| 7 | ஆவது ஆண்டு நிறைவு விழா - செம்பு விழா |
| 8 | ஆவது ஆண்டு நிறைவு விழா - வெண்கல விழா |
| 9 | ஆவது ஆண்டு நிறைவு விழா - மண்கலச விழா |
| 10 | ஆவது ஆண்டு நிறைவு விழா - தகர விழா |
| 11 | ஆவது ஆண்டு நிறைவு விழா - உருக்கு விழா |
| 12 | ஆவது ஆண்டு நிறைவு விழா - பட்டு விழா |
| 13 | ஆவது ஆண்டு நிறைவு விழா - சரிகை விழா |
| 14 | ஆவது ஆண்டு நிறைவு விழா - தந்த விழா |
| 15 | ஆவது ஆண்டு நிறைவு விழா - படிக விழா |
| 20 | ஆவது ஆண்டு நிறைவு விழா - சீனக்களிமண் விழா |
| 25 | ஆவது ஆண்டு நிறைவு விழா - வெள்ளி விழா |
| 30 | ஆவது ஆண்டு நிறைவு விழா - முத்து விழா |
| 40 | ஆவது ஆண்டு நிறைவு விழா - மாணிக்க விழா |
| 45 | ஆவது ஆண்டு நிறைவு விழா - இந்திர நீல விழா |
| 50 | ஆவது ஆண்டு நிறைவு விழா - பொன் விழா |
| 55 | ஆவது ஆண்டு நிறைவு விழா - மரகத விழா |
| 60 | ஆவது ஆண்டு நிறைவு விழா - வைர / மணி விழா |
| 75 | ஆவது ஆண்டு நிறைவு விழா - பவள விழா |
| 80 | ஆவது ஆண்டு நிறைவு விழா - அமுத விழா |
| 100 | ஆவது ஆண்டு நிறைவு விழா - நூற்றாண்டு விழா |
| 1000 | ஆவது ஆண்டு நிறைவு விழா - மிலேனிய விழா |

**செல்வன். ச. சாகித்தியன்**
**தரம் 07**

# கணித மேதை பைதகரஸ்

உலகில் காணப்படும் கணித உண்மைகளிலேயே அதிகம் பேசப்படுவதும், உபயோகிக்கப்படுவதுமான கூற்று பைதகரசின் தத்துவமே என்றால் மிகையாகாது. ஒரு செங்கோண முக்கோணத்திலுள்ள செம்பக்கத்தின் வர்க்கமானது, மற்றைய இரு பக்கங்களின் வர்க்கங்களின் கூட்டுத்தொகைக்குச் சமன் என்ற கூற்றையே பைதகரஸ் நிறுவினார் இந்த உண்மையானது ஆதி கால எகிப்தியர்களாலும், இந்திய நாட்டு அறிஞர்களாலும் உபயோகிக்கப்பட்டு வந்திருந்தபோதும், பைதகரஸ் என்ற கிரேக்க விஞ்ஞானியே இதனைக் கணித ரீதியாக நிறுவினார்.

இந் நிறுவலுக்கு மூலகாரணமாக செம்பக்கத்தின் 5 அலகுகளும் மற்றைய இரு பக்கங்களின் 4,3 அலகுகளுமே அளவுகளாக அமைந்தன. இந்தக் கூற்றுப்படி $4^2+3^2=5^2$ என்பதாகும். இந்த நிறுவலானது விஞ்ஞானிகளையும் கணித விற்பன்னர்களையும் பெரிதும் கவர்ந்த காரணத்தால், பலர் பலவழிகளில் இதனை நிறுவமுற்பட்டனர். இதன் காரணமாக நூறிற்கு மேற்பட்ட கேத்திர கணித நிறுவல்கள் இன்று பைதகரஸ் தேற்றத்தின் உண்மையைக் காட்டி நிற்கின்றன.

இந்தத் தேற்றத்தை தந்த பைதகரஸ் கி.மு 582 ம் ஆண்டில் கிரீஸ் நாட்டின் சாமோஸ் தீவில் பிறந்தார். இவர் பல நாடுகள் பயணம் செய்து, பல கல்வியாளர்கள், விஞ்ஞானிகளுடன் தொடர்பு கொண்டிருந்தார். இப்படியாக ஒரு தடவை எகிப்து நாடு சென்றிருந்த போது இந்த உண்மையைக் கண்டறிந்தார். இதன் பின்பே இவர் இதனை நிறுவி கணித விற்பன்னர்களை வியப்பில் ஆழ்த்தினார். கி.மு 529 ம் ஆண்டளவில் சில காரணங்களுக்காக கிரீசை விட்டு நாடு கடத்தப்பட்டு இத்தாலி நாட்டில் சரணடைந்தார். இவர் தனது ஆதரவாளர்களோடு சேர்ந்து கணித சமய தத்துவக் கழகம் ஒன்றை அமைத்து இவற்றிற்காக உழைத்தார்.

மேலும் இவர் இந்தியர்களிடையே காணப்பட்ட மீள் பிறப்பைப் பற்றிய நம்பிக்கையை ஆராய்ந்து அதனை ஏற்றுக் கொண்டார். அதாவது ஆன்மா அழிவதில்லை. அது தான் செய்த பாவம் புண்ணியத்திற்கேற்ப மீண்டும் மீண்டும் பிறப்பெடுக்கின்றது என்பதையும், அது மிருகமாகவோ, பறவையாகவோ மறுபிறப்பு எடுக்க முடியும் என்பதையும் நம்பினார். இக் கூற்றை அவர் இந்திய இந்துக்களிடமிருந்து பெற்றிருக்க வேண்டும். கொபனிகஸ் என்ற அறிஞர் வாதிட்ட சூரியனே மையமானது, பிற கோள்கள் அதனைச் சுற்றியே இயங்குகின்றன என்ற கூற்றுக்குக் கரு அமைத்துக் கொடுத்தவரும் இவரே.

கோள்கள் வட்டப் பாதையில் வானில் இயங்குகின்றன என்றும், கோள்களும் பிரபஞ்சமும் கோள வடிவிலேயே உள்ளன என்றும் வாதிட்டவரும் இவரே. இவரின் கருத்து பிற்காலத்தில் கோள்கள் நீள் வட்டப் பாதையில் இயங்குகின்றன என்ற உண்மையைக் கண்டறிய வாதிட்டன.

மேலும் இவர் கணித உண்மைகளை சங்கீதத்தோடும் தொடர்பு படுத்தினார். ஒலியின் சுரங்கள் அதன் எளிய மடங்குகளில் ஒன்று சேரும் போது, ஒலிகள் காதுக்கு இனிமையான சங்கீதத்தை தருகின்றன என்றும் சுரங்கள் மாறுபடும் போது ஒலிகள் இரைச்சலாக அமைகின்றன என்றும் கூறினார். தந்தி வாத்தியங்கள் நீளவிகிதத்திற்கு ஏற்ப அவை சுமுக ஒலிகளை எழுப்புகின்றன என்றும் கண்டறிந்தவர் இவரேயாவார்.

எனவேதான் கணித விஞ்ஞானிகளின் முன்னோடிகளில் ஒருவராக பைதகரசை விஞ்ஞானிகள் இன்றும் போற்றுகின்றனர்.

**செல்வன். ஜெ. ஜெகதீஸ்வரன்**
**தரம் 11**

---

## கல்வியே கருத்தனம்

படிப்பு என்னும் படியில் ஏறு
சொர்க்கம் என்னும் சோலை
உனக்குக் கிடைக்கும்!
புத்தகம் என்னும் செடியை
அறிவு என்னும்
வேரால் தாங்கு........
பூக்கள் என்னும் புனிதமான வாழ்க்கை
உனக்குக் கிடைக்கும்!
கல்வி என்னும் கருவிழியை
இமைகளாய் மாறி
பாதுகாத்துக் கொள் - உலகமே
அந்த கருவிழி வழி தெரியும்!

வாழ்க்கை இருக்கிறது உனக்காக
வாழ்ந்து பார் உன் வாழ்க்கையை
கல்வியின் துணையோடு
புத்தகம் சேமித்து பயனில்லை
புத்தகத்தில் உள்ளவை
புத்தியில் சேர்க்கப்பட வேண்டும்
கல்வி ஒன்றே மனிதனை - எந்த
பேதமில்லாமல் மனிதனாகவே
பார்க்க வைக்கும்
அறிவுக் கண்கள்!

**செல்வி. கு. கீர்த்திகா**
**தரம் 11**

## எங்கள் அன்பு ஆசான்

அன்பு உள்ளம் கொண்டவரே
அறிவை எமக்குத் தருபவரே
பண்புடனே வாழ்வதற்கு
பல வழிகள் சொல்பவரே

கல்விக் கண்களைத் திறப்பதற்காய்
கனவுகளோடு வந்த எம்மை
சொல்லில் இனிமை பூசி எமக்கு
செயலால் கல்வி தந்தவரே

கண்ணை இமை காப்பது போல் - எம்மை
காத்து நிற்பவரே
கருத்து மிக்க வசனங்களை
கருணையோடு சொல்லித் தருபவரே

அன்னை தந்தை பாசம்
அனைத்தும் சேர்த்து ஊட்டுபவரே
எம்மை மகிழ்ச்சியோடு
எண் எழுத்து அறியவைப்பவரே

உயர்ந்த மனிதனாக நாமும் வாழ
உழைத்தீரே எமக்காக
உயர்ந்த உள்ளம் கொண்டவரை
உலகம் போற்ற வாழ்த்திடுவோம்.

**செல்வி. இ. கீர்த்தனா**
**தரம் 05**

---

## மிகப் பெரிய எண் என்ன?

மூன்று 9 களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகப் பெரிய எண் என்ன?

$$9^{9^{9}} = \left(9^{9}\right)^{9}$$

$$= (387\,420\,489)^{9}$$

இதன் மதிப்பைக் காண 40 கோடி பெருக்கல்கள் செய்ய வேண்டும். இதன் பெருக்குத் தொகை 369693100 இலக்கங்களைக் கொண்ட பெரிய எண்ணாகும். 1 அடிக்கு 200 இலக்கங்கள் வீதம் எல்லா இலக்கங்களையும் எழுதி முடிக்க 350 மைல் நீளமுள்ள தாள் தேவைப்படும். ஒரு வினாடிக்கு ஓர் இலக்கம் வீதம் எழுதினால் எல்லா இவக்கங்களையும் எழுதி முடிக்க 11 வருடங்கள் 8 மாதங்கள் எடுக்கும்.

**செல்வன். பா. விந்துஜன்**
**தரம் 09**

# எழில் கொஞ்சும் இயற்கை

இன்று நாம் இவ் உலகில் பிறந்து நீண்ட ஆயுளுடன் வாழ்கின்றோம் என்றால் அது எமக்கு இயற்கை அன்னை கொடுத்த வரமேயாகும். இப் பூமியில் காடுகள், தாவரங்கள், நீர்வீழ்ச்சிகள், மலைகள், ஆறுகள், புல்நிலங்கள் என்பன அழகுற காட்சியளிக்கின்றன. இவற்றினால் மனித தேவைகளும், விலங்குகளுடைய தேவைகளும் நிறைவேற்றப்படுகிறது. இயற்கைச் சமநிலையைப் பேணாதுவிட்டதால் மனிதர்கள் இன்று பல நோய்நொடிகளை எதிர்நோக்குகின்றனர்.

இயற்கையினால் நாம் பெற்றுக்கொண்ட பயன்கள் எண்ணில் அடங்காதவையாகும். ஆதிகாலத்தில் மனிதன் தனது இருப்பிடமாக காடுகளையே கொண்டிருந்தான். காடுகளில் கிடைக்கும் பழவகைகள், தானியங்கள், கிழங்கு வகைகள் போன்றவற்றையே உட்கொண்டான். இதனை விட தமது ஆடைகளைத் தயாரித்துக் கொள்வதற்காக இலைகுழைகளையே பயன்படுத்தினர். ஆதிகால மனிதர்கள் இயற்கையை பேணிப் பாதுகாத்தமையால் அவர்கள் நீண்ட ஆயுளோடு வாழ்ந்தனர். இவர்கள் தமது தாகத்தை தீர்ப்பதற்கு குளங்களில் இருந்தே நீரைப் பெற்றனர். இவ்வாறு இருந்த மனிதனுக்கு தேவைகள் அதிகரித்துக் காணப்பட்டமையால் விவசாயம் செய்யத் தொடங்கினான். விவசாயத்திற்குத் தேவையான மழை, வெயில் போன்றவற்றை குறைவின்றிப் பெற்ற சடங்குகளை நடாத்தி இயற்கை அன்னையை வழிபட்டு பெற்றனர்.

இதனை விட இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் போது இயற்கையை வழிபட்டு இச் சீற்றத்தையும் தணித்தனர். ஆதிகால மக்கள் இயற்கையை கடவுளாக, தமது உயிர் நாடியாக வைத்து வழிபட்டனர். இதனால் இவர்கள் இயற்கை அன்னையின் சீற்றத்திற்கு பெரிதும் பாதிக்கப்படவில்லை. இயற்கை தமக்குப் பரிசளித்த பூமியை ஆதிகால மக்கள் மிகவும் சிறப்பாக பேணிப் பாதுகாத்தானர். ஆனால் இன்றைய மனித சமுதாயம் இயற்கையை சீரழிக்கும் பணியில் ஈடுபடுகின்றனவே தவிர இயற்கையைப் பாதுகாக்கும் பணியில் எந்தளவும் முயற்சி செய்யவில்லை.

இன்றைய மனித சமுதாயம் இயற்கையை துஸ்பிரயோகம் செய்கின்றனர். காடுகளை வெட்டி குடியிருப்புக்களை அமைத்துக் கொள்கிறான். இதனால் சூழல் சமநிலை சீர்குலைந்து காபனீரொட்சைட் வாயுவை அகத்துறிஞ்ச தாவரங்கள் இல்லாமையினால் வளியில் காபனீரொட்சைட் அளவு அதிகளவு காணப்படுகிறது. மரங்களை வெட்டுவதால் வெப்பம் அதிகரித்து காணப்படுகிறது. இதனால் ஓசோன்படை சிதைவடைந்து கழியூதாக் கதிர்கள் நேரடியாகப் புவியைத் தாக்குகின்றது. இதனால் தோல் புற்றுநோயும் ஏற்படுகிறது.

அடுத்ததாக நீர் நிலைகளை மூடி பாரிய கட்டடங்களை அமைக்கின்றனர். இதனால் நீர்ப் பற்றாக்குறையும் ஏற்படுகிறது. அத்தோடு நீர்நிலைகள் மாசுபடுவதாலும்

பல பிரச்சினைகள் ஏற்படுகின்றது. இதனை விட நீர் நிலைகளில் குப்பைகளைக் கொட்டுவதாலும், தொழிற்சாலைக் கழிவுகள் நீருடன் சேர்வதாலும் நீர் நிலைகள் மாசடைகின்றது. இதனால் எமக்கு பல தொற்றா நோய்களும் ஏற்படுகிறது. சிலர் அங்கவீனர்களாகவும் மாறிவிடுகின்றனர்.

தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் நச்சு வாயுக்கள் மேலே சென்று ஒடுங்கி அமில மழையாகப் பெய்கிறது. இதனை விட நச்சு வாயுக்கள் பூமியில் அதிகளவில் காணப்படுவதால் சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்களும் ஏற்படுகின்றது. பிறக்கும் குழந்தைகளுக்குக் கூட சுவாச நோய் ஏற்படுகின்றது. இதற்கெல்லாம் காரணம் மனிதன்.

மனிதன் தன் பேராசையாலும் சுயநலத்தாலும் இயற்கை அன்னை பரிசளித்த பூமியிலுள்ள மரங்களை வெட்டி வீழ்த்துகின்றான். அவன் அப்படி வெட்டி வீழ்த்துவதால் இயற்கை அன்னை மிகவும் கோபம் கொண்டு இன்று மனிதனது பேராசைக்குப் பரிசாக வெப்பத்தை அள்ளி வழங்குகின்றாள். இன்று வெப்பம் காரணமாக மரங்களைத் தேடி மனிதன் ஓடுகிறான்.

பண்டைக் கால மனிதர்கள் எவ்வளவுக்கு இயற்கையைப் பேணி வளர்த்தார்களோ அவ்வளவிற்கு இயற்கை அவர்களுடன் நேயமாகப் பழகியது. அவர்கள் இயற்கை மீது பயம் கொண்டு வணங்கியமையால், பேணியமையால் இயற்கை இவர்களைப் பாதுகாத்தது. ஆனால் இன்றைய நவீன யுகத்தில் இயற்கைக்கு அச்சப்படுகிறவர்கள் என்று யாருமில்லை.

இயற்கையை அழித்து இயற்கையை சீர்குலைக்கும் மனிதர்களே பலர் உண்டு. இன்று யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீர் மாசுபடுவதற்கும், நஞ்சாவதற்கும் நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களே காரணமாகும். இதனால் காலநிலையும் சீர்குலைக்கின்றது. உரிய காலத்தில் மழை இன்மை, அதிகளவு வரட்சி என்பன ஏற்படுகின்றது. இதனால் நாட்டின் விவசாயம் பாதிப்படைந்து, நாட்டின் பொருளாதாரம் குறைவடைந்து எமது நாட்டின் அபிவிருத்தி என்பன நலிவடைந்து செல்கின்றது. இதனை நிவர்த்தி செய்ய வேண்டுமானால் இயற்கை அன்னை எமக்களித்த பூமியை பெரும் பொக்கிசமாக பேணி பாதுகாக்க வேண்டும்.

**செல்வன். சு. விதுசன்**

**தரம் 11**


கரப்பந்தாட்ட அணி


வலைப்பந்தாட்ட அணி

# நான் விரும்பும் பெரியார்

எனக்குக் கவிஞர்களையே மிகவும் பிடிக்கும். ஏனெனில் அவர்கள் தான் உள்ளத்தை ஈர்க்கும் உயர்ந்த கருத்துக்களை உணர்ச்சித்துடிப்புடன் வெளிப்படுத்துவார்கள். மொழியை சரியாகப் பயன்படுத்துபவர்கள் கவிஞர்களே. கவிஞனே கடவுளிலும் மேலானவன் என்றார் மகாகவி தாகூர். கடவுள் படைத்தவை அழிந்து போகின்றன. கவிஞன் படைத்தவை அழிவதில்லை. இதுவே அதற்குக் காரணமெனவும் அவர் கூறினார். கவிதாகூரின் கூற்று முற்றும் உண்மையே. திருவள்ளுவர், கம்பர், இளங்கோ, காளிதாசன், பாரதி போன்ற கவிஞர்கள் காலத்தை வென்று இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களது கவிதைகள் மக்கள் உள்ளங்களில் நிலைத்து நிற்கின்றன. இந்த வகையில் காலத்தால் அழியாத படைப்புக்களை ஆக்கித் தந்த பாரதியே நான் விரும்பும் கவிஞராவார்.

இவர் தமிழ்நாட்டிலே உள்ள எட்டயபுரம் என்னும் ஊரிலே 1882 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ம் திகதி பிறந்தார். இவருடைய தந்தையாரின் பெயர் சின்னச்சாமிஐயர். தாயாரின் பெயர் இலக்குமி அம்மாள். இவரது இளமைப்பெயர் சுப்பிரமணியன். பாரதியார் இளமையிலே தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், கிந்தி ஆகிய மொழிகளைக் கற்றார். அம்மொழிகளுள் அவருக்கு தமிழிலேயே அதிக விருப்பமிருந்தது. தமிழ்மொழி போல் இனிதான மொழி எங்கும் இல்லை என்பது அவரது கருத்தாகும். பாரதியார் சிறுவயதிலே கவிதை எழுதும் திறமை பெற்றிருந்தார். இவரது கவித்திறமையை மெச்சிய எட்டயபுரம் சமஸ்தானத்தினர் இவருக்கு பாரதி என்னும் பட்டத்தினை பட்டம் பெற்ற சுப்பிரமணியன் சுப்பிரமணியபாரதியார் ஆனார்.

சுப்பிரமணிய பாரதியார் கவிதை மழை பொழியத் தொடங்கினார். புதுக்கவி, புரட்சிக்கவி என உலகோர் பாராட்டும் வகையில் கவிதைகளை எழுதினார் கவிதை அவரது தொழில் என்றும் அந்தத் தொழில் மூலம் நாட்டுக்கு உழைப்பேன் என்றும் கூறினார். ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக கனல் கக்கும் தேசியப் பாடல்களை எழுதினார். இதன்பொருட்டு பல இன்னல்களுக்கு உள்ளானார். மொழியால்,இனத்தால்,மதத்தால் பிரிந்து கிடந்த பாரத நாட்டை ஒன்றுபடுத்தி ஒருமைப்பாட்டு உணர்வை ஊட்டிய பாரதி தமது கவிதைகள் மூலம் தேசத்தின் விடுதலைக்கு உரமூட்டினார். உள்ளத்தில் உள்ளது கவிதை. உணர்ச்சி உருவெடுப்பது கவிதை என்றும் கவிதைக்கு இலக்கணம் கூறினார். கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை. கவிமணியின் இப் பாடலுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் பாரதி. பாரதியின் கவிதைகளில் உணர்ச்சிப் பெருக்கு விஞ்சி நிற்பதை நாம் காணலாம்.

'காக்கைக் குருவி எங்கள் சாதி' எனக் கவிதை சொன்ன பாரதி பாலர்களுக்காக பாப்பாப் பாட்டுப் பாடியதோடு பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு என்னும் அருமையான காவியங்களையும் படைத்துள்ளார்.

தேசியம்,தெய்வீகம், சமூகம், தத்துவம் எனப் பல்வேறுபட்ட பொருட்களில் அவரது கவிதைகள் அமைந்துள்ளன. பெண் விடுதலையைப் பாரதி பெரிதும் விரும்பினார். புதுமைப் பெண்ணின் குரலாக ஒலித்தார். எதிர்ப்பு, வீரம், தமிழ்ப்பற்று, பெண் உரிமை, உணர்வு, தொழில் வளர்ச்சி தேசிய உணர்வு என்பன எல்லாம் பாரதியின் கவிதைகளில் பளிச்சிடுகின்றன. இவரது தேசியப் பாடல்கள் கோழைகளையும் வீரம் கொள்ளச் செய்யும் சக்தி மிக்கவை.


பாரத நாட்டின் பழமையிலும் பெருமையிலும் பற்றுக் கொண்டிருந்த பாரதியார் வளரும் அறிவியல் புதுமைகளிலும் நாட்டம் கொண்டிருந்தார். பாரதியாரின் கவிதைகள் ஒவ்வொன்றும் சொற்சித்திரங்கள். அவை காலங் கடந்து வாழும் பெருமைக்குரியன. புதுவழியை காட்டுவன. ஒரு மழை மாதத்தில் எட்டியபுரத்தின் இளைத்த தெருவொன்றில் பிறந்த அந்தப் பிஞ்சு சூரியன் 1921 செப்ரெம்பர் மாதம் 11ம் நாளில் இவ்வுலகை விட்டு மறைந்தது. ஆம் 39 ஆண்டுகளே இவ்வுலகில் வாழ்ந்த மகாகவி மறைந்து விட்டாலும் அவரது கவிதைகள் மறையாது ஒளி பரப்பிக் கொண்டே இருக்கின்றன. இவரது அடிச்சுவட்டில் காலந்தோறும் புதுப்புதுக் கவிஞர்கள் தோன்றிக் கொண்டேயிருப்பர்.


புது வழிகாட்டிய புதுமைக கவிஞர் பாரதியை நான் பெரிதும் விரும்புகின்றேன். அவரது கவிதைகள் உள்ளவரை அவர் புகழ் உலகெங்கும் நின்று நிலவும் என்பதில் ஐயமில்லை. பாரதி நாமம் வாழ்க!

**செல்வி. த. தர்மிகா**
**தரம் 09**

பெருமைக்குரிய செயலை ஒருவன் செய்கின்றதால்
இவன் இறந்த பிறகும் வாழ்வதற்குத் தயாராகிறான் என்று பொருள்.

-ப்ரொப்காம-







Print By : Kings Printers - 021 2050495